வரு.74 இல. 07 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

තිනකරන් වාරමන්ජරී

32 பக்கங்கள் 40/-

2022 பெப்ரவரி 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை February 13 Sunday, 2022







03 முன்னேறி செல்வதிலேயே கவனம் செலுத்த வேண்டும்



13 மூட நம்பிக்கைக்கு பலியான சிறுவன்



18 பதிலடி கொடுத்த காஜல் அகர்வால்



24 மகளிர் 50 ஓவர் உலகக் கிண்ணம் நியூசிலாந்தில்

## டி.ஆர். விஜேவர்த்தனவின் 136 ஆவது ஜனன தினம்

### 18,19 ஆம் திகதிகளில் விசேட நிகழ்வுகள்



லேக்ஹவுஸ் நிறுவுனர் ஸ்தாபகர் அமரர் டி. ஆர். விஜேவர்த்தனவின் 136 ஆவது ஜனன தினத்தையிட்டு எதிர்வரும் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் நிறுவனத்தில் மத

04

## வைத்திய சேவை, மின் விநியோகம் அத்தியாவசிய சேவைகளாகின

### ஜனாதிபதியினால் அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுகாதாரத்துறை மற்றும் மின்சாரம் உள்ளிட்ட மக்களுக்கான பல்வேறு சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கிணங்க ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் கையொப்பமிட்டுள்ள மேற்படி

04

### தொழிலாளர்களுக்காக எவரும் நீலிக்கண்ணீர் வடிக்கத் தேவையில்லை

## முகநூல், ஊடக விளம்பரத்துக்காக செயற்படும் அமைப்பல்ல இ.தொ.கா

### தொழிலாளர்களின் சகல பிரச்சினைகளுக்கும் இ.தொ.கா தீர்வு காணும்



தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

அதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காக எவருமே நீலிக்கண்ணீர் வடிக்க தேவையில்லையென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

04

### பண்டிகைக் காலங்களில்

## தட்டுப்பாடின்றி அத்தியாவசிய பொருட்களை வழங்க ஏற்பாடு

### நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பண்டிகைக் காலங்களில் மக்களுக்கு தடையின்றி அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அத்தியாவசிய பொருட்களை தடையின்றி மக்களுக்கு பெற்றுக் கொடுப்பது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவின் முதலாவது அமர்வு குழுவின் தலைவர் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் நிதி அமைச்சில் நடைபெற்றது.

இந்த அமர்வின் போது கருத்துத் தெரிவித்த நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ,

**மக்கள் எதிர்நோக்க நேரிடும் பாதிப்புகளை மட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்**

நாட்டில் தற்போது நிலவும் வெளிநாட்டு அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக மக்கள் எதிர்நோக்க நேரிடும் பாதிப்புகளை மட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் தெரிவித்தார். எதிர்வரும் பண்டிகை காலங்களில் ஆடைகள் மற்றும் உணவுப் பொருட்களை தட்டுப்பாடின்றி மக்களுக்கு பெற்றுக் கொடுப்பது தொடர்பில் இந்த அமர்வின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

04

## நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்க சஜித் எவ்வகையிலும் தகுதியில்லாதவர்

### ஐ.ம.சக்தி எம்.பி டயனா கமகே பகிரங்கமாக தெரிவிப்பு



நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்கும் தகுதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு கிடையாது. கட்சியைக் கூட முறையாக நிர்வகிக்க முடியாதவர் எவ்வாறு நாட்டை நிர்வகிப்பாரென ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் டயனா கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம்

04

### இந்திய அபிவிருத்தி நிதியூடாக

## கிழக்கில் சுற்றுலாத்துறைக்கு புத்துயிர் அளிக்க ஏற்பாடு

### சந்திரகாந்தன் எம்.பி ஜேக்கப் சந்திப்பில் இணக்கம்



இந்திய அபிவிருத்தி நிதி ஊடாக கிழக்கு மாகாணத்தில் பின்தங்கியுள்ள சுற்றுலாத்துறைக்கு புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட

04

## எங்கள் கருத்து...

### தங்களை எப்போதுதான் திருத்தி கொள்ள போகிறார்கள் இவர்கள்?

எதிர்க் கட்சியில் உள்ள தமிழ் பேசும் அரசியல்வாதிகள் பலரும் இன்று தெரிவித்து வரும் கருத்துகள் மற்றும் அவர்களது ஊடக அறிக்கைகள், உரைகள் பலவும் அவர்களுக்கு வாக்களித்த தமிழ் பேசும் மக்களை வியப்பில் ஆழ்த்துவதாக உள்ளன. யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், இன்னமும் அன்றைய இறுதி யுத்தத்தில் இடம் பெற்ற இருதரப்பு மோதலில் சிக்குண்டு உயிரிழந்த தமிழ் மக்களைப் பற்றிய ஞாபகமூட்டல் பேச்சுக்களை அவர்கள் கைவிடுவதாக இல்லை.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த இன்றைய அரசாங்கத்தை எதிர்க்க வேண்டுமென்ற ஒரே ஒரு காரணத்திற்காக தமிழ்க் கட்சிகள் எதிர்க்கட்சிகள் போன்று செயற்படுவதற்கு ஆசைப்படுகின்றன. ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது மட்டுமன்றி எதிர்பார்ப்பதுவும் கூட நடந்தேறுவதாக இல்லை. மாறாக, அரசாங்கம் தமிழ் மக்களது குறைபாடுகளை தீர்த்து மக்களது மனங்களில் ஆழமாக பதிந்து வருகிறது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அன்றைய அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு சூழ்ச்சிகள் பல செய்து ஆட்சியைக் கைப்பற்றிய நல்லாட்சி கூட்டு அரசாங்கம் தமக்கு வாக்களித்த மக்களின் நலனுக்காக எதனையுமே செய்யாது அதிகாரத்தை இழந்தது. நாட்டின் அபிவிருத்தியைக் கூட முன்னெடுத்துச் செல்ல முடியாத ஒரு அரசாங்கமாக நல்நல்லாட்சி அரசாங்கத்தில் தமது எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும் என்ற தமிழ் பேசும் மக்களின் எண்ணங்கள் தவிடுபொடியாகின.

04

### உலகில் 70 சதவீத மக்களுக்கு

## தடுப்பூசி செலுத்தினால் கொவிட் முடிவுக்கு வரும்

### இவ்வருட நடுப்பகுதியில் சாத்தியம்



உலக மக்கள் தொகையில் 70 சதவீதம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்படுமாயின், கொரோனா வைரஸின் தீவிர தாக்கம் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் முடிவுக்கு வந்துவிடும் என்று உலக சுகாதார அமைப்பின் (WHO) தலைவர் டெட்ரஸ் அதனோம் கெப்ரேயஸ் கூறியுள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் கேப்டவுனில் நேற்று முன்தினம் (11) ஊடகங்களுக்கு கருத்துவெளியிட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதனை நாம் நிச்சயமாக நிறைவேற்றுவோமாயின், தீவிரமான கட்டம் உண்மையில் முடிவுக்கு வந்துவிடும்,

04

## 12 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கு தடுப்பூசி

### பரிந்துரை கிடைத்தபின் வழங்க ஏற்பாடு



12 வயதிற்கு குறைந்த சிறுவர்களுக்கு, கொவிட் தடுப்பூசியை செலுத்துவதற்கான பரிந்துரையினை வழங்கவுள்ளதாக சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்தியர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் பரிந்துரை அடுத்த வாரம் கிடைக்கப்பெறும் என எதிர்ப்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

04

### அத்தியாவசிய பொருட்களுடன் துறைமுகத்தில் தேங்கியுள்ள

## கொள்கலன்கள் நாளை விடுவிப்பு

அத்தியாவசிய பொருட்களுடன் துறைமுகத்தில் தேங்கியுள்ள கொள்கலன்கள் நாளை திங்கள் விடுவிப்படும் என இறக்குமதியாளர் சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள, அரிசி, சீனி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய

04

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எதிர்க்கட்சிகள் கூட்டறிக்கை



நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தர தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சி பிரதிநிதிகள் கூட்டறிக்கையொன்றை நேற்று

04

## பொருளாதார மீட்சியின் பின்பே வாகன இறக்குமதி

### மத்திய வங்கி ஆளுநர் அஜித் கப்ரால்



நாட்டின் பொருளாதாரத்தில் மீட்சி ஏற்பட்டதன் பின்னர் வாகனங்களை மீண்டும் இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்மானிக்கப்படுமென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வது கடந்த 2020 மார்ச் முதல் இடைநிறுத்தப்பட்டது.

04

### நீதிமன்ற உத்தரவு மற்றும் வர்த்தமானி அறிவித்தலை மீறி:

## சுகாதாரத்துறை போராட்டம் நேற்றும் தொடர்ந்தது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நோயாளர் சிகிச்சை சேவை அத்தியாவசிய சேவையாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள நிலையிலும் சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் அதனை மீறி நேற்று 6வது நாளாகவும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டன. அதேவேளை சுகாதார சேவையை சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் வேலைநிறுத்தப் போராட்டத்தை

04

### விக்கல் வீராச்சாமி



நாட்டில வாகன விபத்து எக்கச்சக்கமா நடக்குது, ஒவ்வொரு நாளும் அஞ்சு பத்து சனம் சாகுது, இது எங்க போய் முடிய போகுதோ தெரியல....

கொரோனாவை விட விபத்து சாவு மோசமா இருக்கு, சட்டத்தை போட்டா மட்டும் காணாது அத முறையா கடைப்பிடிச்சாத்– தான் இதிலயிருந்து விடுபடலாம்...!!!



# அநுராதபுரத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மக்கள் பேரணி







# தமிழர்களுக்கு அதிகாரங்கள் வழங்குவதை வடக்கின் ஒரு அரசியல் கட்சியே எதிர்க்கிறது



## லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஞாயிறு தினகரனுக்கு வழங்கிய நேர்காணல்

**கேள்வி: தற்போதைய அரசு புதிய அரசியல் யாப்பை தயாரித்து விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அரசு அறிவித்துள்ளது புதிய அரசியல் யாப்பின் நீங்கள் APRC இன் தலைவராக செயற்பட்ட காலகட்டத்தில் அரசியல் கட்சி தலைவர்களுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக பல தடவை பேச்சு வார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கான இறுதி தீர்வு திட்டம் தயாரிக்கப்பட்டது. புதிய அரசியல் யாப்பின் APRCஇனால் எட்டப்பட்ட தீர்வு திட்டம் எதுவும் உள்வாங்கப்பட்டுள்ளதா?**

பதில்: புதிய அரசியல் யாப்பு எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என்று தெரியவில்லை அதற்கான காரணம் இலங்கை அரசியலில் புதிய அரசியல் யாப்பை உருவாக்க முன் சகல அரசியல் கட்சி தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அக் கட்சிகளின் ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டு அதன் பிறகு இணக்கப்பாட்டுக்கு வந்த பிறகு புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதே வழமையாக இருந்து வந்தது ஆனால் இம் முறை தான் எமது நாட்டின் புதிய அரசியல் யாப்பு சட்டத்தரணிகள் கொண்ட குழுவின் மூலம் தயாரிக்கப்படுகின்றது. நான் APRC இன் தலைவராக பதவி வகித்த காலத்தில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முகமாக அரசியல் கட்சி தலைவர்களுடன் பல தடவை பேச்சுவார்த்தை நடத்தி அக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் இறுதி தீர்வு எட்டப்பட்டு அதன் அறிக்கை அன்றைய ஜனாதிபதி இன்றைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. அதனை பெற்றுக் கொண்ட பிறகு அவர் என்னிடம் கூறினார் இந்த அறிக்கை படித்து விட்டு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி அதை நடைமுறைப்படுத்துவதாக. ஆனால் தீர்வு திட்டம் நடைமுறைப் படுத்தப்படவில்லை ஆனால் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் புதிய அரசியல் யாப்பில் APRC இனால் மேற்கொள்ளப்பட்ட தீர்வுத் திட்டம் ஏதும் உள்வாங்கப்படவில்லை என்று தான் எனக்கு தெரிகின்றது. ஆனால் அப்படி எதுவும் நடந்திருந்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வாக அது அமையும். அது தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்த புதிய அரசியல் யாப்பாகும். அப்படி இடம்பெற்றிருந்தால் முதல் முதலில் மகிழ்ச்சியடைவது நானே.

**கேள்வி: அடுத்த மாதம் ஐ.நா அமர்வு இடம் பெறவுள்ளது அப்போது இலங்கைக்கு எதிரான தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படுமா?**

பதில்: அப்படி ஒரு நிலமை ஏற்படக் கூடிய வாய்ப்பே இல்லை. அமெரிக்கா இலங்கையில் தனது இலக்கை அடைவதற்காக ஐ. நா சபையூடாக இலங்கைக்கு பல அழுத்தங்களை கொடுத்தது. ஆனால் இலங்கைக்கு அதன் நட்பு நாடுகள் ஆதரவு வழங்கியதால், அமெரிக்காவின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படவில்லை. கடந்த நல்லாட்சியில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்ஹ பதவி வகித்த காலத்தில் அமெரிக்கா சோபா எம்சிசி போன்ற ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொண்டது. அதற்கு எதிராக எமது கட்சியும் ஏனைய இடதுசாரி கட்சிகளும் இணைந்த பாரிய போராட்டங்களை நடத்தியதால் தான் இத்திட்டம் கைவிடப்பட்டது. இவ்விரு திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி இருந்தால் எமது நாட்டுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும். தற்போது அரசு பொறுப்பு கூறுவதிலிருந்து விலகவில்லை. அதனை தற்போது நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் தற்போது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை குற்றமற்றவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அவர்களை கட்டங்கட்டமாக விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. எமது கட்சியின் நிலைப்பாடு வருடகணக்காக சிறையில் தடுத்து வைத்திருக்கும் தமிழ் இளைஞர்களை நீதி மன்றத்தில் ஆஜர் செய்து குற்றம் என்று நிருபிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு தண்டணை வழங்கப்படும் குற்றம் நிரூபிக்கவில்லை என்றால் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

**சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை குற்றமற்றவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அவர்களை கட்டங்கட்டமாக விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. எமது கட்சியின் நிலைப்பாடு வருட கணக்காக சிறையில் தடுத்து வைத்திருக்கும் தமிழ் இளைஞர்களை நீதி மன்றத்தில் ஆஜர் செய்து குற்றம் என்று நிருபிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் குற்றம் நிரூபிக்கவில்லை என்றால் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.**

**கேள்வி: 13ம் திருத்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதுபற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: 13ம் திருத்த சட்டம் அமுல் படுத்தப்பட வேண்டும் எனவும் அதனை எமது கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. எமது நாட்டில் தமிழ் சிங்கள மக்களுக்கிடையில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே எமது அபிலாஷையாகும். ஆனால் ஒரு சில இனவாத சிங்கள கட்சிகள் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படகூடாதென்ற நிலைப்பாட்டில் உள்ளன ஆனால் எமது கட்சி தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளன. தமிழ் மக்கள் தங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனக் கூறி போராடி உயிர் தியாகம் செய்தனர் ஆனாலும் அப் போராட்டம் வெற்றிபெற வில்லை. அதன் பின் ஜனநாயக ரீதியில் மக்களின் வாக்குகளால் வட கிழக்கு பகுதிகளில் இருந்து தமிழ் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் எனவும் 13ம் திருத்தச் சட்டம் அமுல்ப் படுத்தப்பட வேண்டும் என கூறிவரும் கால கட்டத்தில் 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக வடக்கில் ஒரு கட்சி செயற்பட்டு வருகின்றது. அக் கட்சியின் செயற்பாட்டை பார்க்கும் போது இதுவரை காலமும் தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டாம் என கூறி வந்தவர்கள் தெற்கில் உள்ள சிங்கள இனவாத கட்சிகளே. அதே நேரம் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டாம் என வடக்கில் உள்ள அரசியல் கட்சியொன்று கூறி வருகின்றது. அக்கட்சியின் செயற்பாட்டை பார்க்கும் போது தமிழ் மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்ட கட்சியா என்று கேள்விக்குறியாக உள்ளது. வடக்கில் உள்ள தமிழ் மக்கள் இதனை புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டாம் என்று சிங்கள அரசியல் கட்சி மட்டும் அல்ல தமிழ் அரசியல் கட்சியும் இணைந்து செயற்பட முன்வந்திருப்பது ஆச்சரியமாக உள்ளது இதனை பார்க்கும் போது தங்கள் அரசியல் அடையாளத்தை தக்க வைத்துக் கொள்ளவே அவர்கள் செயற்படுகின்றார்கள்.

**கேள்வி: தற்போது 11 கட்சிகள் அங்கம் வகிக்கும் கூட்டணியில் உங்களுடைய கட்சி இணைந்து செயற்பட்டு வருகின்றது இக் கூட்டணி தற்போது அரசாங்கத்திற்கு எதிரானதா?**

பதில்: நாம் இன்னமும் ஆளும் கட்சியில் இருந்தே செயற்பட்டு வருகிறோம் அரசாங்கத்தை வீழ்த்த உருவாக்கப்பட்ட கூட்டணி அல்ல அரசாங்கம் தற்போது செயற்பட்டு வரும் விதம் குறித்து நாம் முழுமையாக திருப்தி அடைய முடியாது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது. நாளுக்கு நாள் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றது. இதனால் பாமர மக்கள் பெரும் கஷ்டங்கனை எதிர் நோக்கி வருகின்றனர். இவ்வாறான பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண வேண்டும் என்றும் யோசனையை அரசுக்கு முன்வைப்பதற்காக இக் கூட்டணி உருவாக்கப்பட்டது. இக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் ஒன்று கூடி புதிய அரசியல் செயற்பாட்டை முன்னெடுத்து செல்ல தீர்மானித்து உள்ளோம். மக்களுக்கு பாதகமாக செயற்பாடுகள் எதுவும் அரசினால் மேற்கொள்ளப்பட்டால் அதனை நிவர்த்தி செய்ய இந்த கூட்டணி மூலம் அரசுக்கு அழுத்தம் கொடுப்போம். அரசின் தவறான தீர்மானத்தை நாம் சுட்டிக் காட்டி மக்களுக்கு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை இக் கூட்டணி மூலம் அரசுக்கு சுட்டிக் காட்டுவோம்.

செ. நித்தியானந்தன்...



# அரசியல் அரங்கம்

அர்ஜூன்

# காயங்களை குணப்படுத்தி முன்னேறி செல்வதிலேயே கவனம் செலுத்த வேண்டும்

## நீதி அமைச்சர் அலி சப்ரியுடன் சந்திப்பு

**'பயங்கரவாத யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் ஊடாக பாரிய பிரச்சினையை நாம் தீர்த்து விட்டோம். தற்பொழுது காயங்களை ஆற்றிக் கொண்டு எவ்வாறு முன்னேறிச் செல்வது என்பதே கவனம் செலுத்த வேண்டியதாகும்' என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**



'உள்நாட்டு பொறிமுறைகள் உரிய முறையில் செயற்படுகின்றன என்பதே எங்கள் நிலைப்பாடு. மூன்றாவது தரப்பினராக சர்வதேச சமூகம் தலையிடுவதை விட காயங்களை குணமாக்குவதற்கே இது பயன்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் இது உண்மையான நல்லிணக்கத்தை எதிர்மறையாக பாதிக்கும் என்பதுடன் காயங்கள் ஆற்றப்படுவதற்குப் பதிலாக நிலைமையை மோசமாக்கும். நீதி அமைச்சு வழங்கும் சேவைகள் குறித்து நாடு முழுவதிலும் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கிலேயே நீதிக்கான அணுகல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. உள்ளகப் பொறிமுறையானது மக்களின் காயங்களை ஆற்றுவதற்கே பயன்படுத்தப்பட வேண்டும்' எனவும் அலிசப்ரி தெரிவித்தார்.

**கே: நீதிக்கான அணுகல் திட்டம் மற்றும் அதன் நோக்கங்கள் எவை?**

பதில்: நீதி அமைச்சு வழங்கும் சேவைகள் குறித்து நாடு முழுவதிலும் உள்ள மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஊட்டுவதே நீதிக்கான அணுகல் என்ற திட்டத்தின் பிரதான நோக்கமாகும். எமது அமைச்சின் சேவைகள் மக்களைச் சென்றடைவதையும், பிரச்சினைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இதன் மூலம், அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பயனடைவார்கள். அமைச்சின் அதிகாரிகள் கொழும்பில் இருந்து பிரச்சினைகளை தீர்க்க முயற்சிப்பதை விட, அந்தந்த இடங்களுக்குச் சென்று உண்மையான நிலைமையை புரிந்து கொள்வார்கள். எனவே, மக்களைச் சென்றடைந்து, அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதே நோக்கமாகும்.

**கே: இத்திட்டத்தின் கீழ் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன?**

பதில்: இதில் பல செயற்பாடுகள் உள்ளடங்குகின்றன. நீதி அமைச்சின் கீழ் நீதிமன்றங்கள், சட்ட உதவி ஆணைக்குழு போன்ற பிரிவுகள் காணப்படுகின்றன. இவை அப்பகுதிக்குச் சென்று மக்களுக்கு சட்ட உதவி வழங்குகின்றன. எங்களிடம் ONUR (தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம்) உள்ளது. இது மக்களிடையேயான ஒற்றுமை மற்றும் காலாசாரங்களை உருவாக்குவதை நோக்காகக் கொண்டுள்ளது. இழப்பீடுகளுக்கான அலுவலகம் என்பது மக்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் தொடங்குவதற்கு இழப்பீடு அல்லது இழப்பீடு வழங்கும் மற்றொரு முறையாகும். உதாரணமாக அண்மையில் எனது யாழ்ப்பாண விஜயத்தின் போது சுமார் 1000 பேருக்கு தலா 100,000 ரூபா வீதம் 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஆலோசனை வழங்கி அவர்களின் தேவைகளைக் கண்டறியும். இத்திட்டத்தின் கீழ் அனைத்து நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்படும் சேவைகள் மக்களிடம் கொண்டு சேர்க்கப்படும்.

**கே: நீங்கள் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்த இத்திட்டத்தின் கீழ் வடக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் நோக்கங்கள் யாவை?**

பதில்: சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதே இழப்பீடுகள் குறித்த அலுவலகத்தின் நோக்கமாகும். இந்தக் காலப்பகுதியில் வடக்கு, கிழக்கில் ஏராளமான குடும்பங்கள் இடம்பெயர்ந்ததை நாம் அறிவோம். அவர்களின் பிரச்சினைகளை கண்டறிந்து அவர்களுக்கு ஆதரவளிப்பது நமது பொறுப்பு. அதைத்தான் நீண்ட நாட்களாக செய்து வருகிறோம். ஆனால் இம்முறை, அந்த ஆதரவிற்கு தகுதியான சுமார் 1,000 குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கினோம். மொத்தமாக 100 மில்லியன் ரூபாவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

**கே: உள்நாட்டுப் பொறிமுறையின் கீழ் நல்லிணக்கப் பணியின் மற்ற சிறப்பம்சங்கள் எவை?**

பதில்: தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. உதாரணமாக, கொக்குவில் இந்துக் கல்லூரியில் 12 ஸ்மார்ட் வகுப்பறைகளுடன் கூடிய மூன்று மாடிக் கட்டடத்தை நிர்மாணித்தோம். 2018 ஆம் ஆண்டில் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த சுமார் 70 மாணவர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ காலிக்குச் சென்றிருந்தனர். எனவே, அவர்களை அங்கீகரித்து வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் பாலங்கள் அமைக்க உதவிகளை வழங்க விரும்புகின்றோம். புனர்வாழ்வுத் திட்டம் மற்றும் அவர்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக புனர்வாழ்வளிக்கப்பட்ட சுமார் 50 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுடனான சந்திப்பும் ஏற்பாடு செய்யப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களுடன் நல்லிணக்கத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து அவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக நாங்கள் கலந்துரையாடினோம். காணாமற் போனோர் தொடர்பில் சுமார் 400 விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுகின்றோம். குழந்தைகளை இழந்த பல பெற்றோர்களிடம் பேசும் வாய்ப்பு எனக்குத் தனிப்பட்ட முறையில் கிடைத்தது, அவர்களுக்கு நாம் எப்படி உதவலாம் என்பதை அறிய விரும்பினேன். எனவே, உண்மையான பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு மக்களுக்கு உதவவும், பாலங்களைக் கட்டவும் இது ஒரு நல்ல திட்டமாக இருந்தது.

**கே: மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஜெனீவா அமர்வுக்கு அரசாங்கம் எவ்வாறு தயாராகி வருகின்றது? இது விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?**

பதில்: பயங்கரவாத யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் ஊடாக பாரிய பிரச்சினையை நாம் தீர்த்து விட்டோம். தற்பொழுது காயங்களை ஆற்றிக் கொண்டு எவ்வாறு முன்னேறிச் செல்வது என்பதே கவனம் செலுத்த வேண்டியதாகும். உள்நாட்டு பொறிமுறைகள் உரிய முறையில் செயற்படுகின்றன என்பதே எங்கள் நிலைப்பாடு, மூன்றாவது தரப்பினராக சர்வதேச சமூகம் தலையிடுவதை விட காயங்களை ஆற்றுவதற்கே இது பயன்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் இது உண்மையான நல்லிணக்கத்தை எதிர்மறையாக பாதிக்கும் என்பதுடன் காயங்கள் ஆற்றப்படுவதற்குப் பதிலாக நிலைமையை மோசமாக்கும். எனவே, நாம் உண்மையைச் சொல்வோம். உதாரணமாக வடக்கு, கிழக்கில் பிரச்சினைகள் இருந்தன, அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் நிலையான வளர்ச்சி இலக்குகளை நோக்கி முன்னோக்கி நகர்ந்து வருகின்றன. எனவே, நாம் நமது முன்னேற்றத்தை உலகிற்குக் காட்ட விரும்புகிறோம். மேலும் இந்த மாற்றங்களை அங்கீகரிக்கும்படி அவர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

உதாரணமாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருகிறோம். நல்லாட்சி அரசாங்கத்தினால் அதனைச் செய்ய முடியவில்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், பலர் மன்னிக்கப்பட்டனர். ஆக மொத்தத்தில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம்.

**கே: இலங்கையின் நீதிக் கட்டமைப்பை மேம்படுத்த எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?**

பதில்: நாங்கள் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். உதாரணமாக, எனது வடக்கிற்கான விஜயத்தின் போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாங்குளம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய நான்கு பிரதான நீதிமன்ற வளாகங்களை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தோம். அதேபோன்று, உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், பழைய சட்டங்களை மாற்றுதல், சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற இடங்களுக்கு அதிகளவிலான ஆட்களை நியமித்தல் போன்ற நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளோம். நீதித் துறையை டிஜிட்டல் மயப்படுத்தி வருகின்றோம். மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர்நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதிமன்றங்களில் இலங்கையின் நீதித்துறை அமைப்பை மாற்றியமைக்க முயற்சிக்கிறோம்.

**கே: குறிப்பாக புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பான முக்கிய சட்டச் சீர்திருத்தங்கள் எவை?**

பதில்: உண்மையில், அரசியலமைப்புக்கான வரைவு தயாரிக்கப்படும் வரை காத்திருக்க வேண்டும். சிறப்பாகச் செயற்படக் கூடிய வலுவான அரசியலமைப்பையே எதிர்பார்க்கின்றோம் தேர்தல் சீர்திருத்தங்களுடன் ஒரு தனியான தேர்தல் முறை அவசியமாகிறது.

**கே: தொழிலாளர் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவது பற்றிய உங்கள் சமீபத்திய அறிக்கை விமர்சனங்களைச் சந்தித்துள்ளது. இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில்: இல்லை, நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. இது தவறாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

**“சர்வதேச சமூகம் தலையிடுவது நல்லிணக்கத்தை எதிர்மறையாக பாதிக்கும் என்பதுடன் காயங்கள் ஆற்றப்படுவதற்குப் பதிலாக நிலைமையை மோசமாக்கும். உள்நாட்டு பொறிமுறைகள் உரிய முறையில் செயற்படுகின்றன என்பதே எங்கள் நிலைப்பாடு”**

# சவூதியின் சீர்திருத்தங்கள் எமக்கு கற்பிக்கின்ற பாடம்




2030ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு பொருளாதார சீர்திருத்த தொடர் ஒன்றை செயல்படுத்த சவூதி அரேபியா முடிவு செய்துள்ளது. கொவிட் தொற்று நிலைமையின் காரணமாக உலகப் பொருளாதாரத்தில் பின்னடைவு சிக்கல் ஏற்படும் என்று சவூதி அரேபிய ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளார்கள். உலக மக்கள் பெட்ரோலிய பாவனையிலிருந்து விலகி வருவது சவூதி அரேபியாவுக்கு பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. தற்போதைய நிலைமையை மாற்றா விட்டால் சிக்கல்கள் ஏற்படக் கூடும் எனக் கூறப்பட்டுள்ளதோடு பல பிரிவுகளை இணைத்ததாக மாற்றங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

சவூதி அரேபியா மத்திய கிழக்கு நாடுகளில் பாரிய பொருளாதார பலம் வாய்ந்த நாடாக உள்ளதோடு, உலகில் உள்ள 20 பணக்கார நாடுகளில் ஒன்றாகும். பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அதிகமாக உள்ள நாடு அதுவாகும். அதிகளவு மசகு எண்ணெய் வளத்தைக் கொண்ட நாடுகள் பட்டியலில் இரண்டாவது இடத்திலுள்ளது. அந்நாட்டின் தேசிய வருமானம் நூற்றுக்கு 63 வீதம் பெற்றோலியமாக உள்ளதோடு, ஏற்றுமதி வருமானமாக நூற்றுக்கு அறுபது வீதம் பெற்றோலியத்துடன் இணைந்த உற்பத்திகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. சவூதி அரேபியாவில் பணிபுரிபவர்களின் நூற்றுக்கு 80 வீதமானோர் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் ஆவர்.

எண்ணெய் மூலம் வருமானம் கிடைக்காமல் போகும் காலத்தில் தாங்கள் வாழ்வதற்கான வழிவகைகளை சவூதி ஆட்சியாளர்கள் ஆராய்ந்துள்ளார்கள். பொருளாதாரத்தை பல் வகைமைப்படுத்துவதோடு வேலைவாய்ப்பற்ற தன்மையை குறைத்து பெண்களின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்வதற்கு புதிய கோணத்தில் யோசனைகளை முன்வைத்துள்ளனர். அரச பொறிமுறையை செயல்திறன் மிகுந்த தாக்கும் நோக்கங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பன்னிரண்டு விடயங்களாலான திட்டமொன்று நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. திட்டங்களை செயல்படுத்தும் வேளையில் அதனை கண்காணிப்பதற்கும் வேறொரு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. முதலீடு, வீடமைப்பு அபிவிருத்தி, நிதி ஸ்திரத்தன்மை, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் உள்ளிட்ட விடயங்கள் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சவூதி அரேபிய அரசாங்கத்துக்குச் சொந்தமான 50 க்கும் அதிகமான வர்த்தகங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டுள்ளன. வர்த்தகத் திட்டங்களை ஆரம்பிப்பதை இலகுபடுத்துவதற்காக தானியங்கி தரவுகள் தொகுதி மற்றும் முதலீடு நிர்வாக முறைகளை அந்நாடு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதன் மூலம் முதலீடு மற்றும் தொழில் முனைவு இலகுவாக்கப்படும். 24 மணித்தியாலத்துக்குள் துறைமுக நடவடிக்கைகளை நிறைவு செய்வது மற்றும் கப்பல்கள் வருவதற்கு முன்னரே அவற்றில் உள்ள பொருட்களுக்கு இலத்திரனியல் அனுமதி போன்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு ஒரே இடத்தில் உடனடியாக அனுமதிகளை வழங்கும் முறைகளும் ஆலோசிக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக டிஜிட்டல் முறைகளையும் அறிமுகம் செய்துள்ளது. கைத்தொழில் மற்றும் வர்த்தகம் தொடர்பாக வணிக நீதிமன்றங்களில் வழக்குகளை மூன்று தவணைகளுக்கு மேல் நீடிக்காமல் விரைவாக தீர்ப்பு வழங்கும் முறையொன்றையும் அறிவித்துள்ளதாக தெரியவருகின்றது. புதிதாக 197 சட்ட வரைவுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவற்றால் பொருளாதாரம் பற்றிய முடிவுகள் எடுப்பது விரைவுபடுத்தப்படும். இலத்திரனியல் நிர்வாகம் சவூதி அரேபியாவின் ஆட்சியில் பாரிய புரட்சியாகும். அந்நாட்டின் அனுமதிப் பத்திர சீர்திருத்த திட்டத்தின்படி அரசாங்கத்தின் 5,500 அனுமதிப்பத்திரப் பிரிவு நூற்றுக்கு அறுபது வீதம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. வர்த்தக மற்றும் கைத்தொழில் பிரிவுக்கான அனுமதிப் பத்திரங்கள் 24 மணித்தியாலத்துக்குள் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளமை விசேடமாக கருத்தில் கொள்ள வேண்டிய அம்சமாகும்.

எண்ணெய் வளத்தை அதிகமாகக் கொண்ட சவூதி அரேபியா ரோபோ தொழில்நுட்பத்துக்கும் உள்நுழைந்துள்ளது. ஐந்தாவது பரம்பரையின் வேகமான தொடர்பாடலை அறிமுகம் செய்துள்ளது. செயற்கை அறிவை பாவிக்கும் 15 நாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது. சீர்திருத்தம் மற்றும் தொழில்நுட்ப பாவனையுடன் பாரிய வெளிநாட்டு முதலீட்டை இலக்காகக் கொண்டுள்ளது எனலாம். 2019 ஆம் ஆண்டிலிருந்து எண்ணெய் அல்லாத பிரிவுகளில் இருந்து நாட்டுக்குக் கிடைக்கும் வருமானம் நூற்றுக்கு ஐந்து வீத வேகவளர்ச்சியை அடைந்துள்ளதோடு, வெளிநாட்டு முதலீடுகள் நூற்றுக்கு 301 என்னும் வளர்ச்சியைக் காட்டுகின்றன. 2030 ஆம் ஆண்டளவில் சவூதி அரேபியாவின் பொருளாதாரத்திற்கு தனியார் துறையின் பங்களிப்பை நூற்றுக்கு 65 சதவீதத்தால் அதிகரிப்பதே நோக்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சவூதி அரேபியா பணக்கார நாடு. பெற்றோலியம் உள்ளிட்ட கனிம வளங்கள் பெருமளவு உள்ளன. எண்ணெய் பாவனை உடனடியாக முடிவுக்கு வராது என்பதோடு இன்னும் பல தசாப்தங்கள் அதன் மூலம் வாழக் கூடிய சந்தர்ப்பம் உண்டு. சவூதி மக்களுக்கு பொருளாதார தட்டுப்பாடு இல்லை. அவ்வாறான சிறந்த சூழல் உள்ள நிலைமையில் கூட எதிர்காலத்தை திட்டமிட்டு வருகின்றது. பொருளாதார சீர்திருத்தத்தை மேற்கொள்ளாமல், தடைகள் இன்றி வாழக்கூடிய சவூதியே மாறுபட்ட திட்டங்களை அறிவிக்கின்றது. ஆனால் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியில் உள்ள இலங்கை புதிய கோணங்கள் குறித்து கவனம் செலுத்தாதது ஏன்?

சிறந்த எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்புடனேயே அரசியல் தலைவர்களை மக்கள் அதிகாரத்துக்கு கொண்டு வருகிறார்கள் என்பதை ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. அரசியல் மேடைகளில் மக்கள் முன்னிலையில் தெரிவிக்கும் வாக்குறுதிகள் பின்னர் ஞாபகத்தில் இல்லை. அனைத்து அரசியல்வாதிகளும் மக்களுக்கு இனிமையான வார்த்தைகளை கூறுவதோடு பொருளாதாரத்தை மேம்படுத்த எடுக்க வேண்டிய கசப்பான முடிவுகள் பற்றி தெரிவிப்பதில்லை. அரசாங்கத்தை தெரிவு செய்யும் மக்களும் தலைவர்களிடமிருந்து மெஜிக் தீர்வுகளையே வேண்டுகிறார்கள். ஒன்றிரண்டு வருடங்களில் நாட்டை சொர்க்கபுரியாக உருவாக்க அழுத்தம் கொடுக்கின்றார்கள்.

எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுகள், காலாவதியான சட்டம் மற்றும் அதிகாரத்துவம் சீர்திருத்தத்தை தடுக்கும் இடங்களாகும். அடுத்த தேர்தலுக்காக பிரபல்யத்தை பாதுகாப்பதற்கு முயற்சி செய்யும் தலைவர்கள் நாட்டை மேம்படுத்தும் மற்றும் அதனால் மக்களின் கௌரவத்தை வெற்றி கொள்ளும் முயற்சியை மறந்து விடுகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளுக்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள பெருமளவு தைரியம் வேண்டும். மாற்றங்களை சகித்துக் கொள்ளும் சக்தி சமூகத்திடமும் காணப்பட வேண்டும்.

தமிழில்: வீ.ஆர். வயலட்



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடான 23 நூல்களின் வெளியீடு நேற்று சனிக்கிழமை (12) காலை கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெற்ற போது "இலங்கையில் தமிழர் பண்பாடு" எனும் நூலின் முதல் பிரதியை இலக்கிய புரவலர் ஹாசிம் உமருக்கு ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மகராஜ் வழங்கி வைப்பதையும் அருகில் நிலையத்தின் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் சர்வதேச இந்து மத பீட செயலாளர், சிவ ஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, பேராசிரியர் எஸ் தில்லை நடராஜா ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.

# சட்டவிரோத மின் இணைப்பால் இருவர் பலி

பலாங்கொடை தினகரன் நிருபர்

இரத்தினபுரி, பெல்மதுளை பட்டலந்தைப் பகுதியில் மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.விவசாய நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத மின்னிணைப்பில் சிக்கியே இருவரும் பலியாகியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும், சட்டவிரோத அகழ்வுப் பணியில் ஈடுபடுவதற்காக சென்றபோது, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப...

வெளியிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹசிம், ஹர்ஷ டி சில்வா, ஏரான் விக்கிரமரத்ன, லங்கா சமசமாஜ கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர்.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், ஆர். சாணக்கியன், தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியூதீன் மற்றும் ரவூப் ஹக்கீம், முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் இந்த அறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்சினை குறித்து, 04 பிரதான சவால்களை, எதிர்கட்சிகள் அடையாளம் காட்டியுள்ளன.

01.2020 ஏப்ரலிலிருந்து சர்வதேச இறையாண்மைப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் சர்வதேச நிதிச் சந்தைகளிலிருந்து இலங்கை கடன் பெறுவதற்கான வாய்ப்புகளை இழந்தமையே இதன் மையக் கருமாகும்.

02.இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு மாதாந்தம் தேவையான இறக்குமதிக்கு கூட போதுமானதாக இல்லாத காரணத்தினால், சுதந்திரத்திற்குப் பின்னர் மிகக் குறைந்த அந்நியச் செலாவணியை நாடு கொண்டுள்ளது.

03.2020 இல் பதிவு செய்யப்பட்ட அரசாங்க வருவாயில் 70 வீத கடன் வாங்குவது, இதுவரை பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச வட்டி விகிதமாகும்.

04.கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்த பொதுக் கடனை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 சதவீதம் முதல் 120 சதவீதம் வரை உயர்த்தியமை ஆகியனவே 04 பிரதான காரணிகளாக காணப்படுகின்றன.

அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள பாரிய சவால்களை தாம் ஏற்றுக்கொள்வதுடன், இந்த நிர்க்கதியான தருணத்தில் நாடு என்ற விதத்தில் அனைவரும் ஒன்றிணைந்து இந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்பு வெற்றி கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். அராலி செட்டியர் மடம் சந்தியில் கோர விபத்து: இளைஞர் பலி

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, அராலி செட்டியர் மடம் சந்தியில் நேற்று (12) காலை இடம்பெற்ற விபத்தில் சிந்துபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவருடன் பயணித்த மற்றைய இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். கட்டுப்படுத்த முடியாத அதிவேகம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த விபத்து நிகழ்ந்த இடத்தில் ஆபத்தான வளைவு ஒன்று உள்ளது. அத்துடன் வீதி அபிவிருத்தி நிறைவடைந்த நிலையில் வீதியின் ஓரத்தில் போடப்படவேண்டிய எல்லைக்கோடு இன்னமும் போடப்படவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

265g ஹெரோயின் வைத்திருந்த

# மாலைதீவு பிரஜைக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

## கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

265 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றத்துக்காக மாலைதீவு பிரஜை ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் (11) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த தீர்ப்பு அளிக்கப்பட்டது. மாலைதீவு பிரஜையான லத்தீப் இஷூன் என்பவருக்கே இவ்வாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்த தண்டனையை விதித்துள்ளார்.

மேலும், மேற்படி நபருடன் கைதான மற்றுமொரு சந்தேகநபரை நிரபராதியாக கருதி விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், பம்பலப்பிட்டி பகுதியில் வைத்து சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எங்கள் கருத்து...

## தங்களை எப்போதுதான் திருத்தி கொள்ள போகிறார்கள் இவர்கள்?

அரசியல் தீர்வு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, தமிழர் பிரதேசங்கள் அபிவிருத்தி எனும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் எதுவுமே நல்லாட்சி அரசின் காலத்தில் நிறைவேறவில்லை.

மைத்திரி ரணில் தலைமையிலான நல்லாட்சியில் எதனையுமே வென்றெடுக்க முடியாமல் தமிழ்த் தலைமைகள் வெட்கித் தலைகுனிந்த காலமாக ஐந்து வருடங்கள் கழிந்தது.

தாங்களேதான் நல்லாட்சி அரசாங்கத்தை அமைக்கக் காரணமாக இருந்தோம் எனக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடக்கம், நல்லாட்சி அமைய நானே காரணம் எனக் கூறிய தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளும் நல்லாட்சி அரசாங்கத்திற்குக் கிடைத்தன எனக் கூறிய முஸ்லிம் கட்சிகளும் வெட்கித் தலைகுனியும் அளவிற்கு நல்லாட்சி அரசாங்கத்தில் எந்தவொரு சமூகத்திற்கும் நல்லது எதுவுமே நடைபெறவே இல்லை, அதுவே உண்மை.

ஐந்து வருட கால நல்லாட்சியின் போது நினைத்திருந்தால் முழு தமிழ் அரசியல் கைதிகளையும் அவர்கள் விடுவித்து இருக்கலாம். அது மாத்திரமன்றி அரசியல் தீர்வொன்றை சிறுபான்மை இனங்களுக்கு வாய்ப்பாக ஏற்படுத்தியிருக்கவும் முடியும். ஆனால் அவை எவற்றையுமே நல்லாட்சி அரசாங்கம் செய்யவில்லை. அதனை செய்வதற்கு இடமளிக்கவும் இல்லை.

தமிழ் மற்றும் தமிழ் பேசும் தலைமைகளை இரகசியமாக சூட்கேஸ் பெட்டிகளை வாங்கும் அரசியல் வாதிகளாக மாற்றி தாம் நினைத்ததை நல்லாட்சி அரசு அரங்கேற்றி வந்தது. இதற்கு தமிழ் பேசும் தலைமைகள் இணங்கிச் செல்ல வேண்டிய கட்டாய சூழல் செயற்கையாக உருவாக்கப்பட்டது.

ஆனால் இன்றைய அரசாங்கம் இவை எல்லாவற்றுக்கும் முற்றிலும் மாறுபட்ட விதத்தில் தமிழ் அரசியல் தலைவர்களை, தமிழ் அரசியல் கட்சிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்து வருகிறது. ஆனால் தமிழ்த் தலைமைகள் இவ்விடயத்தில் தயக்கம் காட்டி அழைப்பைப் புறக்கணித்து வரும் ஒரு சூழலை காண்கின்றோம்.

இந்தத் தொடர் புறக்கணிப்பை நோக்குகின்ற போது, நாட்டில் பிரச்சினைகள் தீர்வுக்கு வந்து விடக் கூடாது எனும் மனோபாவத்தில் அவர்கள் இருக்கிறார்களோ என்னும் சந்தேகம் தோன்றுகின்றது.

நல்லாட்சியில் ஐந்து வருடங்கள் மௌனமாக இருந்து விட்டு, இன்று உலகையே உலுக்கி வரும் கொடிய கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் மக்களாட்சி செய்து நாட்டில் அபிவிருத்திகளை முன்னெடுத்து வரும் அரசாங்கத்தின் மீது வசைபாடி வருகிறார்கள்.

நல்லாட்சி அரசு அதிகாரத்தில் இருந்த போதும் இதே பிரச்சினைகள் நிலவின. ஆனால் சந்தர்ப்பம் இருந்த போதிலும் அன்றைய ஆட்சியினர் பிரச்சினைகளை தீர்த்து வைக்கவில்லை. ஆனால் அதே பிரச்சினைகளுக்கு தீர்வினைத் தருமாறு இன்றைய அரசாங்கத்திடம் அவர்கள் கேள்விக்கணைகளை முன்வைக்கிறார்கள்.

உண்மையில் அரசாங்கம் இவர்களது கேள்விக்கு முன்னதாகவே அதற்குரிய நடவடிக்கைகளில் இறங்கி செயற்பட்டு வருகின்றது. இவ்வாறிருக்கையில் 18, 20 வருடங்களாக வசதிகள் எதுவும் இன்றி சிறைகளில் வாடுகின்ற தமிழ் இளைஞர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று ரிசாத் பதியுதீன் எம்.பி உயர் சபையிலே கோரிக்கை விடுகிறார். நல்லாட்சியில் சகல அதிகாரங்களும் கொண்ட அமைச்சரவை அமைச்சராக இருந்த ஒருவர் அதே ஆட்சியில் இந்த விடயத்தைப் பற்றி வாய் திறக்காத நிலையில் இன்று கேள்வி எழுப்புகிறார்.

அதேபோன்று தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விட்டு அந்த விடயத்திற்கு முக்கியத்துவம் அளித்து முயற்சிகள் எடுத்து வரும் இந்த அரசாங்கத்தை பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எப்பொழுதுமே சவால் விடும் வகையில் குற்றம்சாட்டி வருகிறார்.

இந்த அரசாங்கத்தை மிகவும் தரக்குறைவாக யாழ்ப்பாணத்திலுள்ள அரசியல்வாதிகள் பலரும் விமர்சித்து வருகிறார்கள். இவர்கள் அனைவருமே நல்லாட்சி அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்து பணியாற்றியவர்கள். உண்மையில் இவர்களது நோக்கம் என்ன? இவர்களை இவ்வாறு இயக்கும் செயற்பாடுகளின் பின்னணியில் இருப்பவர்கள் யார்? அவர்களது தேவைதான் என்ன? இவர்கள் எல்லோருமே தமிழ் பேசும் மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களா? இவை குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அடுத்த தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் தமக்கு சரியான தலைமைத்துவம் வழங்கக் கூடிய உண்மையான அரசியல் எண்ணங்களைக் கொண்ட அரசியல்வாதிகளை தெரிவு செய்ய வேண்டும். அதன் மூலம் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு தீர்வினை காண முன்வர வேண்டும். வெறுமனே வீரவசனங்கள் பேசி அறிக்கைகளை விட்டு வருகின்ற அரசியல்வாதிகளால் தமக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லை என்பதை தமிழ் பேசும் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

## தேங்கியுள்ள கொள்கலன்கள் நாளை...

பொருட்கள் அடங்கிய கொள்கலன்களே விடுவிக்கப்படவுள்ளது. தற்போது அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய 1,500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற நிதியமைச்சருடனான கலந்துரையாடலின் போது, குறித்த கொள்கலன்களை விடுவிப்பதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் நிதியமைச்சின் தலையீட்டில் துறைமுகத்தில் தேங்கியிருந்த 500 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## டி.ஆர். விஜேவர்த்தனவின்...

வழிபாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கொழும்பு, கோட்டை, சம்புத்தாலோக்க விஹாராதிபதி போராசிரியர் இத்ததெமலியே இந்திரசார தேரர் மற்றும் ஹுனுபிட்டி கங்காராம விஹாராதிபதி கலாநிதி கிரிந்தே அஸ்சஜி தேரர் ஆகியோரின் உபதேசங்களுக்கமைய லேக்ஹவுஸ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் நிறுவனத்தின் பௌத்த சங்கத்தின் வழிகாட்டலுடனும் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. 18 ஆம் திகதி இரவு முழுவதும் பிரித் பாராயணமும் 19 ஆம் திகதி மதியம் பிக்குமாருக்கான மகேஸ்வர பூஜையும் நடைபெறவுள்ளன.

## தட்டுப்பாடின்றி அத்தியாவசிய...

அத்தியாவசியப் பொருட்களுக்கான வரி நிவாரணத்தை அரசாங்கம் பெற்றுக் கொடுத்தாலும் அது நுகர்வோரை சென்றடையாமை தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

சில வர்த்தகர்கள் அரசாங்கத்தின் வரி நிவாரணத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் இங்கு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

அதேவேளை இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களை உரிய வகையில் நுகர்வோரான மக்களுக்கு சென்றடையும் வகையில் பொறிமுறையொன்றை முறைப்படி நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.சந்தையில் பால் மா, சமையல் எரிவாயு, கோதுமை மா, சீமெந்து ஆகியவற்றுக்கான தட்டுப்பாடு நிலவுகின்ற போதும் ஏனைய அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் போதுமான அளவு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரே பொருள் மாவட்டத்துக்கு மாவட்டம் வித்தியாசமாக அதி கூடிய விலையில் விற்கப்படுவது தொடர்பில் இதன்போது இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேக்கர நிதி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இதனால் நுகர்வோர் பெரும் பாதிப்புக்குள்ளாவதாக குறிப்பிட்ட அவர், அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டமென்றும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன,

கட்டுப்பாட்டு விலைகளை காட்சிப்படுத்த வேண்டமென்று சட்டம் நாட்டில் நடைமுறையில் இருந்தாலும் அது தற்போது கவனத்தில் கொள்ளப் படுவதில்லை என்றும் குறிப்பிட்டார். அதேவேளை வர்த்தகர்கள் தன்னிச்சையாக விலைகளை தீர்மானிக்கும் நிலையே காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ,

அனைத்து பொருட்களின் விலைகளையும் மூன்று மொழிகளிலும் காட்சிப்படுத்துவதற்குப் பதிலாக அத்தியாவசிய பொருட்களின் விலைகளைமாத்திரம் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரிவித்தார். (ஸ)

## நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்க...

நடைபெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகசந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தூரநோக்கு கொள்கையுடைய அரச தலைவர். பாதுகாப்புச் செயலாளராக பதவி வகித்த காலத்திலிருந்து நாட்டை சிறந்த முறையில் நிர்வகிக்கும் திட்டங்களை அவர் செயற்படுத்தியுள்ளார்.

நாட்டின் தலைநகரை அழகுப்படுத்த அவர் எடுத்த முயற்சியின் பிரதிபலனை தற்போது நாட்டு மக்கள் அனுபவிக்கின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்துக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்ற காரணத்தினாலேயே அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கினேன்.

அதனைத் தொடர்ந்து அரசாங்கத்தின் அனைத்து தீர்மானங்களுக்கும் மனசாட்சிக்கமைய நாட்டின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு ஆதரவு வழங்கியுள்ளேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவேன்.ஜனாதிபதியின் நிர்வாகம் தோல்வியடைவதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது. ஜனாதிபதியின் தூரநோக்கு சிந்தனை நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்தும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியை தற்காலிகமாகவே வழங்கியுள்ளேன்.

ஜனாதிபதி தேர்தலின் போது அவரை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்ய வேண்டாமென முக்கிய தரப்பினர்களிடம் அறிவுறுத்தினேன்.

பல்வேறு தரப்பினரது ஆலோசனைகளுக்கமைய ஐக்கிய மக்கள் சக்தி கட்சியை அவரிடம் ஒப்படைத்தேன். கட்சியை ஒப்படைத்து 03 மாத காலத்துக்குள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நிர்வாகத்துக்கு பொருத்தமற்றவர் என்பதை விளங்கிக் கொண்டேன்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே வெற்றிபெறுவார் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாதென்றார்.

## முகநூல், ஊடக விளம்பரத்துக்காக...

அண்மைக்காலமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காக பலரும் குரல் கொடுத்து வருகின்றனர். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அவர்கள் ஒரு விதமான அரசியல் பின்புலத்தையும் தேர்தலையும் இலக்காகக் கொண்ட நோக்கத்தில் போலியாக இதனை செய்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக ஐந்து வருட நல்லாட்சி அரசாங்கத்தில் எதனையுமே செய்யாது, கிடைத்த சந்தர்ப்பங்களை தவறவிட்டவர்களே இன்று தோட்டத் தொழிலாளர்களுக்காக அதிகம் குரல் கொடுக்கிறார்கள்.

இதனை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடுமையாக கண்டிக்கிறது.

ஒன்று நீங்கள் செய்திருக்க வேண்டும்,ஆனால் செய்யவில்லை, அதனால் இப்போது நாங்கள் செய்துவரும் நல்ல விடயங்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்க வேண்டாமெனவும் ஜீவன் தொண்டமான் கேட்டுள்ளார்.

காற்றிலே பறக்கும் கூரைகளையும், பெருமழை பெய்தால் இடிந்து விழும் சுவர்களையும் கொண்ட சில வீடுகளை அமைத்து விட்டு மலையகத்தில் நாங்கள்தான் கல் வீடுகளை கட்டிக் கொடுத்தோம் என மார் தட்டிக்கொள்ளளும் சிலர் உண்மை நிலையை விளங்கிக்கொள்ள வேண்டும்.

அத்தகைய வீடுகளை இன்று நாங்கள் புதுப் பொலிவுடன் திருத்தியமைத்துக் கொடுத்து வருகின்றோம். அதனை விடவும் பல்லாயிரக்கணக்கான புதிய வீடுகளை அமைத்தும் வருகிறோம்.

அதேபோன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபா சம்பளத்தைக் கூட அதிகரித்துக் கொடுக்க முடியாதவர்கள் இன்று ஆயிரம் ரூபா கொடுத்ததை விமர்சிக்கின்றனர். உண்மையில் இவர்களது நோக்கம்தான் என்ன? தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த அரசாங்கம் நன்மை செய்வதை இவர்கள் விரும்பவில்லையா?

தோட்டத் தொழிலாளர்களது வாழ்வாதார பிரச்சினைகள் முதல் சகல விடயங்களுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முதுகெலும்பாக அவர்களுடன் நிற்குமெனவும் ஜீவன் தொண்டமான் உறுதியளித்துள்ளார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விளம்பரத்தைத் தேடுகின்ற ஒரு தொழிற்சங்கமல்ல, மாறாக சேவை மட்டுமே செய்யும் ஒரு தொழிற்சங்கமாகும். முகநூலிலும் ஊடகங்களிலும் விளம்பரத்துக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒருபோதும் செயற்பட்டது கிடையாது என்றார்.

## பொருளாதார மீட்சியின் பின்பே...

இதேவேளை, அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தடையை நீக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் இலங்கைக்கு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தடுப்பூசி செலுத்தினால் கொவிட்...

அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இது எமது கைகளிலேயே உள்ளது. இது வாய்ப்புக்கான விடயம் அல்ல. இது தேர்வுக்கான விடயம் என்றார்.

70 சதவீதமானோருக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தி முடிக்கப்பட வேண்டும் என்ற இலக்கை, ஜூன் அல்லது ஜூலைக்குள் அடைய எதிர்பார்ப்பதாகவும், அவ்வாறு நிகழுமாயின் கொவிட் தொற்றின் தீவிர தாக்கத்தை நிச்சயமாக முடிவுக்கு கொண்டுவர முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## 12 வயதுக்கு குறைந்த...

இதேவேளை, நாட்டில் நேற்று முன்தினம் 1,259 பேருக்கு கொவிட் 19 தொற்றுறுதியானது. இதற்கமைய, கொவிட் தொற்றின் மொத்த எண்ணிக்கை 625,804 ஆக உயர்வடைந்துள்ளது.

அதேநேரம், கொவிட்19 தொற்றிலிருந்து மேலும் 373 பேர் நேற்று முன்தினம் குணமடைந்துள்ளனர். இதற்கமைய, கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 594, 348ஆக அதிகரித்துள்ளதென தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேலும் 31 பேர் கொவிட் தொற்றினால் நேற்று முன்தினம் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன், அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

## கிழக்கில் சுற்றுலாத்துறைக்கு புத்துயிர்...

பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மட்டு. மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவருமான சிவனேசத்துரை சந்திரகாந்தனுக்கும் இலங்கைக்கான இந்திய பிரதி தூதுவர் வினோத் கே.ஜகொப் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிரதி தூதுவரின் இல்லத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் இந்திய அவிருத்தி நிதி ஊடாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள் மற்றும் தொழிநுட்ப நிலைய திட்டங்கள் ,மீன் பிடித்துறை அபிவிருத்தி ,விவசாயத்துறை அபிவிருத்திகளை மட்டக்களப்பு ,திருகோணமலை மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் தொடர்பாக இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் முக்கியமாக கலந்துரையாடப்பட்டது..

பாராளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் றிஸ்லி இல்லியாஸின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் இந்திய தூதரக முதல் செயலாளர் (அரசியல் ) பஸ்டியன் என். ஷெக்கோ மற்றும் வர்த்தக மற்றும் பொருளியல் துறை கவுன்சிலர் கலாநிதி ரகேஷ் பான்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் பிரதி தூதுவரால் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனுக்கு நினைவுச்சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

## சுகாதாரத்துறை போராட்டம்...

கைவிடுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையிலும் அதனை பொருட்படுத்தாது நேற்றைய தினமும் மேற்படி வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

இதனால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நோயாளிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை கடந்த 7ஆம் திகதி ஆரம்பித்தன. சம்பள முரண்பாடு உள்ளிட்ட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து 18 தொழிற்சங்கங்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

தமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என அந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக அனைத்து அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் சுகாதாரத் துறை நிறுவனங்களின் முக்கிய பல்வேறு சேவைகள் சீர்குலைந்துள்ள நிலையில் ஆஸ்பத்திரிகளை நாடி வரும் நோயாளிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.(ஸ)

## வைத்திய சேவை, மின் விநியோகம்...

வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

11 பெப்ரவரி 2022 ஆம் திகதிய 2266/55 ஆம் இலக்க மேற்படி வர்த்தமானி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்துக்கமைய சில துறைகளின் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி மின்சார விநியோகம், வைத்தியசாலை சேவைகள், முதியோர் இல்லங்கள் மருந்தகங்கள் நோயாளர் பராமரிப்பு சேவைகள் மற்றும் சிகிச்சை நடவடிக்கைகள் ஆகியன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களுக்கு அத்தியாவசியமான இந்த சேவைகள் யாவும் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு நோக்கிலேயே மேற்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

பல்வேறு தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக மின்சாரம் மற்றும் சுகாதாரத்துறை நடவடிக்கைகளில் கடந்த வாரத்திலிருந்து பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதனை கருத்திற் கொண்டே அரசாங்கம் மேற்படி தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.(ஸ)

# பெருந்தோட்ட அமைச்சு

நிறுவனத்தின் தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்ச் செய்கை மற்றும் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு

## தேயிலைச் சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை

## மண் வளத்தைப் பாதுகாப்போம் - தேயிலையை வளர்ப்போம் - காலங்கடத்தாமல் இருப்போம்



**பற்றைகளைக் கழற்றி, வருடங்கள் காத்திராமல், கொம்பொஸ்ட் இட்டு தேயிலையை நடுவோம்**

- புல் பயிராவதனை தடுத்து கொம்பொஸ்ட் இட்டு தேயிலையை வளர்ப்போம்
- தேயிலை மீள் பயிர்ச்செய்கை/ புதிதாக நடுதல்களிற்காக உச்ச மானியத் தொகை ஹெக்டயர் ஒன்றிற்கு ரூபா 750,000/-
- விண்ணப்பிக்கக்கூடிய அதிகூடிய மானியத் தொகை 1/4 ஏக்கருக்கு ரூபா 75,000/-
- முதலாம் தவணை: நிலப்பண்படுத்தல் மற்றும் கொம்பொஸ்ட்களுக்காக மானியத் தொகையின் 50%
- இரண்டாம் தவணை: நடுகைக்கான தேயிலைக் கன்றுகளிற்கான மானியத் தொகையின் 50%

**விண்ணப்பப்படிவங்களை,** அண்மித்த தேயிலை பரி/ விரிவாக்கல் அலுவலகம் வலய அபிவிருத்தி அலுவலகம், பிராந்திய அலுவலகம், தேயிலைச் சிறு பற்று நிலங்கள் அபிவிருத்திச் சங்கம், அல்லது பிரதான அலுவலகம், www.tshda.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட வேண்டிய இறுதித் தினம் 2022.03.31.

தலைவர்,
தேயிலைச் சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை,
இல. 70, பாராளுமன்ற வீதி, பெலவத்த,
பத்தரமுல்ல.

**மேலதிக விபரங்களிற்காக அழைக்கவும்**
அபிவிருத்திப் பிரிவு
0117909035/ 36/ 56
துரித அழைப்பு - 1974

---

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

DEA

## ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்



# மஞ்சள் பொழியும் மஞ்சள் அறுவடை தரமான முறையில் தயாரிப்போம்



தற்போதைய அரசின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய அபிவிருத்தித் திட்டத்திற்கு இணையாக உங்களது மற்றும் எமது அர்ப்பணிப்பில் இலங்கை மஞ்சள் உற்பத்திகளில் தன்னிறைவு பெற்றிருப்பது பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இந்த தேசிய வெற்றியை மிகவும் அர்த்தபூர்வமாக்குவதற்கு இந்த மஞ்சள் அறுவடையை சிறந்த வாழ்வு மற்றும் மகிழ்ச்சியுடைய நாட்டிற்கான புத்தம்புதியதான சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு பயன்படுத்த வேண்டி உள்ளது.

இலங்கை மஞ்சல் சுவை மற்றும் தரத்தைக் கொண்டிருப்பதோடு அதன் தரத்திற்குக் காரணம் கர்குமின் எனும் இரசாயனப் பதார்த்தம் அதிகளவில் அடங்கியிருப்பதாகும். அதனால் உள்நாட்டு மஞ்சளைப் பயன்படுத்துவதற்குப் பழகிக்கொள்வோம்.



## மஞ்சள் உற்பத்தியை தயாரிக்கும் முறை...

### மஞ்சள் தூள் தயாரிப்பு

- 09 மாதங்கள் அளவு முதிர்ந்த மஞ்சள் கிழங்கை கழுவி சுத்தம் செய்துகொள்ளுங்கள்.
- தாய் கிழங்கு மற்றும் கிழங்கு விரலை வெவ்வேறாக வேக வையுங்கள்.
- பாத்திரம் ஒன்றில் இட்டு நீரில் வேகவைத்தல், துணி ஒன்றினால் பாத்திரத்தின் வாயை மூடி பாரம்பரிய முறையில் வேகவைத்தல், ஸ்டீமரில் இட்டு வேகவைத்தல் அல்லது பிரஷர் குக்கரில் வேகவைக்க முடியும்.
- இவ்வாறு 30 நிமிடங்கள் வரை முறையாக வேகவைக்கப்பட்ட மஞ்சள் கிழங்கை இரண்டாக உடைக்கும்போது கொஹிலை கிழங்கு நூல் போன்ற தன்மையை பார்க்க முடியும்.
- இவ்வாறு வேகவைக்கப்பட்ட கிழங்கை சிறு துண்டுகளாக வெட்டி வெய்யிலில் காயவையுங்கள்.
- அரைக்கும் இயந்திரத்தின் உதவியோடு அரைத்துக்கொள்ளுங்கள்.
- பின்னர் காற்றுப் படாத வகையில் பொருத்தமான பாத்திரம் ஒன்றில் மூடி வையுங்கள்.



### மஞ்சள் பசை (பேஸ்) தயாரித்தல்

- 09 மாதங்கள் அளவு முதிர்ந்த மஞ்சள் கிழங்கை கழுவி சுத்தம் செய்துகொள்ளுங்கள்.
- மஞ்சள் கிழங்கின் மேலால் இருக்கும் பட்டையை சீவி அகற்றுங்கள்.
- முன்னர் குறிப்பிட்ட வகையில் பொருத்தமான முறையில் வேக வையுங்கள்.
- ஒரு கி. கிராம் மஞ்சள் கிழங்கிற்கு 100 கிராம் உப்புத் தூள், 100 மி.லீ. நீர் மற்றும் 05 - 08 கிராமுக்கு இடைப்பட்ட அளவான சிட்ரிக் அமிலத்தை இட்டு அரைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் அரைத்துக் கொள்ளுங்கள்.
- பின்னர் பொருத்தமான பாத்திரம் ஒன்றில் இட்டு 10 - 15 நிமிடங்கள் அடுப்பில் வைத்து நன்றாக கிண்டுங்கள்.
- தொற்று நீக்கப்பட்ட போத்தல் ஒன்றில் மூடுங்கள். இந்த தயாரிப்பை 06 மாதங்கள் அளவு பயன்படுத்த முடியும்.
- மேலதிகமாக தயாரிக்கப்பட்டவை இருந்தால் அவற்றை உங்களால் விற்பனை செய்ய முடியும்.

தரத்தை மேம்படுத்திய மஞ்சள் உற்பத்தியை தரமான முறையில் தயாரிப்பதன் மூலம்

## வர்த்தகம்/ சுயதொழில் ஒன்றை

ஆரம்பிப்பதற்கு

**இது உங்களுக்காக விடுக்கப்படும் அழைப்பாகும்!**

மஞ்சள் தொழில்துறை சார்ந்த வர்த்தகம் ஒன்றை ஆரம்பிக்க தயாராகும் உங்களுக்கு:-

- பயிர்ச்செய்கை முதலீட்டு உதவி
- மஞ்சள் தயாரிப்பு நிலையத்தை ஆரம்பிப்பதற்கான உதவி
- மஞ்சள் தயாரிக்கும் இயந்திரம்/ பொதியிடும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்கான உதவி
- உணவுப் பாதுகாப்பு தரச் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு முதலீட்டு உதவி, அறிவு, தொழில்நுட்பம் மற்றும் சந்தைக்கான வழிகாட்டல் இலவசம்

பணிப்பாளர் நாயகம்
ஏற்றுமதி விவசாய திணைக்களம்
1095, கெட்டபே, பேராதனை.

மேலதிக விபரங்களை தெரிந்துகொள்ள **அழையுங்கள்**

அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப பிரிவு ஏற்றுமதி விவசாய திணைக்களம்
ஆராய்ச்சி நிலையம் - மாத்தளை 066 22 22 822

ஏற்றுமதி விவசாய திட்ட அதிகாரி
எல்லா திங்கட்கிழமைகளிலும் கமநல சேவைகள் நிலையத்தில்

உதவிப் பணிப்பாளர்
ஏற்றுமதி விவசாய மாவட்ட அலுவலகம்

www.dea.gov.lk
helpdesk@dea.gov.lk

ஏற்றுமதி விவசாய திணைக்களம் தகவல் பிரிவு: 081-2388651 - நீடிப்பு 111

www.dea.gov.lk helpdesk@dea.gov.lk YouTube

# இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் சற்றும் குறையாத செல்வாக்குடன் அரசு!

**கொவிட்–19 நெருக்கடிகள், பொருளாதார சவால்கள் என பல்வேறு பக்கங்களிலிருந்தும் எழுந்துள்ள சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம், தனது முதலாவது பேரணியை அநுராதபுரம் சல்காது விளையாட்டரங்கில் சில தினங்களுக்கு முன்னர் நடத்தியிருந்தது.**





'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம், பெரும் சவால்களுக்கு மத்தியில் இந்த அரசாங்கம் அடைந்த இலக்குகள் தொடர்பில் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் இப்பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் மக்கள் அதிகளவில் கலந்து கொண்டனர். நிதி அமைச்சரும், பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகருமான பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் பேரணியில் கலந்து கொண்டிருந்தனர்.

கொவிட் நெருக்கடிகள் காரணமாக நாட்டில் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடியினால் பொதுமக்களுக்கு சிரமங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், அரசின் செல்வாக்கு குறையவில்லையென்பதை பேரணியில் திரண்டிருந்த மக்கள் கூட்டம் தெளிவுபடுத்தியது. அரசின் கொள்கைத் திட்டங்களில் மக்கள் உறுதியான நம்பிக்கையுடன் உள்ளனரென்பதையும் மக்கள் கூட்டம் எடுத்துக் காட்டியது.



எவ்வாறான சவால்களுக்கு அரசாங்கம் முகங்கொடுத்திருந்தாலும் நாட்டின் எதிர்காலத்தை சிறப்பானதாக்க தொடர்ந்தும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை தலைவர்கள் இங்கு உறுதியாக வலியுறுத்தியிருந்தனர். குறிப்பாக மக்களின் நம்பிக்கையை வெல்வதற்கு அடிமட்டத்துக்குச் செல்லத் தயாராக இருப்பதாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கு உரையாற்றுகையில் கூறியிருந்தார்.

அதேநேரம், பொதுமக்களைத் தவறாக வழிநடத்தி இந்நாட்டைப் பாதாளத்துக்குள் தள்ளி விடுவதற்கு, கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த சில குழுக்கள் மீண்டும் இப்போது இணைந்து செயற்படுகின்றன என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அங்கு குற்றஞ்சாட்டியிருந்தார்.

எவ்வாறான சவால்களை எதிர்கொள்ள நேரிட்டாலும், 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின் மூலம் உறுதியளிக்கப்பட்டவாறு, விவசாயப் பெருமக்களின் வருமானத்தை நூற்றுக்கு நூறு வீதத்தால் அதிகரிக்கவும், நாட்டையும் மக்களையும் பாதுகாக்கவும் தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார்.

'மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அன்று செயற்பட்டது போன்றே, தேசிய மற்றும் சர்வதேச சக்திகளுடன் இணைந்து தற்போதைய அரசாங்கத்தின் பயணத்தைத் தடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்கள், எதிர்காலச் சந்ததியினரின் நலனை இலக்கு வைத்தே முன்னெடுக்கப்படுகின்றன. அதனால், எவ்வாறான தடைகள் ஏற்படினும் தொடர்ந்து முன்னோக்கி நகர்வோம்' என்றும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறங்கிப் போராட்டங்களை நடத்துபவர்கள், பொதுமக்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். அரச ஊழியர்கள், நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். புத்தெழுச்சி பெற்று வருகின்ற பொருளாதாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, நாட்டை முடக்காமல் அரசாங்கத்தின் கொள்கைகளைச் செயற்படுத்த இடமளிப்பதே இன்றைய தேவையாக உள்ளது எனக் குறிப்பிட்டார் ஜனாதிபதி.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கு உரையாற்றுகையில் எதிர்க்கட்சியை கடுமையாகச் சாடியிருந்தார். எதிர்வரும் மூன்று வருடங்களையும் குழப்புவதே எதிரணியின் நோக்கமாக உள்ளது. ஆனால் சதிகளால் அன்றி முடிந்தால் மக்கள் மத்தியில் வந்து சவால்களை வெல்லுமாறும் பிரதமர் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

பிரதமர் குறிப்பிட்டிருப்பது போன்று நாட்டையும் மக்களையும் குழப்பும் வகையிலேயே எதிரணியின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. நாட்டினதோ மக்களினதோ நலன்களை முன்னிலைப்படுத்தியதாகவோ கருத்தில் கொண்டதாகவோ அவர்களது செயற்பாடுகள் அமைந்திருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் அநுராதபுரம் பேரணியில் திரண்டு வந்த மக்கள் வெள்ளம் புலப்படுத்தியிருக்கும் அரசியல் கள நிலைவரம்!



கொவிட்19 தொற்று அபாயத்திலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கும், இதனுடன் இணைந்ததான பொருளாதாரப் பின்னடைவுகளால் நாடு பின்னோக்கித் தள்ளப்படுவதைத் தடுப்பதற்கும் அரசாங்கம் கடுமையான பிரயத்தனங்களை எடுத்துள்ளது. அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சியினர் ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும் அவற்றைக் குழப்பாமல் இருக்க வேண்டும். பொறுப்புள்ள எதிர்க்கட்சியினர் என்ற வகையில் அரசாங்கத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்குப் பதிலாக வீணாக மக்களைக் குழப்பி அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இதேவேளை, டொலர் தட்டுப்பாடு உள்ளிட்ட நெருக்கடிகளுக்கு நாடு எதிர்கொண்டுள்ள சூழ்நிலையில் வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தொழிற்சங்கங்கள் முயற்சிக்கின்றன. சுகாதார சேவைகள் தொழிற்சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. நாடு எதிர்கொண்டுள்ள சூழ்நிலை குறித்து சிறிதளவும் சிந்திக்காது அவர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கும், பொதுமக்களுக்கும் நேரடியாக எவ்வித சம்பந்தமும் இல்லை.

இருந்த போதிலும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கும் தொழிற்சங்கங்கள் சில விடயங்களை மறந்து விடுகின்றன. அதாவது அரச ஊழியர்கள் கல்வி கற்று தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளவும், அவர்களுக்கு மாதா மாதம் சம்பளம் வழங்கவும் மக்களின் வரிப்பணமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இருந்தும் அவற்றைப் பொருட்படுத்தாது தொழிற்சங்சங்கள் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான ஆயுதமாக மக்களை பணயக் கைகதிகளாகக் கொள்கின்றனர்.

இவ்வாறான முயற்சிகளின் பின்னணியில் எதிரணியினர் இருக்கின்றனர் என்பது எவராலும் மறுக்க முடியாததாகும். பல்வேறு சவால்களுக்கு மக்கள் முகங்கொடுத்திருக்கும் நிலையில் அவர்களை மேலும் சிரமங்களுக்கும், அசௌகரியங்களுக்கும் உள்ளாக்கும் வகையில் தொழிற்சங்கங்கள் நடந்து கொள்வது காலத்துக்குப் பொருத்தமானதா என்பதை அவர்களே தமக்குள் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இது இவ்விதமிருக்க, கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற இலங்கையின் 74வது சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி தனது உரையில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

'இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இந்த நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமை உண்டு. இன அல்லது மத அடிப்படையில் குடிமக்களைப் பிரிப்பதற்கான முயற்சிகளை நாங்கள் நிராகரிக்கிறோம். அனைத்து குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன், ஒரே சட்டம் என்ற கொள்கையே எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுவே எப்போதும் எமது நிலைப்பாடு.

நாங்கள் எப்போதும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கிறோம். கடந்த காலத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் நீதித்துறை மீது அரசியல்வாதிகள் மேற்கொண்டிருந்த அழுத்தத்தை மக்கள் நிராகரித்தனர். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளிடமிருந்து நியாயமான, பக்கச்சார்பற்ற மற்றும் திறமையான சேவையை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதன்படி, மக்களின் முக்கிய கவனத்தை ஈர்த்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் மத்திய வங்கி மோசடி போன்ற குற்றங்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வலியுறுத்தியிருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

**பி.ஹர்ஷன்...**

## தேசிய மற்றும் சர்வதேச சக்திகளுடன் இணைந்து அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளி விடுவதற்கு மீண்டுமொரு சதிமுயற்சி!

# இந்தியா எங்கள் தேசம்; பாகிஸ்தான் தலையிடும் அவசியம் கிடையாது!

**இந்தியாவின் கர்நாடகாவில் உள்ள கல்லூரியொன்றில் நிலவுகின்ற ஹிஜாப் ஆடை சர்ச்சையை துரும்பாக வைத்துக் கொண்டு இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் மறைமுகமாக செயற்பட்டு வருவதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.**



ஒவைஸி

ஹிஜாப் ஆடை சர்ச்சையை பாகிஸ்தான் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி வருவதாக இந்திய தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவின் உள்நாட்டு விவகாரத்தில் பாகிஸ்தான் அவசியமின்றி தலையிடக் கூடாதென்றும் இந்திய முக்கியஸ்தர்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதேவேளை இந்தியாவில் உள்நாட்டு மதமோதல்களைத் தூண்டும் விதத்தில் பாகிஸ்தான் செயற்படுவதாக அகில இந்திய மஜ்லீஸ் இ இதிஹாதுல் முஸ்லிமீன் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைஸி கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தியா சம்பந்தப்பட்ட மேற்படி விடயத்தில் பாகிஸ்தானில் இருந்து வரும் இந்தியாவுக்கு எதிரான கருத்துகளுக்கு அகில இந்திய மஜ்லீஸ் இ இதிஹாதுல் முஸ்லிமீன் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைஸி கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளாரர்.

"இது எங்கள் வீட்டுப் பிரச்சினை. இதில் பாகிஸ்தான் தலையிடக் கூடாது" என்று உத்தர பிரதேசத்தில் வைத்து ஒவைஸி கண்டிப்பாகக் கூறினார்.

"பாகிஸ்தான் மக்களிடம் நாங்கள் ஒன்றைச் சொல்கிறோம். இங்கே என்ன நடக்கிறது என பார்க்காதீர்கள்! அங்கேயே பாருங்கள். உங்களுக்கு பலூச்சிஸ்தான் பிரச்சினை, உள்நாட்டு சண்டைகள் என பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றைப் பாருங்கள். இந்த நாடு என்னுடையது. இது உங்களுடையது அல்ல. இது எங்கள் வீடு. உங்கள் கால் அல்லது மூக்கை இங்கே நுழைக்க முயன்றால் காயமடையும்" என்று ஒவைஸி எச்சரிக்கும் தொனியில் பேசினார்.

ஹிஜாப் சர்ச்சை தொடர்பாக பாகிஸ்தானில் இருந்து வரும் ஆதரவான கருத்துகளுக்கு அகில இந்திய மஜ்லீஸ் இ இதிஹாதுல் முஸ்லிமீன் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைஸி கடுமையாக இவ்வாறு எதிர்வினையாற்றியிருக்கிறார்.

இது ஒருபுறமிருக்க அண்டை நாட்டில் உள்ள பயங்கரவாத குழுக்கள், ஐ.நா வின் தடைக்கு அஞ்சி மனிதநேய அமைப்புகள் போல உருமாறி செயல்பட்டு வருவதாக இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

பாகிஸ்தானில் இயங்கும் தீவிரவாத குழுக்கள் தொடர்பாகவே இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவுக்கான இந்திய துாதர் டி.எஸ். திருமூர்த்தி இவ்வாறான கருத்தை வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதக் குழுக்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாட்டிற்கு மனிதநேய அடிப்படையில் சலுகைகள் வழங்கும் போது தீவிரமாக ஆராய்ந்து முடிவெடுப்பது முக்கியமாகும். இந்தியாவின் அண்டை நாட்டில், ஐ.நாவினால் தடை செய்யப்பட்டவை உட்பட பல பயங்கரவாதக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்தார்.

சில தீவிரவாத அமைப்புகள் மனிதநேய அமைப்புகள் போல உருமாறி, அதன் வாயிலாக பயங்கரவாத செயல்களுக்கு நிதி திரட்டுகின்றன. பயங்கரவாத தாக்குதலுக்கும், மனித கேடயமாக பயன்படுத்துவதற்கும் ஆட்களை தெரிவு செய்கின்றன. எல்லை தாண்டிய பயங்கரவாத செயல்களை விரிவுபடுத்துகின்றன. இவற்றைத் தடுக்க மனிதநேய அடிப்படையில் அளிக்கப்படும் சலுகைகள் குறித்து ஐ.நா கண்டிப்பாக தீவிர ஆய்வு நடத்த வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

## எங்கள் வீட்டைப் பார்க்காதீர்கள்; உங்கள் வீட்டை மட்டும் பாருங்கள்; மூக்கை நுழைத்தால் காயப்படுவீர்கள்–! அகில இந்திய மஜ்லீஸ் இ இதிஹாதுல் முஸ்லிமீன் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைஸி கடும் கண்டனம்!

**இலங்கை விவகாரத்தில் அண்மைக் காலமாக இந்தியாவின் கரிசனை அதிகரித்திருக்கும் நிலையில், தமிழக மீனவர்களின் எல்லை தாண்டி மீன்பிடிக்கும் அத்துமீறிய விவகாரமும் சூடுபிடித்துள்ளது. சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்புக்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடிப்பதற்கு எதிராக வடபகுதி மீனவர்கள் நடத்துகின்ற போராட்டங்களும் வலுவடைந்துள்ளன.**


இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி அத்துமீறி பிரவேசித்துள்ள இந்திய மீன்பிடிப் படகுகள்

# மீனவர்களின் போராட்டத்துக்குள் புகுந்துள்ள 'குள்ளநரி கும்பல்கள்'!






கடந்த சில நாட்களுக்கு முன்னர் வடபகுதி மீனவர்கள் கொழும்பில் உள்ள கடற்றொழில் அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்திருந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 'இந்தியக் கடற்றொழிலாளர்கள் விவகாரத்தில் ஏனையோர் போன்று பொறுப்பற்ற முறையில் ஏனோ தானோ என்று என்னால் கதையளக்க முடியாது. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்காமல். நான்கு திட்டங்களை முன்வைத்து உறுதியுடன் செயலாற்றி வருகின்றேன்' எனக் கூறியிருந்தார்.

"நீதிக்கான குரல்கள் ஒலிக்கட்டும், நியாயங்கள் வெல்லட்டும்' என்று நான் கேட்டுக் கொண்டதற்கு அமைய நீதிக்காக குரல் கொடுக்கும் கடற்றொழிலாளர்களின் கூடாரத்தில் அநீதியின் குழப்பக் காரர்கள், ஒட்டகங்கள், குள்ளநரிகள் புகுந்துள்ளன. எமது கடல் எல்லை – வளங்கள் யாவும் எமது மக்களுக்கே சொந்தம். கடல் எல்லையை தாண்டி வந்து அத்துமீறுகின்ற செயல் இன்று நேற்றுள்ள பிரச்சினை அல்ல. அது, நீண்ட காலப் பிரச்சினை. இதற்கு முடிவு கட்ட நான் எடுத்து வருகின்ற முயற்சிகள் யாவும், வெறும் சுயலாப அரசியல் நோக்குடையவை அல்ல. இது என் உதிரத்திலும், உணர்விலும் ஒன்று கலந்துவிட்ட பிரச்சினைகளில் ஒன்று" என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் குறிப்பிட்டார்.

"நான் கடற்றொழில் அமைச்சராக பதவியேற்பதற்கு முன்னரும் நேரில் சென்று, களத்தில் நின்று எமது கடற்றொழிலாளர்களின் விவகாரங்களை சரிவரக் கையாண்டிருக்கின்றேன். கச்சதீவில் இரு தரப்பு கடற்றொழிலாளர்களையும் வைத்து, பல கலந்துரையாடல்களை மேற்கொண்டிருக்கிறேன்.அதுமட்டுமன்றி, இந்திய மத்திய, மாநில தலைவர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களுடனும் கலந்துரையாடி வருகின்றேன். ஆகவே, இது என் கடமை மட்டுமல்ல, என் உள்ளார்ந்த உணர்வும் கூட. இந்தப் பிரச்சினையில் இரு நாடுகளும் தொடர்புபடுவதால், இராஜதந்திர முறையிலான முன்னெடுப்புகள் ஒருபுறம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்ததாக, இழுவை வலைப் படகுகளின் மூலமான தொழில் முறை என்பது இரு நாட்டு கடல் வளங்களைச் சுரண்டுவதுடன், மீனின இனப்பெருக்கமும் அழிவுற்று வருகின்றது. அதேநேரம், எமது கடற்றொழிலாளர்களின் தொழில் உபகரணங்கள், படகுகள் என்பனவும் பாதிக்கப்பட்டு அழிவடைகின்றன. எனவே, இது தொடர்பில் இருநாட்டு கடற்றொழிலாளர்களுக்கிடையில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தல் அவசியம். அடுத்ததாக, எல்லை தாண்டி வருகின்ற இழுவை வலைப் படகுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தல்.

அடுத்து, இவ்வாறு சட்ட நடவடிக்கைளின் ஊடாக அரசுடைமையாக்கப்படுகின்ற படகுகளை, அவற்றின் இழுவை வலை மடிகளை அகற்றி, எமது கடற்றொழிலாளர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாகப் பெற்றுக் கொடுத்தல். இராட்சத படகுகளை எதிர்கொண்டு, சிறிய படகுகளில் தொழில் செய்ய இயலாத எமது கடற்றொழிலாளர்களுக்கு இது தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும், அவர்களது வாழ்வாதாரங்களை உயர்த்துவதாகவும் அமையும். இந்தத் திட்டங்களின் அடிப்படையிலேயே மீனவர் பிரச்சினை விவகாரத்துக்கு தீர்வுகாண இருக்கின்றேன்" என்று அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

> **இந்திய மீனவர் விவகாரத்தை அரசியல் ஆதாயம் கருதி எவரும் திசைதிருப்ப இடமளிக்கலாகாது. இரு நாட்டு தமிழர்கள் சம்பந்தப்பட்ட சர்ச்சையை மிகவும் அவதானமாகவும், நிதானமாகவும் கையாள வேண்டு–மென்பதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிலைப்பாடு**

நீதியான தீர்வு நோக்கிய எமது கடற்றொழிலாளர்களின் குரல்வளைகளை நெரிப்பது போல், நீதியின் கூடாரத்தினுள் ஒட்டகங்களும், குள்ளநரிகளும் நுழைந்தன. ஆனாலும், நீதியின் குரலாக நிமிர்ந்த எங்கள் கடற்றொழிலாளர்களின் தீர்வு நோக்கிய பயணத்தை திசை திருப்ப முயன்றவர்கள் தோற்றுப் போனார்கள் என்பதையும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேநேரம், இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த காரணத்தினால் சட்டத்தை நிலைநாட்டும் இலங்கை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட ஏராளமான இந்தியப் படகுகளை ஏலத்தில் விடுவது தொடர்பில் கடற்றொழில் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் அத்துமீறிய காரணத்தால் பிடித்து வைக்கப்பட்டுள்ள படகுகள் பல தேங்கியிருப்பதால் டெங்கு நுளம்புப் பெருக்கம் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தப் படகுகளை மீள ஒப்படைக்குமாறு இந்தியா இதற்கு முன்னர் கேட்டிருந்ததுடன், இந்தப் படகுகளை அவர்களின் பிரதிநிதிகள் வந்து பார்வையிட்டிருந்தனர்.

எனினும், இப்படகுகள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் அவற்றை ஏலத்தில் விட்டு அதற்கான பணத்தை இந்தியத் தரப்புக்கு வழங்குமாறு கோரப்பட்டது. அதேநேரம், சட்டவிரோதமான இந்திய மீனவர்களின் மீன்பிடியால் இலங்கை மீனவர்களுக்கு ஏற்பட்ட சொத்து அழிவுகளுக்கு நஷ்டஈடு வழங்குமாறு இந்தியாவிடம் கோரப்பட்ட போதும், அவர்கள் அதற்கு சம்மதம் தெரிவித்திருக்கவில்லை.

இந்த நிலையில் தேங்கிக் கிடக்கும் இந்தியப் படகுகளை ஏலத்தில் விட்டு அதன் மூலம் கிடைக்கும் பணத்தை வடபகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்க இலங்கை அதிகாரிகள் திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மறுபக்கத்தில், இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், படகுகளை ஏலம் விடுவது தொடர்பில் இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் இருதரப்பு புரிந்துணர்வு ஒன்று ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புரிந்துணர்வுக்கு அமைய இலங்கையில் இயங்க முடியாத நிலையிலுள்ள இந்திய மீன்பிடிப் படகுகளை அகற்றுவது குறித்த தீர்மானங்களை மேற்கொள்வதற்காக இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவிருந்தனர். இலங்கை அரசாங்கத்திடம் இந்த விஜயத்துக்குத் தேவையான அனுமதியைக் கோரியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளது.

மீனவர் விவகாரம் இராஜதந்திர ரீதியில் கவனம் செலுத்தப்படும் விடயமாக உள்ளது என்பதற்கு இது ஒரு சான்றாக அமைகிறது.

> **தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டும் விடயத்தை அடிப்படையாக வைத்து, குழம்பிய குட்டைக்குள் மீன்பிடிக்க அரசியல் தரப்பினர் சிலர் முயற்சி!**

அதேநேரம், கொவிட்19 தொற்று சூழல் காரணமாக மீனவர்கள் உள்ளடங்கலாக பெரும்பாலான துறைகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவது மீனவ சமூகத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்திய மீனவர்கள் 'பொட்டம் ட்ரோலிங்' எனப்படும் தடைசெய்யப்பட்ட முறையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

'பொட்டம் ட்ரோலிங்' மீன்பிடி முறையானது கடலின் அடிமட்டம் வரையில் செல்வதுடன், வலைகள் கடற்பாறைகள், மீன்குஞ்சுகள் என அனைத்தையும் இழுத்துச் சென்று அழிவை ஏற்படுத்தி விடுகின்றது.


பருத்தித்துறையில் நடைபெற்ற மீனவர் போராட்டம்

இந்திய மீனவர்களைப் பொறுத்தவரையில் தமது கடற்பரப்பில் இத்தொழிலில் ஈடுபட்டு அனைத்து வளத்தையும் அழிவடையச் செய்து விட்டு தற்பொழுது இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

ஈழத் தமிழர்கள் தமது தொப்புள் கொடி உறவுகள் எனக் கூறிக் கொள்ளும் இந்திய மக்கள் குறிப்பாக தமிழக மக்கள், யுத்தத்தினால் பல வருடங்கள் பாதிக்கப்பட்டு மீண்டெழ நினைக்கும் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் இவ்வாறான செயற்பாடுகளின் ஈடுபடுகின்றார்கள் என்பதே தொடர்ச்சியாக கவலையாக உள்ளது.

அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 13 பேர் சில நாட்களுக்கு முன்னர் நீதிமன்றத்தின் ஊடாக விடுவிக்கப்பட்டிருந்தனர். இதுபோன்ற கைதுகள் இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான நல்லுறவில் விரிசல்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாக உள்ளன.

எனவே, தமது நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான மாற்றுவழிகளை அறிமுகப்படுத்த அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது 'பொட்டம் ட்ரோலிங்' முறையில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு மாற்று மீன்பிடி முறையை அறிமுகப்படுத்துவது மற்றும் அதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் கருத்தாடல்கள் இடம்பெற்றன.

இந்திய மீனவர்கள் பெரும் எண்ணிக்கையிலான படகுகளில் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைவது குறித்த சட்டலைட் மூலம் எடுக்கப்பட்ட புகைப் படங்கள் இந்திய மத்திய அரசுக்குக் காண்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்விடயத்தில் தமது தரப்பில் தவறு இருப்பதை ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டிருந்தார்கள். எனவே, இந்திய மத்திய அரசாங்கமும், தமிழக அரசாங்கமும் இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் அரசியல் பின்புலம் கொண்டவர்களின் படகுகளே இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதாகத் தெரியவருகிறது. இதனால் எந்தக் கட்சி தமிழகத்தில் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களால் இப்பிரச்சினையை தீர்க்க முடியாமல் உள்ளது.

அதேநேரம், இலங்கைக்கு எப்பொழுதும் நேசக்கரம் நீட்டும் நாடாக இந்தியா இருப்பதால் அதனைப் பகைத்துக் கொள்ள இலங்கை தரப்பு விரும்பவில்லை. இதனாலேயே இராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தைகள் மீது அக்கறை காண்பித்து வருகிறது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒன்லைன் ஊடாக தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தி வருகின்றார். அண்மையில் இரு நாட்டுப் பிரதமர்களுக்கும் இடையில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களிலும் இவ்விவகாரம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தடைப்பட்ட பேச்சுக்களைத் தொடர்வதற்கும் இதில் இணங்கப்பட்டது. இராஜதந்திர மட்டத்தில் எவ்வாறான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டாலும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளே இப்பிரச்சினையை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவரும்.

எந்தவொரு நாட்டினதும் அளவின் அடிப்படையில் அதன் இறையாண்மை தீர்மானிக்கப்படலாகாது. இந்தியா அளவில் பெரியது என்பதால் இலங்கையின் சர்வதேச கடல் எல்லையை மீறி தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என அர்த்தப்படுத்த முடியாது. எனவே, இரு தரப்புக்கும் பாதிப்பு இல்லாத வகையில் சுமுகமாக இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

> **தமிழக மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளால் வடபகுதி கடல் வளம் பெருமளவில் நாசம். இருநாட்டு அரசுகளின் உறுதியான நடவடிக்கையினாலேயே இப்பிரச்சினைக்கு தீர்வைக் காண முடியும்**


மடிவலை படகின் மாதிரித் தோற்றம்

# மலையக மக்களுக்கு இன்றும் சுதந்திரம் கிட்டியதாக இல்லை; பெயரளவு சுதந்திரத்துக்கு யார் காரணம்?

சில காலத்துக்கு முன்பு சர்வதேச ஊடகமான ரொய்ட்டர் பெருந்தோட்டத் தொழிலாளர்களது சமகால நிலைமை பற்றி ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டிருந்தது. இலங்கை வந்து மலையகப் பகுதிகளுக்கு நேரடி விஜயம் மேற்கொண்டு தோட்ட மக்களின் வாழ்வியல் சம்பந்தமான தகவல்களை ஆய்வுமூலம் திரட்டி யதார்த்த நிலையை வெளிக்கொணர வழிவகுத்தவர் லிசால்புளர் என்னும் ஆய்வாளர்.

அவரது ஆய்வின் பெறுபேறாக கண்டறியப்பட்ட உண்மை இன்னும் இம்மக்கள் அடிமை சமூகமாகவே வாழ்கிறார்கள் என்பதுதான். கூடவே வாழ்ந்தும் இங்குள்ள யாருமே கண்டுகொள்ள துணியாத ஒரு சங்கதியை வெளிநாட்டு ஆய்வாளர் ஒருவர் வெளிப்படுத்தி இருந்தார். அப்போதும் கூட இங்கு எவருக்குமே அது உறைக்கவில்லை. உண்மையை மறைத்து தோட்டத் தொழிலாளரின் வாழ்வியலில் மாற்றம் நிகழ்ந்து வருவது போல ஒரு பொய்த் தோற்றத்தை உருவகப்படுத்திக் கொண்டிருந்தார்கள் மலையக அரசியல் தலைவர்கள்.

சர்வதேச சமூகத்தை கம்பனி தரப்பு ஏமாற்றி தமது உற்பத்தியை சந்தைப் படுத்துவதிலேயே முனைப்பாக இருக்கின்றது. ஆங்கிலேய கம்பனிகள் பெருந்தோட்டங்களை நிர்வகித்த போதும் கூட இவ்வாறான ஏய்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறவே செய்தன. இலங்கை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மனிதாபிமான ரீதியிலும் சர்வதேச தொழில் நியதிகளுக்கு உட்பட்ட வகையிலும் நடத்தப்படுவதாக காட்டிக் கொள்ளவேண்டி அவ்வப்போது சட்டங்களை இயற்றுவதில் மட்டமே ஆங்கிலேயர் ஆட்சி கவனம் செலுத்தி வந்தது. ஆனால் உண்மையிலேயே தோட்டத் தொழிலாளர்கள் அடிமைகளாகவே நடாத்தப்பட்டனர்.

இலங்கைத் தேயிலைக்கு சர்வதேச ரீதியில் நிலைபேறான ஒரு சந்தை வாய்ப்பை ஏற்படுத்த சர்வதேச சான்றுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இதனால் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடும் தேயிலை துறைசார் நிறுவனங்கள் சர்வதேச தர நிர்ணய சான்றுகளைப் பெற முயல்வது இயல்பே. ஆனால் இதற்காக பொய்யானதும் தவறானதுமான தகவல்களை தருவதன் மூலம் இதனைப் பெற முயல்வதுதான் அபத்தம். தோட்டத் தொழிலாளர்கள் நல்ல முறையில் நடத்தப்படுவதாக கூறப்படுவது அப்பட்டமான பொய் என்பதே ஆய்வாளர் லிசால் புளர் சுட்டிக்காட்டியுள்ள உண்மை.

இவ்வாறான ஏமாற்றுதல்கள் மூலம் பெருந்தோட்டச் சமூகம் அடிமை சாசனத்துக்கு ஆட்பட்டவர்களாகவே காணப்படுவதை மறைக்கவே முயற்சிகள் இடம்பெற்று வந்துள்ளன. பொய்யான தகவல்களும் போலியான சான்றுகளும் ஆங்கிலேயர் காலத்திலும் சர்வதேசத்தை ஏமாற்றின. நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும் பெருந்தோட்டங்கள் யாவும் அரசுடைமையாக்கப்பட்ட நிலையிலும் கூட இன்றும் அதே போக்குத்தான் நீடிக்கின்றது.

தேயிலை ஏற்றுமதியில் தேய்வு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலேயே துறைசார் நிறுவனங்களும் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களும் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றனவே தவிர, உற்பத்திக்கு உயிர் கொடுக்கும் தோட்டத் தொழிலாளர்களது நலன் பற்றி கவலைப்படுவதே இல்லை. வாக்கு வங்கி சரிந்து போய்விடக்கூடாது என்பற்காக காலம் காலமாக மலையக அரசியல் தலைமைகள் அவிழ்த்துவிடும் புளுகு மூட்டைகளை சுமப்பதிலேயே கனவு சுகம் கண்டு பழகிப் போயிருக்கிறார்கள்.

அடிமை விலங்கு அறுத்தெறியப்படுவதிலேயே சுதந்திரம் நிரந்தரமாக முடிகின்றது. நாடு சுதந்திரம் அடைந்து 74அகவை அண்மையில் கொண்டாடப்பட்டது. சுதந்திர நாட்டு அடிமைகளாக ஒரு சமூகம் வாழ்ந்து கொண்டிருப்பதை முழு நாடுமே மறந்து போய்விடுகின்றது. ஆளும் கட்சியில் இருக்கும்போது ஒரு கண்ணோட்டமும் எதிரணியில் இருக்கும்போது ஒரு கருத்தும் கொண்டிருப்பதே மலையகத் தலைமைகளின் பழக்கமாகியுள்ளது.

ஆனால் அந்த நடைமுறையை ஒரு இளந் தலைவர் மாற்றிக் காட்டியுள்ளார். அவர்தான் இராஜாங்க அமைச்சரும் இ.தொ.காவின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான். நுவரெலியாவில் இடம்பெற்ற சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டு அவர் மனந்திறந்து சில கருத்துக்களை சொன்னார். இதில் நுவரெலியா மாவட்டச் செயலாளரும் பங்கேற்றிருந்தார். இங்கு பேசிய ஜீவன் தொண்டமான் நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து 74 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் மலையக மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை என்னும் உண்மையைப் போட்டு உடைத்துள்ளார். ஆட்சியில் பங்காளிக் கட்சியாக இருந்துகொண்டு இப்படி உண்மையை உள்ளபடியே உரைத்த அவரது துணிவைப் பாராட்டத்தான் வேண்டும். அவரது தந்தை அமரர் ஆறுமுகன் தொண்டமானும் இவ்வாறான ஆளுமை கொண்டவர்தான்.



இப்போது ஒரு கேள்வி எழுகிறது. சரி.. பெருந்தோட்ட மக்கள் சுதந்திர நாட்டு அடிமைகளாக வாழ்வதற்கு யார் காரணம்? மக்களா? மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களா? தொழிற்சங்கவாதிகளா? மலையக அரசியல் தலைமைகளா? இதையும் ஜீவன் சொல்லியிருந்தால் இன்னுமொரு சபாஷ் போட்டிருக்கலாமே!

1948ஆம் ஆண்டு பெருந்தோட்ட மக்களின் வாக்குரிமையும் பிரஜாவுரிமையும் அன்றைய ஆட்சியாளரால் பறிக்கப்பட்டு ஏதிலிகளாக்கப்பட்டார்கள். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் சாணக்கியத்தால் வாக்களிக்கும் உரிமை மீண்டும் கிடைத்தது.

படிப்படியாக பிரஜாவுரிமையும் வந்து சேர்ந்தது. மேலோட்டமாக தேசிய ரீதியிலான சமூக அந்தஸ்து பெற்ற இதர இனங்களோடு சமதையான ஒரு நிலைமை கிடைத்திருப்பதான தோற்றப்பாடே நிலவியது. ஆனால் வாக்குரிமை பயன்படுத்தப்படும் பாக்கியம் கிடைத்தாலும் அதனால் பயனடைந்து விடாதபடி பக்குவமாக தோட்டக் கட்டமைப்பு தடைபோட்டு வைத்தது. இதனால் வாக்குரிமையின் பலாபலன்கள் எட்டப்படாமலேயே போயின.

கடந்தகால அரசியல் பிரதிநிதித்துவங்கள் அர்த்தமுள்ளவையாக அமையாமல் போனதும் பெருங்குறையே. ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களுக்கு முண்டு கொடுப்பதிலேயே அந்தப் பிரதிநிதித்துவங்களின் முழுக் கவனமும் இருந்தது. இ.தொ.கா இன்று 82ஆவது அகவையைக் கண்டுள்ளது. நாடு சுதந்திரமடைந்து 74 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இ.தொ.காவே பெருந்தோட்ட மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தியாக விளங்கி வருகிறது. தொழிற்சங்க ரீதியில் பல சாதனைகளைப் புரிந்த அக்கட்சி, அரசியல் ரீதியில் உரிய பரிமாணத்தை ஏற்படுத்த தவறியுள்ளன என்பதை உணர்த்தும் வகையிலேயே ஜீவனின் கருத்தை நாம் உள்வாங்கிக் கொள்ள முடியும்.

ஏனெனில், இந்திய வம்சாவளி மக்களுக்கான காணி உரிமை என்பதையும் தாண்டி அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்'கான வேலைத் திட்டங்களை செய்து வருவதாக அண்மையில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் பணிமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜீவன் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. முக்கியமாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களின் வேலைத்திட்டங்கள் பலவும் கிராமப்புறங்களை வந்தடையும் அளவிற்கு தோட்டப்புறங்களைச் சென்றடைவது இல்லை.

பெருந்தோட்டக் கட்டமைப்பு இலகுவில் விலக்கிவிட முடியாதபடி பல சுருக்குகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் பிணைப்புகளை உடைத்துக் கொண்டு வெளியே வருவது சவாலுக்குரிய காரியம். இப்படி நிகழும் பட்சத்தில் அதன் மூலம் ஏற்படப் போகும் பின் விளைவுகள் அரசியல் ரீதியில் பல தாக்கங்களுக்கு வழிவகுக்கலாம். எனவேதான் இதனை இனவாத சக்திகள் இம்மியும் விரும்புவது இல்லை.

தோட்டச் சமூகம் நிலவுடைமை, வீட்டுரிமைப் பெறுவது என்பது சுதந்திர வாழ்வின் ஓர் பகுதி. இதன் பின்னணியில் பெருந்தோட்டச் சமூகம் தமது தோட்டங்களை விட்டு வெளியேறுவதை ஊக்குவிக்கும் சதித் திட்டத்துக்கு பெருந்தோட்டக் கம்பனிகள் ஒத்துழைக்கின்றதா என்னும் சந்தேகத்தையும் சிலர் எழுப்புகிறார்கள்.

இவ்வாறான சக்திகளுக்கு ஜீவனின் பதிவு ஒரு அவதானத்தை ஏற்படுத்தவே செய்யும். மனதில் பட்டத்தை சொன்னோம், மறந்தோம் என்று ஆகிவிடக்கூடாது.

சுதந்திரத்தின் சுவாசம் சுதந்தரித்துக் கொள்ளப்படாமைக்கு காரணிகள் ஆராயப்பட்டு இனம் காணப்பட வேண்டும். தளைகள் தகர்க்கப்பட வேண்டும். முண்டு கொடுக்கும் அரசியல் செல்நெறியை விட மக்களுக்கு நேர்மையாக தொண்டு செய்யும் நன்னெறி உள்வாங்கப்படுவது அவசியம். ஜீவனின் அடுத்தக்கட்ட நகர்வினை பலரும் அவதானிக்கவே செய்கிறார்கள். குறிப்பாக இளைஞர்கள்.

பன். பாலா...

---

'நீரை சேகரிப்பதற்காக தொழிலுக்கு செல்லாமலும் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாதும் இருந்து நீரை சேகரிக்க வேண்டியுள்ளது'

# நீர் ஆதாரங்கள் இல்லாமல் வரட்சியில் வாடும் பெருந்தோட்டங்கள்



(படங்கள் : தெல்தோட்டை தினகரன் நிருபர்)

மத்திய மலை நாட்டில் என்றும் இல்லாத அளவில் இன்று கடும் வரட்சி நிலவுகிறது. குடிநீர் மட்டுமல்ல; ஏனைய அடிப்படைத் தேவைகளுக்கும் நீர் இல்லாது மக்கள் சிரமப்படுகின்றனர். ஏனெனில் பெருந்தோட்டப் பகுதிகளில் பெரும்பாலும் நீர் விநியோக கட்டமைப்புகள் இல்லை. ஊற்றுகளை மறித்து அவரவர் குழாய்களை பதிந்து தண்ணீரை பெற்றுக் கொள்கின்றனர்.

ஒருகாலகட்டத்தில் தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கான நீர் விநியோகத்தை மிகச் சிறப்பாக முன்னெடுத்து வந்தன. உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களும் மலையக தோட்டப்பகுதிகளுக்கு குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தந்தன.

இவ்வாறான நீர் விநியோக திட்டங்களின் கட்டமைப்புகள் முறையாக பராமரிக்கப்படாமலும் புதுபிக்கப்படாததாலும் இந்த குடிநீர்த் திட்டங்கள் சீரழிந்து அல்லது கைவிடப்பட்ட நிலைக்குப் போய் விட்டன.

மழைக்காலத்தில் வீட்டு வாசல் வரையில் நீர் பெருக்கெடுத்து ஓடும். அக்காலப்பகுதியில் இந்த மக்களுக்கு நீர் பிரச்சினை ஒன்று இருப்பது ஞாபகம் இருக்காது.





ஓடைகள், அருவிகள், ஊற்றுக்களில் இருந்து ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒன்று சேர்ந்து அல்லது தனியாக தம்மால் முடிந்த வகையில் குழாய் மூலமாக தமது குளியலறை வரையில் நீரை கொண்டுவந்து தாராளமாக நீரை பயன்படுத்துவர்.

வரட்சிக் காலம் வந்தால் ஓடைகள், ஊற்றுகள், அருவிகள் வற்றிப் போய்விடும். நீர் விநியோக குழாய்கள் இருந்த இடம் கூடத் தெரியாது போய்விடும். தூர இடங்களில் இருந்து நீரை சுமந்து வருவர் முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்தி அதில் தண்ணீர் கொண்டுவரத் தொடங்குவார்கள். பெருந்தோட்ட நீர் வசதி இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது.

வீடுகளுக்கு தனித்தனியாக நீரைபெற்றுக் கொள்ள சுயமாக நீர் விநியோக குழாய்களை சிலர் பொருத்தியுள்ள போதும் பெரும்பாலும் இவற்றில் காற்றுதான் வரும். முன்னர் நீரேந்து பகுதிகளில் மரங்கள் நட்டு முட்கம்பியால் வேலியமைத்து ஏக்கர் கணக்கில் இப்பகுதிகள் பாதுகாக்கப்பட்டன. இன்று இந்நிலைமை இல்லை.

தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டதுடன் இலாபத்தை மட்டுமே நோக்காகக் கொண்ட தோட்டக் கம்பனிகள் மரங்களை தரிப்பதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை மட்டுமே கருத்தில் கொள்கின்றனர். முதலீடு பராமரிப்பு செலவுகள் அவசியமில்லை என்பதால் மரம் தரிப்பதன் மூலமாக கொள்ளை இலாபமடைகின்றனர்.











ஆரம்பத்தில் தோட்டப் பகுதியில் உள்ள சிறுகாட்டு பகுதிகளில் மரங்களை வெட்டுவதற்கு தோட்டத் தொழிலாளர்கள் எதிர்ப்பைக்காட்டி ஆர்ப்பாட்டங்களையும் செய்தனர்.

பின் மரம் தரிப்பதன் மூலம் கிடைக்கும் இலாபத்தில் ஒரு சிறு பகுதியை தோட்டத் தொழிலாளர்களுக்கு தருவதாக தோட்ட நிர்வாகம் கூற மகுடி பாம்பாக மாறிப்போனார்கள் மலையக தோட்டத் தொழிலாளர்கள். தொழிற் சங்கங்கள் இதனை கண்டு கொள்ளவில்லை.

சுற்றளவில் பெருத்து வைரம் ஏறிய மரங்கள் நீரேந்தும் பகுதியில் இருந்தன. இவற்றையும் விட்டு வைக்கவில்லை தோட்ட நிர்வாகங்கள். எமது பாட்டன் பூட்டன் காலத்தைச் சேர்ந்த பல ஆயிரக் கணக்கான பலா மரங்கள் வெட்டப்பட்டு விட்டன.

இவற்றுக்கு மேலாக விஷமிகளும் பெருந்தோட்டக் காடுகளுக்கு தொடர்ச்சியாக தீமூட்டி அழித்து வருகின்றனர். நீரேந்தும் பகுதிகள் தொடர்ச்சியாக தீக்கிரையாகி வருகின்றன.

இதனால் நீர் ஊற்றுகள் வற்றி வருகின்றன. தோட்டங்கள் தோறும் இதே நிலைதான்.

கண்டி மாவட்டம் கம்பளை உடபலாத்த பிரதேசத்திற்கு உட்பட்ட நீவ்பீக்கொக் தோட்டமும் இதற்கு விதிவிலக்கல்ல.

இங்கு சுமார் 400கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் குடிப்பதற்கும் ஏனைய அடிப்படைத் தேவைகளுக்கும் நீரின்றி அல்லலுறுகின்றனர்.

உயரமான பகுதியில் உள்ள ஓடை நீரையும் ஊற்றுகளில் உள்ள நீரையும் குழாய் மூலம் நேரடியாகக் கொண்டு வந்து தமது நீர் தேவையை பூர்த்தி செய்கின்றனர்.

பிரதேச சபைகள் நீர் வசதியை ஏற்படுத்தித் தரலாமே!

மழைக் காலத்தில் நீர் போதியளவு கிடைத்த போதும் கோடையில் சேரும் சகதியுமாக இருக்கும். எந்த வகையிலும் சுத்திகரிக்க படாத, அந்த அசுத்த நீரையே பருகுகின்றனர்.

வெயில் காலத்தில் இதுவும் இல்லை. ஓடைகள் குட்டைகளில் நீர் வற்றி தேங்கியிருக்கும். நீரை ஆடைகள் கழுவுவதற்கும் நீராடுவதற்கும் குடிப்பதற்கும் பயன்படுத்துவதால் பல்வேறுபட்ட தொற்று நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

நீரை சேகரிப்பதற்காக தொழிலுக்கு செல்லாமலும் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாதும் இருந்து நீரை சேகரிக்க வேண்டியுள்ளது.


கதை கதையாக கதைக்கும் மலையக அரசியல்வாதிகளே, தமக்கு சந்தாப் பணத்தையும், வாக்களிப்பின் ஊடாக அதிகாரமும் வழங்கும் அப்பாவி தோட்ட மக்களுக்கு குடிக்க கொஞ்சம் சுத்தமான நீர் கிடைக்க வழி பன்னுங்க.

கொரானாவின் பின் கொழும்பு போன்ற பகுதிகளில் தொழில் புரிந்த நியூபீகொக் தோட்ட இளைஞர்கள் தோட்டத்துக்கு திரும்பி வந்து விவசாயத்தை நம்பியே தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளனர். ஓடைகள், அருவிகள், ஊற்றுகள் வற்றியுள்ளதனால். விவசாயத்தை சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் கைவிட்டுள்ளனர். மலையகத்தில் ஊற்றெடுத்து பிற ஊர்களுக்கு பயன்படும் நீரை தமக்கும் அளிக்கும்படி அதற்கு வழிசெய்யுமாறு கோருகின்றனர்.

நீரைத் தேக்கி வடிகான்கள் மூலம் தோட்டப் பகுதி விவசாயத்திற்கு நீர் விநியோகம் செய்யப்பட வேண்டும். பெருந்தோட்டங்களில் சேவை செய்வதற்கு தற்போது பிரதேச சபைகளுக்கு அதிகாரம் உண்டு. ஏன் பிரதேச சபைகள் தோட்ட நீர் விநியோகத்தில் தலையிடக்கூடாது?

ஆர். நவராஜா...







# 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் கூட ஒன்றிணைய முடியாத தமிழர் தரப்பு

கருணாகரன்

30 ஆண்டுகளுக்குள் இலங்கையில் மகிழ்ச்சிக்குரிய எந்தப் பெரிய மாற்றங்களும் ஏற்படப்போவதில்லை. தமிழரின் அரசியலில் 40 ஆண்டுகளுக்குள் எந்த நம்பிக்கையளிக்கக் கூடிய முன்னேற்றங்களும் நிகழ்வதற்கு வாய்ப்பில்லை.

இதொன்றும் ஆருடமல்ல. அவதானத்தின்பாற்பட்ட கணிப்பு. அனுப அறிவின் வெளிப்பாடு. இதை மறுத்துரைப்போர் தங்களுடைய தருக்க நியாயங்களை முன்வைக்க வேண்டும்.

என்னுடைய அவதானத்தின் வரைபடத்தை இங்கே முன்வைக்கிறேன்.

தற்போதிருக்கும் அரசியற் கட்சிகளும் சரி, அரசியற் தலைவர்களும் சரி இலங்கையில் நல்ல – முன்னேற்றகரமான மாற்றங்களை உருவாக்கக் கூடிய அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. மாற்றத்துக்கான அரசியல், அதை முன்னெடுக்கக் கூடிய துணிச்சல், அதற்கான அர்ப்பணிப்பு, பிறரையும் பிறவற்றையும் அரவணைத்துச் செல்லக் கூடிய திறன், அதற்கான சிந்தனை, இணைந்து செயற்படக் கூடிய மன விரிவு, ஜனநாயகத்தின் மீதான பிடிமானம் என எவையுமே எந்தத் தரப்பிடமும் இல்லை.

குறைந்த பட்சம் கடந்த காலத்தைப் பற்றிய மதிப்பீட்டையோ படிப்பினைகளையோ கூட இந்தத் தரப்புகள் செய்யத் தயாரில்லை. அதைப் போல இன்றுள்ள நிலைமையைக் கூடப் புரிந்து கொள்ள முடியாமலே, அதிலே ஆர்வமின்றியே உள்ளன. பதிலாக வழமையான பசப்பு வார்த்தைகளை – ஏமாற்றுக்களை அள்ளி இறைப்பதிலேயே கவனம் கொண்டிருக்கின்றன.

நாடு இன்று மிகமிக நெருக்கடியான அரசியற் பொறிக்குள்ளும் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் சிக்குண்டுள்ளது. இதற்குத் தனியே தற்போது அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தை மட்டும் குற்றம் சாட்ட முடியாது. தொடர்ச்சியாக அதிகாரத்தில் இருந்த அரசாங்கங்கள் – ஆட்சித்தரப்புகள் ஒவ்வொன்றும் விட்ட குறைபாடுகளும் செய்த தவறுகளுமே இன்று மிகப் பெரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளன.

ஆகவே இதை உணர்ந்துகொண்டு, இதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டு, எதிர்கால இலங்கையைக் கட்டமைப்பது எப்படி? அதற்கான அடிப்படைகள் என்ன? அதனை முன்னெடுப்பது எப்படி? மாற்ற வேண்டிய விடயங்கள் எவை? அதற்கு மக்களையும் பிற சக்திகளையும் எப்படித் தயார்ப்படுத்துவது? இதற்கான தலைமை எது? அந்தத் தலைமையின் குணாம்சமும் கடமைகளும் (பொறுப்புகளும்) எப்படியிருக்க வேண்டும்? என்று சிந்திக்கக் கூடிய நிலையிலும் எந்தத் தரப்பும் இல்லை.

உதாரணமாக இன்று நாட்டிலே நான்கு பெரிய தரப்புகள் ஆட்சி அதிகாரத்தை அமைக்கக்கூடிய நிலையில் உள்ளன. ஒன்று ஐ.தே.க. மற்றது சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி. மூன்றாவது, சு.க. நான்காவது பொதுஜன பெரமுன.

இந்த நான்கிலும் வழமையான சிந்தனைக்கு அப்பால் புதிய மாற்றுக்கள் – மாற்று முறைமைகள் உண்டா?

ஐதேகவின் மறுபதிப்பே ஐக்கிய மக்கள் சக்தி. சு.கவின் மறுபதிப்பே அல்லது பிந்திய வடிவமே பொதுஜன பெரமுன.

பிந்தியவை ஐ.தே.கவையும் சு.கவையும் கடக்கக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை. அதிகாரப் போட்டியின் விளைவாக புதிய தோற்றத்தில் உள்ளனவே தவிர, புத்தாக்கமாக இல்லை என்பது நிரூபணம்.

இலங்கையின் தேசிய நெருக்கடிகளான இனப்பிரச்சினை, பொருளாதார நெருக்கடி, அந்நிய ஆதிக்கத்துக்கு இடமளியாதிருத்தல் என்பவற்றில் இவை ஆற்றல் குறைவையே கொண்டுள்ளன.

இதே நிலைதான் தமிழ்த்தரப்பிடத்திலும் காணப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பதிலாக விக்கினேஸ்வரன். விக்கினேஸ்வரனுக்குப் பதிலாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.. என இப்படியே ஒன்றின் மறுபதிப்பாக மற்றது என்ற வகையில் ஒவ்வொன்றும் உள்ளன.

இதைக் கடந்து சிந்திக்கக் கூடிய நிலையில் எந்தக் கட்சியும் இல்லை.

இதைப்போலவே இன்றுள்ள எந்தத் தலைவர்களும் நாட்டின் எந்த நெருக்கடிக்கும் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணக்கூடிய நிலையில் இல்லை.

இதற்கு அடுத்தாக வரக்கூடியவர்கள் என்று எதிர்பார்க்கக் கூடியவர்களும் போதாமைகளோடுதான் உள்ளனர்.

இப்போதிருக்கும் அரசியலின் சிந்தனையின் தொடர்ச்சியாக இருக்கிறார்களே தவிர, புதிய போக்கொன்றைஉருவாக்கக்கூடியவர்களாக இல்லை.

விலக்காக இருந்திருக்க வேண்டிய ஜே.வி.பி தனக்குள் உட்சுருண்டு கொண்டிருக்கிறது. அது விரிந்து ஒரு தேசிய சக்தியாக மாறியிருக்க வேண்டும். அதற்கான பக்குவத்தையும் ஆற்றலையும் அது இழந்து விட்டது.

ஆகவே சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கை, வரவர பிற சக்திகளின் பிடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறது என்ற எளிய உண்மையைக் கூட – ஆபத்தான யதார்த்தத்தைக் கூட புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் எவையும் இல்லை.

1948 க்கு முன் ஐந்து நூற்றாண்டுகளாக அந்நியரின் ஆதிக்கத்துக்குள் நேரடியாக அடிமைப்பட்டுக் கிடந்த தேசம் இது. 1948க்குப் பின் இன ஒடுக்குமுறை, இன முரண்பாடு போன்றவற்றினால் பொருளாதார ரீதியிலும் அரசியல் ராஜதந்திர அழுத்தங்களினாலும் இலங்கை பிற சக்திகளின் ஆதிக்கத்துக்குட்பட்டுள்ளது.

இன்று வெளிப்படையாகவே இந்தியாவும் சீனாவும் இலங்கையை ஆக்கிரமிப்பதற்கான பொறிகளை முன்னிறுத்திச் செயற்படுகின்றன. எமக்கான கடலில் மீனைக் கூடப் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதை எப்படித் தடுப்பது என்பதில் திறனுள்ள எந்தப் பொறிமுறையும் எவரிடத்திலும் இல்லை'.

உள்ளே ஒருபோதும் இணங்கிக் கொள்ள மாட்டோம். பதிலாக உலகச் சக்திகளிடம் அடிமைப்பட்டுக் கொள்வோம் என்பதே இலங்கையர்களின் கொள்கை.

இதையே வெளிச்சக்திகள் தமக்கு வாய்ப்பாக்கிக் கொள்கின்றன.

முக்கியமாக பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இலங்கை ஒரு பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு என்ற புரிதலே பல தரப்புகளிடமும் இல்லை. அதிலும் முதல்நிலை அரசியற் சக்திகளாக உள்ள எந்தத் தரப்பிடத்திலும் இந்தப் புரிதல் இல்லை. இருப்பதெல்லாம் இனவாதம் மட்டுமே. அதிலிருந்தே ஒவ்வொரு தரப்பும் தம்மைக் கட்டமைத்துள்ளன. அதிலிருந்தே தமக்கான தருக்க நியாயங்களை உருவாக்கிக் கொள்கின்றன.

இப்படியான சூழலில் எப்படி மாற்றங்கள், நல் விளைவுகள் உருவாகும்?

ஆனால், இதை மறைத்துக் கொண்டே செயற்பட முனைகின்றன ஒவ்வொரு தரப்பும்.

இப்பொழுது சம்பிக்க ரணவக்க புதியதொரு சக்தியாக முன்னெழுவதற்கு முயற்சிக்கிறார்.

இதைப்போலவே சஜித் பிரேமதாசவும் நாடு முழுவதிலும் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வருகிறார்.

இருவரிடத்திலும் ஒரு புதிய சேதியைக் காண முடியவில்லை. ஆனால் நாட்டில் உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடியை தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள விளைகிறார்கள். இதொன்றும் புதியதல்ல.

கடந்த காலத்திலும் இதைப்போல நெருக்கடிகளின்போது அதிகாரத்திலிருக்கும் அரசுக்கு எதிராக மாற்றத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்ற குரலோடு பல சக்திகள் எழுந்து வந்திருக்கின்றன.

அண்மைய உதாரணம், கடந்த நல்லாட்சிக்கான அரசாங்கமாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, புதிய அரசியலமைப்பு, நல்லிணைக்கம், பகைமறப்பு, பொறுப்புக்கூறல், புதிய அபிவிருத்திப் பாதை என்று பல அழகிய பிரகடனங்களோடு அதிகாரத்துக்கு வந்தது.

இதற்குச் சர்வதேச ஆதரவு என்ற வகையில் இந்தியா – மேற்குலக ஆதரவும் இருந்துது.

ஆனால், இறுதியில் என்ன நடந்தது?

நான்கு ஆண்டுகாலமாக நடந்த காலம் கடத்தல், இழுத்தடிப்பு என்பதற்கு அப்பால் எதுவுமே நிகழவில்லை.

அப்படியான ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கவே – மாற்றத்தின் நாயகர்களாக உருவாகி விடலாம் என்றே சம்பிக்கவும் சஜித்தும் முயற்சிக்கிறார்கள்.

இதெல்லாம் எதைத் தான் தரப்போகின்றன? இவ்வாறே தமிழ் அரசியலும் நாறிப்போய்க் கிடக்கிறது.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் கூட ஒன்றிணைய முடியாமல் உள்ளன.

இந்தச் சீரில் 13 க்கு மேலே சென்று சமஷ்டி, தனிநாடு என்ற கனவுகள் வேறு. இதையிட்டுச் சிரிப்பதா? அழுவதா?

# திரவியம் தேடும் திராவிடர்களின் தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகள்..!

சுஜப் எம். காசிம்

மனிதனின் வாழ்வாதாரப் பிரச்சினை, கடல்வாழ் உயிரினங்களையும் விட்டபாடில்லை. ஒருசாண் வயிற்றுக்கான போராட்டம், இன்று பலகோடி ஜீவன்களை பலியெடுக்கும் நிலைமைக்கு மாறி வருவதுதான் கவலை. இன்றைய தேவைக்காக என மனிதன் வாழ்ந்தால், இயற்கை இவ்வளவு சீரழிக்கப்படாது. இயற்கை விரும்பிகளும் இதைத்தான் விரும்புகின்றனர். அளவுக்கு அதிகமான நுகர்வு, மனிதனின் ஆரோக்கியத்துக்கும் ஆபத்தாவது பற்றி எவர் கருத்தில்கொள்கின்றனர்? தமிழக மற்றும் வடபகுதி மீனவர் பிரச்சினையும் இப்படித்தானுள்ளது.

தொப்புள்கொடி உறவென்றும், இணைபிரியா உணர்வு என்றும் ஒன்றுபட்டுள்ள இவர்களின் பிரச்சினை, "தாயும் பிள்ளையுமானாலும், வாயும் வயிறும் வேறு" என்பதையே உணர்த்துகிறது. தலைமன்னார், தனுஷ்கோடி இன்னும் ராமேஸ்வரம், நந்திக்கடல் இவையெல்லாம் திராவிடர்கள் திரவியங்கள் தேடும் கடற் பிரதேசங்களாகும். இந்தத் தேடல்கள் முறையாக இல்லாததால் வந்த முரண்பாடுகள், பல்லாண்டு காலங்களாக பரஸ்பரத்தை இல்லாது செய்துள்ளன.

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தின் பாம்பன் தீவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள நகரம் தனுஷ்கோடி. இலங்கையின் இராமேஸ்வரத்திலிருந்து சுமார் 25 கிலோமீற்றர் தூரத்திலிருந்த இந்நகரம் கடல்வாணிபத்துக்கு மிகப் பொருத்தமானது. ஒரு காலத்தில் ஏற்பட்ட புயல் இந்த நகரத்தை அழித்தாலும் கடலோடிகளுக்கும், கடத்தல்காரர்களுக்கும் இது பிடித்தமான பகுதியாகவே இன்றளவும் இருக்கிறது. நமது திராவிட தமிழர்கள் மோதிக்கொள்ளவும், மோப்பம் பிடிக்கவும் இப்பகுதி பயன்படுகிறது. இதனால், சர்வதேசத்தின் கவனமும் இப்பகுதியை விட்டு அகலாதுள்ளது. தமிழக மற்றும் வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகள் இருநாட்டு மீனவர்களின் பிரச்சினைகளாக பார்க்கப்பட்டாலும், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளின் பிரச்சினை என்பதே பொருத்தமானது.



ஏன், இந்த மோதல்கள்? இழுவைப் படகுகளை தமிழக மீனவர்கள் பயன்படுத்துவதால் வடபகுதி மீனவர்களுக்கு என்ன பிரச்சினை? அவரவர் எல்லைகளில் எவர் எதைப் பயன்படுத்தினாலும் பிரச்சினைகள் எழாதுதானே! இப்படி கருதவும் இயலாது. காரணம், இலங்கையில் இழுவைப் படகுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பது தான். வட பகுதிக் கடலில் மட்டுமல்ல, நாட்டின் எந்தக் கடல் பகுதிகளிலும் இழுவைப் படகுகளை பயன்படுத்த அனுமதியில்லை இலங்கையருக்கு. இதனால், நாட்டுப்படகில் (one day boat) ஒருநாள் முழுவதும் கடலில் அலைந்து, கிடைப்பதை கொண்டு விற்றுத்தான் நமது மீனவர்கள் பிழைப்பு நடத்துகின்றனர். நாள் முழுதும் அலைந்தாலும் நம்மவர் நிலை நல்லதாக இருக்காது. இப்படியிருக்கையில், தமிழக மீனவர்கள் விரைந்து வந்து நுழைந்து, வடபகுதி கடல் வளங்களை அள்ளிச் செல்வதை அனுமதிக்க முடியுமா? என்பதுதான் இதிலிருக்கும் நியாயம். எப்படி இவர்கள் இதை கையாள்கின்றனர். பெரிய மீன்களை அள்ளிச் சென்று விற்பனை செய்கிறார்கள். "ஏதோ நமது உறவுகள் பிழைத்துப் போகட்டும்" என மனிதாபிமானத்தில் சிந்திப்போர், இதில் சண்டைக்கு போகும் அவசியம் எழாது.

ஆனால், இந்த இழுவைப் படகுகள் கணப்பொழுதில் செய்யும் அட்டூழியங்கள் இருக்கிறதே! அது சொல்லுந்தரத்தில் இல்லை. மீன் குஞ்சுகள், வளரும் பருவத்து மீன்கள், இனப்பெருக்கச் சினைகள், மடிகள் எல்லாம் ஒரே கணத்தில் அள்ளப்படுகின்றன. இவற்றை விற்கவும் முடியாது, வளர்க்கவும்



இயலாது என்பது தமிழக மீனவர்களுக்கு தெரியாததா? அப்படியிருந்தும் அனைத்தையும் அவ்விடத்திலே நிலத்தில், சதுப்பில் கொட்டிவிடுகின்றனர். உயிருக்காக துடிக்கும் இந்த அப்பாவி உயிரினங்களை கடலில் எறிந்தால், பின்னொரு காலத்தில் அது வளர்ந்து பிரயோசனப்படும் என்ற சிந்தனையும் இவர்களிடம் இல்லை. வாழ்வதற்கென கருக்கொண்டுள்ள மீனின் சினைகள், முட்டைகளை பாதுகாத்து, மீனின் இனப்பெருக்கத்துக்கு வழிவிடும் தர்மமும் இங்கு கடைப்பிடிக்கப்படவில்லை. இதுதான் கவலை. இந்த இழுவைப் படகுகளால் கடற்பாறைகள், முருகைக்கற்கள் எல்லாம் அள்ளப்பட்டு அழிகின்றன. இதைத்தான் கடல் வளம் அழிவதாகச் சொல்லப்படுகிறது.

இப்படி தொடர்ந்து நடந்தால், மானிடன் மீனையே உண்ண முடியாதளவு பஞ்சம் ஏற்படுவதைப் பற்றி மீனவர்கள் எவரும் கருத்தில் கொள்வதாகவும் தெரியவில்லை. இதற்காகவே, நமது அரசாங்கம் இந்த இழுவைப் படகுகளை தடை செய்துள்ளது. சொந்தநாட்டு மீனவர்கள் அனுபவிக்காத கடற்சொத்துக்களை தமிழக உறவுகள் அள்ளிச் செல்வதை உறவு, உணர்வின் சிந்தனையில் விட்டுக்கொடுக்க ஒன்றும் இது உரிமைப் பிரச்சினை இல்லையே! இது உணவுப் பிரச்சினை, வயிற்றுப் பிழைப்பு. இதனால்தான், இது போரிலும் சாவிலும் முடிகிறது. அசாதாரண காலத்திலும் கடல்வளத்தை வட பகுதியினர் அனுபவிக்கவில்லை. பாதுகாப்பு, கெடுபிடி, படையினரின் ரோந்து என இதில் பல சிக்கல்கள் நிலவின. சாதாரண நிலை திரும்பி சமாதானம் மலர்ந்துள்ள காலத்திலாவது இந்த வளத்தை இவர்கள் அனுபவிக்க வேண்டுமே!



# 13க்குள் எமது உரிமையை முடக்குகின்றோம் என்று சொல்வது விதண்டாவாதம்



*அரசாங்கம் சமஷ்டி தீர்வைத் தரப் போவதில்லை. நாங்கள் கனவில் வாழ்கின்றோம். என்கிறார் இலங்கைத் தமிழரசு கட்சியின் துணைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம்.*

*அவர் தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய செவ்வி பின்வருமாறு:*

**கேள்வி:– 13வது திருத்தம் குழப்பம் பற்றிய உங்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:–** 13வது திருத்தம் எமது தீர்வாக அமையாது என அன்றைய தலைவர்களே ராஜீவ் காந்தியிடம் கூறியிருக்கின்றார்கள். அதே நிலைப்பாட்டில் தான் விடுதலைப் புலிகளும் இருந்தார்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் 13வது திருத்தத்தை எதிர்த்தார் என்று சொல்வதில் உடன்பாடில்லை. ஏனெனில் நான் அதற்குள் சம்பந்தப்பட்டனான். 13வது திருத்தம் ஒரு தீர்வில்லை என்பது அனைவரினதும் முடிவு. அதை எதிர்க்கின்றோம் நீக்குகின்றோம் என்பதில் நான் உடன்படவில்லை. 13வது திருத்தம் அரசியலமைப்பில் உண்டு அதை அமுல் செய்ய வேண்டுமென்று கூட்டம் கூடி, ஊடகங்களுக்கு கூறி இந்தியாவிடம் கேட்கத் தேவையில்லை என்பதே எமது பதில். இது தேவையற்ற முயற்சி என்பதே எனது தனிப்பட்ட கருத்து.

இந்தியாவை கோர வேண்டிய நிலை ஏற்பட்டால் அமைதியாக மோடிக்கு ஒரு கடிதத்தை எழுதியிருக்கலாம். அரசியலாக்கி 6 கட்சியோ 7 கட்சியோ இணைந்தது, அதில் எனக்கு உடன்பாடில்லை. தமிழரசு கட்சியையும் சேர்த்துத் தான் சொல்கின்றேன். இந்தியா மிகப்பெரிய நாடு, இந்தியா எங்களை கேட்டு ஒன்றுமே செய்யவில்லை. நாங்கள் கேட்டதையும் செய்யவில்லை.

எனவே இதை குழப்பியது துரதிர்ஷ்டமானது என்பதே எனது கருத்து. 13வது திருத்தத்தில் அதிகாரங்கள் இல்லையென்று சொல்கின்றார்கள். 13வது திருத்தத்தால் உருவாக்கப்பட்ட மாகாண சபை பாராளுமன்றம் அல்ல. 13க்குள் எமது உரிமையை முடக்குகின்றோம் என்று சொல்வது விதண்டாவாதம். 1988 இல் இருந்து இன்றுவரை அதிகாரப்பகிர்விற்காகப் போராடித்தானே வந்திருக்கின்றோம். இதை ஒரு பெரிய விடயமாக்கி, இந்தியா கேட்டதென்று, இந்தியா கேட்டிருந்தால், சம்பந்தன் ஐயாவிடம் கேட்டிருப்பர்கள். ஏனென்றால் அவர் தேசிய கட்சியின் தலைவர். 7 கட்சியிடம் இந்தியா கேட்டதென்று இந்தியாவையும் அவமானப்படுத்தி, தனித்தனி கட்சியாக கேட்டிருக்கலாம் தானே, ஏதோ சாதனையென்று, உள்ளதையும் கிண்டிவிட்டது போல, நிராகரிப்பதென்பது அராசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு இடம்கொடுப்பதை போல உள்ளது. புதிய அரசிலமைப்பு வந்தால், மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க வேண்டுமென்பது அரசாங்க மட்டத்தில் பலமாக உள்ளது. சர்வதேசம் என்றால் யார் அந்த சர்தேசம். இந்தியாவை மீறி ஒரு சர்வதேசமும் இலங்கைக்கு வராது.

13வது திருத்தம் எமது அரசியல் அபிலாஷைகளுக்கு எதிர்பார்ப்புகளுக்கு தீர்வு அல்ல. 13வது திருத்தத்தில் பல விடயங்கள் உள்ளன. அது எமது உரிமையை சரணாகதி செய்வதாக அல்ல. 13வது திருத்தத்தை நிராகாரிக்கவும் இல்லை. ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தவர். இது தான் தீர்வென்றல்ல. ஒரு கட்டமைப்பு உச்ச கட்ட தீர்வை பரிசீலிக்கத் தயார் என்று சொன்னவர். அவரை இந்த கூட்டுக்களில் இழுக்கத் தேவையில்லை 'பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு கட்டிய கோவணமும்' இல்லாமல் போகப் போகின்றது.

இருக்கின்ற மாகாண சபையில் சாதிக்கக் கூடியவற்றைக் கூட நாங்கள் செய்யவில்லை. செய்யவிடவும் இல்லை. 13வது திருத்ததில் தவறில்லை.

**கேள்வி:– சம்பந்தன் ஐயா கையொப்பமிட்டுள்ளார் அதை தவறென்று சொல்கின்றீர்களா?**

**பதில்:–** தேவையற்ற விடயம். கையொப்பமிடாவிட்டால் இந்தியாவிற்கு எதிரானவர்கள் என்று சொல்லிவிடுவார்கள். இந்தியா சொன்னதென்றால், இந்தியா முதலாவதாக சொல்ல வேண்டியது சம்பந்தருக்கு. உங்களுக்கு அல்ல . எமது 10 கட்சி கூட்டத்தைக் குழப்பியது ரெலோ கட்சியினர் தான். பின்னணி யார். 7 கட்சிக்காரர்களும் கையொப்பமிட்டதும் வந்துவிட்டதா? இல்லையே? நாங்கள் தான் முதன்முதலில் சமஷ்டி கேட்டோம். இன்றும் இணைப்பாட்சியைத் தான் கேட்கின்றோம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. 13 வேண்டாம்,என்றால் இருக்கிறதையும் இழந்துவிட்டு நிற்க வேண்டியது தான். வடகிழக்கு இணைந்தது தான் மாகாண சபை சமஷ்டி அமைப்பு வெறேங்கும் சேர்ந்தா வருகின்றது. இந்த தாயகத்தில் தானே மாகாண சபை முறைமை வரப் போகின்றது. சமஷ்டி தான் தீர்வு அது தான் எங்களின் கோரிக்கை. அதில் எந்த மாற்றமும் கிடையாது.



சுமித்தி தங்கராசா

தொடர் 15ஆம் பக்கம்...


இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## காலி துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான முதலீட்டிற்கான முன்தகைமைக்கான ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு

**(IEOI No.: SLPA/EOI/GPDP/2022-01)**

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சின் ஆதிக்கத்தின் கீழுள்ள கொழும்பு துறைமுகத்திலும் (துறைமுகம் என்று அழைக்கப்படும்) இலங்கையின் ஏனைய வர்த்தக துறைமுகங்களிலும் அபிவிருத்தி, பராமரிப்பு, இயக்கம் மற்றும் துறைமுகம் மற்றும் ஏனைய சேவைகளுக்காக திருத்தப்பட்டவாறு 1979 ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை சட்டத்தினால் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது தாபிக்கப்பட்டுள்ளது.
2. இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது சுற்றுலாத்துறை செயற்பாடுகளை பிரதானமாக மையப்படுத்தி பிராந்திய துறைமுகமாக காலி துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளது. விபரமான வடிவமைப்பானது அடங்கலான துறைமுக வசதிகளான ஆரம்ப பெறுகை வேலைகள் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. காலி துறைமுக அபிவிருத்தி செயற்றிட்ட உத்தேசிப்பிற்காக முதலீட்டாளரொருவரை தெரிவு செய்வதற்கான செயற்பாட்டின் முதலாவது முன்தகைமை கட்டமே ஆர்வ வெளிப்பாட்டிற்கான இந்த அழைப்பாகும்.
3. காலி துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்களை அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுவின் தலைவர் இத்தால் அழைக்கின்றார். முன்தகைமையுள்ள விண்ணப்பதாரிகளின் தெரிவானது மதிப்பீட்டு செயற்பாடொன்றிற்கு உட்படுத்தப்படும். முன்தகைமைக்கான தகவுத்திறனானது ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்தின் அழைப்பில் விபரமாக விபரிக்கப்பட்டுள்ளதென்பதுடன் அதனது மாதிரி பிரதியொன்று இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கான பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது ( 1 ஆம் குறிப்பை பார்க்கவும்).
4. ஆர்வமுள்ள சாரார் ஆர்வ வெளிப்பாட்டிற்கான ஆவணத்தை கீழேயுள்ள 1 ஆம் குறிப்பிலுள்ள முகவரியில் 2022 பெப்ரவரி 9 ஆம் திகதியிலிருந்து 2022 மார்ச் 31 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. கீழே வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் வரி அடங்கலான ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவை (50,000 இ.ரூபா) மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கீழேயுள்ள 1 ஆம் குறிப்பிலுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் எந்தவொரு ஆர்வமுள்ள சாராரினாலும் ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்களுக்கான அழைப்பின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யப்படலாம்.
6. ஆர்வ வெளிப்பாட்டிற்கான செயற்பாட்டு அட்டவணையானது பின்வருமாறு:

| | நிகழ்வு | திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|
| அ. | ஆர்வ வெளிப்பாட்டு ஆவண அழைப்பை வழங்குதல் | 2022 பெப்ரவரி 9 ஆம் திகதி மு.ப. 10 மணியிலிருந்து 2022 மார்ச் 31 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் | 1 ஆம் குறிப்பு |
| ஆ. | ஆர்வ வெளிப்பாட்டின்முன் கூட்டம் | 2022 மார்ச் 16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு | 2 ஆம் குறிப்பு |
| இ. | ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்திற்கான அழைப்பிற்கான தெளிவுறுத்தல்களுக்காக விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுள்ள சாரார்களுக்கான இறுதி திகதி | 2022 மார்ச் 23 ஆம் திகதியன்று. | |
| ஈ. | ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்தின் அழைப்பிற்கான தெளிவுறுத்தல்களை இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வழங்குவதற்கான இறுதித் திகதி | 2022 மார்ச் 31 ஆம் திகதியன்று | |
| உ. | ஆர்வ வெளிப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2022 ஏப்ரல் 7 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு | 2 ஆம் குறிப்பு |
| ஊ | ஆர்வ வெளிப்பாடுகளை திறத்தல் | 2022 ஏப்ரல் 7 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு | 2 ஆம் குறிப்பு |

1 ஆம் குறிப்பு:

பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-1, இலங்கை.

தொலைபேசி இல.: +94(0) 112483456. தொலைநகல் இல.: +94 (0) 112323055.
மின்னஞ்சல் முகவரி: **cepd@slpa.lk**

2 ஆம் குறிப்பு:

தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழு, துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சு. இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-1.

7. ஆர்வ வெளிப்பாடுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக ஆர்வமுள்ள சாரார்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுவோ அல்லது இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையோ பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழு.**



සතොස

வர்த்தக அமைச்சு

## கொள்முதல் அறிவிப்பு

**லங்கா சதொச லிமிடட் (LSL) நிறுவனத்திற்கு விளம்பர நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல்**
**விலைமனு இலக்கம்: LSL/PRO/05/263/Advertising Agency/2021**

**தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல்**

லங்கா சதொச லிமிடட் (LSL) நிறுவனத்திற்கு ஓர் ஆண்டு காலத்திற்காக விளம்பர செயற்பாடுகள் மற்றும் அந்த சேவையை வழங்க முடியுமான பொருத்தமான மற்றும் தகுதி உடைய விளம்பர நிறுவனங்களிடம் இருந்து, லங்கா சதொச லிமிடட்டின் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள் மற்றும் தேவைகள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.

விலைமனுக்களை சமர்ப்பிக்க ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த ஆங்கில மொழியிலான குறித்த முழுமையான விலைமனு ஆவணத்தை **3,000 ரூபா மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணத்தை செலுத்தி 2022 பெப்ரவரி 14 ஆம் திகதி தொடக்கம் 2022 மார்ச் 07 ஆம் திகதி வரையான காலத்தில்**, இலக்கம் 27, சதொச செயலாளர் நாயக அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2022 பெப்ரவரி 23 ஆம் திகதி பி.ப. 03.00க்கு** மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனு **2022 மார்ச் 07 ஆம் திகதி மு.ப. 11.00க்கு அல்லது அதற்கு முன்னர்,** லங்கா சதொச லிமிடட், இலக்கம் 27, சதொச செயலாளர் நாயக அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைக்கின்ற வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியில், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும். விலைமனுக்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"லங்கா சதொச லிமிடட் (LSL) நிறுவனத்திற்கு விளம்பர நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கைக்குள் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட **நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பெறுமதி விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது **2022 மார்ச் 07 ஆம் திகதி மு.ப. 11.00க்கு** முடிவடைவதோடு விலைமனுக்களை திறப்பது, முன்மொழிவுகள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. **வெற்றிகரமான விலைமனுதாரர் மூலம் பதிவுக் கட்டணமாக 5,000 ரூபா பணம் மற்றும் 8% வெட் தொகை (மீளளிக்கப்படாதது) செலுத்தப்பட வேண்டும்** என்பதோடு (தற்போது பதிவு செய்திருக்கும் விலைமனுதாரர்கள் இந்த தொகையில் இருந்து விடுவிக்கப்படுவர்) **ஒப்பந்தப் பெறுமதியின் 5% தொகையை செயல்திறன் பிணையாக (மீளளிக்கப்படும்)** செலுத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி, பெறுகை (LSL) 070 1560428

கேள்விமனு/ ஒப்பந்தம் வழங்கப்படுவது தொடர்பான இறுதி முடிவு, **தலைவர் - திணக்கள பெறுகைக் குழு, லங்கா சதொச லிமிடட் வசமானது.**

**தலைவர், திணக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சதொச லிமிடட், சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்**
**இலக்கம் 27, வொக்ஷோல் வீதி கொழும்பு - 02**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

**உள்ளூர் அபிவிருத்தி ஆதார செயற்றிட்டம் செயற்றிட்ட ID இலக்கம் : P 163306**

**கிழக்கு மாகாணம் - திருகோணமலை**

1. உள்ளூர் அபிவிருத்தி ஆதார செயற்றிட்டத்திற்காக உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசானது, கடன் ஒன்றைப் பெற்றுள்ளது. இக்கடன் தொகையின் பெறுகைகளின் ஒரு பகுதியை கீழேயுள்ள அட்டவணையில் காணப்படும் வேலைகளின் பணக்கொடுப்பனவுகளுக்காகச் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. பட்டணம் மற்றும் சூழல் பிரதேச சபையின் பெறுகைக்குழு மற்றும் உள்ளூர் அதிகார சபையின் பெறுகைக்குழுவின் தலைவர், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளிற்காக, தகைமையும் தகுதியும் பெற்றுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. இவ்விலைமனுவானது, தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் (NCB) பிரகாரம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, சித்திகரமான விலைமனுதாரர், அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராக இருப்பதுடன், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காகப் பதிவு செய்யப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள் விலைமனுப்படிவங்களின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.
6. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பட்டணம் மற்றும் சூழல் பிரதேச சபையின் தலைவர்/ செயலாளரிடம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், அதே முகவரியில் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை விலைமனுப்படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. 2022.02.14 முதல் 2022.03.07 வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து பட்டணம் மற்றும் சூழல் பிரதேச சபையில் இதற்கான ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனுப்படிவத் தொகுதியொன்றை கொள்வனவு செய்துகொள்ளலாம்.
8. 2022.03.08 அன்று பி.ப. 3.00 மணிக்கு முன்னர், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாகவே, அவை சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கீழேயுள்ள அட்டவணையில காணப்படும் விபரங்களின் பிரகாரம், விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. 2022 பெப்ரவரி 28ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு குறித்த உள்ளூராட்சி மன்றில் விலைமனு முன்னோடிக் கூட்டம் ஒன்று நடைபெறும். இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பட்டணம் மற்றும் சூழல் பிரதேச சபை,**
**உப்புவெளி - திருகோணமலை.**
**2022.02.09**

| தொடர் இலக்கம் | உள்ளூராட்சி மன்றின் பெயர் | வேலை விபரம் மற்றும் விலைமனு இலக்கம் | பெசேவ அடங்கலாக விலைமனுவின் தொகை (மில்லியனில்) | பெறுகை அமைப்பின் பெயர் | விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம் | விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடம் | விலை மனுப் படிவத்தின் விலை | தேவையான விலைமனுப் பிணையம்: விலை மனுப் பிணைத் தொகை | தேவையான விலைமனுப் பிணையம்: செல்லு பவடிக் காலம் | விலைமனுச் செல்லுபடிக் காலம் (வரையும்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | | (7) | (8) | (9) | (10) |
| 01 | திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை | பலநோக்குக் கட்டடத்திற்கான மற்றும் வாசிக்கும் மண்டபத்திற்கான தளபாடப் பெறுகை 2022.1.EP - TRI - திருகோணமலை பட்டணமும் மற்றும் சூழல் பிரதேச சபை | 3.00 | திருகோணமலை பிரதேச சபையின் பட்டணம் சூழல் | திருகோணமலை பிரதேச சபை பட்டணம் மற்றும் சூழல் 026-2222150 | திருகோணமலை பிரதேச சபை பட்டணம் மற்றும் சூழல் | 3,000.00 | 30,000.00 | 06.06.2022 வரையும் | 09.05.2022 |
| 02 | | பிரதான அலுவலகத்திற்கு சூரிய ஒளித்தொகை ஒன்றைத் தாபித்தல் 2022.1.EP.Tri திருகோணமலை பட்டணம் மற்றும் சூழல் பிரதேச சபை. | 5.00 | | | | 3,000.00 | 50,000.00 | 15.06.2022 வரையும் | 27.05.2022 |

**தலைவர்,**
**திருகோணமலைப் பட்டிணமும் சூழலும் பிரதேச சபை,**
**உப்புவெளி திருகோணமலை.**
**09.02.2022**

# பொது அறிவித்தல்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

PUCSL

## உங்களுக்கு தடையில்லா மின்சாரத்தை பெறவேண்டுமாயின்

## மீண்டும் அறிவிக்கும் வரை கீழே கூறியுள்ளவற்றை பின்பற்றவும்

### மின்சார பாவனையாளராகிய நீங்கள்

(மாலை 6 முதல் 10 வரை)

மின்னழுத்தி, மின்னடுப்பு, மின்சார ஹீட்டர்கள், சலவை இயந்திரம் மற்றும் காற்றுப்பதனாக்கி (எயர் கண்டிஷனர்) ஆகியவற்றை பயன்படுத்துவதை தவிர்க்கவும்

### மின் விளக்கு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனம்

80% மின் விளக்குகளை அணைக்கவும்

### வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச அலுவலகங்கள்

(மாலை 2.30 முதல் 4.30 வரை)

அலுவலக நேரத்தின் பின்னர் அனைத்து மின் விளக்குகளையும் அணையுங்கள். அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேவையற்ற மின் விளக்குகளை அணைத்திடவும்.

### எல்லோரும் எந்நேரமும்

24 HOURS

காற்றுப் பதனாக்கியின் (எயார் கண்டிஷனர்) வெப்பநிலையை 26 செல்சியஸில் பராமரிக்கவும். விளம்பரப் பலகைகள் மற்றும் பெயர்பலகைகள் ஒளிரவிடப்படுவதை தவிர்க்கவும். உங்களிடம் ஜெனரேட்டர் காணப்படுமாயின் அதனை பயன்படுத்தி மாத்திரம் காற்றுப் பதனாக்கியை (எயார் கண்டிஷனர்) செயற்படுத்தவும்.

மேற்குறிப்பிட்ட நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம்

**200 மெகாவொட் மின்சார திறன் நாளாந்தம் குறைக்கப்படுவதுடன், மின் தடைக்கான தேவையும் தவிர்க்கப்படும்.**

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம், இல: 28, செயின்ட் மைக்கேல்ஸ் வீதி, கொழும்பு 03

தொலைபேசி: 011 239 2607/8 தொலைநகல்: 011 239 2641

info@pucsl.gov.lk
www.pucsl.gov.lk

facebook.com/pucsl

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

■ கொள்கை சீர்திருத்தங்கள்

# மூடப்பட்ட பொருளாதாரத்தை நோக்கியதாக அமைந்துவிடக் கூடாது

**இலங்கையில் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அத்துடன் பொதுவாக எல்லாப் பொருட்கள் மற்றும் சேவை வகைகளின் விலைகளும் சமீபகாலங்களில் சடுதியான அதிகரிப்புக்கு உட்பட்டிருக்கின்றன. அதுமட்டுமன்றி சந்தையில் பொருள் தட்டுப்பாடுகள் நிலவுவதை பரவலாக அவதானிக்க முடிகிறது. சாதாரண பரசிட்டமோல் வகையிலான வைத்தியரின் பரிந்துரை தேவைப்படாத சாதாரண மருந்துகளுக்கும் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது.**

அண்மையில் உத்தியோகபூர்வமான வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் படி பால்மா, எரிவாயு, கோதுமை மாவு மற்றும் சீமெந்து ஆகிய நான்கு பொருள்களுக்கு மிதமானதொரு தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்கம் ஒத்துக்கொண்டதோடு இறக்குமதிகள் மூலம் தட்டுபாட்டை நீக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஒரு புறம் பொருள் விலைகள் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் அதே வேளை அதிகரித்த விலைகளிலும் பொருள்கள் தட்டுப்பாடாக இருப்பதனால் கள்ளச்சந்தை விலைகள் தோற்றம் பெற்று அதிகூடிய விலைகளை செலுத்த நுகர்வோர் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். உதாரணமாக சீமெந்து பைக்கற் ஒன்றின் விலை 2021 ஒக்டோபர் மாதம் 7ஆந் திகதி 1275 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. பின்னர் 2022 ஜனவரி 1ஆந் திகதி 1375 ரூபாவாக மேலும் அதிகரிக்கப்பட்டது. ஆனால் இந்த அதிகரிக்கப்பட்ட விலையிலும் சீமெந்தை சந்தையில் பெறமுடியாதுள்ளதாக கட்டடத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கள்ளச்சந்தையில் ஒரு பைக்கற் சீமெந்து 2000 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. பால்மா, கோதுமை மா போன்றவை சந்தையில் போதியளவில் கையிருப்பில் இல்லை. எரிவாயுவும் தேவைக்கேற்ப உடனடியாக கொள்வனவு செய்ய முடியாத நிலை நிலவுகிறது. எரிவாயு விநியோகத்தர்கள் டிலிவரி கட்டணம் என்ற பெயரில் அதன் விலைகளில் மாற்றங்களை செய்வதையும் அவதானிக்க முடிகிறது.

சாதாரணமான தலைவலிக்கு மக்கள் பயன்படுத்தும் பரசிற்றமோல் வகையிலான மருந்துக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளமைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. குறைந்த பட்சம் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் விநியோகிக்கும் இது போன்ற சாதாரண மருந்து வகைகளுக்கு ஏன் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை உரிய அதிகாரிகள் கூற வேண்டும்.

மரக்கறி வகைகளின் விலைகள் உச்சத்திலிருந்து சற்று கீழே இறங்கி வந்திருப்பதாக சந்தை வட்டாரங்களை நோக்கும்போது புலனாகிறது. சாதாரண சந்தை நிலைமையில் 250 ரூபாவிலிருந்த ஒரு கிலோ கறி மிளகாயின் விலைகள் சடுதியாக 900 ரூபாவுக்கு எகிறிச் சென்று இப்போது 600 ரூபா மட்டத்திற்கு இறங்கி வந்திருப்பது அதன் விலை குறைந்திருப்பது போன்றதொரு தோற்றப்பாட்டை நுகர்வோருக்கு ஏற்படுத்தினாலும் கூட ஆரம்பத்திலிருந்த



உற்பத்தி பாதிப்படைய வருமான மூலாதாரங்கள் பாதிக்கப்படும். அதனால் மக்களின் கொள்வனவு செய்யும் ஆற்றலும் சேமிக்கும் ஆற்றலும் கடுமையாக வீழ்ச்சியடையும். இது தொடர்ச்சியாக நடைபெறும் பட்சத்தில் பொருளாதாரச் சுருக்கமடைந்து மந்த நிலையை நோக்கி நகரும்

> “ இலங்கைப் பொருளாதாரத்தில் மிகப்பெரிய பொருளாதாரச் சீராக்கம் ஒன்றைச் செய்ய வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும். தலைவலிக்கு மாத்திரை விழுங்குவது போல அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுந்தமானமாக தீர்மானங்களை (ad hoc decisions) மேற்கொண்டு அப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினையை சமாளிப்பதையே கடந்த காலத்தில் அரசாங்கங்கள் தொடர்ச்சியாகத் தமது அரசியல் உபாயமாகக் கடைப்பிடித்து வந்துள்ளன ”

விலைகளுடன் ஒப்பிடுகையில் அது இருமடங்கிற்கும் மேற்பட்டதொரு அதிகரிப்பாகும். மரக்கறி வகைகள் பலவற்றின் விலைகளின் போக்குகள் இவ்வாறே உள்ளன. முட்டை, மீன் இறைச்சி போன்றவற்றின் விலைகளும் சடுதியான அதிகரித்துள்ளன.

இந்நிலையில் சாதாரண குடும்பங்களின் வாழ்க்கைச் செலவு தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது. மறுபுறம் 117 ரூபாவாக இருந்த ஒரு லீற்றர் பெற்றோலின் விலை அண்மையில் 177 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இலங்கையில் இயங்கும் இரு பெற்றோலிய நிறுவனங்களில் ஒன்று அதன் விலையை மேலும் அதிகரித்து 184 ரூபாவுக்கு விற்பனை செய்கிறது. இந்தியாவில் நிலவும் பெற்றோலிய விலைகளை விடக் குறைவாக இலங்கையின் பெற்றோலிய விலைகள் இருப்பதாக தொடர்ந்து சுட்டிக் காட்டப்பட்டு வந்துள்ளது.

எதிர்வருங்காலங்களில் மற்றைய போட்டியாளரும் பெற்றோலிய விலைகளை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் பிரகாசமானதாகத் தெரிகின்றன. மின்சார உற்பத்தி வினியோகத் துறை தொடர்ச்சியான பெற்றோலியத்துறையின் அழுத்தங்களுக்கு உட்பட்டு வருகிறது. பெற்றோலிய விலைகளுக்கும் மின்சார உற்பத்திச் செலவுகளுக்கும் அதிகூடிய நெருக்கம் நிலவுவதால் மின்சாரக் கட்டணங்கள் பெரியளவில் அதிகரிக்கக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கையில் மின்சாரக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டால் மேலும் ஒரு சுற்று விலையதிகரிப்புகள் ஏற்படுவதை தவிர்க்க இயலாது. இறக்குமதித் தடைகள் காரணமாக உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மந்த நிலை ஒரு புறம் பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பை எற்படுத்துகிறது. மறுபுறம் மக்களின் வருமான மூலாதாரங்களை அது மூடிவிடுகிறது. இவை இரண்டும் இணைந்து பொருளாதாரத்தின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குறியாக்கி நிச்சயமற்ற நிலையை உருவாக்குகிறது.

(15ஆம் பக்கம் பார்க்க)



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# ஐரோப்பிய அரசுகளின் இராஜதந்திர நகர்வும் உக்ரைன்–ரஷ்ய போர் பதற்றக் குறைப்பும்

**யதார்த்தவாதக் கோட்பாடு போரற்ற உலகத்தை நோக்கிய நகர்வுக்கு வித்திடுவதாக யதார்த்தவாதிகள் குறிப்பிடுகின்றனர். இரண்டாம் உலகப் போருக்கு பின்பான பனிப்போர் அரசியல் ஒழுங்கானது வல்லரசுகளின் இராணுவ வலுவை அதிகரித்ததன் மூலம் உலகப் போர் ஒன்று ஏற்படாது தவிர்த்ததாகவும் அதற்கு அரசுகளின் இராணுவ மற்றும் ஆயுத தளபாடங்களின் பலமே காரணமெனவும் யதார்த்தவாதிகள் விவாதிக்கின்றனர். அத்தகைய யதார்த்த வாதத்திற்குள்ளேயே ரஷ்ய மேற்குலக அரசியல் நகர்கிறது. உக்ரைனை மையப்படுத்தி ரஷ்யா ஆரம்பித்த போர்ச் சூழல் படிப்படியாக அமைதியை நோக்கிய இராஜீக நடவடிக்கைகளுக்கு உள்ளாகிறது. உக்ரைனுக்காக அமெரிக்காவும் ரஷ்யாவும் போர் புரியப் போவதாக கூறப்பட்ட போதும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் போரின் விளைவுகள் தம்மையே பாதிக்கும் என்பதனால் போரை தவிர்க்க முயலுகின்றன. அதற்கான இராஜீக நகர்வுகளை முதன்மைப்படுத்தி வருகின்றன. இக்கட்டுரையும் அத்தகைய இராஜதந்திர நடவடிக்கைகளை அளவிடுவதாக அமையவுள்ளது.**

முதலாவது, ரஷ்ய ஜனாதிபதி குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் தொடக்க நிகழ்வில் 04.02.2022 அன்று கலந்து கொண்டதுடன் இரு நாட்டுக்குமான இராணுவ வர்த்தக புரிதல் எட்டப்பட்டது. இரு தலைவர்களது கூட்டறிக்கையிலும் நேட்டோவின் விஸ்தரிப்பையும் அமெரிக்காவின் அணுகுமுறையையும் கண்டித்ததுடன் போர் ஒன்றுக்கான வாய்ப்புக்களை ரஷ்யா சீனாவுடன் இணைந்தே எதிர்கொள்வதற்கான புரிதலும் ஏற்படுத்தப்பட்டது. அது மட்டுமன்றி நேட்டோவினது தீவிரத்தன்மையை கூட்டாக எதிர் கொள்வதுடன் உலகளாவிய அமைதிக்கு இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயல்படுவதாகவும் கூட்டறிக்கையில் ஒப்புக்கொண்டன. போர் பதற்றமும் நேட்டோவின் மிரட்டலும் ரஷ்ய ஜனாதிபதியின் பீஜிங் விஜயத்திற்கு பின்னர் மாற்றமடைய ஆரம்பித்தது. ஏற்கனவே பாரிய உடன்பாடின்றி ஒத்துழைத்த இரு தேசங்களையும் போர் பதற்றம் ஒன்றிணைத்ததுடன் பலமான இராணுவ உடன்பாட்டுக்கு இட்டுச் சென்றுவிடும் என்ற அச்சத்தை மேற்குலகத்திற்கு ஏற்படுத்தியது. அதிலும் அமெரிக்கா பிரிட்டன் போன்ற நாடுகளின் தலைமைகள் உக்ரைனுடன் ஏற்படுத்திய நெருக்கம் அதிக குழப்பத்தை ஐரோப்பாவுக்குள் உருவாக்கும் நிலையை உணரக்கூடியதாக அமைந்திருந்தது. அது ரஷ்யாவையும் பாதித்தது. அதனை எதிர்கொள்ளும் விதத்திலேயே சீனாவுடனான நெருக்கத்தை விளாடிமிர் புட்டின் ஏற்படுத்தினார்.

இரண்டாவது, ரஷ்ய ஜனாதிபதியின் சீன விஜயம் நிறைவு பெற்றதும் ஐரோப்பாவுக்குள் தலையெடுத்த பிரிட்டன் பின்வாங்க பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் ரஷ்யாவுக்கு 07.02.2022 இல் பயணமானார். அவர் புட்டினுடன் உக்ரைன் போர் பதற்றத்தை தவிர்க்கும் நடவடிக்கைக்கான பேச்சுக்களை ஆரம்பித்தார். அவர் புட்டினுடனான பேச்சுககளுக்கு பின்பு கருத்து தெரிவிக்கும் போது இப்பேச்சுவார்த்தை அவசியமானது. ஐரோப்பாக் கண்டத்தின் பாதுகாப்பிற்கும் உறுதிப்பாட்டுக்குமான சூழலை உருவாக்க உதவுமெனவும் புட்டினுடனான சந்திப்பு போர் பதற்றத்தை தணிப்பதற்கான முதல்படி என்றும் தெரிவித்தார். ரஷ்ய ஜனாதிபதி மக்ரோனின் மத்தியஸ்த நடவடிக்கையை பராட்டியதுடன் நம்பிக்கை அளிப்பதாக தெரிவித்தார். பிரான்ஸ் ஜனாதிபதி 08.02.2022 உக்ரைன் தலைநகரான கீவ் சென்று உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலெஸ்ன்ஸ்கியுனான பேச்சுவார்த்தையை மேற்கொண்டார். அப்போது கருத்து தெரிவித்த பிரான்ஸ் ஜனாதிபதி சமரசப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புள்ளதாக தெரிவித்தார். அதே நேரம் உக்ரைன் ஜனாதிபதி வெற்று வார்த்தைகளை நான் நம்பவில்லை. உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஒவ்வொரு அரசியல்வாதியும் வெளிப்படையாக இருக்கமுடியும் என்றார். பிரான்ஸ் ஜனாதிபதியின் மத்தியஸ்த முயற்சியில் அடுத்த கட்டமாக ஜேர்மனியின் தலைநகரான பேர்லினுக்குச் சென்று அங்கு ஜேர்மன் மற்றும் போலந்து தலைவர்களுடன் இணைந்து உக்ரைனுக்கான கூட்டு ஆதரவை வெளிப்படுத்தினர்.

மூன்றாவது, மக்ரோனின் ரஷ்ய விஜயத்திற்கு சமதையாக ஜேர்மன் தலைவர் ஓலாப் ஷோல்டஸ் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் உக்ரைன் விடயம் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இரு தலைவர்களும் பேச்சுக்களுக்கு பின்னர் கருத்துத் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி உக்ரையின் மீது ரஷ்யா படையெடுத்தால் ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு பெற்றோலியப் பொருட்களை கொண்டு செல்லும் 'நோட் ஸ்ரீம்' என அழைக்கப்படும் எரிவாயுகுழாய் வினியோகம் துண்டிக்கப்படும் என எச்சரித்தார். இது கருங்கடல் வழியாக ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு எரிவாயு மற்றும் பெற்றோலியப் பொருட்களை கொண்டு செல்வதற்கான குழாய் திட்டமாகும். 2019 டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்டு 2022 இல் நிறைவு பெற்றுள்ளது. எனினும் அதற்கான விநியோகம் ஆரம்பிக்கப்படவில்லை. 1230 கீ.மீ. நீளமுடைய இத்திட்டம் மேற்கு ஐரோப்பாவை நோக்கி விஸ்தரிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரியவருகிறது. ரஷ்யாவின் பொருளாதார இருப்பு எரிவாயு மற்றும் பெற்றோலியப் பொருட்கள் ஏற்றுமதியிலேயே அதிகம் தங்கியுள்ளது. அவ்வாறே ஜேர்மனி உட்பட மேற்கு ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவின் எரிவாயு மற்றும் பெற்றோலியப் பொருட்களையே இறக்குமதி செய்து வருகின்றன.




நான்காவது, இத்தகைய இராஜதந்திர முயற்சிகள் ஒருபக்கம் அமைய பெலாரஸ் நாட்டுடன் இணைந்து ரஷ்யா போர்ப்பயிற்சி ஒன்றினை ஆரம்பித்துள்ளது. 10 நாட்கள் நீடிக்கும் போர்ப்பயிற்சியானது பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் என போரியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் அத்தகைய போர் ஒத்திகைகள் போரை தவிப்பதற்கும் வழியமைக்கலாம் என்ற உரையாடலும் முதன்மைப்படுத்தப்படுகிறது. காரணம் நேட்டோவின் போர் நகர்வை கையாளும் உத்தியுடன் சீனாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி புடின் பெலாரஸ் நாட்டுடன் போர் ஒத்திகையை மேற்கொள்வதன் நோக்கம் நேட்டோவின் நடவடிக்கைக்கு எதிரானதாகவே அமையகிறது. அதாவது நேட்டோவின் கூட்டு பாதுகாப்பிற்கு நிகரான கூட்டை உருவாக்கும் உத்தியில் விளாடிமிர் புடின் போர் ஒத்திகையை முதன்மைப்படுத்தி வருகிறார். அது மட்டுமல்லாது போரை இறுதித் தெரிவாக கொண்டாலும் அதில் எப்படி வெற்றி ஈட்டுவதென்ற உத்தியையும் புடின் வகுத்து வருகின்றார். மீள மீள ரஷ்ய ஜனாதிபதி குறிப்பிடுவது படைகுவிப்பானது உக்ரையினைத் தாக்குவதற்காக அல்ல எனவும் அவ்வாறே போர்ப் பயிற்சியும் போருக்கான தயாரிப்பல்ல என்பதையும் முதன்மைப் பத்துகின்றார். ஆனால் நேட்டோவின் நகர்வுகளை கண்டிப்பதுடன் நேட்டோவில் உக்ரையின் இணைவதை நிராகரிக்கின்றார். அதனால் அவர் போருக்கு தயாராகிறார் என்பதே அதன் அடிப்படையாகும். ஆனால் போர் என்பவது இரு தரப்புக்கும் இறுதி முடிபாகவே அமையும்.

ஐந்தாவது ஐரோப்பா தன் மீதான ஒரு போரை தவிர்க்க முயலுகிறதைக் காணமுடிகிறது. பிரான்ஸ் ஜனாதிபதியின் நகர்வு அமெரிக்காவின் நலன்களுக்கு மாறானதாகவே அமைந்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

# நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறும் தி.மு.க வின் முயற்சிகள்



## விலக்கு கிடைக்குமோ இல்லையோ, அது ஒரு சிறந்த அரசியல் ஆயுதம்!

உத்தரகாண்ட், மணிப்பூர், கோவா, உத்தரபிரதேசம், பஞ்சாப் ஆகிய இந்தியாவில் ஐந்து மாநிலங்களுக்கான தேர்தல்கள் நடைபெற ஆரம்பித்துள்ளன. முதல் கட்டமாக இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமான உத்தர பிரதேசத்தில் தேர்தல் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. முதல் கட்டத்தில் 58 தொகுதிகளுக்கான வாக்குப் பதிவு நடைபெற்றுள்ளது. தற்போது அம் மாநிலம் பா.ஜ.க வசம் உள்ளது. முதல்வர் ஒரு இந்து சாமியார். யோகி ஆதித்யாநாத். பா.ஜ.க.வை எதிர்த்து சமாஜ்வாத கட்சி களத்தில் இறங்கியுள்ளது. உத்தர பிரதேசத்தில் எதிர்க்கட்சிகளால் பா.ஜ.கவை அசைக்கக் கூடுமானால் அதை பா.ஜ.கவின் ஆட்சிக்கு விழுந்த பலத்த அடியாகத்தான் கருத வேண்டும். ஆனால் குறைந்த பெரும்பான்மையுடனாவது பா.ஜ.க மீண்டும் ஆட்சி அமைக்கும் வாய்ப்பே காணப்படுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். காரணம், வறுமையும் கல்வி அறிவில் பின்தங்கியவர்கள் பரவலாக வாழும் மாநிலமாகவும், இந்து மதத்தைக் காட்டி அரசியல் செய்யும் வாய்ப்பு அதிகம் காணப்படுவதாலும் இந்துத்துவா கொள்கையை வலியுறுத்தும் பா.ஜ.கவுக்கு சாமானியர்களின் வாக்கை அள்ளும் வாய்ப்பு அதிகமே.

இதே சமயம் தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் எதிர்வரும் 19ம் திகதி நடைபெறவுள்ளது. இங்கே காணப்படும் 12 ஆயிரத்து 607 இடங்களுக்கு 57 ஆயிரத்து 778பேர் போட்டியிடுகின்றனர். இத் தேர்தலில் தி.மு.க கூட்டணியில் வைகோவின் ம.தி.மு.க, திருமாவளனின் விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மனித நேயமக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம்லீக் என்பன இணைந்து போட்டியிடுகின்றன. களத்தில் அ.தி.மு.க தனித்து போட்டியிடுகிறது. அ.தி.மு.க கூட்டணியில் இணைந்திருந்த பா.ம.க மற்றும் பா.ஜ.க.வும் தனித்து நின்றே களம் காண்கின்றன. இம் முக்கிய கட்சிகள் தவிர, தே.மு.தி.க, நாம் தமிழர், மக்கள் நீதி மய்யம், அ.ம.மு.க, ஆம் ஆத்மி மற்றும் விஜய் மக்கள் இயக்கம் என்பனவும் தனித் தனியாகக் களத்தில் இறங்கி உள்ளன.

இத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கும் தி.மு.கவுக்கும் இடையிலேயே போட்டி காணப்படுகிறது. பெரும்பாலான நகர்ப்புற உள்ளாட்சித் சபைகளை தி.மு.க கைப்பற்றுவதற்கான வாய்ப்புகளே காணப்படுகின்றன. அந்த வாய்ப்பை நீட் தேர்வு விவகாரம் மேலும் அதிகரிக்கச் செய்யுமா என்பதே ஏனைய கட்சிகளின் கவலையாக உள்ளது. தமிழ் நாட்டில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் காணப்படுகின்றன. இவற்றல் 12ஆயிரத்து 838 வார்டுகள் உள்ளன. இவற்றில் எட்டாயிரம் வார்டுகளை தி.மு.க கூட்டணி கைப்பற்றலாம் என்றொரு எதிர்பார்ப்பு உள்ளது.

தற்போதுவரை ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க அரசு வேகமாகவும் விவேகமாகவும் செயல்படுவதாகவும் ஸ்டாலினின் நிர்வாகம் சிறப்பாக இருப்பதாகவுமே பொதுவான ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஸ்டாலின் செயல்வீரரக கணிக்கப்படுகிறார். கொவிட் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தியதில் காட்டிய தீவிரம், சமீபத்திய மழை வெள்ளத்தில் நேரடியாக கண்காணிப்புகளை மேற்கொண்டமை என்பன பேசப்படுகின்றன. முதல்வர் ஸ்டாலின் செயல்வீரர்களான சில அமைச்சுகளை தம்முடன் வைத்துள்ளார். அவர்கள் விரைவாகவும், விவேகமாகவும் செயல்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதில் உள்ள ஆபத்து என்னவென்றால், ஏற்கனவே நடைபெற்ற கிராமப்புற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தி.மு.கவே பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றியது. 19ம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலிலும் பெரும்பாலான உள்ளூராட்சிமன்றங்களை தி.மு.க கைப்பற்றுமானால் ஏறக்குறைய முழுத்தமிழ் நாட்டின் நிர்வாகத்தையும் தி.மு.க கைப்பற்றியதாகி விடும். ஆயிரக்கணக்கான தி.மு.க நிர்வாகிகளை மோசடி செய்யவிடாமல், ஊழல் புரியவிடாமல், லஞ்சலாவணியங்களில் ஈடுபடாமல் தி.மு.க தலைமையினால் காண்காணிக்கக் கூடுமா? அதற்கான பொறிமுறையொன்றை தி.மு.க வகுத்திருக்கிறதா? தி.மு.க இக் கேள்விகளுக்கு பதில் கண்டு பிடித்தாக வேண்டும்.

இதற்கு இலங்கையின் நல்லாட்சிக் காலம் ஒரு நல்ல உதாரணம். ஊழல் பேர்வழிகளைப் பிடிப்போம். நல்லாட்சியைத் தருவோம் என சூளுரைத்து வந்த நல்லாட்சி, ஆரம்பமான சில மாதங்களிலேயே பிணைமுறி மோசடியில் சிக்கியதில் சோர்ந்து கிடந்த எதிர்த்தரப்பு உற்சாகம் பெற்றது. அடுத்ததாக உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புடன் அந்த அரசாங்கம் மண் கௌவியது. இலங்கையைவிட இரண்டு மடங்கு பெரிய மாநிலமான தமிழகத்தை கட்டியாளும் போது ஏற்படக் கூடிய தவறுகள், ஊழல் மற்றும் லஞ்சம், முறைகேடுகளால் ஸ்டாலின் அரசின் அபிமானம் குன்றக்கூடிய வாய்ப்புகள் இருக்கவே செய்கின்றன. இதனால்தான் மு.க ஸ்டாலின் மிகக் கவனமாகக் காய்களை நகர்த்துகிறார்.

அவர் தன் அரசியலுக்கு அவ்வப்போது அறிஞர் அண்ணாதுரையைத்தான் உதாரணம் காட்டுகிறார். கடந்த வாரம் தமிழக சட்ட மன்றத்தில் நிகழ்த்திய உரையிலும் 'எமது ஆசான் அறிஞர் அண்ணாவினால் பயிற்றப்பட்ட நாம்' என்றுதான் கூறினார். அண்ணாவின் வழி என்பதிலும் ஒரு சாணக்கியம் இருக்கத்தான் செய்கிறது.

தி.மு.கவை தோற்றுவித்தவர் அறிஞர் அண்ணா. அவர் எதிர்க்கட்சியில் இருந்த போதும் சரி ஆட்சியில் 1967இல் அமர்ந்தபோதும் சரி அவர் மீது எந்தக் கறையும் இருக்கவில்லை. தூய்மையான, ஏழைகளுக்கான, சாமானியரின் மேம்பாட்டுக்காகவும் திராவிட சிந்தனைகளுடனும் ஆட்சி செய்தவர். காமராஜர் ஆட்சியைப் போலவே அண்ணாவின் குறுகிய இரண்டாண்டு ஆட்சியும் அப்பழுக்கற்றதாகவே போற்றப்படுகிறது.

அவருக்குப் பின்னால் வந்த கலைஞர் கருணாநிதி ஆட்சியில் தான் ஊழல்கள், முறைகேடுகள் அரங்கேறத் தொடங்கின. கலைஞரின் ஆட்சி ஊழல் நிறைந்த ஆட்சி என எம்.ஜி.ஆர் குற்றம் சாட்டியது; இந்திரா காந்தி கலைஞரின் ஆட்சியைக் கலைத்து விசாரணைக் கமிஷன் அமைத்தது எல்லாம் பின்னர் நடந்தேறிய நிகழ்வுகள். எனினும் ஊழலும் முறைகேடுகளும், அரசியல்வாதிகள் கோடி கோடியாகக் குவிப்பதும் எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் தொடர்ந்து ஜெயலலிதா காலத்தில் உச்சம்பெற்றதை நாம் அறிவோம். எனவே, தி.மு.க மீதான இந்த அவப்பெயரைக் களைவதே முதல் பணியாகச் செய்தாக வேண்டும் என ஸ்டாலின் தீர்மானித்து காய்களை நகர்த்துகிறார். தன் ஐந்தாண்டு காலப்பகுதியில் பெரிய குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லாத வகையில் ஆட்சியை நடத்தி, தி.மு.க. ஊழலற்ற ஆட்சியைத் தந்தது என்ற பெயரைப் பெற வேண்டும் என ஸ்டாலின் கருதுகிறார். நான் என் தந்தை கருணாநிதியைப் போல ஆட்சி செய்வேன் என்றும் கலைஞரின் ஆட்யைத் தருவேன் என்றும் ஸ்டாலின் மக்களிடம் சொல்லத்தொடங்கினால் தமிழக வாக்காளர்கள் இவர் தந்தையைப்போல ஊழல் மோசடி ஆட்சியைத்தான் தரப் போகிறாரோ என சந்தேகம் கொள்ளத் தொடங்கி விடுவார்கள் என்று ஸ்டாலின் அச்சப்பட்டிருக்கக் கூடும். ஜெயலலிதாவின் ஆட்சியைத் தருவோம் என்று எட்டிபாடியார் சொன்னாலும் அதன் பின்விளைவுகள் விபரீதமாகவே அமையும்.

இதனால்தான் தன் அலுவலகத்தில் கலைஞர், பெரியார் படங்களுக்கு நடுவில் அண்ணாவில் படத்தை மாட்டி வைத்துள்ளார். அண்ணா படத்தைத் தன் மேசையிலும் வைத்துள்ளார். அடிக்கடி அண்ணாவின் பெயரையும் உச்சரிக்கிறார். அண்ணா தன் குறுகிய கால ஆட்சியில் மதராஸ் என்ற பெயரை தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்தார். தமிழ்மொழி ஆய்வைத் தூண்டினார். குடிசைகளுக்கு பதிலாக கல்வீடுகளை அமைக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார். சுயமரியாதைத் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் தந்தார். தமிழை ஆட்சி மொழியாக்கினார். பகுத்தறிவு அமைப்புகள் சுதந்திரமாக செயல்பட இடமளித்தார். ஜோர்ஜ் கோட்டை தமிழக செயலகத்தின் முகப்பில் 'சத்தியமேவ ஜயதே' என்றிருந்த வாசகத்தை வாய்மையே வெல்லும் என மாற்றினார். கலப்பு திருமணத்துக்கு ஆதரவு அளித்தார். இரண்டாண்டுகளில் அவர் செய்தவற்றில் முக்கியமானவை இவையாகும்.

மு.க.ஸ்டாலினும் இவ்வாறு செயல்பட நினைக்கிறார். அவரது பதவியேற்பு வைபவத்தின்போது ஆளுனர் 'எம்.கே.ஸ்டாலின்' என ஆரம்பித்து வைக்க, கணீறென்ற குரலில் ஸ்டாலின், 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினான நான்' எனத் தமிழில் சொல்ல ஆரம்பிக்க, விருந்தினர்களாக வந்திருந்தோர் அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். கோட்டையில் மட்டும் அமர்ந்து ஆட்சிசெய்யாமல் பிரச்சினைகளை நேரிடையாக அவதானிக்கவும் செய்கிறார். பதவியேற்ற இரண்டே வாரத்தில் தமிழகத்தை ஒரு மாத காலத்துக்கு லொக்டவுன் செய்யும் துணிச்சல் அவருக்கு இருந்தது.

தற்போது அவர் முன்பாக இரண்டு சவால்கள உள்ளன.



ஒன்று நீட் தேர்வை இரத்துச் செய்வது. இரண்டாவது ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் உள்ள எழுவரை விடுதலை செய்வது. இரண்டுமே மத்திய அரசுடன் மோதிச் சாதிக்க வேண்டியவை. பா.ஜ.க. ஒரு பழைமைவாத இந்துத்துவக் காட்சி தி.மு.க அதற்கு மாறானது என்பதோடு காங்கிரசுடன் கூட்டு வைத்திருக்கும் கட்சியும் கூட.

நீட் தேர்வு என்பது மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி அளிப்பது தொடர்பான தெரிவுப் பரீட்சை. இந்தத் தேர்வில் போதுமான புள்ளிகள் பெற்றவர்களுக்கே மருத்துவம் படிக்கும் வாய்ப்பு வழங்கப்படும். தமிழகத்தில் தமிழில் கல்வி கற்கும் ஒரு சாதாரண கிராமத்து மாணவனால் ஆங்கிலத்தில் நடைபெ

அருள் சத்தியநாதன்...

றும் நீட் தேர்வில் கலந்து கொண்டு சித்திபெறுவது மிகமிகக் கடினமான ஒரு விஷயம். மேலும் தமிழ் நாட்டில் 69 சதவீத இட ஒதுக்கீடு அமுலில் உள்ளது. இந்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி மருத்துவம் படிக்க கிராம புறத்து மாணவர்களால் முடிந்தது. நீட் தேர்வு அறிமுகம் ஆன பின்னர் கிராமபுற மற்றும் பிற்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களால் நீட் தேர்வில் சித்திபெறுவது குதிரைகொம்பாகிவிட்டது. எனவே சமூக நீதியை மீறும் நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்பது தமிழக அரசின் நிலைப்பாடாகும்.

தமிழகத்தில் தி.மு.க ஆட்சிக்கு வந்ததும் நீட் தேர்வு இரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி ஒரு மசோதாவை இயற்றியது. அதை சட்ட சபையில் ஏகமனதாக நிறைவேற்றி தமிழக ஆளுநரிடம் அனுப்பி வைத்தது. அதை அவர் குடியரசு தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆனால் ஓராண்டுவரை வைத்திருந்த தமிழக ஆளுநர் அதை சட்டசபைக்கே திருப்பி அனுப்பி வைத்து விட்டார். இதையடுத்து மீண்டும் அதே மசோதாவை ஏகமனதக சபையில் கடந்தவாரம் நிறைவேற்றிய தமிழக அரசு அதை மீண்டும் தமிழக ஆளுநரிடம் அனுப்பி வைத்துள்ளது.

சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு பிரேரணையை ஆளுநருக்கு அனுப்பி வைத்து அதன் மீது அவர் நடவடிக்கை எடுக்காமல் சட்ட சபைக்கே திருப்பி அனுப்பினால் அதை மீளவும் சபையில் நிறைவேற்றி மீண்டும் ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்படுமானால் சட்டத்தின் பிரகாரம், அப் பிரேரணை மீது ஆளுநர் நிச்சயமாக நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும். ஆளுநர் அதை குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்தேயாக வேண்டும். நகராட்சித் தேர்தல் நடைபெறவிருக்கும் ஒரு சமயத்தில் தி.மு.வுக்கு இது சாதகமாகவே அமையும் என்பதுதான் கவனிக்கப்பட வேண்டியவிஷயம்.

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் நீட் விவகாரம் நிச்சயம் ஒரு முக்கிய தீர்மானிக்கும் அம்சமாக இருக்கப்போகிறது. தமிழகத்துக்கு நீட்டில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பது தான் தமிழகத்தின் கோரிக்கை. அதை செய்ய வேண்டியது மத்திய அரசு. மத்திய அரசான பா.ஜ.கவுக்கும் தி.மு.கவுக்கும் இடையே நல்லுறவு இல்லை. கொள்கை அளவிலும் முட்டல் மோதல்தான். எப்படி வட மாநிலங்களை நம்பியிருக்கும் பா.ஜ.க தன் மதவாத இந்துத்துவாவை கைவிட முடியாதோ அதேபோல தி.மு.கவினால் மத சார்பற்றதன்மையையும் கைவிட்டு விட முடியாது. எனவே, பிரேரணையை இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பி வைத்தால் மட்டும் நீட்டில் இருந்து விலக்கு கிடைத்துவிடும் என எதிர்பார்க்க முடியாது. நீட்டில் இருந்து விலக்கு என்பது ஒரு பெரிய விஷயம். ஆனால் அது தொடர்ந்து நீடித்திருக்கும் வரை தமிழக அரசியலில் தி.மு.கவுக்கு வாய்ப்பான காலமும் நீடித்து நிலைக்கும்.

இதேசமயம் ராஜீவ் கொலை வழக்கில் ஏழு பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையைம் தி.மு.க அரசு தனக்கு சாதகமாகவே கையாளும். ஏற்கனவே எழுவரில் சிலருக்கு பரோலில் வெளியே வர தமிழக அரசு அனுமதித்துள்ளது. எனினும் நீட் தேர்வைப் போலவே ஏழுபேர் விடுதலையும் சிரமமானது. காலம் எடுக்கக் கூடியது மற்றும் மத்திய அரசு முரண்டு பிடிக்கக் கூடிய விஷயங்களும் கூட. ஆனால் இவ்விரண்டு விஷயங்களையும் தி.மு.க தொடர்ச்சியாகக் கையாளும் போது அது தி.மு.கவுக்கு சாதகமாகவும் அ.தி.மு.க மற்றும் பா.ஜ.கவும் எதிராகவும் அமையும்.

# பெற்றோரின் மூட நம்பிக்கைக்கு பலியான சிறுவன்



நாம் இப்போது 21ம் நூற்றாண்டினை கடந்து சென்று கொண்டிருக்கின்றோம். உலகம் முன்னேற்றத்தின் பக்கம் வேகமாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. என்றாலும் இன்னமும் மூடநம்பிக்கைகளின் மீதான நம்பிக்கை குறைந்து போய்விடவில்லை.

கடந்த காலங்களில் மூடநம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சை முறைகள், சாந்தி கர்மம் மற்றும் ஆராதனைகளின் காரணமாக அனேக உயிர்கள் பலியாகியமை தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்துள்ளன. அவ்வாறான துன்பகரமான ஒரு நிகழ்வு படல்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆண்டிமுல்ல பிரதேசத்தில் கடந்த 9ம் திகதி இடம்பெற்றுள்ளது.

படல்கம பொலிஸ் பிரிவின் கட்டானை, ஆண்டிமுல்ல, 104/02 என்ற இலக்க வீட்டிலிருந்து ஏதோ துர்வாடை வீசுவதாக கடந்த 09ம் திகதி இரவு 7.15 மணியளவில் படல்கம பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி அழைப்பொன்று கிடைத்துள்ளது. அந்த அழைப்பு இனம் தெரியாத ஒருவரிடமிருந்தே கிடைத்திருந்துள்ளது.

அந்த தொலைபேசி அழைப்பு தொடர்பில் படல்கம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் குமார டி.சில்வாவுக்கு அறிவித்து விட்டு உடன் செயற்பட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பிரியந்த திசாநாயக்கா உள்ளிட்ட குழுவினர் குறித்த வீட்டுக்கு விரைந்து சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு வீட்டின் ஒரு அறையில் ஒரு சிறு பிள்ளை உடல் கருமை நிறமாகி வீங்கி உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரிகளுக்கு அச்சடலத்தைக் கண்டவுடன் அப்பிள்ளை இதற்கு சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளமை புரிந்து போனது.



அந்நேரம் வீட்டில் அச்சிறுவனின் தாய், தந்தை மற்றும் பாட்டி ஆகியோருடன் மற்றொரு நான்கு வயதுடைய சிறுமி ஒருவரும் இருந்துள்ளார். தமது பிள்ளை மரணித்து விட்டது என்பதை அறிந்து கொண்டும் கைகளில் பைபிளை வைத்துக் கொண்டு அவர்கள் ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளனர். இவ்வாறு எவ்வித சிகிச்சைக்கும் உட்படுத்தாமல் வீட்டிலேயே வைத்துக் கொள்ளப்பட்டிருந்த அந்த அப்பாவி சிறுவனை இனி காப்பாற்ற முடியாது என்ற நிலையில் 1990 இலக்க சுவசெரிய சேவையின் ஊடாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்வதற்கு ஆயத்தமானது சிறுவன் மரணித்து சில தினங்களுக்குப் பின்னராகும்.

இவ்வாறு உயிரிழந்து சில தினங்களாக வீட்டின் அறையில் கட்டிலின் மீது இருந்தது இவ்வருடம் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையை எழுதிய 10 வயதுடைய கச்சி ஆராச்சிகே தொன் மலீஷ துலக்ஷன என்ற சிறுவனாகும்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது, கடந்த நாட்களில் காய்ச்சல், இருமல் மற்றும் ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவன் 6ம் திகதி நோய் நிலை முற்றியதன் பின்னர் 7ம் திகதி அதிகாலை 4.20 மணியளவில் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. தொண்டையில் சளி இறுகிய நிலையில் சிறுவன் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் பெற்றோர்களால் எவ்வித வைத்திய சிகிச்சைகளும் மேற்கொள்ளாமல் பல நாட்களாக பைபிளுடன் சிறுவன் படுத்திருந்த கட்டிருக்கு அருகில் இருந்து கொண்டு வணக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். எனினும் அந்நேரம் தொண்டையில் சளி இறுகிக் கொண்டதனால் அச்சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இதனடிப்படையில் படல்கம பொலிஸாரால் சிறுவனின் மரணத்திற்காக சந்தேகத்தின் பேரில் சிறுவனின் தாயான 35 வயதுடைய இனஷியன் பெர்னாண்டோபுள்ளே துஷாங்க மதுவந்தி, தந்தையான தச்சு வேலை செய்யும் 45 வயதுடைய கச்சி ஆராச்சிகே சுமித் ஜானக மற்றும் பாட்டியான 64 வயதுடைய பத்மலாதன் மாலனி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். சில காலங்களாகவே உடம்பில் சீனியின் அளவு குறைந்த நோய்க்குள்ளாகியிருந்த சிறுவனான மலீஷ துலக்ஷன கொழும்பு சிறுவர் வைத்தியசாலையிலும் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருத்த சிறுவனாகும். எனினும் பின்னைய காலங்களில் மாராவில, லுணுவில பிரதேசத்தில் வசிக்கும் ஒரு பைபிள் அமைப்பின் பாஸ்டர் ஒருவரின் அறிவுரையின் பிரகாரமே சிறுவனை மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தாமல் பிராத்தனை வழிபாடுகளின் ஈடுபடுபட்டது சிறுவனின் பெற்றோர்களேயாகும் என்பதை அயலவர் ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அந்தச் சிறுவனுக்கு சில காலமாக உடம்பில் சீனியில் அளவு குறையும் நோய் இருந்தது. அச்சிறுவனின் வீட்டார் மாதா மாதம் சிறுவர் வைத்தியசாலையில் இடம்பெறும் மருத்துவ சிகிச்சைக்கும் அழைத்துச் சென்றார்கள். எனினும் கடைசியில் எங்கோ உள்ள ஒரிவர் கூறியதால் மருத்துவ சிகிச்சைக்குச் செல்வதை நிறுத்திவிட்டார்கள். அவர்கள் பிள்ளையின் நோயைச் சுகப்படுத்தி தருவதாகக் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் இந்தப் பிள்ளையின் பெற்றோர்களது மனதைக் குழப்பியதன் காரணத்தினால் பிள்ளைக்கு எவ்வித மருந்துகளும் சில காலங்களாகக் கொடுபடவில்லை. சுகமடையும் வரைக்கும் எனக் கூறி ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் அவர்களது பிராத்தனை வழிபாடுகளுக்கு பிள்ளையை அழைத்துச் செல்வார்கள். கடைசியில் பிள்ளைக்கு கடந்த திங்கட்கிழமை நல்லாவே வருத்தமாகிவிட்டது. எனினும் அவர்கள் கையில் பைபிளை வைத்துக் கொண்டு பிராத்தனையில் ஈடுபட்டவாறு பிள்ளையை வீட்டிலேயே வைத்திருந்திருக்கின்றார்கள்....."

இவ்வாறு கவனக் குறைவாக பெற்றோர்கள் நடந்து கொள்வதன் காரணமாகத் தமது பிள்ளைகளைப் பலிகொடுக்கக் கூடாது என இது தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்தூவவும் தெரிவித்தார். அத்துடன் தமது பிள்ளைகள் தொடர்பில் கவனயீனமாக நடந்து கொள்ளும் பெற்றோர்கள் விடயத்தில் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்த பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



அமில மலவிசூரிய...
தமிழில்: எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

# கவிதை மஞ்சரி

கிருஷா

## மௌனத்தில் மரித்த முதல் காதல்



வினாயகமூர்த்தி அபிவர்ணா
முல்லைத்தீவு

உன்னைப் பார்த்ததும்
மறந்தேன் எனையே

என்னை இழந்தேன்
தனிமையில் உழன்றேன்

கண்ணின் இமைபோல்
காத்தேன் உனையே!

காலம் முழுவதும்
காப்பேன் கனியே!

உன்னை துறந்து
எப்படி வாழ்வேன்

என் தவிப்புன்னுள்
ஏதும் புரிந்ததா?

இன்தமிழ் பெண்ணே!
எந்தனை நீயும்
விலக்கிடில்
மரிக்குமென் மௌனம் சருகென

## காதலின் தினம்

இணுவில் வாகீசன்

நினைவுகள் தரும் தினம்
நினைவுகளை மீட்கும் தினம்
நினைவுகளை தந்த தினம்
நினைவுகளுடன் வாழவைக்கும் தினம்

இரு இதயங்களை இணைத்த தினம்
இரு இதயங்களை இணைக்கும் தினம்
இரு மனம் ஓர் மனதாகும் தினம்
இரு மனம் மணநாள் காணும் தினம்

அன்பை புரிய வைக்கும் தினம்
அன்பை உணர்ந்து மகிழுறும் தினம்
அன்புடன் ஈருள்ளம் வாழும் நாள்
என்றும் அன்புடன் வாழவைக்கும் நாள்



## உனக்கான கவிதை!

என். கே.வேணி
பலாங்கொடை

பேரலைகள் வந்து
மோதிச் செல்லும்
கடற்கரை மணலில்
அமர்ந்து உனக்கான
கவிதை எழுதுகிறேன்

நீலவானில் பவனிவரும்
வெள்ளி நிலாவின்
வெளிச்சத்தில் அமர்ந்து
உனக்கான கவிதை
எழுதுகிறேன்

மேற்கு வானில்
கதிரவன் மறையும்
மாலை நேரம்
மஞ்சள் வெயிலில்
அமர்ந்து
உனக்கான கவிதை
எழுதுகிறேன்

ஆற்றாங்கரைதனிலே
ஓங்கி வளர்ந்திருக்கும்
மூங்கில் மரங்களின்
இசையசையில்
மெய்மறந்து
உனக்கான கவிதை
வரைகிறேன்

கூவெனக் கூவும்
குயில்களையும்
கத்தும் விட்டும்
மௌனமாய் அமர்ந்து
உனக்கான கவிதை
எழுதுகிறேன்

தேன் அருந்த மலர்களை
சுற்றி சுற்றி வந்து
கான ரீங்காரம்
இசைக்கும் பொன்
வண்டுகளை ரசித்துக்
கொண்டே உனக்கான
கவிதை எழுதுகிறேன்

மழைச்சாரலை மையாக
சேகரித்து என் பேனையில்
ஊற்றி உன்
நினைவில் மூழ்கி
ஈரமான காதல்
கவிதை புனைகிறேன்
உனக்காக

நம் புனிதக்காதல்
என்றுமே நினைவுச்
சின்னமாகவும்
அழியா ஆவணமாய்
உன்னிடம் இருக்க
என் காதலர தின
பரிசாய்
உனக்கான காதல்
கவிதை எழுதுகிறேன்
என் பேரன்பே

## துயரத்தில் நாம் துணையாக யார்??

வேம்படி ஐ. பிரபு
வடமராட்சி கிழக்கு

மீனவர் பிரச்சினை
மீளாத் துயரம்
நீராய் வடிகிறது நித்தம்
கண்ணீரும் செந்நீரும்

நாளும் பொழுதும்
நாம் படும் துயரை
ஆள்பவர் அறிவார்
தீர்வைத் தரார்

எல்லை தாண்டல்
இன்றல்ல நேற்றல்ல
அன்றில் இருந்து
ஆயுளைப் பறிப்பது
நித்தம் தொடர்கிறன

அரைசாண் வயிற்றை
நிரப்பிட அல்லலுற்று
ஆயுளைப் பிரியும்
நிலையாச்சு

உங்கள் கடலில்
நாம் வந்தோமா
எங்கள் கடலில்
ஏன் வருகை

தொப்புள் கொடி உறவென
நாம் நினைத்து

தப்புச் செய்தோமோ
தயக்கம் உள்ளது

உங்கள் வளத்தை
அழித்து
எங்கள் வளத்தை
சுறண்டிட
எங்கிருந்து வந்தது
துணிவு

அங்கம் அறுபட்டு
ஆவி பிரிந்து
அலைகடலில் மிதந்து
கரை ஒதுங்கும் உடலை
கூட்டி அள்ளிப்
புதைக்கிறோம்

ஒன்றை மட்டும்
புரிந்து கொள்க
பொறுமைக்கும்
எல்லை உண்டு
பொறுத்திட முடியா
வீர தீரம்
அணுவில் புதைந்துள்ளது
மறந்திடாதீர்

## நல்ல கனவு கண்டிடடா!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

கல்வி உன்னை உயரச் செய்யும்
கருத்துடனே கற்றிடடா
நல்ல சொல்லே உனை வளர்க்கும்
நல்லோர் ஆசி பெற்றிடடா

நாளை என்ற நாள் நினைத்து
நல்ல கனவு கண்டிடடா
நன்மை தன்னை விளையச் செய்ய
நற்கருமம் ஆற்றிடடா

மண்ணில் நிறைய செல்வமுண்டு
மண்ணைப் பொன்னாய் எண்ணிடடா
தின்ன நல்ல பயிர்வளர்த்து
திடத்தை உடலில் பேணிடடா

பதியவனில் பக்திக் கொள்ளு
பத்திரமாய்க் காக்குமடா
சதி செய்வோர் தோழமையை
சார்ந்திடாமல் வாழ்ந்திடடா!

## கைவிடவா கைப்பிடித்தேன்...

ஜெ. அப்சால் அஹமட்
நிந்தவூர்

கற்பனையில் சிறகடித்து
கவிபாடும் மனதிலே

தோளோடு தோள்சாய்ந்து
உள்ளத்தில் தாலாட்டி

புரிந்து வாழ்ந்திடும்
பிரியாத வார்த்தையோடு

பல்லாண்டு கனவையும்
பாசமாய் சேகரித்து

உறங்கிடும் நேரத்திலும்
உன்னையே காண்கிறேன்

காத்திருக்கையில் உன்மீது
காதல் கூடுதே

காலம் கடந்தாலும்
கண்களில் நீயே

உடலில் உதிரமாய்
என்னோடு கலந்தாய்

அன்பை அள்ளி
அன்பளிப்பாய் தந்தாய்

தவிக்கும் குழந்தையாய்
உன்னை பார்த்திட

உன் நினைவு
என்னை தாலாட்ட

விழியோடு விழி
ஒன்றாய் உறங்கிட

காற்றோடு பறக்கும்
சிறகுகள் தந்தாய்

கதை சொல்ல
கவி பாடினாய்

வலியின் மருந்தாய்
ஆறுதல் தந்தாய்

புரியாத புதிராய்
நீயே மாறினாய்

இத்தனை நாளாய்
காரணம் தேடினாய்

என்னை பிரிய
கேள்விகள் குவித்தாய்

வலியில் ஏங்கிட
கைவிடவா கைப்பிடித்தேன்



## வாழ்நாள் காதலர்

நிலவூர்ச் சித்திரவேல்
திருகோணமலை

ஓ! பிரியமானவளே,
என் அன்புக் காதலியே,
நீயின்றி நானில்லை
நானின்றி நீயில்லை
ஆழ்கடல் வற்றினாலும்
எம் அன்புக்கடல், ஐயகோ!
அதுவற்றவே கூடாது
உயர்வானம் வீழ்ந்தாலும்
அன்பே, எம் தொடர்பு
அறுந்துவிழக் கூடாது
ஆதலினால் என்னன்பே,
அத்தான் நானுன்னைக்
கெஞ்சிக் கேட்கின்றேன்
கல்யாணமாகிக்
கணவன் மனைவியெனும்
அந்தஸ்தில்நாம் மாறி;
மாமன் மாமியென்றும்
சம்பந்த பந்தமென்றும்
உறவுகளைச் சேர்த்திட்டு
நாளொரு சண்டையும்
பொழுதொரு சச்சரவாய்த்
தினமும் கண்கலங்கி
மனம் நொந்து மகிழ்விழந்து
திண்டாடும் நிலைவேண்டாம்
காலம் உள்ளளவும்
காதலராய் வாழ்ந்திடுவோம்
கல்யாணமே வேண்டாம்
கண்மணியே ப்ளீஸ்!

## கரிய காலம்

ஏரூர்க்கவி
எச்.எம்.எம்.றஸீம்

அகிலம் முழுதும்
அளவில்லா அநியாயங்கள்
குறைவில்லா வாழ்வுக்கு
அணிகலனென நிறைந்து
வம்புகள் தினம்
வகையாய் நடந்தேறிடவே
ஆடம்பர மோகம்
பம்பரச் சுழற்சியெனப்
பாராட்சி புரிந்து
கட்டாயக் கடமையென
நிலை கொண்ட தரிசனமாய்...
நீசத்தில் மனிதனை ஆட்டுதே

வஞ்சகமும் சிலிர்த்தெழுந்து
வாகையாய்ச் சூடிடவே
அதிகாரத் தலங்களில்
ஆணவச் சிந்தனைகள்
வரம்பு மீறி வந்திடவே
வழமைத் தொடரென
கருத்தறிந்து கழுத்தறித்திடும்
வீம்புத் தனங்கள்
விலையற்று விற்பனையாகுதே

போதையும்
பொருள் பண்டமென
போட்டி வியாபாரமாய்...
பொது இடங்களிலே
மலிந்திடவே
மற்றோரை மதித்து
குற்றமெனக் கருதி
கொடுத்திட்ட தான தர்மமே
ஈனமாய் மாறி
இனி இல்லையென்றாகுதே

தவறான உணவுகளால்
தீராத நோய்கள் மனிதனில்
தாராளமாய்த் தங்கிடவே
தீமைகள் தீச்சுடரென
ஓயாது பெருகிடவே
தாளாத துன்பங்கள்
தனியாட்சி புரிகின்றதே

ஆவேசப் புத்தியால்
அடிக்கொரு தற்கொலைகள்
அழிவு தரும் ஆட்கொல்லியின்
அட்டூழியங்கள்
மாயமென நடந்தேறும்
பரிதாபக் கொள்ளைகள்
வீறு கொண்டிடவே
இத்தனையும் இயல்பிற்கு
மாறாய் மண்ணில் நடந்திடவே
காரணம் யாதெனில்
இதுவொரு கரிய காலமே

## சற்று தாமதியுங்கள்

நிஸா இஸ்மாயில்

என்னோடு சண்டையிடுபவர்கள்
எனை திட்டி தீர்ப்பவர்கள்
என் மாமிசத்தை ருசிபார்த்து
தண்ணீர் குடிப்பவர்கள்

எல்லோரும் இங்கே
வரிசையில் வாருங்கள்

ஏன் இந்த கோபம் என்னோடு
அன்பின் நிமித்தமா
எதிர்பார்ப்பின் விளைவா
பாசத்தின் உச்சமா

எதற்காக

தலைகால் புரியாமல்
தலைதெறிக்க வாதிடும் நீங்கள்
சின்னச் சின்ன பலூன்களை
பெரிதாக்க நினைத்து ஊதி ஊதி
வெடிக்க வைப்பதுதான்
புரியவில்லை

என் அன்பை புரிந்தது நீங்கள்
இவ்வளவுதானா

உங்களின் பிரச்சினைதான் என்ன
வானை பிளக்க வேண்டுமா
கடல் வற்ற வேண்டுமா
நதிகள் நிற்க வேண்டுமா
வீசும் காற்று ஓய்வாக வேண்டுமா

நீங்கள் எகிறி குதிப்பதெல்லாம்
இதற்காகவென்றால்
சற்று தாமதியுங்கள்
அந்த வெள்ளிக்கிழமை
(உலகழியும்நாள்) வரும்வரை

ஓ...உறவுகளே
புரிந்து கொண்டேன்
உங்களிடம் இருப்பதெல்லாம்
உண்மையான அன்பென்று
எதிர்பார்ப்பின் விளைவென்று
பாசத்தின் உச்சமென்று

இறுதியாகச் சொல்லுங்கள்
நீங்கள் திருந்தப்போகிறீர்களா
நான் மாறவா

## பிரம்மாண்டமான இப்பொழுது

ரதிதேவி, மானிப்பாய்

உளறாதே உளறாதே
உயிர் மொழியில்
புசத்தாதே

இதுதான் தெய்வீக மிச்சமா
உயிர்கொண்ட பொழுதின் அர்த்தமா
கண்கள் மூட மறுக்குது
அட துயில் என்ன
மரணமும் அஞ்சுது
இன்பம் துன்பம் பறக்குது
அடி புதிதாய் ஓர் உணர்ச்சி முளைக்குது

நிலவொளியில் நீர்காய
விட்டு வைத்த
பட்டுச் சேலை
அது போலே
ஒரு குளிர் காலை
பூக்கள் மிளிர்ந்திடும்
தனிச்சாலை
அதில் உன்னுடன் போகணும்
பொடி நடை



# உபாலி விஜேவர்தனவின் 39வது நினைவு தினம்



"எனது மறைந்த மாமா உபாலியின் கையொப்பம் அவரது வேகத்தின் மீதான காதலை பறைசாற்றும். அந்த வேகத்துடன்தான் தனது வணிக சாம்ராஜ்யத்தை அவர் விரிவுபடுத்தினார்.

அவர் ஒரு லியர் ஜெட் வாங்கினார் அதன் பின்னர் GCEC இன் தலைவரானார். அவர் வேகமாக முடிவெடுப்பவர். குதிரை மற்றும் கார் பந்தயத்தின் மீதான அவரது காதல் உட்பட அவரது மற்ற விருப்பங்களும் இதைப் பிரதிபலித்தன'' "என்று மருமகன் தம்மிக்க ஆட்டிகல நினைவு கூர்ந்தார், அவர் தனது மாமா காணாமல் போகும் போது அவருக்கு 18 வயது., இப்போது உபாலி குழும நிறுவனங்களின் இயக்குநராக இருக்கிறார்



ஸ்ரீலங்கா டர்ஃப் கிளப்பின் ஸ்டெவர்ட்ஸ் சபையின் தலைவராக இருந்போது ஹெலிகொப்டரில் நுவரெலியாவுக்குச் செல்வார்,. ரோயல் டோர்பியில் வெற்றி பெற்று, இந்த மிகவும் மதிப்புமிக்க குதிரைப் பந்தயத்தில் வெற்றி பெற்ற முதல் ஆசியராக வேண்டும் என்பதே எனது மறைந்த மாமாவின் கனவு. அவர் மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்த சொகுசு SClass Mercedes Benz 116 ஐ பயன்படுத்தினார். இலங்கையில் இதுவே முதலாவது காராகும் இரவு உணவிற்குப் பிறகு நுவரெலியா அல்லது கம்புருப்பிட்டிக்கு பயணம் செய்து நேரத்தை மிச்சப்படுத்தவும், இலக்கை விரைவாக அடையவும் அவர் அதனைப் பயன்படுத்தினார்.

எனது மறைந்த மாமா தனது தாய்வழி ஊரான கம்புருப்பிட்டியை அபிவிருத்தி செய்வதற்கும் தேசிய அரசியலில் ஈடுபடுவதற்கும் "ருஹுனு உதனய" இயக்கத்தை ஆரம்பித்து, தனது உடன் பிறந்த சகோதரரான ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்தனவின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் இலங்கையின் ஜனாதிபதியாக ஆவார் என எதிர்பார்த்தோம் என்று கூறினார்.

தம்மிக்க ஆட்டிகல...

## 13க்குள் எமது உரிமையை...

(02ஆம் பக்கத் தொடர்)

**கேள்வி: தந்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்திடம் இருந்து சமஷ்டியைப் பெற முடியும் என நினைக்கின்றீர்களா?**

பதில்: இருக்கிறதை வைத்துக்கொண்டு சமஷ்டிக்காக போராடலாம். உடனடியாக நிறைவேறாவிட்டாலும், பின்னர் நிறைவேறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கலாம். உடனடியாக அதற்கான வாய்ப்பு இல்லை.

**கேள்வி: இந்த காலகட்டத்தில் 13வது திருத்தம் தொடர்பான இந்த சர்ச்சைகளால், அரசாங்கம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் கரிசனை கொள்ளும் என நினைக்கின்றீர்களா?**

பதில்: அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இணையவில்லை. அவர்கள் சில விடயங்களைக் கையாள்வார்கள். சர்வதேச ரீதியாக கையாள்வார்கள். இந்திய உயர்ஸ்தானிகரை நாங்கள் சந்தித்த போது, 46/1 தீர்மானத்தின் அடிப்படையில் எதுவுமே அவர்கள் செய்யவில்லை. பங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவில்லை என கூறியிருந்தோம். ஆனால், அரசாங்கம் தற்போதுள்ள கடுமையான போக்கில் இருந்து நடுநிலையான போக்கிற்கு வரலாம். சமஷ்டி என்பதை இந்த அரசாங்கம் தராது. நாங்கள் தன்னாட்சி சம்பந்தமான தீர்மானத்தை எடுக்க முடியும். சுயநிர்ணய உரிமையைப் பற்றி 1944 ஆம் ஆண்டே பேசிவிட்டோம். இருக்கிறதை வேண்டாம் என்று சொல்வதைப் போன்ற முட்டாள் தனம் ஒன்றுமில்லை. நீங்கள் ஒரு தளத்தில் இருந்து கொண்டு சமஷ்டி தான் தேவை.இணைப்பாட்சி தான் வேண்டும் என்று கேட்பதில் தப்பில்லை. இருப்பதையும் நாங்கள் செய்யவில்லை என்பதைக் கூட யாரும் கணிக்கவில்லை. அதிகாரம் எங்களிடம் இருக்கு தானே. கடைசி ஒரு தடைக்கல்லாக கூட நாங்கள் இருந்திருக்கலாம்.

**கேள்வி: ஜெனிவா தீர்மானங்கள் அமர்வுகள் என தமிழ் தரப்புக்கள் பேசுகின்றார்கள். ஜெனிவா அமர்விற்குள் அரசியலமைப்பு வெளிவரும் என நம்புகின்றீர்களா?**

பதில்: மார்ச் மாதத்திற்குள் புதிய அரசியலமைப்பு வர வாய்ப்பு இல்லை. நாங்கள் தான் ஜெனிவா தீர்மானம் அது இது என்று கனவில் வாழ்கின்றோம். அரசாங்கம் அதில் அக்கறை கொள்ளவில்லை. அது தான் உண்மை என்றார்.

## ஐரோப்பிய அரசுகளின்...

(12ஆம் பக்கத் தொடர்)

அமெரிக்கா ரஷ்யாவுடனான பகைமையை முன்னிலைப்படுத்திக் கொண்டு போரை தூண்ட முயன்றதையும் அதில் பிரான்ஸ் ஈடுபட்டதன் பின்பு நிலமை மாறியதையும் அவதானிக்க முடிகிறது. அதாவது அமெரிக்கா பிரிட்டன் என்பன ரஷ்யாவுக்கும் விளாடிமிர் புடினுக்கும் எதிராக நகர்வுகளையே முதன்மைப்படுத்தியிருந்தன. ஆனால் மக்ரோன் ரஷ்ய ஜனாதிபதியுடனான சந்திப்பை தந்திரோபாயமாக நகர்த்தியமை போர் பதற்றத்தை மாற்றியமைத்தது. இதன் மூலம் ஐரோப்பிய நாடுகளுக்கு போர் ஒன்று வெடிக்குமாக இருந்தால் நேரடியான பாதிப்புகள் ஏற்படத்தக் கூடியதாகும். குறிப்பாக ஐரோப்பாவுக்கான சக்திவளம் சார்ந்த நெருக்கடி முதன்மையானதாகும். அடுத்து அகதிகளின் வருகை பாரிய நெருக்கடியை மேற்கு ஐரோப்பாவுக்கு ஏற்படுத்தும். ஏற்கனவே ஆசியாவுக்குள் ஏற்பட்ட போர்களால் மேற்கு ஐரோப்பா பாரிய நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது.

எனவே அமெரிக்கா விரும்பிய வகையில் போரை நிகழ்த்த விடாது பிரான்ஸூம் ஜேர்மனியும் நகர்ந்துள்ளன. அதனால் போர் பதற்றம் முடிபுக்கு வந்துவிட்டதெனக் கூறிவிட முடியாது. தற்போது இரு தரப்பும் போரை இறுதித் தெரிவாகக் கொண்டுள்ளன. ஆனால் ஐரோப்பிய அரசுகளது நகர்வுகள் அமெரிக்காவின் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தனது விருப்புக்கு அமைய ஐரோப்பாவை கையாள முடியாத நிலை ஒன்று ஐரோப்பாவுக்குள் ஏற்பட்டுள்ளது. ஆனால் ரஷ்யாவின் இலக்கோ உக்ரையின் இலக்கோ அடையப்படவில்லை. மாறாக போரப் பதற்றம் ஒரளவு குறைந்துள்ளது. இராஜீக முயற்சிகள் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு. காரணம் இரு தரப்புக்கும் போர் தவிர்க்கப்பட வேண்டும் எனக் கருதுகின்றன. உக்ரையின் ரஷ்யா மட்டுமல்ல நேட்டோவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் போரை தவிர்க்கவே விரும்புகின்றன. ஆனாலும் போர் என்றும் முடிவுக்கு வரவில்லை.

## மூடப்பட்ட பொருளாதாரத்தை...

(12ஆம் பக்கத் தொடர்)

உற்பத்தி பாதிப்படைய வருமான மூலாதாரங்கள் பாதிக்கப்படும். அதனால் மக்களின் கொள்வனவு செய்யும் ஆற்றலும் சேமிக்கும் ஆற்றலும் கடுமையாக வீழ்ச்சியடையும். இது தொடர்ச்சியாக நடைபெறும் பட்சத்தில் பொருளாதாரச் சுருக்கமடைந்து மந்த நிலையை நோக்கி நகரும். உற்பத்திக்குத் தேவையான நிரம்பல் பக்க உந்துதல்களை வழங்குவதன் ஊடாகவே இந்நிலையில் மாற்றத்தைக் கொண்டுவர இயலும். கடன்களைப் பெற்று நாடு எதிர் நோக்கும் அந்நியச் செலாவணிப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதனால் மட்டும் இப்பிரச்சினையிலிருந்து மீள முடியாது.

அந்நியச் செலாவணிப் பிரச்சினைக்கு தீர்வு என்பது பாதிக்கப்பட்ட ஒரு நோயாளிக்கு சேலைன் வழங்குவது போன்ற ஒன்றாகும். அதன் மூலம் ஏற்பட்ட நோய்க்கு தற்காலிக நிவாரணம் மட்டுமே கிடைக்கும். நோய்க் காரணியைக்கண்டறிந்து சிகிச்சை வழங்க வேண்டியது மிக முக்கியம். எனவே இலங்கைப் பொருளாதாரத்தில் மிகப் பெரிய பொருளாதாரச் சீராக்கம் ஒன்றைச் செய்ய வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும். தலைவலிக்கு மாத்திரை விழுங்குவது போல அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுந்தமானமாக தீர்மானங்களை (ad hoc decisions) மேற்கொண்டு அப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினையை சமாளிப்பதையே கடந்த காலத்தில் அரசாங்கங்கள் தொடர்ச்சியாகத் தமது அரசியல் உபாயமாகக் கடைப்பிடித்து வந்துள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி நிலைப்படுத்த அவசியமான நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவல்ல பொருளாதார சீராக்கங்களை இதுவரையில் இலங்கை மேற்கொள்ளவில்லை என்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. சாதாரண நிலைமைகளில் பொதுமக்களின் எதிர்வினைகளை அதிகம் சந்திக்கவல்ல மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான பொருளாதார கொள்கைச் சீர்திருத்தங்களை அரசாங்கத்தினால் நாடு இப்போதுள்ள நிலையில் மேற்கொள்ள முடியும். ஆனால் அக்கொள்கைச் சீர்திருத்தங்கள் நாட்டை ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தை நோக்கி நகர்த்துவதாக இருந்தால் இந்நாடு நீண்டகாலப் பொருளாதாரப் பின்னடைவைச் சந்திக்கும் என்பதையும் பதிவு செய்ய வேண்டியுள்ளது.

இதுவரை நாடு சர்வதேச நாணய நிதியத்திடம் எவ்வித உதவியையும் கோரவில்லை என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே நாட்டில் இப்போது பின்பற்றப்பட்டுவரும் கொள்கைகளே தொடந்தும் செயற்படுத்தப்படும் என்பது தெரிகிறது. எனவே நாட்டின் பொருளாதார மீட்சிக்கு வெகு நீண்டகாலம் எடுக்கலாம்.

## காயங்களை குணப்படுத்தி முன்னேறி...

(03ஆம் பக்கத் தொடர்)

கருத்துச் சுதந்திரத்தை யாரும் தடை செய்ய விரும்பவில்லை. ஆனால் உலகின் பிற பகுதிகளில், அத்தியாவசிய சேவைத் துறையில் திடீர் மற்றும் தற்காலிக வேலைநிறுத்த நடவடிக்கைக்கு கட்டுப்பாடுகள் உள்ளன. இது அரசாங்கத்தைப் பற்றியது அல்ல, பொதுமக்களைப் பற்றியதாகும். இதனால் மக்கள் மக்கள் அவதிப்படுகின்றனர். பொதுப் போக்குவரத்து, மின்சாரம், நீர், ஆற்றல் மற்றும் துறைமுகம் ஆகியவை பொருளாதாரத்தின் நரம்பு மையங்கள். எந்தவித அறிவிப்பும் இன்றி திடீரென வேலைநிறுத்தம் செய்வதால் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்.

பல நாடுகளில் அதற்கான பாதுகாப்பு பல்வேறு நிலைகளில் உள்ளது. சில நாடுகள் வேலைநிறுத்தங்களை முற்றிலுமாக தடை செய்கின்றன. மற்ற நாடுகளில், தொழிலாளர் நடவடிக்கைக்கு முன்னர் முழு உறுப்பினர்களும் ஆலோசிக்கப்பட வேண்டும் மற்றும் பெரும்பான்மையானவர்கள் அதற்கு வாக்களிக்க வேண்டும். பின்னர் தொழிற்சங்கம் 14 நாட்களுக்குள் அறிவிப்பை வழங்க வேண்டும். அதனால் அதை வரிசைப்படுத்த அரசுக்கு அவகாசம் உள்ளது. அத்தியாவசிய சேவை வேலைநிறுத்தங்களுக்குச் செல்வதற்கு முன் சில நாடுகளில் சிறப்பு நீதிமன்றம் உள்ளது.

அது அனுமதிக்கப்பட வேண்டுமா என்பதைக் கண்டறிய அவர்கள் மதிப்பீடு செய்வார்கள். மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கும் தொழிலாளர்களின் உரிமைக்கும் இடையே ஒருவித சமநிலை இருக்க வேண்டும். நியாயமற்ற வேலை நிறுத்தங்களைக் கண்டதும் எனது கருத்தைக் கூறியிருந்தேன். அண்மையில் குருநாகல் வீதியில் வைத்தியர் ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதற்காக மருத்துவமனை முழுவதும் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. சில வாரங்களுக்கு முன்னர், கொழும்பில் இருந்து பதுளைக்கு சுமார் 300 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற ரயில், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி திடீரென வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்தது. சுற்றுலா பயணிகளை கொழும்பில் இருந்து பஸ்கள் மூலம் பதுளைக்கு அனுப்ப வேண்டியிருந்தது.

சுற்றுலாப் பயணிகள் எங்கள் நாட்டிற்கு திரும்பி வர மாட்டார்கள் என்று கூறினர். எனவே, இது நமது பொருளாதாரத்தையும், நாடு தொடர்பான பிம்பத்தையும் பாதிக்கும். தொழிலாளர்களின் நியாயமான குறைகள் கவனிக்கப்பட வேண்டியிருந்தாலும், அவை பொதுமக்களைப் பாதிக்கும் வகையில் இருப்பதற்கு அனுமதிக்க முடியாது. எனவே, மற்ற நாடுகளைப் போலவே, இந்தச் சட்டங்களும் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

நம் நாட்டில் உள்ள சவால்கள் மற்றும் பொருளாதார தடைகளை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். தொழிற்சங்கங்கள், அரசு, அரசு ஊழியர்கள் மற்றும் அனைவரும் எங்கள் மீட்புக்கு ஒத்துழைக்க வேண்டும்.


## வேலை வாய்ப்பு

සතොස

லங்கா சதொச லிமிடட் நாடு முழுவதும் உள்ள தனது சில்லறை வர்த்தக சங்கிலி, அமைப்பை வழிநடத்த விறுவிறுப்பான நபர்களை தேடுகிறது. லங்கா சதொச அரசுக்கு சொந்தமான மிகப்பெரிய சில்லறை வர்த்தக சங்கிலி என்பதோடு 2022/23 இல் நவீனமயத்துடன் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்க எதிர்பார்க்கிறது.

### பிரதி பொது முகாமையாளர்

#### கொள்முதல்

தகைமைகள்
வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல், வியாபார முகாமைத்துவம் அல்லது வர்த்தகம் ஆகியவற்றில் பெற்ற முதனிலை பட்டதாரிப் பட்டமொன்று.
   அத்துடன்
   உரித்தான துறையில் பட்டப்பின் தகைமைப் பட்டம் (முதுமானி) அல்லது பதவிக்கு உரித்தான விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் முழுமையான/ இணைந்த அங்கத்துவம்.
   மற்றும்
   கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்டசபையொன்றில்/ நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார்துறை நிறுவனமொன்றில் ''நிருவாக மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்தில் 5 வருடங்கள் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய பணி அனுபவத்துடன் சிரேஷ்ட நிருவாக மட்டத்தில் இருத்தல் வேண்டும்.
2. பதவியின் விடயப்பரப்பிற்கு உரித்தான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் முழுமையான அங்கத்துவம்.
   மற்றும்
   ''நிருவாக மட்டத்தில்'' ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்தில் 5 வருட அனுபவம் கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்டசபையில்/ நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய பணி அனுபவத்துடன் சிரேஷ்ட நிருவாக மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

#### தகவல் தொழில்நுட்பம்

தகைமைகள்
வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட IT/ கணினி விஞ்ஞானம்/ முதன்மை கணினி விஞ்ஞானத்துடன் 3 ஆண்டு பட்டம்/ MIS/ ஒப்படையுடன் பிரிட்டிஷ் கணினி சங்கத்தில் முழுமையான தகைமை ஆகிய துறை ஒன்றில் இளமாணிப் பட்டம்.
   அத்துடன்
   சார்ந்த துறையில் பட்டப்பின்படிப்பு பட்ட தகைமை (முதுமாணி) மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம்
   அல்லது
   புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட களப்பதிவு ஒன்றுடன் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் 15 ஆண்டுகள் அனுபவம். அதில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. பதவி சார்ந்த துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் (IT துறை அல்லது BCS இல் IESL) ஒன்றில் சக அங்கத்துவம்.
   மற்றும்
   கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றல் நிரூபிக்கப்பட்ட களப்பதிவு ஒன்றுடன் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் 15 ண்டுகள் அனுபவம். அதில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:**

45 வயதுக்கு குறையாதவராகவும் 60 வயது மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:**

அடிப்படைச் சம்பளம் ரூபா 150,000 (செயல்திறன் கொடுப்பனவு ரூபா 75,000/= + போக்குவரத்து கொடுப்பனவு ரூபா 50,000/= + மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு : ரூபா 15,000/= + அரசாங்க சுற்றறிக்கைகளின்படி பதவிக்கு பொருந்தும் தகவல் தொடர்பாடல் கொடுப்பனவு )

**நியமனத்தின் பண்பு:**

**EPF** மற்றும் **ETF** இற்கு உரித்தான ஒப்பந்த நியமனம்

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்:**

- மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் தரவை விளக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்க்கும் பண்பு மற்றும் ஏற்பா ட்டுத் திறன்களை பெற்றவராகவும் சிறந்த சுய ஊக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ தகைமைகள், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த IT திறன்களை வெளிப்படுத்த முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத்துவம் செய்த அனுபவம்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்,**

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டில் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவிக்கான பணிகளை மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையைகொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

நீங்கள் சரியான தகைமைகள் மற்றும் அனுபவத்தை பெற்றவராக இருந்தால், சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது சுய விபரக்கோவையை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது **vacancies@lankasathosa.org** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, இந்த விளம்பரம் வெளியான 14 நாட்களுக்குள் அனுப்பவும்: (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்/ மின்னஞ்சலின் "**Subject**" பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்)

**(தேர்வு செய்யப்பட்ட அபேட்சர்களுடன் மாத்திரமே நிறுவனம் தொடர்புகொள்ளும்)**

வர்த்தக அமைச்சு

தலைவர்
லங்கா சதொச லிமிடட், இல. 27, CWE செயலகக் கட்டிடம்,
வொக்சோல் வீதி, கொழும்பு 02.

සතොස

# பெறுகை அறிவித்தல்

ஔடத உற்பத்திகள், வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு

SPMC

## இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

## களுத்துறை மாவட்டம், புலத்சிங்களவில் அமைந்துள்ள நான்கு மாடி கட்டிடம் ஒன்றின் விற்பனை அல்லது குத்தகைக்கான கேள்விமனு

**விலைமனு குறிப்பு: SPMC/S/L/2022 2022 மார்ச் 08 ஆம் திகதி மு.ப. 10.00க்கு மூடப்படும்**

1. மேலுள்ள ஆதனத்தை விற்பது அல்லது குத்தகைக்கு விடுவதற்காக 2022 மார்ச் 08 ஆம் திகதி மு.ப. 10.00 வரை இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை என்ற முகவரியில் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபன, பெறுகைக் குழு – தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. காணி மற்றும் கட்டிடத்தின் விபரங்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| **காணி** | 36.30 பேர்ச்சஸ் |
| **கட்டிடம்** | ஒவ்வொன்றும் தோராயமாக 3,800 சதுர அடியைக் கொண்ட நான்கு மாடிக் கட்டிடம். மொத்த பகுதி தோராயமாக 15,000 சதுர அடி |
| **வாகன தரிப்பிட பகுதி** | 15 கார்களுக்கான இடம் |
| **இடம்** | புலத்சிங்கள நகரில் இருந்து 4 கி.மீ. மற்றும் ஹொரண நகரில் இருந்து 18 கி.மீ. தூரத்தில் ஹொரண – புலத்சிங்கள பிரதான வீதிக்கு முகப்பாக எகலோய ஹல்வத்துர வீதியில் அமைந்துள்ளது. |

3. இந்த ஆதனம் மருத்துவமனை, சிகிச்சை நிலையம், மருத்துவ ஆய்வுகூடம், வங்கி, பல்பொருள் அங்காடி, பயிற்சி நிலையம் போன்றவற்றுக்கு பொருத்தமானது.
4. புலத்சிங்கள, எகலோயவில் அமைந்துள்ள (முன்னர் திகசிறி மருத்துவ நிலையமாக அறியப்பட்டது) கட்டிடத்தை 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி மு.ப. 10.00க்கு பார்வையிட ஆர்வமுடைய விலைமனுதாரர்களுக்கு அனுமதிக்கப்படும்.
5. விலைமனு மூடப்படும் திகதிக்கு அப்பால் 90 நாட்களுக்கு செல்லுபடியான இலங்கையில் புகழ்பெற்ற வர்த்தக வங்கி மூலம் பெறுகைக் குழு தலைவரின் பெயருக்கு வங்கி உத்தரவாதம் ஒன்றாக 500,000.00 ரூபா அல்லது ரொக்கப்பண வைப்பு ஒன்றாக 250,000.00 ரூபா பெறுமதியான விலைமனு பிணையை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. அசல் மற்றும் நகலைக் கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவை 2022 மார்ச் 08 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், பெறுகைக் குழு, அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் தரைத் தளத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பு பெட்டியில் இடலாம்.
7. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''புலத்சிங்களவில் அமைந்துள்ள நான்கு மாடி கட்டிடம் ஒன்றின் விற்பனை அல்லது குத்தகைக்கு விடுதல்'', குறிப்பு: SPMC/S/L/2022 மற்றும் 2022 மார்ச் 08 ஆம் திகதி மு.ப. 10.00க்கு மூடப்படும் என்று குறிப்பிடுதல் வேண்டும்.
8. இரத்மலானை SPMC இல் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும் என்பதோடு விலைமனுக்கள் திறக்கப்படும்போது விலைமனுதாரர் அல்லது அவர்தம் பிரதிநிதிகளுக்கு பங்கேற்க அனுமதிக்கப்படும்.
9. முழுமை பெறாத மற்றும் தாமதித்து சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. எந்த ஒரு விலைமனுவையும் ஏற்பது அல்லது நிராகரிப்பதற்கு பெறுகைக் குழு உரிமை பெற்றுள்ளது.
11. 2623246, 2635353 மற்றும் 2636966 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பொறியியல் - பிரதிப் பொது முகாமையாளரிடம் இருந்து எந்த ஒரு தெளிவையும் பெறலாம்.

**பெறுகைக் குழுவின் தலைவர்**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட்,**
**இரத்மலானை, இலங்கை.**
**தொலைநகல்: (00)94-11-2626621**
**தொலைபேசி: (00)94-11-2623246/ (00) 94-11-2637574/ (00) 94-11-2623298**
**இணையதளம்: www.spmclanka.lk, மின்னஞ்சல்: spmclanka@sltnet.lk**

it's what you want
www.adz.lk
Hotline: 0112 429 369 | Email: adzsup@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

# ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு

## இந்திய தூதுவராலயம், கொழும்பு

இந்திய வீடமைப்பு செயற்றிட்டத்தின் கீழ் இலங்கையின் பெருந்தோட்ட பிரதேசங்களில் 10,000 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக உசாத்துணையாளராக செயற்படுவதற்காக தகுதியுடைய பங்குபெறுநர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடானது கோரப்படுகின்றது.

2022 பெப்ரவரி 14 ஆம் திகதியிலிருந்து எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் (இலங்கை), கொழும்பு-03, காலி வீதி, 36-38 ஆம் இலக்கங்களிலுள்ள இந்திய தூதுவராலய அபிவிருத்தி ஒத்துழைப்பு அலகிலிருந்து ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்கள் கையேற்றப்படலாம். (தொடர்பெண்கள்: 0777906494/0764861875 அல்லது 011-2472684 நீடிப்பு 631/635). இந்த ஆவணங்கள் தூதுவராலயத்தின் **www.hcicolombo.gov.in** என்ற இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்வதற்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

விதிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களுடனான ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2022 பெப்ரவரி 28 ஆகும்.

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

# விலைமனுக்கோரல்

**இரத்மலானை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்காக ஆண்களுக்கான விருதிக்கட்டிடத் தொகுதிக்கான திட்டமிடப்பட்ட வடிவமைப்பு மற்றும் உருவாக்க கட்டமைப்பு பணிகள்**

**ஒப்பந்த இலக்கம் : MOD/KDU/04/2021**

01. பாதுகாப்பு அமைச்சு, அமைச்சின் வழங்கல் குழுவின் தலைவரினால், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை, இலங்கையின் துணை வேந்தர் சார்பாக தகுதியான மற்றும் தகைமைகளைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து (இலங்கையைச் சேர்ந்தவர்களிடமிருந்து மட்டுமே) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களுக்காக முத்திரையிடப்பட்ட மனுக்களை கோருகின்றது. மனுக்கோரல் செயல்முறை தேசிய போட்டி மனுக்கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

02. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மீளச்செலுத்தப்படாத ரூபா 50,000 கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை **14.02.2022 ஆம் திகதி தொடக்கம் 15.03.2022 ஆம் திகதி வரை** காரியாலய வேலை நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை **தலைமை நிதி அதிகாரி (I) காரியாலயம், 2ஆவது மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை** இல் கையளிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணத்தை பணம் மூலம் செலுத்த வேண்டும்.

03. தகுதியான மனுதாரர்கள் பின்வரும் முக்கிய தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

அ. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் ICTAD (CIDA) பதிவுகள் பின்வருமாறு.

| நிபுணத்துவம் | தரம் |
|---|---|
| கட்டிட கட்டுமானம் | C1 அல்லது C2 |
| அத்திவாரம் வடிவமைப்பு (தொடர்புடையதாக இருந்தால் மட்டுமே) | GP-B3 அல்லது மேல் |
| கட்டிட சேவைகள் (மின், MVAC, தீ பாதுகாப்பு மற்றும் கண்டறிதல் அமைப்புகள், ICT அமைப்புகள் போன்றவை) | மின் அமைப்புகளில் EM 3 அல்லது அதற்கு மேல் மற்றும் மற்றையவையில் EM 4 அல்லது அதற்கு மேல் |

ஆ. கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளின் சராசரி ஆண்டு அளவு குறைந்தபட்சம் ரூபா.460 மில்லியனாக அல்லது அதற்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.

இ. திரவ சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச அளவு, மற்ற ஒப்பந்தக் கடமைகளின் நிகர மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் செய்யக்கூடிய எந்தவொரு முன்கூட்டிய கொடுப்பனவுகளும் பிரத்தியேகமானவையாகவும் ரூபா.100 மில்லியனுக்கும் குறையாதவாறு இருத்தல் வேண்டும்.

ஈ. கடந்த பத்து ஆண்டுகளில் மனுதாரர் கட்டிட வடிவமைப்பு மற்றும் கட்டிட கட்டுமானங்கள், கட்டிட சேவைகளின் வடிவமைப்பு மற்றும் மின் நிறுவலுக்கான கட்டுமானம், தீ கண்டறிதல் மற்றும் பாதுகாப்பு, ICT வலையமைப்புக்கள் மற்றும் குழாய் மற்றும் வடிகால் பணிகள் போன்ற செயற்பாட்டு திட்டங்களில் குறைந்தது ஒரு திட்டத்தையாவது ஒவ்வொரு செயற்பாடுகளில் முழுமையாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

உ. மனுதாரர்கள் கறுப்புப்பட்டியலில் இடம்பெற்றிருக்கக்கூடாது.

04. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக விபரங்களை பணிப்பாளர் (காரியாலய வழங்கல்), ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (தொலைபேசி- 071-0219384, 011-2632430, பெக்ஸ்- 011-2632430 மற்றும் மின்னஞ்சல் (directorlogistics@ kdu.ac.lk) மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

05. மனு ஆவணங்களை எவ்வித கட்டணச் செலுத்தலையும் இன்றி 14.02.2022 ஆம் திகதி தொடக்கம் 15.03.2022 ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை பரீட்சித்துக்கொள்ளலாம். (தொலைபேசி- 011-2390719,, பெக்ஸ்- 011-2390720 மற்றும் மின்னஞ்சல் - procurement@defence.lk

06. மனு தொடர்பான கூட்டம் 28.02.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை, இலங்கை காரியாலயத்தில் இடம்பெறுவதுடன், அதே தினத்தில் வேலைத்தள பரீட்சிப்பும் இடம்பெறும்.

07. மனுக்கள் 16.03.2022 ஆம் திகதி தொடக்கம் 13.07.2022 ஆம் திகதி வரை செல்லுபடியாகும். (மனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியிலிருந்து 119 நாட்கள்)

08. அனைத்து மனுக்களும் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியால் வழங்கப்பட்ட ரூபாய் மூன்று மில்லியன் (3,300,000.00) பெறுமதியான மனுக்காப்புறுதியுடன் மனு ஆவணத்தில் வழங்கப்பட்ட படிவத்தின் படி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மனுக்காப்புறுதி பிணைகள் 16.03.2022 ஆம் திகதி தொடக்கம் 10.08.2022 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். (மனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 147 நாட்களுக்கு) மனுக்காப்புறுதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு தலைப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

09. முத்திரையிடப்பட்ட மனுக்களின் முதற்பிரதி மற்றும் நகல்பிரதி ஐ தலைமை நிதி அதிகாரி (I) காரியாலயம், 2ஆவது மாடி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை எனும் விலாசத்திற்கு கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

| தபாலுறை | தேவைகள் |
|---|---|
| தபாலுறை 1 மற்றும் 03 | ஒரு அசல் மற்றும் இரண்டு நகல்கள் |
| தபாலுறை 2 | ஒரு அசல் மற்றும் இரண்டு நகல்கள் (இரண்டும் மின்னணு மற்றும் கடின நகல்களாக, அனைத்து வர்ண கட்டடக்கலை வரைபடங்களுடன்)* |

* சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து மின்னணு நகல்களின் செயல்பாட்டை மனுதாரர் உறுதிப்படுத்த வேண்டும்.

10. ஒப்பந்த காலம் **250 கலண்டர்** நாட்களாகும்.

11. பூரணப்படுத்தப்பட்ட மனுக்களை 16.03.2022 ஆம் திகதி பி.ப 1430 மணித்தியாலத்திற்கு முன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கப்பெறுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். அல்லது அம்முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக இடப்பட்டுள்ள பெட்டியில் இடவேண்டும்.

தலைமை நிதி அதிகாரி (I) காரியாலயம்,
2ஆவது மாடி,
பாதுகாப்பு அமைச்சு,
பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை

காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் நிறைவடைந்த உடனேயே மனுதாரர்கள் முன்னிலையில், கிடைக்கப்பெற்றுள்ள மனுக்கள் (தபாலுறை 1 மற்றும் 2) திறக்கப்படும்.

12. மனு ஆவணத்தை பெறுவதற்கு முன், 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் (பொருத்தமானதாக இருக்கும்போது) பதிவுச் செய்யப்பட்ட சான்றிதழை சமர்ப்பிக்க மனுதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

13. மனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

14. மனுக்களை திறப்பதற்கு கலந்து கொள்பவர்களின் பெயர் மற்றும் தே.அ.அ அல்லது கடவுச்சீட்டு எண்ணை, தலைமை நிதி அதிகாரி(1), பாதுகாப்பு அமைச்சிற்கு, மனுக்களை திறப்பதற்கு மூன்று காரியாலய நாட்களுக்கு முன்னதாக (03 நாட்கள்) எழுத்து மூலமாக அறியத்தர வேண்டுமென்பதை மனுதாரர்களுக்கு அறியத்தருகின்றோம். மேலும் இம்மனுக்கோரல் தொடர்பில் பிற செயற்பாடுகளில் பங்கேற்பவர்களின் பெயர் மற்றும் தே.அ.அ அல்லது கடவுச்சீட்டு எண்ணை தலைமை நிதி அதிகாரி(1), பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவித்திருத்தல் வேண்டும்.

**தலைவர்**
**அமைச்சின் வழங்கல் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை**



# வேலை வாய்ப்பு

## தலைமை நிறைவேற்று அதிகாரி

இலங்கையின் பாரிய சில்லறை வலையமைப்பிற்கு

## தலைமை என்பது பதவி அல்ல செயல்

**தகைமைகள் (கீழுள்ள 1 அல்லது 2)**

(01). பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம் அல்லது அது சார்ந்த ஏனைய ஒரு துறையில் இளமாணிப் பட்டம்.

மற்றும்

வர்த்தக நிர்வாகம் அல்லது அது சார்ந்த ஏனைய ஒரு துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது முகாமைத்துவம்/ கணக்கியலில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இணை அங்கத்துவம்.

மற்றும்

முதல் பட்டத்தை பெற்ற பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு அதில் 05 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(02). பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம் அல்லது அது சார்ந்த ஏனைய ஒரு துறையில் இளமாணிப் பட்டம்.

மற்றும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம் அல்லது அது சார்ந்த ஏனைய ஒரு துறையில் கலாநிதிப் பட்டம்.

மற்றும்

முதல் பட்டத்தை பெற்ற பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு அதில் 05 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வயது:** 45 வயதுக்கு குறையாதவராகவும் 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:** அடிப்படை சம்பளம்: ரூபா 250,000/=
(செயல்திறன் கொடுப்பனவு: ரூபா 75,000/= + போக்குவரத்து கொடுப்பனவு 50,000/= + மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு : ரூபா 15,000/= + அரசாங்க சுற்றறிக்கைகளின்படி பதவிக்கு பொருந்தும் தகவல் தொடர்பாடல் கொடுப்பனவு )

**நியமனத்தின் பண்பு:** EPF மற்றும் ETF இற்கு உரித்தான ஒப்பந்த நியமனம்

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்:**
- மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் தரவை விளக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்க்கும் பண்பு மற்றும் ஏற்பாட்டுத் திறன்களை பெற்றவராகவும் சிறந்த சுய ஊக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ தகைமைகள், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த IT திறன்களை நிரூபிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத்துவம் செய்த அனுபவம்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்,**
I. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
II. பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
III. சிறந்த ஆளுமையுடைய நபராகவிருத்தல் வேண்டும்.

நீங்கள் சரியான தகைமைகள் மற்றும் அனுபவத்தை பெற்றவராக இருந்தால், சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது சுய விபரக்கோவையை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது **vacancies@lankasathosa.org** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, இந்த விளம்பரம் வெளியான 14 நாட்களுக்குள் அனுப்பவும். (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்/ மின்னஞ்சலின் "Subject" பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்)

**(தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்களுடன் மாத்திரமே நிறுவனம் தொடர்புகொள்ளும்)**

வர்த்தக அமைச்சு


தலைவர், லங்கா சதொச லிமிடட்,
சதொச செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

සතොස



# எதிர்மறை உணர்வுகள்

## வயதான தோற்றத்தை கொடுக்கும்



அழகுக்கும், மனதுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது.

'சிரிப்பை விட சிறந்த மருந்து இல்லை' என்று சொல்வார்கள். ஆனால் நாம் தினமும் எத்தனை முறை சிரிக்கிறோம்? என்று சிந்தித்து பார்த்திருக்கிறீர்களா? சிரிப்பு மன நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது. இறுக்கமான மன நிலையில் இருக்கும்போது புன்னகைத்து பாருங்கள். மனம் இலகுவாகும்.

எதிர்மறை எண்ணங்களை மனதுக்குள் தேக்கி வைப்பது உடலுக்கு மட்டுமல்ல சருமத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். நீண்ட காலத்திற்கு எதிர்மறை உணர்வுகளை சுமந்து கொண்டிருப்பவர்கள் விரைவில் வயதான தோற்றத்தை பெற்றுவிடுவார்கள் என்பது சரும நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது. அழகுக்கும், மனதுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

மன அழுத்தம், கோபம், கவலை, எரிச்சல் உணர்வு போன்றவை புற அழகை பாதிக்கும். ஒருவருடைய வெளிப்புற தோற்றத்தை வைத்தே அவருடைய மன நிலையை புரிந்து கொண்டுவிடலாம். ஆகையால் எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது. அவை மன நலனையும், உடல் நலனையும் சீர்குலைத்துவிடும்.

**மன அழுத்தம்:**

தொடர்ந்து மன அழுத்தத்தில் இருந்தால் முகத்தில் அதன் தாக்கம் வெளிப்படும். கார்டிசோல் ஹார்மோன்களின் உற்பத்திதான் மன அழுத்தத்திற்கு முக்கிய காரணமாகும். இதன் உற்பத்தி அதிகரிக்கும்போது சருமம் சார்ந்த பிரச்சினைகளும் உருவாகும். மன அழுத்தம் நீண்ட நாட்களாக இருந்தால், புதிய செல்கள் உருவாகுவதில் குறைபாடு உண்டாகும். விரைவில் வயதான தோற்றம் தொற்றிக்கொள்ளும்.

மன அழுத்தத்தில் இருக்கும்போது சரும பராமரிப்பில் போதிய அக்கறையின்மை காரணமாக முகப்பரு பிரச்சினையும் உண்டாகும். மன அழுத்தம் இரத்த நாளங்களில் சுருக்கத்தையும் ஏற்படுத்திவிடும்.

**கோபம்:**

நீங்கள் யாரிடமாவது கோபம் கொள்ளும் போது முகத்தை கவனியுங்கள். கோபம் உங்கள் முக தசையை இறுக்கமாக்கும். சோர்வும் தென்படும். அது காலப்போக்கில் சுருக்கத்திற்கு வழிவகுக்கும்.

**சோர்வு:**

முகபாவம் சரும ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. அடிக்கடி மனச்சோர்வடைந்தால் முகத்தில் சுருக்கங்கள் எட்டிப்பார்க்க தொடங்கிவிடும்.

நீண்டகால மனச்சோர்வு சருமத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடும். உயிரணுக்களும் பாதிப்புக்குள்ளாகும். ஹார்மோன் செயல்பாடுகளில் மாறுதலை உண்டாக்கி தூக்கத்தை பாதிக்கும். கண்களில் வீக்கம், மந்த உணர்வு, சோர்வு போன்ற பிரச்சினைகள் உண்டாகும். நீண்ட காலமாக ஏதாவதொரு விஷயத்தை பற்றி நினைத்து கவலையுடன் இருப்பவர்களுக்கு இந்த பாதிப்பு அதிகமாகும்.

**பயம்:**

ஆபத்தில் இருப்பதாக உணரும்போதோ, பீதி அடையும்போதோ, பயம் தொற்றிக் கொள்ளும்போதோ மூளை உடனடியாக அட்ரினலின் சுரப்பிகளுக்கு சிக்னல் கொடுக்கும். இதன் விளைவாக, இதய துடிப்பு அதிகரிக்க தொடங்கி விடும்.

உடலுக்குள் இரத்தம் செல்லும் வேகமும் அதிகரித்துவிடும். இந்த சமயத்தில் உடல் தசைகளுக்கு தேவையான இரத்தம் முகத்தில் இருந்து எடுக்கப்படும். காயம் அடையும்போதும் இரத்தப்போக்கை கட்டுப்படுத்துவதற்கு சருமத்தில் உள்ள இரத்த நாளங்கள் உதவும். அப்போது சருமத்தில் இரத்தத்தின் அளவு குறைவதால் சோர்வு எட்டிப்பார்க்கும்.

எதிர்மறை எண்ணங்கள்தான் அக அழகையும், புற அழகையும் அதிகளவில் பாதிக்கின்றன.




# மாதவிடாய் சுழற்சியை பாதிக்கும் ஒழுக்கற்ற தூக்கம்



ஆண்களை விட பெண்கள் தூக்கமின்மையால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் ஒழுங்கற்ற மாதவிடாய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்

இரவில் 7 முதல் 9 மணி நேரம் வரை தூங்கும் ஆரோக்கியமான நபர்களை விட ஆறு மணி நேரத்திற்கும் குறைவாக தூங்கும் பெண்களுக்கு ஒழுங்கற்ற மாதவிடாய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் 44 சதவீதம் அதிகம் என்பது சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் அதிக இரத்தப்போக்கு ஏற்படுவதற்கான வாய்ப்பு 70 சதவீதம் அதிகரிக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆய்வு முடிவு 'ஜர்னல் ஆப் ஸ்லீப் ரிசர்ச்' சில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்வை மேற்கொண்ட குழுவினர், ''இரவு ஓய்வின் முக்கியத்துவத்தை பலரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் நோய் பாதிப்புகள், சிகிச்சை முறைகள் பெண்களை பின்னுக்கு தள்ளுகின்றன. 24 முதல் 40 வயதுக்குட்பட்ட 547 பெண்களை ஆய்வுக்கு உட்படுத்தினோம். அவர்களிடம் மாதவிடாய் காலத்தில் எதிர்கொண்ட சிரமங்கள் குறித்து கேட்கப்பட்டது.

குறிப்பாக மாதவிடாய் கால இரத்தப்போக்கு, தூக்கம், பகலில் எந்த அளவுக்கு சோர்வின்றி செயல்படுகிறார்கள் என்பது போன்ற விடயங்களை கவனத்தில் கொண்டோம்.

இறுதியில் அதிக அல்லது ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சியை அனுபவிப்பவர்கள் தூக்கமின்மை, சோர்வு, மன அழுத்தம், மனச்சோர்வு போன்ற பாதிப்புகளுக்கு ஆளாகுவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்பதை கண்டறிந்தோம் என்கின்றனர். ஆகையால், பெண்களே இரவில் கட்டாயம் 7 தொடக்கம் 9 மணி நேரம் தூங்குவதை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். அது உங்கள் ஆரோக்கியத்தை பலப்படுத்தும்.



# குணாதிசயங்களை வெளிப்படுத்தும் உடல்மொழி

ஒருவரிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல் அவருடைய சைகைகள், முக பாவனைகள், செயற்பாடுகளை கொண்டு அவர் எத்தகைய மன நிலையில் இருக்கிறார் என்பதை யூகித்துவிட முடியும். வாய் வார்த்தைகள் என்பது யோசித்து, நிதானமாக பேசும்போது வெளிப்படுபவை.

ஆனால் உடல்மொழி அப்படிப்பட்டதல்ல. உள்ளுணர்வின் அடிப்படையில் சட்டென்று நொடிப்பொழுதில் 'பளிச்'சென்று வெளிப்பட்டுவிடும். ஒருவருடைய உடல்மொழியை கொண்டு அவருடைய சுபாவங்கள், குணாதிசயங்களை மதிப்பீடு செய்து விடலாம்.

- அணியும் உடை ஒருவரின் தோற்றத்தை, மதிப்பை மேம்படுத்துவதாக அமைய வேண்டும். செல்லும் இடத்திற்கு ஏற்ப ஆடை தேர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அலுவலகத்திற்கு விரும்பிய ஆடைகளை அணிந்து செல்ல முடியாது. குறிப்பாக ஸ்டைலாக ஆடை அணியக் கூடாது.

- அறிமுகம் இல்லாத நபர்களை முதன் முதலாக சந்திக்கும்போது கை குலுக்குவதில் தவறில்லை. நெருங்கி பழகுபவர்களிடம் அவருடைய சுபாவத்தை புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப நடந்து கொள்ளலாம். முதுகில் தட்டிக்கொடுப்பது, தோளில் கை போடுவது போன்ற செய்கைகளை அவர் அனுமதிக்கும் பட்சத்தில் தொடரலாம். அலுவலகத்தில் சக ஊழியர் உங்களுடன் எந்த அளவுக்கு நெருக்கத்தை பேணுகிறாரோ, அதற்கேற்பவே நடந்து கொள்ள வேண்டும். சிலர் தொட்டு பேசுவதை ஏற்றுக்கொள்வார்கள், சிலர் விரும்ப மாட்டார்கள்.

- ஒருவரிடம் பேசும்போது அவரின் கண்களை பார்த்து பேச வேண்டும். கேட்பவரும், பேசுபவரின் கண்களை பார்க்க வேண்டும் என்று கூறுவார்கள். அதற்காக அவருடைய கண்களையே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. பார்வையை அங்கும், இங்கும் கொஞ்சம் நகர்த்தலாம். அதேவேளையில் கண்களை பார்க்காமல் பேசுவது அவ மரியாதையாகவும், உண்மையை மறைப்பதாகவும் கருதப்படுகிறது.

- அறிமுகமான நபர், அறிமுகமற்ற நபர் என யாரை சந்தித்தாலும் மறக்காமல் புன்னகையை வெளிப்படுத்த வேண்டும். அதுதான் நட்பையும், உறவையும் பேணுவதற்கு உதவும். நெருக்கடியான சூழ்நிலையையும் புன்னகை மாற்றி விடும்.

- ஒருவரிடம் பேசும்போது கைகளை அசைத்து பேசுவது உற்சாகத்தின் வெளிப்பாடாக அமையும். கூட்டங்களில் பிறர் முன்னிலையில் பேசும்போது உடல் மொழியை வெளிப்படுத்த வேண்டும். கைகளை அசைத்த நிலையில் பேசுவது சிறப்பானது. அதற்காக எப்போதும் கைகளை அசைத்தபடி பேசுவது 'ஓவர் ஆக்டிங்' அல்லது முதிர்ச்சியற்ற தன்மையின் வெளிப்பாடாக அமைந்துவிடும். கைகளை பேண்ட் பாக்கெட்டுக்குள் வைத்தபடியோ, பின்புறம் மறைத்து வைத்த நிலையிலோ பேசுவதும் கூடாது. கால்களும் உங்களின் உடல்மொழியை மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்தி விடும். சிலர் பேசும்போது கால்கள் தடுமாற்றமடையும். அது பதற்றம், படபடப்பின் வெளிப்பாடாக அமையும். ஆதலால் கால்களை நேரான நிலையில் வைத்திருக்க வேண்டும்.



- ஒருவர் பேசும்போது அவருடைய பேச்சை கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை உடல் மொழியால் வெளிப்படுத்த வேண்டும். அவரது கண்களை பார்ப்பதோடு மட்டுமன்றி தலையை அசைத்தபடியும் கேட்கலாம். அப்படி தலையசைப்பது அவரது பேச்சை சுவாரசியமாக கேட்கிறோம் என்பதற்கான அடையாளமாகும். தலையை நிமிர்ந்தபடி வைத்திருப்பது தன்னம்பிக்கையின் அடையாளமாக பார்க்கப்படுகிறது.

அதற்காக எப்போதும் தலையை உயர்த்திய படியே வைத்திருக்கக்கூடாது. அது தலைக்கனம் பிடித்தவர் என்ற எண்ணத்தை மற்றவர் மத்தியில் உருவாக்கிவிடும். எப்போதும் தலையை குனிந்த நிலையில் வைத்திருந்தால் அது தன்னம்பிக்கை குறைவாக இருப்பதை வெளிக்காட்டும்.



# பிரஷர் குக்கர்

வேலைக்குச் செல்லும் பெண்கள் முதல் வீட்டை நிர்வகித்து வரும் இல்லத்தரசிகள் வரை அனைவருக்கும் உதவியாக இருப்பது பிரஷர் குக்கர். பெண்களுக்கு சமையலை எளிதாக முடிப்பதற்கு உதவும் பிரஷர் குக்கரை சரியான முறையில் பராமரிக்க வேண்டியது மிக முக்கியம்.

★ பிரஷர் குக்கரை அதன் காலாவதி திகதிக்கு பின்னரும் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். அவ்வாறு பயன்படுத்தினால் ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது.

★ பிரஷர் குக்கரில் உணவு சமைக்கும்போது 90 முதல் 95 சதவிகித ஊட்டச்சத்துக்கள் வீணாகாமல் கிடைப்பதாக இத்தாலியின் 'ஜேர்னல் ஆப் புட் சயின்ஸ்' எனும் நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

★ அலுமினியத்தால் தயாரிக்கப்பட்ட பிரஷர் குக்கரை உபயோகிப்பதை தவிர்ப்பது நல்லது.

**பிரஷர் குக்கரை பராமரிக்கும் முறை**

பிரஷர் குக்கரில் பயன்படுத்தும் 'கேஸ்கட்' எனும் இரப்பர் வளையத்தை, உபயோகப்படுத்தாதபோது குக்கரில் இருந்து கழற்றி, குளிர் சாதனப் பெட்டியின் பிரீஸரில் வைக்கலாம். இந்த வசதி இல்லாதவர்கள் அகலமான பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அதில் 'கேஸ்கட்' டைப் போட்டு வைக்கலாம். இதன் மூலம் 'கேஸ்கட்' விரைவாக சேதம் அடைவதைத் தடுக்க முடியும். ஆறு மாதம் அல்லது வருடத்திற்கு ஒரு முறை கேஸ்கட்டை அவசியம் மாற்ற வேண்டும்.

பிரஷர் குக்கரின் மூடியில் இருக்கும் துவாரங்களில் ஏற்படும் அடைப்பை, சிறிய ஊசியின் உதவியால் நீக்கி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சமையல் முடிந்த பின்பு, குக்கரில் சமைத்த உணவை வேறு பாத்திரத்தில் மாற்றி விட்டு சுத்தமாக கழுவி உலர வைக்க வேண்டும். வெயிலில் 10 நிமிடம் வரை உலர வைப்பது சிறந்தது.

சமைக்கும் போது, அதில் பாதி அல்லது முக்கால் பாகம் தான் சமைக்கும் உணவுப்பொருள் இருக்க வேண்டும். முழு கொள்ளளவு வரை இருக்குமாறு சமைக்கக் கூடாது. குக்கரை மூடும் போதே 'விசில்' போடக்கூடாது. நீராவி நன்றாக வெளிவர ஆரம்பித்த பிறகே அதில் விசிலைப் பொருத்த வேண்டும். இதன் மூலம் குக்கர் சீராக இயங்குவதோடு நீண்ட நாள் உழைக்கும்.

பிரஷர் குக்கரில் நேரடியாக சமைப்பதைத் தவிர்த்து, உள்ளே ஒரு எவர் சில்வர் பாத்திரத்தை வைத்து உணவு சமைப்பதே நல்லது. சமைத்து முடித்ததும் குக்கரின் அழுத்தம் முற்றிலும் அடங்கிய பின்னர் தான் திறக்க வேண்டும்.

பிரஷர் குக்கரில் இருக்கும் கைப்பிடிகளில் உள்ள திருகுகள் துருபிடிக்காமல் இருப்பதற்கு அதனை மாதம் ஒரு முறை கழற்றி, சிறிதளவு தேங்காய் எண்ணெய் தேய்த்து சுத்தம் செய்ய வேண்டியது அவசியம். திருகுகள் கழன்று வராமல் சரியாகப் பொருந்தி இருக்கிறதா என்பதையும் அவ்வப்போது சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

# சினி மஞ்சரி

# விஷ்ணு விஷால் படத்தை வெளியிடத் தடை



நடிகர் விஷ்ணு விஷால் நடித்து வெளியாகவுள்ள 'எப்.ஐ.ஆர்' திரைப்படத்தை வெளியிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எப்.ஐ.ஆர் நடிகர் விஷ்ணு விஷால் நடித்து தயாரித்துள்ள திரைப்படம் 'எப்.ஐ.ஆர்'. இயக்குனர் கவுதம் வாசுதேவ் மேனனின் உதவி இயக்குனர்களில் ஒருவரான மனு ஆனந்த் இந்த திரைப்படத்தை இயக்கியுள்ளார். இந்த திரைப்படத்தில் நடிகை மஞ்சிமா மோகன் கதாநாயகியாக நடித்துள்ளார்.

மேலும் இயக்குனர் வாசுதேவ் மேனன், நடிகை ரைசா வில்சன், ரேபா மோனிகா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்த திரைப்படம் பிப்ரவரி 11 இல் திரையரங்குகளில் வெளியாகுகியது. இந்த திரைப்படத்தை மலேசியா, குவைத், கத்தார் ஆகிய நாடுகளில் வெளியிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. விஷ்ணு விஷால் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் மலேசியா, குவைத் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளில் உள்ள ரசிகர்களிடம் இதற்காக மன்னிப்பு கேட்டுள்ளார்.

இந்த திரைப்படத்திற்கு அஸ்வத் இசையமைத்துள்ளார்.

'கிருமி' புகழ் அருள் வின்செண்ட் ஒளிப்பதிவு செய்துள்ளார். மேலும் பிரசன்னா ஜி.கே படத்தொகுப்பு செய்துள்ளார்.



# உருவ கேலி... பதிலடி கொடுத்த காஜல் அகர்வால்

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையான காஜல் அகர்வால் உருவ கேலி செய்தவர்களுக்கு பதிலடிக்கொடுக்கும் படி சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

காஜல் அகர்வால் நான் மகான் அல்ல, மாற்றான், துப்பாக்கி, ஜில்லா போன்ற பல படங்களில் முன்னணி நடிகர்களுடன் நடித்து பிரபலமானவர் காஜல் அகர்வால். தமிழ் மற்றும் தெலுங்கு போன்று பல மொழிகளில் நடித்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். இவர் சமீபத்தில் தொழிலதிபர் கௌதம் கிச்சலு என்பவரை திருமணம் செய்து கொண்டார். தற்போது அவர் கர்ப்பமாக இருக்கும் புகைப்படத்தை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்தார். அவர் பகிர்ந்த அந்த புகைப்படத்தை சிலர் உருவ கேலி செய்து பதிவிட்டு வந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக நடிகை காஜல் அகர்வால் ஒரு பதிவை பகிர்ந்துள்ளார். அந்த பதிவில், "எனது வாழ்க்கையில், எனது உடலில், எனது வீட்டில் மிக குறிப்பாக என்னுடைய பணியிடத்தில் அற்புதமான புதிய மாற்றங்களை சமீப காலமாக நான் சந்தித்து வருகிறேன். மேலும், குறிப்பிட்ட சில கருத்துக்கள், உடல் கேலி பதிவுகள் எதற்கும் உதவாது. அன்பாக இருக்க கற்றுக்கொள்வோம். கொஞ்சம் கடினமாகத்தான் இருக்கும் என நினைக்கிறேன், வாழு, வாழவிடு" எனக் குறிப்பிட்டு அறிக்கையை அவருடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

# ரஜினியின் 169வது திரைப்படம்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான ரஜினியின் 169வது படத்தின் அறிவிப்பை சன் பிக்சர்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

ரஜினி காதலில் விழுந்தேன், எந்திரன், சர்க்கார், அண்ணாத்தே போன்ற பல படங்களை தயாரித்த நிறுவனம் சன் பிக்சர்ஸ். இந்த நிறுவனம் தற்போது விஜய்யின் பீஸ்ட், விஜய் சேதுபதியின் விஜேஎஸ்46, சூர்யாவின் எதற்கும் துணிந்தவன் படங்களை இயக்கி வருகிறது.

இந்நிலையில் ரஜினியின் 169வது திரைப்படத்தை இந்த நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தை இயக்குனர் நெல்சன் இயக்குகிறார். இவர் கோலமாவு கோகிலா படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானார். இப்படத்தை தொடர்ந்து சிவகார்த்திகேயனை வைத்து அவர் இயக்கிய டாக்டர் படம் சமீபத்தில் வெளியாகி வெற்றி பெற்றது. அதன்பின் நெல்சன் அடுத்ததாக விஜய்யின் பீஸ்ட் படத்தை இயக்கி வருகிறார்.

இந்த படத்தின் அறிவிப்பை வெளியிடுவதாக படக்குழு அறிவித்திருந்தது. அதன்படி படத்தின் அறிவிப்பை வெளியிட்டு ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது. இப்படத்திற்கு இசையமைப்பாளர் அனிருத் இசையமைக்கிறார். ஒரு வீடியோவின் மூலம் இந்த படத்தின் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதில் ரஜினி மாஸாக அமர்ந்துக்கொண்டு போஸ் கொடுத்திருக்கிறார். இதனை ரசிகர்கள் சமூக வலைத்தளத்தில் கொண்டாடி வருகின்றனர்.



# சண்டை காட்சிக்கு பல கோடி செலவு செய்த சங்கர்..

பிரமாண்ட இயக்குனர் சங்கரின் இயக்கத்தில் அடுத்ததாக உருவாகவிருக்கும் படத்தில் நடிகர் ராம் சரண் கதாநாயகனாக நடிக்கிறார்.

தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் இப்படம் உருவாக உள்ளது. பிரம்மாண்ட பட்ஜெட்டில் தயாராகும் இப்படத்திற்கு தமன் இசையமைக்கிறார்.

மேலும், இப்படத்தில் கதாநாயகியாக பாலிவுட் நடிகை கியாரா அத்வாணி நடிக்கிறார்.

இப்படத்தில் இடம்பெற்றுள்ள ஒரே ஒரு பாடலுக்கு ரூ. 23 கோடி செலவு செய்து எடுத்துள்ளாராம் இயக்குனர் சங்கர்.

இந்நிலையில், அதே போல் இப்படத்தில் இடம்பெற்றுள்ள ஒரு சண்டை காட்சிக்கு மட்டுமே சுமார் ரூ. 10 கோடி செலவு செய்து எடுத்துள்ளாராம் சங்கர்.

இந்த செய்தி தற்போது திரை வட்டாரத்தில் பரவலாக பேசப்பட்டு வருகிறது.



சிம்பு நடிப்பில் வெளிவந்த போடா போடி படத்தின் மூலம் தமிழில் கதாநாயகியாக அறிமுகமானவர் நடிகை வரலட்சுமி சரத்குமார்.

இதன்பின், விக்ரம் வேதா, தாரை தப்பட்டை, நிபுணன், சர்கார் உள்ளிட்ட பல படங்களில் நடித்து முன்னணி நடிகையாக உயர்ந்துள்ளார்.

கதாநாயகியாக மட்டுமல்லாமல், வில்லி கதாபாத்திரத்திலும் அசத்தி வரும் நடிகை வரலட்சுமிக்கு தெலுங்கு மார்க்கெட் அதிகமாகியுள்ளது. இந்நிலையில், நடிகை வரலட்சுமி மற்றும் நடிகர் விஷால் இருவரும் சில வருடங்கள் காதலித்து வந்ததாக கூறப்படுகிறது.

ஆனால், நடிகர் சங்கத்தில் சரத்குமாருக்கு, விஷாலுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சனையிம் காரணமாக, வரலட்சுமி காதல் தோல்வியடைந்தது என்று தகவல் தெரிவிக்கின்றனர்.

# நடிகை வரலட்சுமியின் காதல் முறிவு.. காரணம் இவர் தானா



தென்னிந்திய திரையுலகில் முன்னணி கதாநாயகியாக வலம் வருபவர் நடிகை ஸ்ருதி ஹாசன்.

இவர் தற்போது படங்கள் மற்றும் வெப் சீரிஸ் என தொடர்ந்து நடித்து வருகிறார்.

இந்நிலையில், மும்பையில் காதலருடன் வசித்து வரும் நடிகை ஸ்ருதி ஹாசன், அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார்.

அந்த நிகழ்ச்சியில், அவரிடத்தில் தென்னிந்தியாவிலிருந்த வந்த நீங்கள் எப்படி ஹிந்தி பேசுகிறீர்கள் என ஒருவர் கேள்வி கேட்டுள்ளார்.

அதற்கு, " தென்னிந்திய என்ன வேற்று கிரகமா. தென்னிந்தியா, வட இந்தியா என பாகுபாடு எதற்கு? அனைவரும் படம் எடுக்கிறோம், உழைக்கிறோம்.

# கடுப்பானார் ஸ்ருதி

2022ல் இது போன்று பாரபட்சம் பார்க்க நேரமில்லை " என கோபத்துடன் பதிலளித்துள்ளார் ஸ்ருதி.

# கைரியா பெண்கள் கல்லூரி

## 140 வருட வரலாற்றை பறைசாற்றும் கைரியாவின் மாபெரும் வாகன பவனி


அதிபர் திருமதி நஸீரா ஹஸனார்

இன்றைக்கு 140 வருடங்களுக்கு முன்னர், 1882ல் சன்மார்க்க சமுதாய நெஞ்சத்தின் சொந்தக்காரர் ஒருவரின் செவிகளில் விழுந்து, சிந்தையின் உணர்வுகளில் ஒன்று கலந்து செயலுருவானதே 'மத்ரஸதுல் கைரியா'.

கல்வியை வலியுறுத்தும் சன்மார்க்க சமுதாயத்தின் தேவையை உணர்ந்த மர்ஹூம் சுலைமான் லெப்பை காக்கா தனது சொந்த செலவில் 'மத்ரஸதுல் கைரியா' என்ற பெயரில் கொழும்பு 9 இருப்பிடத்தில் 1882ல் ஆரம்பித்தார். இதுவே தலைநகரில் முஸ்லிம்களுக்கென உருவான முதற் பள்ளிக்கூடம் என்பது வரலாற்று பதிவாகவும் வளமான வாழ்வுக்கான நெறியாகும்.

'கைரியா' என்ற பொன்னாமம் பூத்ததில் சொந்தமான பாசவலையொன்று பின்னியிருப்பது பலரறியாத ரகசியம். மர்ஹூம் சுலைமான் லெப்பை காக்காவின் வாரிசுகளான 1) கலீபா, 2) வஸீலா, 3) தனீனா ஆகிய மூன்று சகோதரிகளில் மூத்தவரின் மகளாகிய தன் பேத்தி கைரியாவின் பெயரை தான் ஆரம்பித்த பள்ளிக்கூடத்திற்கு சூடி, அதையும் தன் பாசத்திற்குரிய பேத்தியாக எண்ணலானார்.

தன் மறைவுக்குப் பின், தன் மகள்களான மூவரும் பொறுப்பேற்று நடத்தினர். அதன்பின் மர்ஹூம்களான ஓய்வுபெற்ற நீதவான் ஏ.எச். மாக்கான் மாக்கார், எம்.எம். சித்தீக் ஆகியோர் 1956 வரை வழிப்படுத்தினர். 1957ல் மர்ஹூம் நெய்னா மரிக்கார் பொறுப்பேற்று நடத்தினார்.

கல்லூரி ஆரம்பமான காலப்பிரிவில் மத்ரஸா சாயலிலேயே திண்ணைப் பள்ளிகள், வீட்டுப் பள்ளிகள், தோட்டப் பள்ளிகள் என்பன தோன்றலாயின. அதனடிப்படையில் உருவான நம் 'மத்ரஸதுல் கைரியா' அரபுமொழி போதனைக்கே முக்கியத்துவமும் முன்னுரிமையும் தந்தது. நாளடைவில் ஆங்கில மொழி போதனை, சிங்கள தமிழ் போதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் ஆண், பெண் என இருபாலரும் ஒன்றிணைந்து கற்று வந்த மத்ரஸதுல் கைரியா, நாளாவட்டத்தில் மாணவர்களின் வரவுகுறைய மாணவியரின் வருகை கூடியது. இந்த அதிகரிப்பு கைரியா முஸ்லிம் பெண்கள் பாடசாலையாக உருவாக அடித்தளமாயிற்று.

கைரியாவின் முதல் அதிபராகத் திருமதி. டேவிட் கல்விப் பணி புரிந்து பெருமை சேர்த்தார்கள். அவரைத் தொடர்ந்து ஜனாபா மர்யம் ஜாயா, திருமதி. பீ. அசவ் போன்றோர் கைரியாவின் அதிபர்களாக பணியாற்றியுள்ளனர்.

1962ம் ஆண்டு ஜனாபா. என்.ஜி. டெய்ன் அதிபரானார். இதுகாலம் வரை சன்மார்க்க இதயங்களின் தாலாட்டில் தனியார் பள்ளியாக வளர்ந்து வந்த கைரியா, இவரின் காலத்தில், 01.11.1962ல் அரசாங்கம் கையேற்று ஒரு அரசுப் பள்ளியாக மாறியது. அவ்வமயம் 400 மாணவியர்களும் 15 ஆசிரியர்களும் இருந்தனர். இவரது அயராத, அர்ப்பண உழைப்பினால் கைரியாவுக்கு பாடசாலைக்கான வளங்கள், கல்விக்கான உபகரணங்கள், கட்டடங்கள் என்பன கிடைத்தன. க.பொ.த. உயர்தரம் வரை வகுப்புகள் நடத்தப்பட்டன. கல்வித்தரமும் எழலாயிற்று. 25 வருடங்கள் சேவைகள் பல செய்து விட்டு, இவர் 1987ல் பணிநிறைவு கண்டார். இவரது காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாக கருதப்படுகிறது.

இவரைத் தொடர்ந்து அதே கைரியாவில் அனுபவம் வாய்ந்த ஓர் ஆசிரியையாக பணியாற்றி வந்த ஜனாபா Z. F நிஸாம்தீன் அதிபராகப் பதவி ஏற்றார். கைரியாவின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆசிரியையாக 15 வருடமும் அதிபராக 15 வருடமும் அரும்பணியாற்றிய இவர் 30 வருட சேவையில் பின் ஓய்வு பெற்றார். பாலர் வகுப்புகளுக்கான தனி கட்டடமொன்று எழுப்பப்பட்டது இவரது சேவையின் தாற்பரியமாகும். ஜனாபா. நிஸாம்தீன் ஓய்வு பெற்றதன் பின் நிரந்தர அதிபர் ஒருவர் நியமனமாகாதது கைரியா சந்தித்த சோகமாகும்.

அதுவரை காலமும் உபஅதிபராக கடமையாற்றி வந்த ஜனாபா Y. M. ஆமித் வெற்றிடத்தை நிரப்ப அதிபராகப் பொறுப்பேற்க வேண்டி வந்தது காலத்தின் கட்டாயமும் கட்டளையுமானது. ஓராண்டு காலம் சேவையாற்றி ஓய்வு பெற்ற ஜனாபா. ஆமிதின் காலத்தில் மாணவியர்களின் தொகை 1500 ஆகவும், ஆசிரியர்களின் தொகை 44 ஆகவும் பெருகியமை கைரியாவின் கவர்ச்சிகரமான வளர்ச்சியை காட்டுகிறது.

அதன்பின் ஜனாபா. ஏ.எஸ். ஷிஹானா 2003ல் அதிபராக நியமனமானார். புதிய அதிபரின் சேவைக்கு நிர்வாகம் ஒரு சவாலாக அமைந்தது என்றால், பெருகிவரும் மாணவியர் தொகைக்கேற்ற இடவசதி இல்லாதது பெரும் குறையாக இருந்தது. சுமார் 50 வருட காலமாக இயங்கிய இரு நேர பாடசாலையை ஒரு நேர பாடசாலையாக அல் ஹிஜ்ரா வித்தியாலயத்தின் ஒரு பகுதியை சுவீகரித்து ஒரு நேர பாடசாலையாக மாற்றியதில் இவர் பெரும் பங்களிப்பை வழங்கினார்.

அக்கால கட்டத்தில் அதிபர் ஷிஹானாவுக்கு உறுதுணையாக இருந்து மும்முரமாக ஈடுபட்ட ஒரே உப அதிபர் A.L.S. நஸீரா ஹஸனார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர், மாணவிகள் தொகை உயர்தல், கல்வி சுற்றுலா வருடந்தோறும் நடத்தப்பட்டமை. 125 வருட நிறைவில் கைரியா வாரம் நடத்தப்பட்டமை, 4 மாடி கட்டடத்திற்கு நிலம் பெற்றமையோடு பத்தாண்டுகள் (2003 2013) சேவை செய்த அதிபர் ஷிஹானாவை பாடசாலை நிர்வாகம் கௌரவப்படுத்தியது.

அதிபர் ஷிஹானா விடைபெற்றுச் சென்ற அன்று முதல் புதிய அதிபராக, நிகழ்கால அதிபர் திருமதி நஸீரா ஹஸனார் 2013ல் பதவியேற்றார். புதிய அதிபர் திருமதி நஸீரா ஹஸனாருக்கு மற்றவர்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு தகுதி இருப்பது பலர் அறியாத விடயம். கைரியாவின் பழைய மாணவியாக, அங்கு படிப்பித்த ஆசிரியையாக, முன்னாள் அதிபரின் அபிவிருத்தி செயற்பாடுகளில் பக்கபலமான உப அதிபராக செயற்பட்டவர்.

**நிகழ்கால அதிபர் பதவியேற்ற நாள் முதல் செய்து வரும் பணிகளுள் சில....**

க.பொ.த விஞ்ஞான பிரிவை ஆங்கில மொழி மூலம் ஆரம்பித்ததோடு, விஞ்ஞான பாடநெறியில் உயிரியல் பிரிவை 2014 முதல் உயர்தரத்தில் துவக்கினார். இதன் மூலம் 1C பாடசாலை 1AB பாடசாலையானது. கைரியாவின் இடப்பற்றாக்குறையை போக்கும் பெரு நோக்கில் பெறப்பட்ட முன்புற காணியில் 4 மாடி கட்டடம் ஒன்றை பேருவளையின் சமுதாய கொடை வள்ளல் மர்ஹூம் ரிபாய் ஹாஜியார் உதவியில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தை நடத்தினார். பிரஸ்தாப கட்டடம் மிக விரைவில் கட்டி முடிக்கப்பட்டது ஈண்டு நோக்கத்தக்கது.

கைரியா பெண்கள் கல்லூரிக்கு முன்னால் அமைந்திருக்கும் காணியை பெற்றுக் கொள்வதில் பலர் பல முயற்சிகளில் ஈடுபட்டனர். இருப்பினும் இக்காணி நவ்ஷாத் மொஹிதீன், அஸாத்சாலி (முன்னாள் ஆளுநர்), அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூலம் 2011ல் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இந்நிலப்பரப்பில் கொடை வள்ளல் ZAM Refai Hajiar ஆல் 2016ல் உயர் மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. இதில் பிரதான மண்டபமும், 21 வகுப்பறைகளும் அமைக்கப்பட்டன. விஞ்ஞான ஆய்வுக் கூடமும், தகவல் தொழில்நுட்ப கூடமும் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இக்கட்டடத்திற்கு ZAM Refai Hajiar கட்டடம் என்ற நாமம் சூட்டி அன்னாரை நினைவு கூர்கின்றது கைரியா சமூகம். இதற்காக அதிபர் நஸீரா ஹஸனார் மேற்கொண்ட அயராத முயற்சி, அவருடைய தியாகம் என்பன அவர் கல்லூரி மீது கொண்ட முன்னேற்றத்திற்கு சான்றாகும். இன்று உயர்தரப் பிரிவு முழுவதும் இக்கட்டடத்திலேயே நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறெல்லாம் பல சேவைகளை செய்த கைரியா தன்னுடைய சிகரத்தை நோக்கிய பயணத்தில் வரலாற்று நினைவாக 2017ஆம் ஆண்டு தனது 135ஆவது வருட பூர்த்தியை நினைவூட்டும் நோக்கோடு அதிபர் நஸீரா ஹஸனார் தலைமையில் நடந்த நினைவுகள்.

1. **கல்விக்கு உயிர் கொடுத்த முன்னாள் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டமை.**
2. **ஊடகத் தினம் கொண்டாட்டம்.**
3. **கைரியா நடை பவனி (Khairiya's Walk)**
4. **திறமைக்கு முகம் கொடுக்கும் பரிசளிப்பு விழா.**
5. **கண் கவரும் கண்காட்சி.**

இதனைத் தொடர்ந்து இரு கட்டடங்களையும் இணைக்கும் பாலம் ஒன்றை அமைப்பது காலத்தின் கட்டாயமாக இருந்தது. பாதையை கடப்பதில் மாணவர்கள் படும் இன்னலை அறிந்த அதிபர் அதையும் நிவர்த்திக்கும் பணியில் ஈடுபட்டார். இதன் பயனாக அப்போதைய ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபாவால் 2019ல் பாலம் ஒன்றை அமைப்பதற்கான சகல பணிகளிலும் அதிபர் ஈடுபட்டார். பாலமும் அமைக்கப்பட்டது. இதன் மூலம் மாணவர்களின் பாதுகாப்பை அதிபர் உறுதிப்படுத்தினார்.


மர்ஹூம் ரிபாய் ஹாஜியார் மண்டபம்

கைரியா மாணவர்களின் விளையாட்டு ஆர்வத்தை வளர்க்கும் வளமான எண்ணத்தில், பிற பாடசாலைகளும் பங்கேற்கும் விதமாக 2015ல் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் ஒரு வலைப் பந்தாட்ட (Net Ball) சுற்றுப் போட்டியை நடத்தினார். அதில் கைரியா மாணவிகளே வெற்றி பெற்றனர். இதன் மூலம் கைரியா மாணவிகளின் விளையாட்டு ஆர்வத்தை வெளிச்சமிட்டுக் காட்டிய பெருமை இவரையே சாரும்.

கைரியா மாணவர்களின் போக்குவரத்து நலனுக்காக வலைப் பந்தாட்ட சுற்றுப் போட்டியில் வசூலான தொகையுடன், சமுதாய நல்லிதயங்களின் உதவிகளையும் பெற்று சொந்தமாக ஒரு பேருந்தை (bus) வாங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் அதிபர் மேற்கொண்டு வெற்றியும் பெற்றார்.அத்துடன் பாடசாலைக்கு முச்சக்கர வண்டி ஒன்றை பழைய மாணவியர் மூலமாக பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் என மூன்று மொழிகளிலும் நடைபெறும் பல்வேறு போட்டிகளிலும் கைரியா மாணவியர் பங்குகொண்டு வெற்றிபெறும் வண்ணம் கதவுகளைத் திறந்துவிட்ட அதிபரின் சேவை போற்றத்தக்கது. மேலும் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் முஸ்லிம் மஜ்லிஸ், மாணவர் பாராளுமன்றம், சாரணர் இயக்கம், மாணவ ஊடகப்பிரிவு, தமிழ், சிங்கள, ஆங்கில இலக்கிய மன்றம் போன்ற குழுக்களினூடாக மாணவர்களின் ஆளுமை விருத்தியிலும் அதிபர் பெரும் பங்களிப்பு செய்கிறார்.

அல் ஹிஜ்ராவில் தற்காலிகமாக இயங்கிய கைரியாவின் ஆரம்பப் பிரிவுக்கான நிரந்தர காணியைப் பெற்றுக் கொடுப்பதில் பல தரப்பினர்களும் முயற்சி செய்தனர். இறுதியில் மேல் மாகாண சபை உறுப்பினர்களான ஜனாப் பாயிஸ், ஜனாப் அர்ஷாட், பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரின் முயற்சியினால் 42 பேர்ச் காணி சட்டபூர்வமாக கைரியா பெண்கள் கல்லூரிக்கு பிரித்து வழங்கப்பட்டது. காணியில் கட்டடம் எழுப்ப வேண்டிய கட்டாய நிலையில் கைரியா சமூகம் தவித்த நேரத்தில் கைகொடுத்த மகானாக நூருல்லாஹ் மௌலவியை காண்கின்றோம். இவர் குவைத் நாட்டில் வாழ்ந்த பெண்மணியான 'தைபா' என்பவரின் நன்கொடையைக் கொண்டு, கைரியா பெண்கள் கல்லூரிக்கு ஒரு மாடி கட்டடம் ஒன்றை கட்டி வழங்கினார். இதில் 8 வகுப்பறைகளை மட்டுமே அமைக்க முடிந்தது. ஆனால் 25 வகுப்பறைகள் தேவைப்பட்டன. அரச சார்பற்ற நிறுவனத்தின் மூலமாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் மேலும் ஒரு மாடி அமைத்து 4 வகுப்பறைகளை கட்ட முடியும் என்பதால் W.M.O (2021ல்) உலக மேமன் சம்மேளனத்தின் உதவியைப் பெற்று மேலும் 4 வகுப்பறைகள் இரண்டாம் மாடியில் அமைப்பதற்கு, அதிபர் மேற்கொண்ட முயற்சியை வார்த்தைகளில் வழங்க முடியாது.

கைரியா சமூகத்தின் தேவைகளை கட்டம் கட்டமாக நிறைவேற்றி வரும் திருமதி நஸீரா ஹஸனாரின் அடுத்த நகர்வு, ஆரம்பப்பிரிவில் 18 வகுப்பறைகளைக் கொண்ட கட்டடமொன்றை நிர்மாணிப்பதாகும். கல்லூரியின் பௌதிக வளங்களைப் பெற்றுக் கொள்ளும் பயணத்தில் கல்லூரி சமூகத்தை கைகோர்த்து வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்வது அதிபருடைய தனிப் பெரும் சிறப்பாக உள்ளது. பெற்றோர்கள், பழைய மாணவிகள், நலன்விரும்பிகள் அத்தனை பேரும் இப்பணியில் கைகோர்த்துள்ளனர்.

இன்று 96 ஆசிரியைகளையும், 2700 மாணவிகளையும் கொண்ட கைரியா பெண்கள் கல்லூரி, பௌதிக வளத்தில் மட்டுமல்ல கல்வி அடைவு மட்டங்களிலும் மேலோங்கி நிற்கின்றது. இதை பாடசாலையின் பெறுபேறுகள் உறுதிப்படுத்துகின்றன. பல்கலைக்கழகங்களிலும், உயர் கல்வி பீடங்களிலும் எமது மாணவிகள் பிரகாசிக்கின்றனர். பட்டம் பெற்று வெளியேறுகின்றனர். கைரியாவின் முதலாமாண்டு அனுமதிக்கான கேள்வி அதிகரித்துள்ளமை இதற்கு சான்று பகர்கின்றது. நிலைமையை சமாளிக்க முடியாமல் நிர்வாகம் திண்டாடுகிறது. எனவே கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் 2016ல் சிங்கள மொழி மூலமான ஒரு வகுப்பை அதிகரித்தமை யானைப் பசிக்கு சோளப்பொரி இட்டது போலாகும். இப்பிரச்சினைக்கான முடிவு இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது. 140 ஆவது வருட நிறைவில் விழாக்கோலம் பூணும் கைரியா பெண்கள் கல்லூரியை காண்கையில் உளம் பூரிக்கிறது. இதனை முன்னிட்டு இன்று கொழும்பு நகரை மையப்படுத்தி வரலாறு காணாத மாபெரும் வாகன பவனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 'நெலும் பொகுன தாமரைத் தடாகம்' மண்டபத்தில் இவ் விழாவை விமரிசையாக கொண்டாடுவதில் கைரியா சமூகம் பெரு மகிழ்ச்சியடைகிறது. இந்நிகழ்விற்காக அதிபரின் தலைமையின் கீழ் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவிகள் சங்கம், நலன் விரும்பிகள் அத்தனை பேரும் பெரும் பங்களிப்பை நல்கி வருகின்றனர். கைரியாவின் வரலாற்றில் திருமதி நஸீரா ஹஸனாரின் பணிக்காலம் ஒரு திருப்புமுனை எனக் கூறினால் அது மிகையாகாது. உலகம் சுருங்கி உள்ளங்கையில் அடங்கிவிட்ட நவயுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே எமது கல்வி முறையிலும் மாற்றம் வரவேண்டும் என்பது நிதர்சன உண்மையாகும். வகுப்பறைகளில் கரும்பலகைகள் வெண்பலகையாகின. இந்த நவயுகத்தில் வெண்பலகை மின் பலகையாக வேண்டும். இதை உணர்ந்த அதிபர் இலத்திரனியல் பலகை (Electronic Board) ஊடாக கல்வி பயிலும் வாயிலைத் திறந்துவிட்டு, மாணவிகளின் கற்றல் முறையில் புது திருப்பத்தை உருவாக்கினார். இதற்கான இவரது முயற்சியை சொல்லில் வடிக்க முடியாது. 140 ஆவது நிறைவு வருடத்தில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை டிஜிட்டல் மயமாக்கிய பெருமை திருமதி நஸீரா ஹஸனாரையே சாரும்.

ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு, உயர்தரப் பிரிவு என முக்கோண நிர்வாக நிலப் பரப்பையும், ஒரே தலைமையின் கீழ் நிர்வகிக்கும் தலைசிறந்த ஆளுமையாக தற்போதைய அதிபர் திருமதி நஸீரா ஹஸனாரை காண்கிறோம். இவ்வதிபரின் தலைமைத்துவம் கைரியா பெண்கள் கல்லூரியை உச்சம் நோக்கி அழைத்துச் செல்லும். இவரது திருப்பணிகள் ஆரோக்கியமாக அமைவதற்கு மனமார வாழ்த்தி, வல்ல நாயனை பிராத்திப்போம்.


சிரேஷ்ட ஆசிரியர் குழாம்


கனிஷ்ட ஆசிரியர் குழாம்


ஆரம்ப கற்கை ஆசிரியர் குழாம்


மாணவ தலைவிகள் குழு


பாடசாலை அபிவிருத்திச் சங்கம்


பழைய மாணவிகள் சங்கம்


பெண் சாரணர் குழுவினர்


கல்வி சாரா ஊழியர்கள்

Hudha



2022 பெப்ரவரி 04ஆந் திகதி கொண்டாடப்பட்ட இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஓமானுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத், 'விளாம்பழ மரத்தை மஸ்கட்டில் உள்ள ருமைஸ், பர்காவில் உள்ள விவசாய மற்றும் விலங்கு ஆராய்ச்சிப் பணிப்பாளரகத்தில் நட்டார்.



இலங்கையில் கடந்த ஐந்து தசாப்தங்களாக ஊடகத்துறையில் சிறந்து விளங்கி ஓய்வு பெற்ற ஐந்து ஊடக ஜாம்பவான்கள் (08) ஆம் திகதி கொழும்பு 7 இலங்கை மன்ற கல்லூரியில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ஊடகவியலாளர்களான சரத் குரே, சுனில் தயா அல்விஸ், ஆர்தர் யூ. அமரசேன, சந்திரிகா விஜேசுந்தர மற்றும் ஏ.சி. டி சில்வா ஆகியோரே கௌரவிக்கப்பட்டவர்களாவர். .இலங்கை பத்திரிகையாளர்கள் சங்கத்தின் 67 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடந்த நிகழ்வில் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும அவர்களுக்கான விருதுகளை வழங்கிவைத்தார். நிழ்வில் இலங்கை பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தலைவர் தர்மன் விக்கிரமரத்ன,செயலாளர் குருளு காரியகரவன,ஆலோசகர் திமுத்து காரியகரவன மற்றும் விருது பெற்றவர்களையும் படத்தில் காணலாம். (படம்: சுதத் மலவீர)

ஈரானின் இஸ்லாமியப் புரட்சி வெற்றியின் 43வது தேசிய தின விழா கொழும்பில் உள்ள தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது. பிரதம அதிதி பொது பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மற்றும் ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் ஹஷேம் அஷ்ஜாஸ்த்சே ஆகியோர் இணைந்து கேக் வெட்டுவதை படத்தில் காணலாம். (படம் : ருசைக் பாரூக்)



இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தையிட்டு தெல்கொட மஹாமெவனாவ பௌத்த கல்லூரி மற்றும் தமிழ் பாடசாலைகள் இணைந்து (04) சுதந்திர தின விழாவை ஏற்பாடு செய்திருந்தன. இந்நிகழ்வில் மதகுருமார்கள், கல்வி அமைச்சின் அறநெறி பிரிவின் உதவி பணிப்பாளர் தர்ஷனி அமரசிங்க, பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

(நடராஜா மலர்வேந்தன் லுணுகல நிருபர்)




தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845




## Old Items

Old Sarees, Old Notes, Silver Waist Chains, Gem Pieces, Degraded Jewellery, Old Silver Caps buy at the highest value.
Redeem your Pawned Jewellery and buy at the highest value.
- Your Trusted Service -
077 660 86 34 / 077 123 0 122

வாரமஞ்சரி BUDGET adz

## போட்டோ குறும் விளம்பரம்



பிரிமியோ ஜி சுப்பீரியர் 2013 மின்சார ஆசனங்கள் சாம்பல் நிறம் ரிவேர்ஸ் கமரா, புத்தம் புதிய டயர்கள், சுயமாக இயங்கக்கூடிய பக்க கண்ணாடிகளுடன் விங்கில் கண்ணாடிகள் 87,000 கி.மீ. சொந்தப் பயணத்திற்காக பயணம் செய்யப்பட்டுள்ளது. நன்றாகப் பராமரிக்கப்பட்டுள்ளது. இரு சிமாட் சாவிகள். சிறந்த விலைக்கு உடன் விற்பனை.
077 2 335 896

011431



Ssang Yong Korondo SUV 2014 Diesel CAC-xxxx Trip tonic, Advanced suspension system, cruise control, 2 liter Turbo Engine, Mint Condition.
071 4 570 519

## வேலை வாய்ப்பு

தொடர்புகளுக்கு
0765450476

ஜூகி மெசின் ஓபரேடர்கள்
உதவியாளர்கள்
கடர் தேவை

சம்பளம் ரூபா 40,000/= வரை
- வேலை நேரம் காலை 8.30 முதல் மாலை 5.30 வரை
- காலை மற்றும் மதிய உணவு அல்லது ரூபா 2,000/- கொடுப்பனவு வழங்கப்படும்.
- EPF மற்றும் ETF உடன்
- வருகை கொடுப்பனவு ரூபா 3,000/- வழங்கப்படும்
- உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் (Incentive) மற்றும்
- மேலதிக நேர கொடுப்பனவு OT வழங்கப்படும்

நேர்முகத் தேர்வுகளுக்காக காலை 8.30 முதல் மாலை 4.30 வரை சமுகமளிக்கலாம்

தொடர்புகளுக்கு
WIN STAR GARMENT
NO.281/1/1,Leyards Broadway,
Colombo 14.
winstargarments301@gmail.com








## Prime Residential Land for Sale in Kandana

1 Acre+ Land with house. 100m main road frontage. 15 minutes Colombo, 5 Minutes Kandana town. Highly residential area, Walking distance Schools, Hospitals & Supermarkets. Carpeted road network. Expressway access Colombo Katunayake Southern routes. 3 Phase electricity, Pipe borne water, Clear deed.
Ideal for Investment / mixed development.
+94 (77) 383 7007




## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

adzsuo@gmail.com

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 109 மிற்சுபிஸி கார்கள் விற்பனைக்கு

மிட்சுபிஷி லான்சர் மெனிக்மொடல் சிறந்த நிலை 12 1/2 இலட்சம். ஆர் .டி. என்டர்பிரைசஸ் (கார்சேல்) ஹைலெவல் வீதி, பன்னிபிட்டிய 0777316909, 011 2514769 009136

### 121 வாகனங்கள் தேவை தேவை

சுற்றுலா வியாபாரமொன்றுக்கு அரச திணைக்களங்களுக்கு கார் 300 இற்கு மேல் வேன்கள் 56 இற்கு மேல் ஏதேனும் மாதிரியில் 09 இருக்கைகள் முதல் நீண்டகால வாடகை அடிப்படையில் தேவை. 077 3500055. 010326

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

சிற்றுண்டிச்சாலை (Canteen) 300க்கு மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரியும் தொழிற்சாலைக்கு 3 வேலையும் (காலை, பகல், இரவு) புபேட் சேவை (BUFFET) மூலம் உணவு பரிமாறக்கூடிய ப்ரேண்டிக்ஸ், மாஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் ஹாயிட்ராமனி போன்ற நிறுவனங்களில் சிற்றுண்டிச்சாலை நடத்திய அனுபவமுள்ளசிற்றுண்டிச்சாலை நடத்துனர் தேவை. மேலதிக விபரங்களுக்கு மெனு கார்டுடன் (Menu card) கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ.பே. இல. 076 6200300. 011461

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கண்டி பெறுமதியான கட்டிடம் விற்பனைக்கு. 06 மாடிகள் (20 பேர்ச்) கண்டி, குண்ட சாலை குடியிருப்புப் பிரதேசம். 18000 சதுர அடி. பிரதான வீதிக்கு முகப்பாக 80 அடி அகலம். பிரதான வீதிக்கு சமாந்தரமாக மாடி. 06 கடைகள், மேல் மாடி 07 கடைகள், 02 பிரத்தியேக மண்டபங்கள். நிலக்கீழ் மாடி உண்டு. பிரத்தியேகமாக 02 மண்டபங்களுடன் களஞ்சியங்கள், குடியிருப்பு அறை பிர தேசங்கள். மாதாந்த வருமானம் 4 இலட்சம் (வங்கிக் கடனுடன்) ரூபா 1200 மில்லியனுடன் எல்லா வசதிகளும். தரகர்கள் வேண்டாம். 0777114136, 0777114253. 007993

கொட்டாஞ்சேனை பிக்கரிங்ஸ் வீதி (கொழும்பு 13) மூன்றுமாடிக் கட்டிடம் விற்பனைக்கு. தொடர்பு 071 1196156. 010246

வத்துபிட்டிவல வியாபாரஸ்தலம் 80 பேர்ச் உடன் விற்பனைக்கு. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள். 070 4808616. 010243

0777282147 கண்டி முதல் கடுகண்ணாவ வரை, கண்டி முதல் திகன நகர் வரை, கண்டி முதல் குருநாகல் வீதி வரை, கண்டி முதல் மாத்தளை வீதி வரை காபட் வீதிக்கு முகப்பாக பல்வேறு வியாபார ஸ்தலம் மற்றும் வீதியிலிருந்து உட்புறமாக 100, 200 மீற்றர். சாதாரண ஹோட்டல்/ வீடு/ வெற்றுக் காணி 20 மில்லியன் முதல் அதற்கு மேல் விற்பனைக்கு. (வங்கிக்கடன் உள்ள/ இல்லாத) 077 7 4 381 69 008013

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

தெல்கொட பிரதேசத்தில் முன்னணி நவீன வர்த்தக நிலையத்திற்கு பெண் விற்பனை உதவியாளர்கள் தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும். தொடர்பு 0712 906222, 011 2402405. 011100

### 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

Audit Trainee Secretary Trainee with A/L Commerce apply agape accounting services 89-1/2 Bank Shall Street, Colombo-11. e-mail - agapeaccservices@gmail.com whatsapp - 07 55 03 09 54 Telephone - 0777239397 005041

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

எமது நிறுவனத்திற்கு கார் பெயின்டர்கள் தேவை. வேலை தெரிந்த கையுதவியாட்கள் அல்லது பாஸ்மார் தேவை. மாளிகாவத்த 0767201139, 075 3948547 நாலக்க. 011186

முச்சக்கர வண்டி பெயின்டர்கள் மற்றும் பெயின்டிங் உதவியாளர்கள் தேவை. தங்குமிடம் உணவு வழங்கப்படும். ஹோமாகம. 074 2500380, 074 2500381. 011456

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

அனுபவமுள்ள REVIT CAD தொழில்நுட்பவியலாளர் / DRAFTS நபர் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவத்துடன் தேவை. வெளிநாட்டு அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பெண் 0777999682. 009616

கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரமுள்ள ஓட்டுநர்கள் டிலிவரி வாகனங்களுக்கு இரத்மலான மொரட்டுவ, தெஹிவளை, பாணந்துறை, களுத்துறை, வென்னப்புவ நயினமடம பிரதேசங்களில் தேவை. சம்பளம் 35,000 முதல் மேல் விசாரணைகள் நெஸ்கோ என்டர்பிரைசஸ், இல. 29/ 5, 4ஆம் ஒழுங்கை இரத்மலான. தொ. பே. 0777 263954. 010347

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

உணவு சமைத்தல், வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை. வயது 35 55 (சிங்களம் பேசக்கூடிய பெண்கள் மட்டும் அழையுங்கள்) 0711 307233. 009880

பத்தரமுல்ல தங்கி இருக்கக் கூடிய வீட்டுப் பணிப்பெண் இருவர் வீட்டுத் தேவைக்கு சமையல், சுத்திகரிப்பு, கழுவுதல் மற்றும் அயன் செய்தல். விடுதி மற்றும் உணவு வழங்கப்படும். வயது 50+ வெளித் தொந்தரவு அற்றவர்கள் அழையுங்கள். தொலைபேசி 07 77562555. 010034

வேயன்கொட வீட்டில் சேவைக்கு சாதாரண சிங்கள அறிவுடைய தங்கி வேலை செய்யக் கூடிய பெண் தேவை. முதல் 03 மாதங்களில் 25,000/=. 0705876800. 010814

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

எமது ஹோட்டலுக்கு கோக்கி (2000/ ) பேக்கரி பாஸ் (2000/ ) கையுதவியாட்கள் (1300/ ) உணவு பரிமாறுநர் (1200/) தொழிலாளர்கள், Night Manager தேவை. 072 7791 2 23, 0 77 5108182. 010930

பயிற்சிபெற்ற/ பெறாத பேக்கரி பாஸ் (ஆண்/ பெண்) சூன் பான் சாரதிகள், சோரூம் பெண் ஊழியர்கள் மற்றும் பேக்கரி வேலை பயில்வதற்கு தேவையானவர்களும் அழையுங்கள். 0769046395. 010933

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

சிலாபம், குருநாகல் வீதியில் அமைந்துள்ள முட்டை, கோழிப் பண்ணையில் வேலைக்கு பயிற்சியுள்ள, பயிற்சியற்ற குடும்பங்கள் தேவை. அனுபவமுள்ள குடும்பத்தின் மாதாந்த சம்பளம் ரூ. 78000/ முட்டை எடுத்தல் ஒப்பந்த அடிப்படையில் செய்யலாம். தங்குமிட வசதி உண்டு. விறகு, தேங்காய் இலவசம். 070 4442954, 0777 442954. 010209

நீர்கொழும்புக்கு அருகில் பயிர்ச் செய்கை தளத்தில் வேலை செய்ய ஆரோக்கியமான ஆண் மற்றும் மனைவி தேவை. அத்துடன் சீமெந்து புளொக் கல் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். இலவச தங்குமிடம் அத்துடன் மின்சாரம், நீர் வழங்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளம் பெறலாம். அழையுங்கள் 077 3437266. 011295

### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

பலஞ்சி வேலை, மேசன் வேலை, ஹெல்பர்ஸ் வீட்டு வேலை, பெயின்ட் வேலைகளுக்கு வெற்றிடங்கள் உண்டு. அழையுங்கள் 071 7492314, 071 4520975, பலஞ்சி 2200/ + OT MASON. 009684

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

ஊழியர்கள் (Workers) வத்தளை மற்றும் தங்கொட்டுவையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு பயிற்சி பெற்ற/ பயிற்சி பெறாத ஆண், பெண் ஊழியர்கள் தேவை. ஒரு நாள் சம்பளம் ரூ. 1200/ ரூ. 1500/ ரூ. 2000 ( மாதாந்த சம்பளம்) வழங்கப்படும். மேலும் புடவை ஏற்றி இறக்க (Loading/ Unloading) ஆண் ஊழியர்கள் தேவை. இலவச தங்குமிட வசதி மற்றும் சகாய விலையில் மூன்று வேளை உணவு பெற்றுக் கொள்ளும் வசதி. மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18,வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 076 6200300. 011467

கொபய்கனேயில் அமைந்துள்ள எமது விலங்குப் பண்ணையில் தங்கி வேலை செய்ய ஊழியர்கள் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். சம்பளம் பேசித் தீர்க்கலாம். 0773610968. 010818

### 325 தொழில்துறை பொது

ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்யப் பெற்றுள்ள SPA நிறுவனமொன்றிற்கு பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத 18 35 வயது சிங்களம் கதைக்கக் கூடிய அழகிய தோற்றமுள்ள தெரபிஸ்டுகள் தேவை. தினச் சம்பளம் ரூபா 10,000/ உணவு பானங்கள், தங்குமிடம் இலவசம். சேவையை பகல் அல்லது இரவில் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். Fulltime/ Part time சேவை. இதற்காக தெரபிஸ்டுகளை தொடர்பு படுத்தக் கூடியவர்களும் ரூபா 10,000 இற்கான சேவைக்கட்டணம் வழங்கப்படும். Shakya Herbalspa (pvt) Ltd இல. 21, மாலபே கொட்டாவ, மஹரகம, நுகேகொட, கடுவெல, தலவதுகொட. 070 4404040. 011261

எமது இரத்தினபுரியிலுள்ள 50 ஏக்கர் அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய தேயிலைத் தோட்டத்திற்கு ஆண் வெளிக்கள அலுவலர்கள் தேவை. 077 8991899. 011392

எமது பிளாஸ்டிக் உற்பத்தி நிறுவனத்திற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஆண்/ பெண் ஊழியர்கள், சுப்பர்வைசர் தேவை. தங்குமிடம் உண்டு. பாதுக்க, வட்டரெக்க. 0712306 585, 0766106 585. 010820

கண்டி பல்லேகளவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு தொழிலாளர்கள் வயது 18 40 அனுபவம் தேவை யில்லை. கவர்ச்சிகரமான சம்பளம் + உணவு கட்டணம் வழங்கப்படும். 077 3465878. 010582

கொட்டாவையில் உள்ள பிரபல தொழிற்சாலைக்கு 18 25 வயதிற்குட்பட்ட பெண்கள் தேவை மற்றும் சமையல் வேலைக்கும் 40 50 வயதிற்குட்பட்ட பெண்கள் தேவை. உணவு, தங்குமிடம், நல்ல சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு. 076 2594946. 010767

கொழும்பு சுத்திகரிப்பு நிறுவனம் ஒன்றிற்கு சுபவைசர், ஆண், பெண், பொலிஷர் இயந்திர இயக்குநர்கள் தேவை. கூடுதல் சம்பளம் அழையுங்கள். 077 2771022. 011017

கொழும்பு 12இல் உள்ள Lodge ஒன்றுக்கு cleaners தேவை. வயது 18 40 அனுபவம் தேவையில்லை. கிராம சேவையாளர் நற்சான்று பத்திரம் தேவை. அடிப்படை சம்பளம், உணவு, தங்குமிடம் வழங்கப்படும். 077 3465878. 010583

சில்லறைக் கடைக்கு நன்கு கணக்கு வேலை தெரிந்த விற்பனையாளர்கள் (Salesman) தேவை. சம்பளம் அனுபவத்துக்கேற்ப பேசி தீர்மானித்துக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும். 0771283150. 010382

நீங்கள் மாத்தளை, தம்புள்ள, பொலன்னறுவ பிரதேசத்தின் பதிவாளர்களா? மாவட்ட விற்பனை மேம்பாட்டு அதிகாரியாக நீங்களும் எம்மோடு இணையுங்கள். வயது 20 35 இடையில். ஆண்/பெண் அனைவருக்கும் அழைப்பு கவர்ச்சியான சம்பளம் கொடுப்பனவு SLT MOBITEL விற்பனை முகவர்கள் செட்கோ லங்கா பிரைவட் லிமிட்டட் மாத்தளை 071 4414414 தம்புள்ள 071 5325254 பொலன்னறுவ 071 7205720. 010282

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வயது 30 45 அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. முழுநேர வேலை கவர்ச்சிகரமான சம்பளம். உணவுக் கட்டணம், தங்குமிடம் வழங்கப்படும். 077 3465878. 010581

பெக்கிங் மேற்பார்வையாளர் (Packing supervisor) வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பெக்கிங் மேற்பார்வையாளர் (Packing supervisor) தேவை. இலவச தங்குமிட வசதி மற்றும் சகாய விலையில் மூன்று வேளை உணவு பெற்றுக் கொள்ளும் வசதி. மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு. 076 6200300. 011463

வென்னப்புவ தும்பு சார்ந்த தொழிற்சாலைக்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஊழியர்கள் தேவை. உணவு/ தங்குமிடம் சலுகை விலையில் வார சம்பளம், மாதாந்தம் ரூ. 35000/ 40,000/ வரை பெறலாம். 077 1042510/ 077 0031534. 011296

2022ஆம் ஆண்டிற்காக ஹங்வெல்ல தொழிற்சாலை ஒன்றிற்கு கைஉதவியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். ஆண்கள் ரூபா 1500 பெண்கள் 1100. 0773 077813, 0722 273273. 010457

## பொது

### 426 தொழில் கல்வி

புளுமின் பட்ஸ் சமூக கண்காணிப்பு மன்றத்திற்கு செயற்றிட்டம் எழுதுவதற்கு ஆங்கிலம் சிறந்த திறமையுள்ள எமது செயற்றிட்டத்திற்கு மதிப்பீடு செய்து நிர்வகிப்பதற்கு இயலுமானவர்கள் தேவை. 388/ 1/ 1, பேஸ்லைன் வீதி, தெமட்டகொட. 0112 677641, 0771 529731, 0775 509641. 009351



மொனராகல, நுவரெலியா, கம்பஹா மாவட்டத்தை மையமாகக் கொண்டுள்ள புலுமின் பட்ஸ் சமூக ஒத்துழைப்பு மன்றத்தினால் செயற்படுத்தப்படும் "தவறவிடப்பட்ட கல்விக்கு கைகொடுத்தல்" என்ற கல்வி நிகழ்ச்சிக்கு தொண்டர் அடிப்படையில் உதவி செய்யக்கூடிய ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தேவை. மேலும் அந்த வேலைத் திட்டத்திற்கு ஏதேனும் வகையில் பங்களிப்பு செய்யக்கூடிய பரோபகாரிகள் தேவை. 388/ 1/ 1, பேஸ்லைன் வீதி, தெமட்டகொட, 011 2677641, 0703318641, 077 5509641 009320

### 432 நானாவிதப் பொருட்கள்

வவுனியாவில் குழாய்க்கிணறு நிர்மாணம் மன்னார் வீதி, வவுனியாவில் ஆலய வளாகத்தில் முழுமையான குழாய்க் கிணற்றை வழங்குவதற்கு விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. தயவு செய்து விலை மனுக்களை மின்னஞ்சள் செய்யவும் senaka.desoysa@srilankan.com அல்லது பதிவுத் தபாலில் அனுப்பவும். 53/38B, தர்மபால பிளேஸ், ராஜகிரிய குழாய்க்கிணற்றின் அதிகூடிய ஆழம் 100 அடி மட்டுமே. அழையுங்கள் 0710212648 009327

## சொந்த விடயம்

### 524 முத்திரைகள், நாணயங்கள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பழைய மற்றும் நவீன பணத்தாள்கள், முத்திரைகள், நாணயங்கள், சின்னங்கள். பதக்கங்கள். விமானத் தபால்கள் கொள்வனவு மற்றும் விற்பனை மாற்றம் மாதிரி நோட்டுகளுக்கு விஷேட விலைகள் தொடர்புகளுக்கு. 0777 997950. 010153

### 528 தங்குமிட வசதிகள்

காலி மாவட்டத்தின் போத்தல மற்றும் மொனராகல மாவட்டத்தில் புத்தல மிகவும் இதமான சூழலில் ஆரம்பித்து நடத்திச் செல்லப்படும் சமிந்து செவன முதியோர் பாதுகாப்பு நிலையத்திற்கு ஓய்வு பெற்ற, நோயாளியான, நோயற்ற அங்கவீனமான முதியோர் போலவே புத்தி சுவாதீனமற்ற 18 வயதுக்கு மேற்பட்டவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர். 0775509641, 0703318641, பதுவத்த, பலகொட, போத்தல, காலி. 009302

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

தொட்டலங்க வெல்லம்பிட்டிய வீதியில் பேலியகொட அதிவேக நுழைவுக்கு அருகில் சிலுவை சந்தியில் 12 பேர்ச்சில் அமைந்துள்ள முழுமையான வீடு விற்பனைக்கு. விலை 2 கோடி. தொடர்புகள் 0741508939. 010588

பன்னிப்பிட்டிய 18 பேர்ச் காணி விற்பனைக்கு. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள். 070 4808616. 010244

கொழும்பு5, நாரஹேன்பிட்ட, தாபரே மாவத்தை, 03 பேர்ச் காணியுடன் வீடொன்று விற்பனைக்கு. பிரதான பாடசாலைகள், எல்விட்டிகல வீதி, கிரிமண்டல வீதி, ராஜகிரிய வீதி, ரயில் நிலையம் ஆகியவற்றிற்கு அண்மையில் . தொ.பே. 07 5 9262609. 010796

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

ராகம மஹபாகே பிரதான வீதிக்கு முகப்பாக 19.5 பேர்ச் காணி விற்பனைக்கு. வியாபாரஸ்தலத்திற்கு மிகவும் பொருத்தமானது முழுப் பெறுமதி 320 லட்சம். பேசித்தீர்க்கலாம். தொடர்பு 076 9411089. 010579

வத்தளை ஹேகித்த தேசிய வீடமைப்புத் திட்டத்தில் இல. 43 வீட்டின் காணி 16.8 பேர்ச் கூடிய விலைக் கோரிக்கைக்கு. தொடர்பு 075 1644887, 076 2361308, 077 4298542. 009458



### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777438169 தொடம்வல 17 பேர்ச் வீடு, அருப்பல 14 பேர்ச் வீடு, நத்தரம்பொத்த 22 பேர்ச் வீடு, குண்டசாலை 24 பேர்ச் வீடு, யக்கஹபிட்டிய 40 பேர்ச் வீடு, கட்டுகஸ்தொட்ட 17 பேர்ச் வீடு. இவ்வீடுகள் 15 25 மில்லியனுக்கு இடையில். 10 30 பேர்ச் வெற்றுக் காணி உடரட்டசெதெல்ல, வேவெல்ல, அமுனுகம 1 பேர்ச் 3 இலட்சம் 5 இலட்சத்துக்கு இடையில். ஹரெகம வீதி 1 ஏக்கர் 10 மில்லியன். பேசித் தீர்க்கலாம். 0777282147. 008004

### 635 வீடு சொத்து அம்பாறை மாவட்டம் விற்பனைக்கு

கல்முனைக் குடியில் காணி விற்பனைக்கு. அலியார் வீதியில் பிரதான வீதிக்கு அருகில் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு அருகாமையில் 20 + பேர்ச் காணி அல்லது 4 சிறிய துண்டுகளாகவும் விற்பனைக்கு உண்டு. கூடிய விலைக் கோரிக்கைக்கு. தொடர்பு 0777 699207. 009807

### 660 வீடு சொத்து அம்பாறை மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

கல்முனை வீடு/சொத்து வாடகை, குத்தகைக்கு அலியார் வீதியில் பிரதான வீதி அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு அருகில் மூன்று படுக்கையறைகளுடன் வாகனங்களை நிறுத்தக்கூடிய ஓர் பெரிய தோட்டம் உள்ளடங்கலாக சகல வசதிகளுடன் பிராந்திய அல்லது கிளை செயற்பாடுகள், ஓர் கம்பனி அரச திணைக்களத்தின் பயிற்சி நிறுவனம் போன்றவற்றிக்கு மிகவும் பொருத்தமானது. அல்லது ஓர் தொழில்சார் குடும்பம். வைத்தியர்கள். பொறியியலாளர்களின் குடியிறுப்புக்கும் பொருத்தமானது. வாடகை பேசித்தீர்க்கலாம். தொடர்பு உரிமையாளர். 0777 503950. ஈமெயில் f areastlk@yahoo.com 009806

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343



வாங்கிவிட்டீர்களா?
வண்ண வானவில்
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
நாடெங்கும் பரபரப்பான விற்பனையில்!
50 ரூபாய் மட்டுமே
பெப்ரவரி மாத இதழ்
நெற்றித் திலகம் போல இது குடும்பத்துக்கான ஒரு முழுமையான பத்திரிகை
இலக்கியம், சிறுகதை, விளையாட்டு, சினமா, கவிதை, சிறுவர் பகுதி, எஸ்.எம்.எஸ் ஜோக்ஸ், நட்சத்திர அல்பம் என வாசிப்புக்கு ஏகப்பட்ட விஷயங்கள்!
ஏனைய பத்திரிகைகள் தயங்கும் இடங்களில் நெஞ்சு நிமிர்த்தும் துணிச்சல்...
LAKE HOUSE
பக்கத்துக்குப் பக்கம் இனிமை, இளமை, செழுமை
தனித்துவம் அது வானவில் முத்திரை!

# பெருந்தோட்ட அமைச்சு

**நிறுவனத் தோட்டங்களின் மறுசீரமைப்பு, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டம் சார்ந்த பயிர்ச்செய்கை மற்றும் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

# பதவி வெற்றிடங்கள்

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பதவி : பிரதிப் பொது முகாமையாளர் (அபிவிருத்தி) சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1)

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

**சம்பள அளவு** : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 80,295 - 15x2,270 = 144,345/- (மாதாந்தம்) சம்பள அளவு உரித்தாகும்.

இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தகைமைகள்** : வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / விவசாயம் / பெருந்தோட்ட முகாமைத்துவம்/ வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் தொடர்பான ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் / அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விவசாய அபிவிருத்தி / விவசாய விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு இயைபாக முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**அல்லது**

02. பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விவசாய அபிவிருத்தி / விவசாய விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு இயைபாக முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
02. தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் அபிவிருத்தி / விரிவாக்கல் நடவடிக்கைகள் தொடர்பான முகாமைத்துவ MM 1-1 சேவை வகுதியில் 1ஆந் தரப் பதவியொன்றில் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

## பதவி : பிரதிப் பொது முகாமையாளர் (விரிவாக்கல்) சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1)

**வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

**சம்பள அளவு** : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 80,295 - 15x2,270 = 144,345/- (மாதாந்தம்) சம்பள அளவு உரித்தாகும்.

இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தகைமைகள்** : வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயம் அல்லது பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் / அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விவசாய விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு இயைபாக முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**அல்லது**

02. பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விவசாய விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு இயைபாக முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
02. தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் அபிவிருத்தி / விரிவாக்கல் நடவடிக்கைகள் தொடர்பான முகாமைத்துவ MM 1-1 சேவை வகுதியில் 1ஆந் தரப் பதவியொன்றில் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆட்சேர்க்கும் முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| I. | இயைபுடைய அனுபவம் - | 30 புள்ளிகள் |
| II. | இயைபுடைய மேலதிகக் கல்வி / தொழில்சார் தகைமை | 30 புள்ளிகள |
| III. | ஏனைய செயற்திறன் மற்றும் திறமைகள் | 15 புள்ளிகள் |
| IV. | நேர்முகத் தேர்வின்போதான செயற்திறன் | 25 புள்ளிகள் |
| | **மொத்தப் புள்ளிகள்** | 100 புள்ளிகள் |

நேர்முகத் தேர்வின்போது பெற்றுக்கொள்ளும் புள்ளி வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும்.

## பதவி : உதவி முகாமையாளர் (நிர்வாகம்) முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-1)

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

**சம்பள அளவு** : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 53,175 – 10x1375 – 15x1910 – 95,575.00 (மாதாந்தம்) சம்பளம் உரித்தாகும்.

இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தகைமைகள்** : **(அ) வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / அரச முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் நிர்வாகம் / மனிதவள முகாமைத்துவத் துறையில் ஆகக்குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**(ஆ) உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள்

**அல்லது**

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் கனிஷ்ட முகாமைத்துவம் JM சேவை வகுதியின் மனிதவளம் மற்றும் நிர்வாகத்திற்கு இயைபான பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்புடைய சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**ஆட்சேர்க்கும் முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| I. | இயைபுடைய அனுபவம் - | 30 புள்ளிகள் |
| II. | இயைபுடைய மேலதிகக் கல்வி / தொழில்சார் தகைமை | 30 புள்ளிகள |
| III. | ஏனைய செயற்திறன் மற்றும் திறமைகள் | 15 புள்ளிகள் |
| IV. | நேர்முகத் தேர்வின்போதான செயற்திறன் | 25 புள்ளிகள் |
| | மொத்தப் புள்ளிகள் | 100 புள்ளிகள் |

நேர்முகத் தேர்வின்போது பெற்றுக்கொள்ளும் புள்ளி வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும்.

## பதவி : நிர்வாக அதிகாரி கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM I-I-II)

**வெற்றிட எண்ணிக்கை** : 02

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

**சம்பள அளவு** : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 42,600 – 10x755 – 18x1,135 – 70,580.00 (மாதாந்தம்) சம்பளம் உரித்தாகும்.

இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தகைமைகள்** : (அ) வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / அரச முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்

(ஆ) உள்வாரி விண்ணப்பதாரிகள்

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள்

**அல்லது**

நிர்வாக விடய நடவடிக்கைகள் தொடர்பாக தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் முகாமைத்துவ உதவியாளர் வகுதியில்: (தொழில்நுட்பம் அல்லாத) MA 1-2 சேவை வகுதியில் IIஆம் தரப் பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்புடைய சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஆட்சேர்க்கும் முறை** : நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வகையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**எழுத்து மூல போட்டிப் பரீட்சை**

**எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடப்பரப்புகள் பின்வருமாறாகும்.**

- மொழித் தேர்ச்சி
- உளச்சார்புப் பரீட்சை
- பதவிக்கு இயைபான வகையில் விடய அறிவு

**மொழித் தேர்ச்சி:**

வெளிப்படுத்தல், புரிந்துகொள்ளல், அரிச்சுவடு ஒழுங்கு, சரள இலக்கணப் பாவனை போன்ற விடயங்கள் தொடர்பில் அபேட்சகரின் அறிவை அளவிடுவதற்கான வினாப் பத்திரம்.

**உளச்சார்பு பரீட்சை:**

தமது உத்தியோகபூர்வ கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான அபேட்சகரின் உளச்சார்பையும் இயலுமையையும் அளவிடுவதற்கான வினாப் பத்திரம்.

**பதவிக்கு இயைபான வகையிலான விடய அறிவு:**

பதவிக்கு இயைபான வகையில் குறித்த விடயங்கள் தொடர்பில் அபேட்சகரின் அறிவை அளவிடுவதற்கான வினாப் பத்திரம்.

பரீட்சையில் சித்தியடைவதற்கு அபேட்சகர்கள் ஒரு விடயத்தில் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகையாக 50% ஆகக்குறைந்தது பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும்**

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேரிவில் பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| I | இயைபுடைய அனுபவம் - | 30 புள்ளிகள் |
| II | இயைபுடைய மேலதிகத் தகைமை | 30 புள்ளிகள |
| III | ஏனைய செயற்திறன் மற்றும் திறமைகள் | 15 புள்ளிகள் |
| IV | நேர்முகத் தேர்வின்போது காட்டும் திறமை | 25 புள்ளிகள் |
| | **மொத்தப் புள்ளிகள்** | 100 புள்ளிகள் |

நேர்முகத் தேர்வின்போது பெற்றுக்கொள்ளும் புள்ளி வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும்.

- எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும் போது போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட 60% மொத்தப் புள்ளிகள் மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்றுகொண்ட 40% புள்ளிகள் எனும் வகையில் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வினால் மட்டும் தெரிவு செய்யப்படும் போது வெறுமனே அந்த நேர்முகத் தேர்வில் பெற்றுக்கொள்ளப்படும் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**ஏனையவை** : அனைத்து ஆட்சேர்ப்பு தொடர்பாகவும் நிறுவன கடமைசார் ஒழுங்குவிதி கோவையின் விதிமுறைகள் உரித்தாகும்.

**மேலதிக அனுகூலம்** : தங்கியிருந்து மற்றும் வெளிவாரியாக சிகிச்சை பெறும் மருத்துவத் திட்டத்தின் கீழான வசதிகள்

1958இன் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் மற்றும் அல்லது அச்சட்டத்தின் கீழ் உள்ள ஊழியர்களின் வேறு சேமலாப நிதிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரரினால் சிறு பற்றுநிலங்கள் அதிகார சபையில் சேவையாற்றும் முழுமையான காலத்திற்கு அவரின் முழுமையான மாதச் சம்பளத்தின் 10% த்திற்குக் குறையாத தொகை செலுத்தப்படும் என்பதுடன் அதிகார சபையினால் 15% த்திற்குக் குறையாத தொகை அங்கத்துவத் தொகையாகச் செலுத்தப்படும்.

இதற்கு மேலதிகதாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% அதிகார சபையினால் செலுத்தப்படும்.

**விண்ணப்பப்படிவம்** : விண்ணப்பதாரர்கள் தமது அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய விண்ணப்பங்களை பிறப்புச் சான்றிதழ் மற்றும் கல்விச் சான்றிதழ் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அரச / அரச கூட்டுத்தாபனம் / நியாயாதிக்கச் சபைகளில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது நிறுவனத் தலைமையின் ஊடாக அவர்களின் சிபாரிசு சகிதம் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும்**

**இறுதி நாள்** : 2022 பெப்ரவரி 26ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழக் குறிப்பிடப்பட்டுள்ளவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 70, பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**

# ரணபிம

# றோயல் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதித்தல் – 2022

2022 ஆண்டிற்கான கன்னொருவ றோயல் கல்லூரிக்கு தரம் 6 இற்கான மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான போட்டிப் பரீட்சைக்காக நிகழ் நிலை (Online) முறையில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். ஆகவே https://exam.cpedu.lk என்னும் இணையதளத்திற்கு பிரவேசித்து பாடசாலை அதிபரின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2022.02.25 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர்**

## இலங்கை கடற்படை

**இலங்கை கடற்படை – 19 பயன்படுத்தப்பட்ட 200 HP YAMAHA வெளிப்புற மின்பொறிகள் விற்பனைக்கான விலைமனு**

1. பயன்படுத்தப்பட்ட 200 HP YAMAHA வெளிப்புற மின்பொறிகள் விற்பனைக்காக **2022 மார்ச் 08 ஆம் திகதி 14.00 மணி** வரை இலங்கை கடற்படை தலைமையகம், **தபால் பெட்டி 593, கொழும்பு 01** இல் திணைக்கள பெறுகைக் குழு தலைவர் மூலம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படுகின்றன.
2. **SLNS "கெமுனு" வெலிசர, ராகம என்ற முகவரியில் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர். (களஞ்சிய முகாமை) அலுவலகத்தில்** இலவசமாக விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
3. **இலங்கை கடற்படை , கடற்படை தலைமையகம், கொழும்பு 01** இல் **10.00 மணி** தொடக்கம் **11.00 மணி** வரை வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணம் **1000.00 ரூபாவை** செலுத்திய பின் **SLNS மஹசென், வெலிசர, ராகம** கடற்படைத் தளத்தில் வைக்கப்பட்டுள்ள 19 பயன்படுத்தப்பட்ட 200 HP YAMAHA வெளிப்புற மின்பொறிகளை பரீட்சிக்க முன் அனுமதியை பெற முடியும். வெளிப்புற மின்பொறிகளை பார்வையிட எதிர்பார்ப்பவர்கள் தமது தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டை எடுத்துவர வேண்டும்.
4. கடற்படை தலைமையகம், கொழும்பு 01 இல் நிதிப் பணிப்பாளருக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.5,000.00 வை** செலுத்துவதன் மூலம் **2022 மார்ச் 07 அன்று 1500 மணி** வரை வேலை நாட்களில் **SLNS** கெமுனு வெலிசர, ராகமவில் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர். (களஞ்சிய முகாமை) மூலம் விலைமனு படிவங்கள் வழங்கப்படும்.
5. விலைமனுக்கள் **2022 மார்ச் 08 ஆம் திகதி 1400 மணி** வரை ஏற்கப்படுவதோடு அதன் பின்னர் தபால் பெட்டி 593, கொழும்பு 01, இலங்கை கடற்படை தலைமையகத்தில் விரைவாக அவை திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதி விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் பங்கேற்கலாம்.
6. மேலதிக விபரங்களுக்கு, சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (களஞ்சிய முகாமை) **தொ. பே. 0117170800 / 0117193375** அல்லது SLNS இணையதளம் **http: tender.navy.lk** ——→ Tenders ——→ Local Tenders என்ற விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை கடற்படை தலைமையகம்**
**தபால் பெட்டி 593,**
**கொழும்பு 01.**

Publish your Classified ad in our Newspapers at a bearable amount

* For 15 Words

| | | |
|---|---|---|
| Sunday Observer ADZ + | | Rs. 700/- - Rs. 20/- for each additional word |
| Sunday Observer ADZ + Daily News | | Rs. 550/- - Rs.20/- for each additional word |
| + The Dinamina | | Rs. 550/- - Rs.20/- for each additional word |
| Sunday Observer ADZ + தினகரன் | | Rs. 600/- - Rs.20/- for each additional word |
| + தினகரன் | | Rs. 600/- - Rs.20/- for each additional word |
| Daily News + தினகரன் | | Rs. 250/- - Rs.10/- for each additional word |
| The Dinamina + தினகரன் | | Rs. 250/- - Rs.10/- for each additional word |

E-Mail your Classified ad to classified@lakehouse.lk

The convenient way to make your payment:- BOC - Acc.No. 000000377 LAKE HOUSE BRANCH Green light for Online Transfer

For more Details - Ramani - 077 7 278 948 / Piyumi - 011 2 429 383 Gayani - 011 2 429 347

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 348

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 06 |
| | 06 | | 07 | 08 | 09 |
| 10 | | 11 | 12 | 13 | |
| 14 | 15 | 16 | 17 | | 18 |
| 19 | | 20 | | | 21 |
| 22 | 23 | 24 | | 25 | 26 |

பெயர் ....................................................
வகுப்பு ....................................................
பாடசாலை பெயர் ....................................................
பாடசாலை முகவரி ....................................................
....................................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) நாவுக்குச் சுவையாக உணவைத் தயாரிக்கும் கலை இது. அன்றைய காலத்தில் பெண்களுக்கு மட்டுமே உரிய கலையாக இருந்தது. ஆனால் இன்று ஆண்களும் நிகராக வந்து விட்டனர்.
(07) மலையிலிருந்து ஊற்றெடுத்து, தரையில் பாய்ந்தோடும் நீரூற்று. (தலைகீழான சொல்)
(11) தீ, அக்கினி, நெருப்பு என்றெல்லாம் சொல்லக் கூடிய மற்றொரு சொல். (தலைகீழான சொல்)
(14) பயணம் செய்வதற்கான வாகனம். (தலைகீழான சொல்)
(22) மரங்கள் போன்றவற்றில் சமுதாய வாழியாக கூடு கட்டி வாழும் பூச்சி இனம். இந்தக் கூடு கலைந்து விட்டால் அவ்வளவுதான். அத்தனையும் பறந்து வந்து நம்மைக் கொட்டி விடும். மருத்துவ சிகிச்சைக்குத்தான் நாம் செல்ல வேண்டியிருக்கும்.
(25) தரையில் வாழும் மிகப் பெரும் காட்டு மிருகம்.

**மேலிருந்து கீழ்**

(02) கிளி போல இதுவும் பேசும். மரப்பொந்துதான் இப்பறவையின் வசிப்பிடம்.
(04) வெயில் நேரத்தில் சிறிய மழைத்தூறலின் போது, சூரியனின் எதிர்த்திசையில் வானத்தில் அவதானிக்கக் கூடிய வண்ணஜாலம். (தலைகீழான சொல்)
(05) குளத்தில் நீரைத் தேக்கி வைப்பதற்காக சுற்றிவர அமைக்கப்படுவது இது. (தலைகீழான சொல்)
(08) அணுவின் உள்ளே, முட்டையின் உள்ளே, உயிர்க் கலங்களின் உள்ளே இருப்பது. (தலைகீழான சொல்)
(10) நுளம்பின் வாழ்க்கை வட்டத்தில் இரண்டாவது பருவம் இது. (தலைகீழான சொல்)
(11) விண்ணில் இருந்து புவியை நோக்கி வருகின்ற சிறுகற்கள் இப்பெயர் பெறும். வேகமாக வருகின்ற இக்கற்கள் புவியின் சுற்றுவட்டப் பாதைக்குள் வந்ததும் எரிந்து போய் சாம்பலாகி விடும். (தலைகீழான சொல்)
(18) இலங்கையில் இத்தாவரம் பிரதானமானது. கிளைகள் இன்றி நேராக, உயரமாக வளர்கின்ற தாவரம் இது. எமக்கு மிகவும் பயன்களைத் தருகின்ற மரம்.

**போட்டி இல. 348**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 347

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சுதந்திரம் 07. வளை 11. காளை
15. வதனம் 19. லட்டு 24. ஏன்

**மேலிருந்து கீழ்**

01. சுளை 02. தவளை 04. பாதி
06. சம்பளம் 12. காவலன் 14. கடுகு

## புதிதாக ஆரம்பமாகும் சிறுவருக்கான குறுக்கெழுத்துப் போட்டி

உங்கள் அபிமான மஞ்சரி சிறுவர் உலகம் குறுக்கழுத்துப் போட்டியை எதிர்வரும் மார்ச் 06ம் திகதியில் இருந்து முதலாம் இலக்கத்தில் இருந்து ஆரம்பிக்கவுள்ளோம்.
பரிசுகளும் உங்களுக்காக காத்திருக்கிறது.

| | |
|---|---|
| **முதல் பரிசு** | ரூ. 500/ |
| **இரண்டாம் பரிசு** | ரூ. 350/ |
| **மூன்றாம் பரிசு** | ரூ. 250/ |

தயவு செய்து நீங்கள் அனுப்பும் கூப்பனுடன் உங்கள் சொந்த தபால் முகவரி, உங்களுடைய வங்கி சேமிப்பு புத்தக கணக்கு இலக்கம், வங்கியின் பெயர், கிளை என்பனவற்றையும் குறிப்பிட மறக்க வேண்டாம். சேமிப்பு புத்தகம் இல்லாதவர்களுக்கு காசோலை அனுப்பி வைக்கப்படும். பெயர் முகவரியை ஆங்கிலத்தில் தெளிவாகக் குறிப்பிடுவது வசதியாக இருக்கும். (ஆ -ர்)



குறளமுதம் :

**சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க**
**சொல்லின் பயனிலாச் சொல்.**

**தெளிவுரை :**
சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும்; பயன் இல்லாதவைகளாகிய சொற்களைச் சொல்லவே கூடாது.

## சமுத்திரங்கள்



உலகில் 70.8% ஆனவை சமுத்திரங்களாக காணப்படுகின்றன. இந்த சமுத்திரங்களின் சராசரி வெப்பநிலை 3.9 செல்ஸியஸ் ஆகும். இவற்றில் ஆட்டிக் சமுத்திரம், பசுபிக் சமுத்திரம், இந்து சமுத்திரம், அத்திலாந்திக் சமுத்திரம், தென் சமுத்திரம் முக்கியத்துவமிக்கன. இந்த சமுத்திரங்களின் பரப்பளவு 3611132000 கிலோமீட்டர் ஆகும்.

உலகின் பெரிய பசுபிக் சமுத்திரமானது 168723000 கிலோமீட்டர் பரப்பையும் 4028 மீட்டர் ஆழத்தையும் கொண்டுள்ளது.

இதில் பேரிங் கடல், பிஸ்மார்க் கடல், செலிபஸ்கடல், கோரல், தென் சீனக்கடல், கிழக்கு ,சீன கடல், ஜப்பான் கடல், ஒக்கோட்ஸ் கடல், யாவா கடல், பிலிப்பைன்ஸ் கடல், சுழுக்கடல், தஸ்மான் கடல், மஞ்சள் கடல் ஆகியன காணப்படுகின்றன. இது ஆசியா, அவுஸ்திரேலியா, வட அமெரிக்கா, ஓசானியா ஆகியவற்றிற்கு இடையில் அமைந்துள்ளது.

அந்தாடிக்கா கண்டத்தில் அமைந்துள்ள தென் சமுத்திரமானது, 21960000 கிலோமீட்டர் பரப்பையும் 40005000 மீட்டர் ஆழத்தையும் கொண்டுள்ளது. இச்சமுத்திரத்தில் அமுண்ட்ஷன் கடல், டேவிஸ் நீரிணை, பெலிஞ்சன் கடல், கொஸ்மாநாட் கடல், லசார்ப் கடல், மால்சான் கடல், சோமங் கடல், றோங்கடல் ஆகியன காணப்படுகின்றன. அத்துடன் பனிப்படலங்கள் அதிகம் கொண்டதாகவும் உலகில் 2ஆவது மிகச் சிறிய சமுத்திரமாகவும் காணப்படுகின்றது.

அத்திலாந்திக் சமுத்திரமானது 85133000 கிலோமீட்டர் பரப்பையும் 3926 மீட்டர் ஆழத்தையும் கொண்டுள்ளது. இச்சமுத்திரத்தில் ஆர்ஜென்டினா கடல், பால்ட்டிக் கடல், கருங்கடல், கஸ்பியன் கடல், கரீபியன் கடல், மெக்சிகோ வளைகுடா, கிரீன்லாந்து, கட்சன் குடா, லப்பிடறோர் ஆகியன காணப்படுகின்றன. இது தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, ஐரோப்பா ஆகியனவற்றிற்கு இடையில் காணப்படுகின்றது.

இந்து சமுத்திரமானது 70560000 கிலோமீட்டர் பரப்பையும் 3963 மீட்டர் ஆழத்தையும் கொண்டுள்ளது. இச்சமுத்திரத்தில் அரேபியன் கடல், அந்தமான் கடல், பெர்சியன் கடல், வங்கக்கடல், ஓமான் கடல், ஏடன் கடல், குச் கடல், மன்னார் வளைகுடா ஆகியன காணப்படுகின்றன. இச்சமுத்திரம் இந்தியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகியவற்றுக்கிடையில் வியாபித்துள்ளது.

ஆட்டிக் சமுத்திரத்தினை அவதானிக்குமிடத்து இது 15558000 கிலோமீட்டர் பரப்பினையும் 1205 மீட்டர் ஆழத்தினையும் கொண்டு காணப்படுகின்றது. இதில் காரகடல், பாவிங்கடல், பிரண்ட்ஸ் கடல், சுகிசி கடல், லிங்கோலின் கடல், பச்சரோ கடல், வெண்கடல் ஆகியன வியாபித்துள்ளன. இது உலகின் சிறிய சமுத்திரமாக காணப்படுகின்றது.

சமுத்திரங்களின் முக்கியத்துவங்கள்
1) சக்தியினை உருவாக்க பயன்படுகின்றது.
2) பெற்றோலிய உற்பத்திக்கு உதவுகின்றது.
3) மருத்துவ தேவை
4) மீன்பிடி உற்பத்திக்கு பயன்படுகின்றது
5) சுற்றுலா விருத்திக்கு உதவுகின்றது.
6) உணவு தேவைக்கு பயன்படுகின்றது.
7) காலநிலையினையும் வெப்பநிலையையும் சீர் செய்ய உதவுகின்றது.
8) நீரைப்பெற உதவுகின்றது.
9) போக்குவரத்து தேவைக்கு பயன்படுகின்றது.
10) உயிர்பல்வகைமையை பாதுகாக்க பயன்படுகின்றது.

**வினோ மதிவதனி,**
லுனுகலை.

## இவ்வார மழலை



தியாஸ்ரீ

பத்மாராஜ் - சிந்தூரி ,
கபிதாவத்தை, கொழும்பு -10.

## சிறுவர் சித்திரங்கள்



**எஸ். ஹவிந்திரன்,**
தரம் 13, ஸ்ரீசண்முகா தமிழ் மகா வித்தியாலயம்,
மொனராகலை.



**ப. தியாஸ்ரீ,**
எக்ஸலென்ஸ் பாலர் பாடசாலை,
கொழும்பு 13.



**எஸ். பாத்திமா சுஹாத்,**
தரம் 05, தி/கின் யூசுப் வித்தியாலயம்,
கின்னியா.



**T. தனுஷ்கர்,**
தரம் 07, குளோபல் சர்வதேச பாடசாலை,
மட்டக்குளி. கொழும்பு -15.



## வசீகரிக்கும் வானவில்லே!

வசீகரிக்கும் வானவில்லே
வந்து போக மாட்டாயா
வாரி உன்னை அணைத்திடவே
வரமொன்று தாராயோ

மழைக்குப்பின் வானில் தோன்றி
மனதைக் கொள்ளை கொள்கின்றாய்
மண்ணில் உள்ள யாவருக்கும்
மகிழ்வை அள்ளித் தருகின்றாய்

ஏழு அழகு நிறங்களில்
எட்டா உயரம் இருக்கின்றாம்
எங்கள் வீட்டு முற்றத்தில்
இறங்கி வர மாட்டாயோ

என்னுடன் பள்ளி போய் வரவே
இணைந்து வர மாட்டாயோ
எனக்கு படம் வரைவதற்கு
ஏழு நிறம் தாராயோ

உந்தன் வில்லை எனக்கெடுத்து
அம்பு தொடுக்க தாராயோ
ஒவ்வொரு நாளும் உன்னை பார்க்க
விண்ணில் உலா வாராயோ

மாரியில் உன்னை கண்டவுடன்
மனதில் மகிழ்ச்சி அடைகின்றோம்
கோடையில் உன்னை பார்த்திடவே
குதூகலமாய் இருக்கின்றோம்..!

**கபிலகன்,**
லுனுகலை.

## புள்ளி மான்!

புள்ளி மானே அருகில் வா
புல்லுத் தருவேன் விரைவில் வா
துள்ளித் துள்ளித் தாவி வா
தொட்டுப் பார்க்க ஆசை வா!

சுதந்திரமாகச் சுற்றி வா
சுகமாக எங்கும் சென்று வா
புதிய காட்சி கண்டு வா
புள்ளிக் கோலம் கொண்டுவா!

மிரளும் பார்வை வேண்டாம் வா
மனதுக்கு மகிழ்ச்சி சேர்க்கவா
மின்னும் உடலைக் காட்டவா
மின்னல் போல பாய்ந்து வா..!

**அஸ்மா பாரிஸ்,**
மள்வானை.

## பொது அறிவு

- பறக்கும் ஆபரணம் என அழைக்கப்படும் பறவை எது?
  **ஹம்மிங் பேர்ட்**
- சீனாவில் துக்கத்தை குறிக்கும் நிறம் எது?
  **வெள்ளை**
- தாஜ்மஹால் எந்த நதிக்கரையில் அமைந்துள்ளது?
  **யமுனை நதிக்கரையில்**
- நீரில்லாமல் நிலத்தில் பல நாள் வாழும் மீனினம் எது?
  **விலாங்கு மீன்**
- ஆயுர்வேத மருத்துவ முறையை கண்டு பிடித்தவர் யார்?
  **தன்வந்திரி**
- இந்தியாவின் கவிக்குயில் யார்?
  **சரோஜினி நாயுடு**
- மனித உடலில் காணப்படும் கடினமான பொருள் எது?
  **பற்களைச் சுற்றியுள்ள எனாமல்**

**கே.எல். ஹில்மி,**
தேசிய பாடசாலை,
சம்மாந்துறை.





மாத்தளை கல்வி வலயத்திற்குட்பட்ட மஹாலெவகந்த தமிழ் வித்தியாலயத்தில் ஒளிவிழா வித்தியாலய அதிபர் திருமதி சிரோஷினி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாத்தளை கோட்டக் கல்வி பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு



## மகளிர் 50 ஓவர் உலகக் கிண்ண போட்டி

# மார்ச் மாதம் நியூசிலாந்தில் ஆரம்பம்




எட்டு நாடுகள் பங்குபற்றும் மகளிர் 50 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி மார்ச் 4ஆம் திகதி நியூசிலாந்தில் ஆரம்பமாவுள்ளது. கடந்த வருடம் நடைபெற இருந்த இந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி கொவிட்–19 தொற்று காரணமாக இந்த வருடத்துக்கு பிற்போடப்பட்டது.

மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான கால அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் பேரவை புதன்கிழமை (09) வெளியிட்டது. இதற்கு அமைய டவ்ரங்கா, பே ஓவல் விளையாட்டரங்கில் மார்ச் 4ஆம் திகதி நடைபெறவுள்ள ஆரம்பப் போட்டியில் போட்டியை நடத்தும் நாடானா நியூஸிலாந்தை மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதவுள்ளன.

பரம எதிரிகள் மோதும் மிக முக்கிய 2 போட்டிகள் அடுத்த இரண்டு தினங்களில் நடைபெறவுள்ளன.

நடப்பு உலக சம்பியன் இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான போட்டி ஹெமில்டன் செடன் பார்க் அரங்கில் மார்ச் 5ஆம் திகதியும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போட்டி டவ்ரங்கா, பே ஓவல் மைதானத்தில் மார்ச் 6ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

மார்ச் 4ஆம் திகதி முதல் இறுதிப் போட்டி நடைபெறவுள்ள ஏப்ரல் 3ஆம் திகதி வரை 31 தினங்கள் நீடிக்கும் மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட்டில் மொத்தம் 31 போட்டிகள் ஒக்லண்ட், கிறைஸ்ட்சேர்ச், டனேடின், ஹெமில்டன், டவ்ரங்கா, வெலிங்டன் ஆகிய மைதானங்களில் நடைபெறும்.

ஐசிசி மகளிர் சம்பியன்ஷிப் 20172020 போட்டி முடிவுகளின் பிரகாரம் தரவரிசையில் முதல் 4 இடங்களைப் பிடித்த அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் நேரடியாக மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்குபற்ற தகுதிபெற்றன. போட்டியை நடத்தும் நாடானான நியூஸிலாந்தும் நேரடி தகுதியைப் பெற்றுக்கொண்டது.

இலங்கையிலிருந்து இடம் மாற்றப்பட்டு சிம்பாப்வேயில் நடைபெறவிருந்த 2021 மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டி கொவிட் காரணமாக இடைநடுவில் கைவிடப்பட்டது. இதன் காரணமாக மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் 6, 7, 8ஆம் இடங்களிலிருந்த பங்களாதேஷ், பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் ஆகியன உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்குபற்ற தகுதிபெற்றன.

இந்த எட்டு நாடுகளும் லீக் சுற்றில் ஒன்றையொன்று எதிர்த்தாடும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பெறும் நாடுகள் அரை இறுதிகளில் விளையாட தகுதிபெறும்.

முதலாவது அரை இறுதிப் போட்டி வெலிங்டன், பேசின் ரிசேர்வ் மைதானத்தில் மார்ச் 30ஆம் திகதியும் 2ஆவது அரை இறுதிப் போட்டி மார்ச் 31ஆம் திகதியும் இறுதிப் போட்டி ஏப்ரல் 3ஆம் திகதியும் நடைபெறும். இந்த 2 போட்டிகளும் கிறைஸ்ட்சேர்ச், ஹெக்லி ஓவல் மைதானத்தில் நடைபெறும். 2017இல் நடைபெற்ற மகளிர் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவை 9 ஓட்டங்களால் வெற்றிகொண்டு இங்கிலாந்து சம்பியனாகியிருந்தது.

மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியானது கொவிட் – 19 நடைபெறும் இரண்டாவது மகளிர் உலக கிரிக்கெட் போட்டி நிகழ்ச்சியாகும். இதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் 2020 மார்ச் மாதம் மகளிர் இருபது 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டிருந்தது. இறுதிப் போட்டியில் இந்தியாவை இலகுவாக வெற்றிகொண்டு அவுஸ்திரேலியா இருபது 20 உலக சம்பியனாகி இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

# சுதந்திரக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர்: வட, சப்ரகமுவ மாகாணங்கள் முன்னிலையில்!




விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் விளையாட்டுக் கொள்கைகளுக்கிணங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாகாணங்களுக்கிடையிலான நடைபெறும் சுதந்திரக்கிண்ண உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடர் கடந்த மாதம் குருநாகல் மாளிகாபிட்டிய மைதானத்தில் ஆரம்பமானது. எல்லாக் கிராமங்களிலுள்ள உதைபந்தாட்ட சிரேஷ்ட வீரர்களையும் இளம் வீரர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு கிராமங்களிமுள்ள 19 வயதின் கீழ், 21 வயதின் கீழ் பாடசாலை விளையாட்டு வீரர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில் இத் தொடர் நடைபெற்று வருகிறது. இத்தொடரில் எட்டு அணிகள் ஏழு கட்டங்களாக முக்கிய நகரங்களை மையப்படுத்தி போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. கடந்த வாரம் பதுளை நகரில் 4ம் கட்ட ஆட்டங்கள் முடிவுக்கு வந்தன. எனவே ஒவ்வொரு அணியும் 4 போட்டிகளில் விளையாடியுள்ள நிலையில் வடக்கு, சப்ரகமுவ, கிழக்கு அணிகள் தோல்விகளைச் சந்திக்காமல் முன்னிலையிலுள்ளது. வட மாகாண அணி தான் சந்தித்த 4 போட்டிகளில் மூன்று வெற்றிகள் ஒரு சம நிலை முடிவுடன் முதலிடத்திலும், 2 வெற்றிகள், 2 சமநிலை முடிவுடன் சப்ரகமுவ அணி இரண்டாவது இடத்திலும், ஒரு வெற்றி, மூன்று சமநிலை முடிவுகளுடன் கிழக்கு மாகாண அணி மூன்றாவது இடத்திலுமுள்ளன. அதிகமாக தேசிய அணி வீரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மேல் மாகாண அணி தொடரில் ஒரு வெற்றியை மட்டுமே பெற்றுள்ளதுடன் இரு போட்டிகளில் தோல்வியுற்றது. இன்னும் 3 கட்ட சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் ஒவ்வொரு அணியும் இன்னும் 3 போட்டிகளில் மோதவுள்ளதால் இறுதி நேரத்தில் புள்ளிப்பட்டியலில் மாற்றங்கள் ஏற்படவாய்புள்ளது.

இத்தொடரில் வட மாகாண அணி வீரர் எஸ். நிதர்ஷன் ஒரு ஹெட்ரிக் கோல்களுடன் 4 கோல்களைப் பெற்று முதலிடத்திலுள்ளார். சப்ரகமுவ மாகாண அணி வீரர் மொஹம்மட் முஸ்பீக், மேல் மாகாண வீரர் மொஹம்மட் ஹஸ்மீர், தென்மாகாண அணி வீரர் சுபுன் தனஞ்சய ஆகியோர் தலா மூனறு கோல்களைப் பெற்றள்ளனர். மேல் மாகாண அணி வீரர் நவீட் ஜுட் மற்றும் ஊவா மாகாண அணியின் இளம் வீரர் பிராஸ் சஹீர் ஆகியோர் தலா இரு கோல்கள் வீதம் பெற்றுள்னர்.

கடந்த மாதம் 25ம் திகதி மாலையில் தொடரின் அங்குரார்ப்பண போட்டியில் கிழக்கு மத்திய மாகாண அணிகள் மோதின. இப்போட்டியில் இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதிக்கொண்டன. இரு அணி வீரர்களும் எதிரணியின் கோல் எல்லையை பல முறை ஆக்கிரமிப்புச் செய்தும் கோல் பெற முடியவில்லை. மத்திய மாகாண அணி கோல் காப்பாளர் கிஹான் குருகுலசூரிய எதிரணியின் கோல் பெறும் பல வாய்ப்புக்களை லாவகமாகத் தடுத்தார். கிழக்கு மாகாணத்துக்காக விளையாடிய தேசிய அணி வீரர்களான மொஹம்மட் ரிப்கான், முஸ்டாக்கும் சிறப்பாக விளையாடினர். இறுதியில் இரு அணிகளாலும் கோல் பெறமுடியாமல் சம நிலையில் முடிவுற்றது.

அன்று இரவு நடைபெற்ற ரஜரட்ட அணிக்கும் ஊவா அணிக்குமிடையில் நடைபெற்ற தொடரின் இரண்டாவது போட்டியில் ஊவா மாகாணம் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இத்தொடரின் முதல் வெற்றியைப் பதிவு செய்தது. ஊவா அணியின் இளம் வீரரான பதுளை ஊவா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 18 வயது பிராஸ் ஷஹிர் போட்டியின் 10வது நிமிடத்தில் தனது அணிக்கான வெற்றி கோலைப் பெற்றுக்கொடுத்தார். இளம் வீரர்களை ஊக்கப்படுத்தவும், அவர்களின் திறமையை வளர்த்துக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கும் வகையில் ஒவ்வொரு அணியிலும் 19 வயதுக்குட்ட வீரர் ஒருவர் கட்டாயமாக விளையாட வேண்டும் என்ற விளையாட்டு அமைச்சின் நிபந்தனையின் கீழ் இளம் வீரர்கள் சேர்த்துக்கொள்ளப்படடுள்ளது குறிப்பிடத்தக்கது. இவர் அண்மையில் முடிவுற்ற சுப்பர் லீக் உதைபந்தாட்ட லீக் தொடரில் மலையக அணிக்காக விளையாடினார். சிறந்த வீரரான இவர் இளவயது முதல் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தொடரின் மூன்றாவது போட்டி வடக்கு மற்றும் சப்ரகமுவ மாகாண அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இப்போட்டியில் இரு அணிகளாகும் கோல் பெற முடியாது போக சம நிலையில் முடிவுற்றது.

மேல் மற்றும் தென் மாகாண அணிகளுக்கிடையிலான தொடரின் 4வது போட்டி குருநாகல் மாளிகாபிட்டிய மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் முதல் பாதி முடிவில் மேல்மாகாண அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. போட்டியின் 16 நிமிடத்தில் மேல்மாகாண அணி வீரர் முஹம்மட் ஹஸ்மீர் முதல் கோலை பெற்றார். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் இரண்டாவது பாதியில் மேல் மாகாண அணி வெற்றி பெறும் என்ற நிலையில் இறுதி நேரத்தில் தென் மாகாண அணியில் மாற்றுவீரராக மைதானம் நுழைந்த எச். எஸ். ஷசித் 89வது நிமிடத்தில் தமது அணிக்காக ஒரு கோலைப் பெற்றதன் மூலம் அப்போட்டியும் 1-1 என்ற கோல்கணக்கில் சமநிலையில் முடிவுற்றது.

மொத்தம் எழு கட்டங்களாக நடைபெறவுள்ள இத் தொடரில் குருநாகலில் நடைபெற்ற முதலாவது கட்டத்தில் ஊவா மாகாண அணி மாத்திரமே வெற்றிபெற்றது.

2ம் கட்டப் போட்டிகள் கடந்த 29ம் 30 திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்திலும், அரியாலை மைதானத்திலும் நடைபெற்றன. மேல்மாகாணமத்திய மாகாணங்களுக்கிடையில் யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நடைபெற்ற தொடரின் 5வது போட்டியில் மேல்மாகாண அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. பாணந்துறை லைசியம் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவன் 18வயது ஸஜுட் ஜாகூக் போட்டியின் 43 நிமிடத்தில் தனது அணிக்காக முதல் கோலைப் பெற்றுக்கொடுத்தார். முதல் பாதியில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற மேல் மாகாண அணி இரண்டாவது பாதியிலும் 49 நிமிடத்தில் மொஹம்மட் ஹஸ்மீர், (இது இவர் இத்தொடரில் பெறும் 2வது கோல்) 90வது நிமிடத்தில் நவின் ஜுட் ஆகியோர் தமது அணிக்கான கோல்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

யாழ்ப்பாணம் அரியாலை மைதானத்தில் நடைபெற்ற தென்-சப்ரகமுவ மாகாண அணிகளுக்கிடையிலான போட்டியில் சப்ரகமுவ மாகாண அணி 1-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றியைப் பதிவு செய்தது. முதல் பாதியில் சரி சமமாக மோதிக்கொண்ட இரு அணியினரும் கோலுக்கான வாய்ப்பினைப் பெறவில்லை. 2ம் பாதியில் 58ம் நிமிடத்தில் மொஹம்மட் முஸ்பீக் தமது அணிக்கான வெற்றி கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

போட்டித் தொடரின் 7வது போட்டியாக யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் ஊவா வடக்கு மாகாண அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் வடக்கு அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. சுமார் 6 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் தர உதைபந்தாட்டப் போட்டியொன்றில் மண்ணின் மைந்தர்கள் விளையாடும் போட்டியாக இது அமைந்தது. தமது சொந்த மண்ணில் தமது இரசிகர்களின் கரகோஷத்துக்கு மத்தியில் போட்டியின் 35வது நிமிடத்தில் அவ்வணி இளம் வீரர் கே. தெனுஷான் தமது அணிக்கான முதல் கோலைப் பெற்றுக்கொடுத்து முதல் பாதியில் தமது அணி முன்னிலை பெற உதவினார். சுறுசுறுப்பாக நடைபெற்ற இரண்டாம் பாதியில்






71வது நிமிடத்தில் வி. கீதான் தனது அணிக்காக இன்னொரு கோலைப் பெற வடமாகாண அணி 2-0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. அன்று அரியாலை மைதானத்தில் நடைபெற்ற ரஜரட்ட மற்றும் கிழக்கு மாகாண அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது. போட்டியின் 15 நிமிடத்தில் மொஹம்மட் பியாஸ் கிழக்கு மாகாண அணிக்கான கோலைப் பெற்றுக்கொடுத்தார். விறுவிறுப்பாக நடைபெற்ற இரண்டாவது பாதியில் 73வது நிமிடத்தில் ரஜரட்ட வீரர் என். என். மொஹம்மட் அவ்வணிக்கான கோலைப் பெற்றுக்கொடுக்க இறுதியில் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

இரண்டாம் கட்ட போட்டிகள் முடிவுற்ற நிலையில் ஒரு வெற்றி ஒரு சமநிலையுடன் மேல்மாகாண அணி முதலிடத்திலும், ஒரு வெற்றி ஒரு சமநிலையுடன் வட மாகாண அணி இரண்டாமிடத்திலும், ஒரு வெற்றி ஒரு தோல்வியுடன் ஊவா மாகாண அணி மூன்றாவது இடத்திலிருந்தன.

இத்தொடரின் மூன்றாவது கட்டம் திருகோமலை, கந்தளாய் லீலாரத்தன நகரசபை மைதானத்திலும், மட்டக்களப்பு வெபர் மைதானத்திலும் நடைபெற்றது. இத்தொடரின் 9வது ஆட்டடாக ஊவாமத்திய மாகாண அணிகளுக்கிடையிலான போட்டி கந்தளாயில் நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் பெறவில்லை. இரண்டாவது பாதியில் 63வது நிமிடத்தில் ஊவமாகாண அணியின் இளம் வீரர் பிராஸ் ஷாஹிர் கோல் அடித்து தனது அணி முன்னிலை பெற உதவினார். இக்கோல் பெற்ற மகிழ்ச்சியைக் கொண்டாடும் போது எதரணியுடன் ஏற்பட்ட உரசலில் பிராஸ் சிவப்பட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதன் பிறகு ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் பெரும் கலவர பூமியாக மாறியது மைதானம். பின்னர் பொலிஸார் வரவழைக்கப்பட்டு சுமுக நிலை ஏற்படுத்தப்பட்டது. அதன் பின் 4 ஊவா வீரர்களுக்கும், 2 மத்திய மாகாண வரர்களுக்கும் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

**எம்.எஸ்.எம்.ஹில்மி...**

போட்டியின் நேர முடிவின் பின் 27 நிமிடங்கள் மேலதிகமாக வழங்கப்பட்டு ஆட்டம் தொடங்கியது. இதன் போது ஊவா மாகாணம் 7 பேருடன் மத்திய மாகாணம் 9 பேருடனும் விளையாடிது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட மத்திய மாகாண அணி மேலதிக நேரத்தின் 10வது நிமிடத்தில் மொஹம்மட் சிமாக், இறுதி நேரத்தில் மொஹம்மட் மிஹ்ரான் ஆகியோர் கோல்கள் பெற்றனர். இறுதியில் மத்திய மாகாண அணி 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. ஊவா மாகாண அணியின் பிராஸ் ஷாஹிர், மொஹம்மட் அப்ரான், கவிந்து ரவிஹங்ச, ஹெரந்த நந்தனவுக்கும், மத்திய மாகாண அணியின் எஸ். கே. உமைர், எச். எச். மொஹம்மட் ஆகியோருக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்ற தொடரின் 10வது அட்டமாக வடக்கு மற்றும் தெற்கு அணிகள் மோதின. இப்போட்டியில் வடக்கு அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று தொடரின் 2வது வெற்றியைப் பதிவு செய்தது. முதல் பாதியில் 7வது நிமிடத்தில் தென்மாகாண அணியின் சுபுன் தனன்ஜய முதல் கோலைப் பெற்றார். 32 வது நிமிடத்தில் வட அணியின் எஸ். நிதர்சன் பதில் கோல் அடிக்க இரு அணிகளும் 1-1 என்ற ரீதியில் முதல் பாதி முடிவடைந்தது. விறுவிறுப்பாக ஆரம்பமான இரண்டாம் பாதியில் 52, 69ஆவது நிமிடங்களில் மீண்டும் இரு கோல்களை எஸ். நிதர்சன் பெற்றுக்கொடுத்து வடக்கு அணியின் வெற்றியை உறுதி செய்தார். இது இத் தொடரின் பெற்ற முதல் ஹெட்ரிக் கோலாகும்.

தொடரின் 11வது போட்டி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது. இதில் மேல்மாகாணம் வடமேல் ரஜரட்ட அணிகள் மோதின. இதில் ரஜரட்ட அணி 3-2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இத் தொடரின் முதல் வெற்றியைப் பதிவு செய்தது அவ்வணி. ரஜரட்ட அணியின் அஷிக்குர் ரஹ்மான் போட்டியின் 14வது நிமிடத்தில் கோல் அடித்து தமது அணியை முன்னிலைப்படுத்தினார். அவ்வணி 17வது நிமிடத்தில் நெத்ம மல்ஷானும் 33வது நிமிடத்தில் மொஹம்மட் இன்பாஸ் கோல்களைப் பெற்றதுடன் மேல் மாகாண அணியின் சுபுன் நாலக போட்டியின் 39 வது நிமிடத்திலும், மொஹம்மட் அஸ்மின் 79வது நிமிடத்திலும் தமது அணிக்கான கோல்களைப் பெற்றுக் கொடுத்தனர். இது இத் தொடரில் அஸ்மின் பெறும் மூன்றாவது கோலாகும். மேல் மாகாண அணியில் அநேக வீரர்கள் தேசிய அணி வீரர்கள் என்றாலும் ரஜரட்ட அணியிடம் தோல்வியடைந்துள்ளது விளையாட்டு விற்பன்னர்களின் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளது.

தொடரின் 12வது போட்டி கந்தளை லீலாரத்ன நகர சபை மைதானத்தில் சப்ரகமுவ கிழக்கு மாகாண அணிகளுக்கிடையில் நடைபெற்றது. கடுமையாக மோதிக்கொண்ட இப்போட்டியில் இறுதிவரை எந்த அணியும் கோல் பெறாததால் அப்போட்டி சமநிலையில் முடிவடைந்தது. கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி நடைபெற்ற இத்தொடரின் 3ம் கட்ட சுற்றுப் போட்டிகளின் முடிவில் வடக்கு மாகாண அணி 3 போட்டிகளில் 2 வெற்றிகள், 1 சம நிலை முடிவுடன் முன்னிலை பெற்றது. அவ்வணியின் எஸ். நிதர்சன், மேல் மாகாண அணி வீரர் மொஹம்மட் அஸ்மின் தலா மூன்று கோல்கள் வீதம் அடித்து முன்னிலையில் உள்ளனர்.

சுதந்திரக் கிண்ண மாகாணங்களுக்கிடையிலான தொடரின் 4ம் கட்ட சுற்றுப்போட்டிகள் ஊவா மாகாண பதுளை வின்சன்ட் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இங்கு நடைபெற்ற தொடரின் 13வது ஆட்டத்தில் வடக்கு மத்திய மாகாண அணிகள் மோதின. இதில் 1-0 என்ற கோல் கணக்கில் வடக்கு மாகாண அணி வெற்றிபெற்றது.

இவ்வாட்டத்தில் முதல் பாதி சமநிலையில் முடிவுற விறுவிறுப்பாக நடைபெற்ற 2வது பாதியில் 68வது நிமிடத்தில் வட மாகாண அணியின் எஸ். நிதர்சன் கோல் கம்பத்துக்கருகில் உயரே வந்த பந்தை தலையால் மோதி தனது அணிக்கான வெற்றி கோலைப் பெற்றுக்கொடுத்தார். இது இத் தொடரில் இவர் பெற்ற 4வது கோலாகும். நிதர்சன் இத் தொடரில் இதுவரை அதிக கோல் பெற்ற வீரராகவும் திகழ்கிறார். வட மாகாண அணி விளையாடிய நான்கு போட்டிகளிலும் 3 வெற்றிகள், ஒரு சமநிலையுடன் 9 புள்ளிகளுடன் பட்டியலில் முன்னிலை பெற்றுள்ளது.

இதே மைதானத்தில் நடைபெற்ற தொடரின் 14வது போட்டியில் மேல் மாகாண அணி சப்ரகமுவ மாகாண அணியிடம் 2-1 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது. முதல் பாதி ஆட்டத்தின் 33வது நிமிடத்தில் சப்ரகமுவ அணி வீரர் மொஹம்மட் முஷ்பீக் தனது அணிக்கான முதல் கோலைப் பெற்றுக்கொடுத்தார். 2வது பாதியில் 69வது நிமிடத்தில் மீண்டும் முஷ்பீக் தனது அணிக்கான 2வது கோலையும் பெற்றுக்கொடுக்க, போட்டியின் கடைசி 5 நிமிடங்களில் மேல் மாகாண அணி வீரர் நவீட் ஜுட் தனது அணிக்கான கோலைப் பெற்றுக்கொடுக்க இறுதியில் சப்ரகமுவ அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடரின் 15வது போட்டியில் கிழக்கு மாகாண ஊவா மாகாண அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் கிழக்கு மாகாண அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் 19வது நிமிடத்தில் கிழக்கு அணி வீரர் லினூஸ் கான் தனது அணிக்கான வெற்றி கோலைப் பெற்றுக்கொடுத்தார். இத்தொடரின் 4ம் கட்டத்தின் இறுதிப் போட்டியான தென்மாகாண ரஜரட்ட அணிகளுக்கிடையில் பதுளை வின்சன்ட் மைதானத்தில் நடைபெற்ற தொடரின் 16வது போட்டியில் தென்மாகாண அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தொடரில் முதல் வெற்றியை தென் மாகாண அணி பெற்றுக்கொண்டது. தென் மாகாண அணிசார்பாக சுபுன் தனஞ்சய போட்டியின் 5வது நிமிடத்திலும், 2வது பாதியின் 4வது நிமிடத்தில் தமது அணிக்கான இரு கோல்களையும் பெற்றுக்கொடுத்தார். போட்டியின் இறுதி நேரத்தில் ரஜரட்ட அணியின் சரித்த ரத்நாயக்க தனது அணிக்கான கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

இத் தொடரின் 4வது கட்ட போட்டிகள் முடிவில் அணிகளின் புள்ளிப்பட்டியல் வருமாறு:

| அணி | போட்டி | வெற்றி | சமநிலை | தோல்வி | பெற்ற கோல் | வழங்கிய கோல் | மேலதிக கோல் | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வட மாகாணம் | 4 | 3 | 1 | 0 | 6 | 1 | 5 | 10 |
| சப்ரகமுவ மாகாணம் | 4 | 2 | 2 | 0 | 3 | 1 | 2 | 08 |
| கிழக்கு மாகாணம் | 4 | 1 | 3 | 0 | 2 | 1 | 1 | 06 |
| மேல் மாகாணம் | 4 | 1 | 1 | 2 | 7 | 5 | 2 | 04 |
| தென் மாகாணம் | 4 | 1 | 1 | 2 | 4 | 4 | 0 | 04 |
| ரஜரட்ட மாகாணம் | 4 | 1 | 1 | 2 | 5 | 6 | 1 | 04 |
| மத்திய மாகாணம் | 4 | 1 | 1 | 2 | 2 | 5 | 3 | 04 |
| ஊவா மாகாணம் | 4 | 1 | 0 | 3 | 2 | 5 | 3 | 03 |

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மஞ்சரி களஞ்சியம்

தினகரன் வாரமஞ்சரி

## வாழ்வாதாரமா சேதாரமா 211



தமிழ்க் கவி பேசுகின்றார்

# வாழ்க்கையை யாராலும் நிம்மதியாக வாழ்ந்து கழிக்க முடியாது

மனித வாழ்க்கையில் கவலையும் துன்பமும் சோகமும் மகிழ்ச்சியும் மாறிமாறி வந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் மனிதன் இவை எல்லாவற்றையும் கடந்து மகிழ்ச்சியாக வாழ்வதையே விரும்புகிறான். பலதும் பத்துமான வாழ்க்கையை யாராலும் நிம்மதியாக வாழ்ந்து கழிக்க முடியாது.

ஆனால் கவலைகளை மறந்து வாழ மறக்கத்தான் குடிக்கிறேன்; என்பான். 'அப்படி என்னதான் கவலை உனக்கு' என்றால், 'இப்பிடி குடிச்சு கெட்டுப் போறனே' என்ற கவலைதான் என்பான். கவலையை மறக்க மது மட்டும்தான் காரணம் என்றில்லை.

எமது மண்ணில் உலவும் பல்வேறுபட்ட மத நிறுவனங்களும் தம்மால் இயன்ற அளவுக்கு மனிதனை தன் வசமிழந்து செயல்பட வைப்பதில் திறமை பெற்றிருக் கின்றன. பூசாரி மரபிலான கோவில்களில் பக்தர்களை தன்வசமிழந்து பேசவோ ஆடவோ வைக்குமளவுக்கு பறையை முழக்கக்கூடிய கலைஞர்கள் இருந்தார்கள். இன்னும் இருக்கிறார்கள். இன்னும் சில அடிமட்டக் கிராமங்களில் அவர்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய மயக்க நிலை சற்று நேரத்தில் கலைந்து போகும். இவ்வகையில் கலையாடி கட்டுச் சொல்வோர் 'கட்டாடி' என அழைக்கப்பட்டனர். பெரும்பாலும் இவர்கள் சலவைத்தொழிலைக் கொண்டிருந்தார்கள் என்பதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சில மதங்கள் தமது மண்டபத்தில் பேரிகை போன்ற பெரும் பறைகளை முழக்கி அங்கிருக்கும் பக்தர்களை ஆண் பெண் பேதமின்றி கோசம் போடவும் குதித்து ஆடவும் செய்கிறார்கள். இவர்களிடையே பேயோட்டும் சடங்கும் நடக்கிறது. இவர்கள் தம்மை மறந்து நிலத்தில் விழுந்து புரண்டு கூச்சலிடுவதையும் நான் கண்டிருக்கிறேன். இதுவும் மதுவுக்கு நிகரான ஒரு போதையூட்டுதலே என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

வந்தால். அவர்களைத் தேடிச் சரணடைந்த பெண்களையும் நினைக்கலாம்.

தியானம் ஒரு ஆழமான சிலந்திவலை. அது நம்மை சிக்க வைக்காமல் நாம் மனதை அடக்கி தொடர்ந்த பயிலும் போது எமது உணர்ச்சிகளை அடக்க பழகவேண்டும். சில கிறீஸ்தவப் பிரிவுகளில் பெரும் குடிகாரர்களையும் சூதாடிகளையும் கொடூரர்களையும் சாந்தமானவர்களாக மாற்றியிருக்கிறார்கள் அதுவும் இது போன்ற ஒரு பயிற்சியே. தியானமும் ஒரு வகைப் போதையே என்றால் நம்புங்கள்.

தியானத்தின் போது எமது கண்களை திறந்தும் வைத்துக் கொள்ளலாம் என பிரம்ம குமாரிகள் சமாஜம் சொல்கிறது எனினும் உலகை விட்டு தனித்து நிற்க கண்களை நாம் மூடிக்கொள்கிறோம். மெள்ள மெள்ள மூக்கு நுனியிலிருந்து நெற்றிப் பொட்டிற்கு மாறும் போது தலையின் பகுதிக்குள் ஏற்படும் ஒரு ரசவாதம் காட்சி ஜாலம் அங்கிருந்து எம்மை மீள விடாமல் அமுக்கி வைத்திருக்கிறது.

அதுவும் ஒரு ஆனந்தமான போதை நிலையே. நான் எனது என்ற நிலை மாறி எங்கோ (அதுதான் பிரபஞ்சமோ) ஆழ ஆழ செல்லும் எமது நிலைதான் அரைக் கட்டிங் போடுகிற குடிகாரனுக்கும் ஏற்படும் உணர்வலைகள். பழகப்பழக எமக்கு அந்த நேரத்தில் வேறெதுவும் செய்ய மனம் ஏலாது. யாரோடும் பேச பிடிக்காது. கள்ளுக் கொட்டிலை நாடும் குடிகாரர் போல அந்த தனியிடத்தை தேடி நாம் ஓடுகிறோம். ஆழமாக சென்றபின் எம்மை யாரும் குறுக்கீடு செய்ய முடியாதபடிக்கு நாமே ஒரு



அவனால் முடியும். தாங்க முடியாத சோகத்தையும் மிக்க மகிழ்ச்சியையும் அனுபவிக்க அவன் விருந்துகள் கேளிக்கைகள் என கலந்து கொண்டு அவற்றை அனுபவிக்கவோ மறக்கவோ பழகிக் கொண்டான். ஒரு இழப்பு நடந்த வீட்டில் இந்த இரண்டையும் நாம் காணலாம். அன்றைய தினம் அழுது புரண்டு கதறிக் கொண்டிருக்கும் பெண்கள் அவர்களிடையே மதுபானங்களை அருந்தி கவலையைக் களித்து மகிழும் ஆண்கள். அவர்களை சமாதானம் செய்யும் விதமாக சடங்குகள் சாங்கியங்களை செய்பவர்களை திருப்தி செய்வதற்காகவே இவை என ஒரு காரணமும் சொல்லப்படும்.

இழவு நடந்த வீட்டில் இரவுக்காவல் போடும் வழக்கம் உண்டு பண்டைக் காலத்தில் குடிசைகளில் இந்தப் பிணத்தை நாய் நரி கவ்விக் கொண்டு போகாமல் இருக்க அதை அடக்கம் பண்ணும்வரை காவலிருந்த வழக்கமே அது. ஆனால் இன்றும் பழக்கத்தில் உள்ளது. நாகரீகம் வெளிநாட்டு வாழ்க்கை என மாறிய பின் இப்போது பலர் உரித்துடைய உறவினர்கள் வெளிநாடுகளிலிருந்து வருவதற்காக, செத்த உடலை கருவாடு போடும் வழக்கம் ஒன்று வந்திருக்கிறது. கொரனா கால மரணங்கள் இந்த சடங்குகளை கொஞ்சம் தலைகுப்புறத் தள்ளி விட்டிருக்கிறது.

தன்வசமிழக்கும் நிலை ஒவ்வொரு மனிதருக்கும் சில நேரங்களில் தேவைப்படுகிறது சிலருக்கு தன் குழந்தைகளுடன் குலாவுவது மகிழ்ச்சியைத் தரும். சிலருக்கு புகைப்பதில் இன்பம், சிலருக்கு அல்ல பலருக்கு குடிப்பதில் இன்பம். சிலருக்கு நாலு வீடுகளுக்கு சென்று வம்பு பேசி கலவரம் மூட்டுவதில் இன்பம். எதைச் சொன்னாலும் இவை நினைத்து நிறைவேற்றாமல் ஆழ்மனதின் அடிப்படை விருப்பமாகவே உள்ளது. எல்லா மதங்களும் பஞ்சமாபாதகங்கள் என விழித்திருக்கும் செயல்களில் மது முதன்மை பெறுகிறது. என் தம்பி ஒரு நித்தக் குடிகாரன். 'ஏன்ரா இப்பிடி தினமும் குடிக்கிறாய' என்றால்... 'கவலையை

அமைதியான முறையில் மனதை அடக்கி தியானம் செய்தலை பொதுவாக சில மதநிறுவனங்களும் யோகக்கலை வல்லுநர்களும் சொல்கிறார்கள். இதற்கெனவே உலகெங்கும் பலர் தமது ஆசிரமங்களைத் திறந்து வைத்திருக்கின்றனர். பெயருக்கு இவை பிரம்மச்சாரிகளின் ஆசிரமம் என்ற வகையை சேர்ந்தாலும், இவர்கள் பெரும் தொழிலதிபர்களாகவும் இருக்கிறார்கள். மன ஒருநிலைப்படுத்தல் என்பது தியான வழிமுறையாகும்.

தியானம் செய்ய ஆரம்பிக்கும் முன்னதாக நாம் மூச்சுப்பயிற்சியை மேற்கொண்டு. அதை முறையாக பிராணாயாமம் என்ற வகைக்குள் பழகியாக வேண்டும். நாம் மூச்சுப்பயிற்சியை மேற்கொண்டு சில நிமிடங்களில் தியான நிலையை பயில ஆரம்பிக்கிறோம்.

எனில் முதல் எமக்குள் எழுவது அபரிமிதமான சக்தியே அது எமது உடலை உலுக்கி எம்முள் மங்கிக் கிடக்கும் காம உணர்வலைகளையே முதலில் எழுப்புகிறது. இப்போது பெரும் ஆசிரமங்களை நடத்தி புகழ் பெற்ற பிரேமாநந்தா நித்தியானந்தா போன்றோரை நினைவுக்குள் கொண்டு

வேலியை மானசீகமாக உருவாக்கிக் கொள்கிறோம். ஆரம்பகாலத்தில் மிகை உணவை தேடிய நாம் நாமாகவே உணவை குறைத்துக் கொள்கிறோம் உடலை பலவீனப்படுத்திக் கொள்கிறோம். மெதுவாக பேச ஆரம்பிக்கிறோம் ஆனால்...அத்தனையும் செயற்கை என நாமே ஒருநாள் புரிந்து கொள்கிறோம். மீண்டும் எனது கடமைகளை ஒழுங்காக செய்ய ஆரம்பிக்கிறேன். எனது வேலைகள் தேக்கமின்றி முடிகின்றன.

தியானம் ஒரு போதைப்பழக்கந்தான் உழைப்பே நிறைவான ஆரோக்கியத்துக்கு வழி. கைகளை மெதுவாக மேலே உயர்த்துங்கள். மூச்சை நன்கு இழுத்து விடுங்கள் வண்,ரூ, திறீ போ பை இப்போது குனிந்து கால் பெருவிரலைத் தொடுங்கள். நிதானமாக மூச்சை வெளியே விட்டபடி நிமிருங்கள். இப்படி ஒரு நாளைக்கு மூன்று தடவை ஐந்து நிமிடங்கள் செய்யுங்கள் .. தொலைக்காட்சியைப் பார்த்தபடி என்பேத்தி செய்கிறாள்.

பிள்ளை விட்டிட்டு வாடி ஒரு நாலு வாளி தண்ணிய உழண்டியில அள்ளி தொட்டியில ஊத்து. ரெண்டும் ஒண்டுதான் என்றேன். ஆனா பட்டணத்தில் பைப்பில குளிக்கிறவை என்ன செய்யிறது.

# வலம்புரி கவிதா வட்ட 77 ஆவது கவியரங்கம்

வலம்புரி கவிதா வட்டத்தின் 77 ஆவது கவியரங்கம் இம்முறை பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தின் அனுசரணையில் கொச்சிக்கடை, போறுதொட்டை அல் அம்ரா மண்டபத்தில் 16ஆம் திகதியன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

அறிஞரும் கவிஞருமான யூ. எம். தாஸின் (அல் அஸ்ஹரி) (மறைதாசன்) அரங்கில் நடைபெறும் கவியரங்கிற்கு கவிஞர் கம்மல்துறை இக்பால் தலைமை வகிப்பார். சிரேஷ்ட ஊடகவியலாளரும், 'பலகத்துறை வரலாறும், வாழ்வியலும்' நூலாசிரியருமான எம். ஜே. எம். தாஜுதீன் சிறப்பதிதியாக கலந்து கொள்கிறார்.



கவிஞர் கம்மல்துறை இக்பால்



சிரேஷ்ட பத்திரிகையாளர் ஏ. எம். தாஜுதீன்



யூ.எல். தாஸின் (மறைதாசன்)

**தொடர்பு**

என். நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 0741438447
இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 0777388149
ஈழகணேஷ் (பொருளாளர்) 0717563646.

# நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

## புள்ள லெக்கா ...

தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு, அறைக்கு அறையாய் இரவும் பகலும் பல நாள் தொடராக விட்டு விட்டு மெய் மறந்து மனங்குழம்பும் நேரங்களில், உற்சாக வேளைகளில் வட திசையிலிருந்து ஒரு குரல். தென் புறத்திலிருந்து எதிர்க்குரல் வயல், வாடி என்று பாடப்பட்டதே இந்த நாட்டார் பாடல்கள். இதன் ஓட்டத்தில் இடையிடையே பண்டைச் சான்றோரின் சொற்றொடர்கள் குறியிட்டுக் காட்டியும் காட்டாமலும் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். ஒரு கையில் பீடிக்கட்டு, நெருப்புப் பெட்டியும் காதில் பென்சிலும் வாயில் அகடவிகடப் பேச்சுமாய் நடமாடும் தச்சர்கள் (ஓடாவி) தமது கம்மாலைகளில் பணிசெய்யும் போதும் ஓசைக் குரலெழுப்பிக் கவி பாடுவர்...



வட்டக் கடை, கிட்டங்கி, பரண், அருவிக்கரையென்று, மக்கள் கிராமியக் கவி பாடுவதில் கலந்திருந்தனர்; மொத்தத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் குரலாகவும் இவை ஒலித்தன. சமூக நீர்மைகளும் உராய்வுகளும் அன்றாட உரை நடையில் சிறைப்பட்டு நம்மைக் கவர்ந்திழுத்தன. வங்காள விரிகுடாக் கரையோரங்களிலும் வயல் பிராந்திய விவசாயிகள் வாழும் நெடிய குடியிருப்புகளின் அகங்களிலும் வரலாற்று எச்சங்களுடன் நாடாரியல் கலந்துள்ளதை தென் கிழக்கின் கிராமங்களுக்குப் பயணம் செய்யும் ஒருவர் எளிதில் கண்டுணரலாம்.

கடலின் முதுகுப் புறத்தில் தோணிகள் ஓட்டிவரும் பொழுதுகளில் கரையின் மீதிருந்து வலைகளில் சிக்கிக் கழுத்துடைந்து, தாவிப் பாயும் மீனினத்தை வளைந்து சாடி இழுத்துவந்து, மாய வித்தைபோல் மல்லடிக்கும் மீனவர் நாவுகளில் முளைத்துப் பறியும் சொல் சிதறல்கள் அடுக்கு மொழியாகி பாணிபோல் வழியும்.

"வண்டமுத சோலையிலே..
மரையமுது போறதுபோல்...
நின்றமுதோம் அல்லாஹ்வே...
நினைவு வந்த நேரமெல்லாம்..
ஏலேலோ ஏலேலோ, ஏலேலோ ஏலேலோ..
கடலினிலே கிளுறு நபி.. ஏலேலோ ஏலேலோ..
கப்பலிலே ஹயாத்து நபி.. ஏலேலோ ஏலேலோ..
கரையினிலே முகைதீன் அலை..ஏலேலோ ஏலேலோ.. "

உணவுப் பண்டங்களும் துணி மணி முதலியனவும் வழிப் பயணத்தின்போது வந்துசேரும். ஆனால் வாணிப நிலையங்கள் பெருமளவில் அன்று காத்தான்குடியில்தான் இருந்தன. கறுப்புடலும் எஃகு நெஞ்சமும் கொண்ட துடுக்கர் செய்கு அப்பாவின் மாட்டுக் கரத்தைதான் சரக்குப் போக்குவரத்துத் துறையில் ஈடுபடுத்தப்பட்ட வாகனம். எங்கள் குடும்பத் தேவைகளுக்கும் அதுவே பயன்பட்டது. இரண்டு ரூபாக் கொடுத்தால் ஒருவரே ஏறலாம். சுற்றி அடைக்கப்பட்ட வண்டியில் எப்போதாவது ஆமைபோல் முகத்தை நீட்டிச் "சரியா" என்பார். வாப்பா 'ம்' என்றதும் கரத்தை ஒல்லியான இருவரையும் ஒரு வில்லங்கம் இல்லாமல் உலுக்கிவிட்டு ஏற்றிக் கொண்டு ஓடும்...

உடுப்பு வரும் கனவில் உம்மா காத்திருப்பார். அதேநாள் பின்னேரம் வந்திறங்கும் வாப்பா வண்டியை விட்டுக் கிழிறங்கும் முன்னே புடவைப் பொதியை உம்மாதான் தூக்குவார்; அப்போது, "உனக்கு ஒன்றுமில்ல புள்ள, என் பதுபோல் செய்கு அப்பாவின்முன் கண்ணைக் காட்டிவிட்டுக் கனைப்பார். புரிந்தும் புரியாதபடி.

"காத்தான் குடிக்குக் கரத்தை கொண்டு போன மச்சான்
சீத்தை இரண்டு முழம் அந்தச் சீமையிலே பஞ்சமாமோ?" என்ற உம்மாவுக்குப்
"பச்சவடச் சிறுவாலும் படம் உள்ள பெனியனும்
நாலு சோடி மயில் குடமும்
நைலக்சும் இருக்குமணி.." என்பார்...

மாலை வேளைகளில் தொழுதுவிட்டு வந்திருக்கும் பூட்டிம்மா, தலையணையைச் செத்தையில் நாட்டி, முதுகை அதனில் ஊன்றிப் பிரார்த்தனைபோல் காலாட்டிக் காலாட்டி பாடும்போது அவர் நினைவில் முக்கி, முகிழ்ந்து எழும் பாடல் பதிவுகள் அபாரமானவை.

"குத்து விளக்கெரியக் குமரன் குர் ஆன் ஓதப்
பாலன் விளையாட
ஒரு பாக்கியம்தா ஆண்டவனே.."
"அல்லையிலே பன்புடுங்கி
அலங்காரப் பாயிழைச்சி
படுக்கப் போட்டிருக்கன் என்ர பாலரசக்
கார் இறைவா.." "பாக்குப் பழுத்திருக்கு
பாளையில பூவிருக்கு
சின்னாரை காய்ச்சிருக்கு
அல்லாஹ் சிறு வயலில் விளைச்சலை வை.."
குருவிச்சம்பா நெல்லும்
கோழிச் சூடன் குலையும்
பாலும் கலந்து றப்பே
பாத்திஹாவும் ஓதிடுவேன்.."

"சக்கராத்து வேளையில
சள்ளுப்பட்டுப் போகாம
மலக்கல்மௌத்தை அல்லாஹ் நீ
மனமிரங்கச் செய்திடுவாய்.."

கிடுகிடுக்கும் இடி முழக்கம்; மின்னல் வானைப் படமெடுக்கும் பொத்தாலா மைமூன் பொருபொருக்கும் வாய் ஓசை அந்த மரமரப்புக்குள்ளும் விட்டுவிட்டுக் கேட்கும்.

புள்ள லெக்கா புள்ள லெக்கா
உன்ட புருசன் எங்கே போனதுகா
கல் வீட்டுத் திணையில அவர் கதைத்திருக்கப் போனதுகா..", இந்த மழைக்கும்
இன்னா வார கூதலுக்கும்
சொந்தப் புருஷனென்றால்
சுணங்குவாரோ வாடியிலே.."

முழங்காலைத் தலைக்கு வைத்து உறங்கும் போதிலும் மைமூன் பாடிக் கொண்டிருப்பது கேட்டு இடுக்குகளில் பல்லிகள்கூட இச்சாக் கொட்டும்...

விளையாட்டுகளும் இப்படித்தான். சாந்த மாமா இது எங்களூரில் வாழ்ந்திருந்த ஒருவரின் பெயராகவும் இருந்தது. இலகுவில் வெளியில் வரமாட்டார். அவர் ஆடைகளைக்கூட வெயிலில் உலரவிடுவதில்லை. எல்லாமே வீட்டுக்குள்தான். கடற்கரை வீதி வழியாகப் பதுங்கிச் சென்று படலைத் திறந்து மெல்ல நுழைவார். நாங்கள் விளையாடிக் கொண்டிருப்போம்; சாந்தமாமா வருவதைக் கண்டதும் இரு பிரிவுகளாகப் பந்தி சேர்வோம்.

"சாந்தமாமா சாந்தமாமா
எங்கே போறாய்?
மண்ணுக்குப் போறன்
மண் என்னத்துக்கு?
ஊடு மொழுக
ஊடு என்னத்துக்கு?
புள்ளப்பொற
புள்ள என்னத்துக்கு?
தண்ணீர் குடத்தில துள்ளிப்பாய.."

கேள்வி பதிலாகப் பாடி முடிந்ததும் கண்ணாடி வளையல்கள் குலுங்கி ஒலிக்க எங்களுடன் தோழிகளும் கை கொட்டி நகைப்பார்கள்.

தலையிலே துளி கூடக் கறுப்பில்லாமல் நரைத்த சிகை, கோதிக் கட்டாமல் சிங்கத்தின் பிடரி மயிர் மாதிரி கழுத்தில் விழுந்து சிலிர்த்துக் கொண்டு நிற்கும் தாஜுன் மாமா சிரித்தாரென்றால் கண்ணும் கன்னங்கரேலென்று நாலு திசையிலும் சுழலும்.

இடது சொக்கிலே நட்ட நடுவில் பெரிய கறுப்பு மரு.

நாணல் புல்போல நரைத்த கிழவனுக்கு
குங்குமப்பூப்போல குமர்தானோ வாழுறது..? "
"சூட்டட்டை போல
சுடு காட்டுப் பேய் போல
மாட்டட்டை போல
உம்மா அவரும் ஒரு மாப்பிள்ளையா?",
"கச்சான் அடித்த பின்பு
காட்டில் மரம் நின்றதுபோல்
உச்சியிலே நாலு மயிர்
தலை ஓரமெல்லாம் தான் வழுக்கை.."

விபரிக்க முடியாத ஓர் உறுத்தல் ஒவ்வோர் உணர்விலும் பட்டது. மேகப் பொதிகள் பரந்து திரண்றொன்றிக் கும்மிருட்டாய் இறுகி நிற்கும் அந்த இரவில் விளக்கின் நிழல் எண்ணெய் பூசியதுபோல் செத்தையில் நெளிந்தது. எனக்குத் தூக்கமே வரவில்லை. இருந்திருந்துவிட்டு உம்மாவின் வாயில் பறியும் அந்தக் கவிகள்தான் தாஜுன் மாமாவுக்கும் பொருந்துமோ என்று உழன்று கொண்டிருந்தேன். ஏனென்றால் பிறரின் வற்புறுத்தலின் பேரிலேயே பக்கத்து வீட்டு ஆயிசா மாமி மணம் முடிக்கச் சம்மதம் என்றிருந்தார். தாவிக் குதித்துவந்து பம்பரம் போல் சூழலும் மாமி மடியில் தவழ்ந்து கிடந்தவன் நான். அவரின் திருமண நாளன்று காற்றையே காணோம். ஒரே இறுக்கம். தாஜுன் மாமா ஆடிக் குதித்துக் கெக்கலிப்பதுபோல் தெரிந்தார்.

# யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கும் ஸ்மார்ட் லைஃவ்

யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கும் ஸ்மார்ட் லைஃவ் உடன் வாடிக்கையாளர்கள் தமது வெற்றிகரமான வாழ்க்கைக்காக முதலீடுகளை மேற்கொள்ள முடியும். ஸ்மார்ட் லைஃவ் இனால் 3, 5 அல்லது 7 வருடங்கள் எனும் குறுங் காலப்பகுதிக்கு கட்டுப் பணம் செலுத்தி, 40 வருடங்கள் வரை தொடர்ச்சியான பாதுகாப்பை அனுபவிக்க முடியும்.

ஸ்மார்ட் லைஃவ் இனால் உங்களின் வாழ்க்கைக்கான பாதுகாப்பையும் முதலீட்டு இலக்குகளையும் குறுங் கால அடிப்படையிலான முதலீட்டுக் காலத்தில் எய்துவதற்கு உதவியாக அமைந்திருப்பதுடன், உங்களின் அன்புக்குரியவர்களுக்கு நீண்ட கால பாதுகாப்பையும், முதிர்ச்சியின் போது கவர்ச்சிகரமான வருமதியையும் வழங்கும். தற்போது நிலவும் குறைந்த வட்டிவீதங்களுடனான சூழ்நிலையில், ஸ்மார்ட் லைஃவ் என்பது நிலையான முதலீட்டு தீர்வாக அமைந்திருக்கும்.




விபத்து அனுகூலங்கள், அங்கவீன அனுகூலங்கள் மற்றும் ஹெல்த் 360 அடங்கலாக சுகாதார காப்பீட்டு அனுகூலங்களைப் பெற்று வாடிக்கையாளர்கள் தமது பாதுகாப்பு அனுகூலங்களை மேம்படுத்திக் கொள்ள முடியும். ஹெல்த் 360 இனால் காப்புறுதிதாரரின் வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் பெற்றோர்கள் என மூன்று தலைமுறையினருக்கு அனுகூலங்கள் வழங்கப்படுகின்றது. முழுக் குடும்பத்தின் சுகாதார தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்கு ஒற்றைத் தீர்வாக அமைந்திருப்பதுடன், வைத்தியசாலைக் கட்டணங்கள், சத்திர சிகிச்சை, மருந்துப் பொருட்கள், பிரசவ சேவைகள், வைத்திய நிபுணர்கள், பல் வைத்தியம் மற்றும் மூக்குக் கண்ணாடி சேவைகள் போன்றவற்றுக்கு பரந்தளவு காப்பீட்டை வழங்குகின்றது.

# வரிக்குப் பிந்தைய வருவாயை பதிவு செய்துள்ள JAT Holdings

மரப்பூச்சுகள் துறையில் முன்னணி வகிக்கும் JAT Holdings நிறுவனம், 2021/22 நிதியாண்டின் 3 ஆவது காலாண்டில், மந்தமான சந்தை நிலவரங்களுக்கு மத்தியிலும் சிறப்பான பெறுபேறுகளை பதிவு செய்துள்ளது.



குழுமத்தின் வரிக்குப்பிந்தைய இலாபம் கடந்தாண்டில் இதேகாலப்பகுதியில் காலாண்டில் பதிவாக்கப்பட்ட ரூபா 717 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 232%ஆல் அதிகரித்துள்ளது. அதேசமயம் கடந்த 12 மாதங்களுக்கான வரிக்குப்பிந்தைய இலாபம் ரூபா 1,102 மில்லியனாக பதிவாக்கப்பட்டுள்ளது.

மதிப்பாய்வு செய்யப்படுகின்ற 9 மாதங்களில் வருவாய் 72%ஆல் அதிகரித்துள்ள அதேநேரத்தில் நிறுவனத்தின் மொத்த இலாப மட்டங்கள் 30%க்கு மேல் சீராகப் பேணப்பட்டுள்ளது. ஏற்றுமதி வருவாயின் பங்கும் முந்தைய ஆண்டில் பதிவாக்கப்பட்ட 9%உடன் ஒப்பிடுகையில் மொத்தவருவாயில் 22%ஆக உயர்வடைந்துள்ளது, முதலீட்டாளர்களும் பங்கொன்றுக்கான வருவாய் (கடந்த 12 மாதங்களுக்கான) ரூபா 2.16 ஆக இருப்பதை அறியும்போது மகிழ்ச்சியடைவார்கள். JAT Holdingsஇன் சிறந்த காலாண்டு என நிரூபிக்கப்பட்ட 4 ஆவது காலாண்டை நிறுவனம் தொடங்கும்போது இந்தமீள்எழுச்சியுடனான நிதியியல் பெறுபேறுகள் வெளிவந்துள்ளதுடன், பண்டிகைக்காலங்களின் காரணமாக வரலாற்று ரீதியாக வருவாய்க்கு பிந்தைய இலாபத்தில் பூச்சுக்கள் தொழிற்துறையின் பங்கு 45%ஆக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்தின்நிதியியல்பணிப்பாளரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான நிஷால் ஃபெர்டினாண்டோ கருத்து வெளியிடுகையில், “எங்கள் ஆரம்ப பொதுவழங்கல் நடவடிக்கை இடம்பெற்று ஆறுமாதங்களில், கடந்த காலாண்டில் நாங்கள் பதிவாக்கியுள்ள வலுவான பெறுபேறுகளை முதலீட்டாளர்களுக்கு சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். மந்தமான சந்தைச்சூழல் மற்றும் பிறசவால்கள், தளம்பலான நாணயமாற்று வீதங்கள் மற்றும் உலகளாவிய சந்தையில் பொருட்களின் பற்றாக்குறை ஆகியவற்றின் மத்தியில் இந்த அளவீடுகள் ஈட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், நாங்கள் சந்தை நிலைமைகளுக்கு ஏற்றவாறு நம்மை மாற்றியமைத்து, அதன் போக்குகளுக்கேற்ப எங்களின் மொத்த இலாப மட்டங்களைப் பேணியுள்ளோம்.

# அட்லஸ் சிப்சவியினால் ரிதீ விஹாரை நன்கொடைத் திட்டம்

இலங்கையின் முன்னணி காகிதாதிகள் மற்றும் பயிலல் சாதன வர்த்தக நாமமான அட்லஸ், தனது வருடாந்த ரிதீ விஹாரை நன்கொடைத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது. தொடர்ச்சியான 19ஆவது வருடமாகவும் சுமார் 2300 குறைந்த வசதிகள் படைத்த சிறுவர்களுக்கு உதவும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அட்லஸ் சிப்சவி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், ரிதீ கம, ரிதீ விஹாரையைச் சேர்ந்த சங்கைக்குரிய திப்பட்டுவே புத்தரக்கித தேரரின் மேற்பார்வையின் கீழ் நன்கொடை வழங்கல் இடம்பெற்றது. இந்த ஆண்டு நன்கொடை வழங்கும் நிகழ்வின் போது 100 மாணவ பௌத்த பிக்குகளுக்கும் அட்லஸ் கொப்பிகள் வழங்கப்பட்டிருந்தன.



அட்லஸ் அக்சிலியா கம்பனி. பிரைவட் லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளர் அசித சமரவீர கருத்துத் தெரிவிக்கையில், “நாடு முழுவதையும் சேர்ந்த சிறுவர்களுக்கு 62 வருடங்களுக்கு மேலாக சேவைகளை வழங்கி வருவதுடன், அவர்களின் கடினமான சூழ்நிலைகளைப் பற்றி இரகசியமான முறையில் நாம் அறிந்து கொண்டு, ஒவ்வொரு பிள்ளைக்கும் சிறந்த கல்வி பயிலல் தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கு எம்மாலான பங்களிப்புகளை வழங்க எம்மை அர்ப்பணித்துள்ளோம். ரிதீ விஹாரையுடனான எமது நிகழ்ச்சித் திட்டம் சுமார் இரண்டு தசாப்த காலமாக முன்னெடுக்கப்படுகின்றது. எமது தேசத்தின் எதிர்கால சந்ததியினருக்கு உதவும் எமது நடவடிக்கைகளை அட்லஸ் சிப்சவி நடவடிக்கைகளின் கீழ் கொண்டு வந்துள்ளோம். மேலும், அட்லஸ் புத்தகமொன்றை எவரும் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அட்லஸ் சிப்சவி புலமைப் பரிசில் நிதியத்துக்கு ஒரு பகுதி பங்களிப்பு செய்யப்படுகின்றது. இலங்கையில் காணப்படும் குறைந்த வசதிகள் படைத்த சிறுவர்களின் கல்விச் செயற்பாடுகள் அவர்களின் பெற்றோரின் இழப்பு மற்றும் பொருளாதார சிக்கல் நிலை போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு உதவக்கூடிய வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுப்பதற்கு சிப்சவி மெய்நிகர் கலந்துரையாடல் ஒன்றையும் முன்னெடுத்திருந்தோம்.” என்றார்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் சங்கைக்குரிய திப்பட்டுவே புத்தரக்கித தேரர் கருத்துத் தெரிவிக்கையில், “அட்லஸ் மற்றும் ரிதீ விஹாரை நீண்ட காலமாக பேணி வரும் பங்காண்மையினூடாக, கடந்த 18 வருட காலப்பகுதியில் ஆயிரக் கணக்கான சிறுவர்களுக்கு தமது கல்வியைத் தொடர உதவியாக அமைந்திருந்தது. பெற்றோர்கள் மற்றும் சிறுவர்கள் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இந்தக் காலகட்டத்தில் அட்லஸ் முன்னெடுத்துள்ள இந்தத் திட்டம் தொடர்பில் அட்லஸுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.” என்றார்.

# முதலாவது Michelin Tyre Service கான்செப்ட் ஸ்டோர் கொழும்பில்

உலகின் டயர் தொழில்நுட்ப முன்னணி நிறுவனமான Michelin, அதன் உள்ளூர் பங்குதாரரான, இலங்கையின் முன்னணி பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனமான DIMO உடன் இணைந்து, இலங்கையின் முதலாவது அதிநவீன Michelin Tire Service (MTS) கான்செப்ட் ஸ்டோர் (concept store) நிலையத்தை அண்மையில் கொழும்பில் திறந்து வைத்துள்ளது.



இலங்கையின் முதலாவது MTS காட்சியறையானது, குசும் டயர்ஸ், இல. 822, கொழும்பு கண்டி வீதி, தோரண சந்தி, களனி எனும் முகவரியில் நிறுவப்பட்டுள்ளது. இது மொத்தமாக 8,000 சதுர அடி பரப்பளவில் மிக அழகிய சூழலில், புதுமையான டயர் மற்றும் உதிரிப்பாகங்களின் காட்சிப்படுத்தலுடன் அமைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப ரீதியாக பயிற்சி பெற்ற நிர்வாகிகளின் வலுவான குழுவுடன், டயர் மற்றும் வாகனம் தொடர்பான அனைத்து சேவைகளையும் வழங்குவதற்கான முழுமையான சேவை மையத்தையும் இப்புதிய ஸ்டோர் கொண்டுள்ளது.

India Cluster வர்த்தகப் பணிப்பாளர் மனீஷ் பாண்டே இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "நாட்டில் எமது விநியோகம் தொடர்பான தடத்தை வலுப்படுத்தி வரும் நிலையில், Michelin Tyre Service கான்செப்ட் ஸ்டோர் ஆனது, மிகச் சிறந்த கொள்வனவு அனுபவத்தை வழங்கும் என்பதோடு, அதனை இலங்கைக்குக் கொண்டு வருவதில் நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இந்நிலையத்தின் மூலம், இலங்கையில் உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியான சூழலையும், தொழில்துறையில் முன்னணித் தயாரிப்புகளையும் சேவைகளையும் வழங்கவுள்ளோம்." என்றார்.

DIMO நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் விஜித பண்டார தெரிவிக்கையில், "இது DIMO மற்றும் எமது நீண்டகால பங்காளியான Michelin இற்கு உண்மையில் ஒரு சிறந்த மைல்கல்லாகும். Michelin உடன் இணைந்து, DIMO சிறந்த வாடிக்கையாளர் மதிப்பை உருவாக்க உறுதிபூண்டுள்ளதுடன், இந்த கான்செப்ட் ஸ்டோர் மூலம் நாம் தொழில்துறையை புதுமையான அணுகுமுறையுடன் மறுவரையறை செய்கிறோம். கனவுகள் மற்றும் அபிலாஷைகளைத் தூண்டும் நோக்கத்துடன், DIMO எப்போதும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க முயற்சித்து வருகிறது.



# பிள்ளைகளின் நோயெதிர்ப்புச் சக்தியை மேம்படுத்தும் Astra Acti

அஸ்ட்ரா 1965ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இலங்கையின் சிறுவர்கள் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வளரத் தேவையான ஊட்டச்சத்துக்களையும் சிறந்த சுவையையும் வழங்கியது. அஸ்ட்ரா தற்போது Upfield க்கு சொந்தமான நிறுவனமாகும். உலகின் மிகப்பெரிய தாவர – அடிப்படையிலான உற்பத்தியை மேற்கொள்ளும் இந்நிறுவனம், 95க்கும் அதிகமான நாடுகளில் இயங்கி வருகிறது. இலங்கையின் குடும்பங்களை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் மாற்றிடும் நோக்கத்துடன் செயற்படும் ஓர் அமைப்பாக, எமக்கும் இவ்வுலகத்தும் நல்லதைத் தரும் தாவர – அடிப்படையிலான தயாரிப்புக்கள் மூலம் Upfield எப்போதும் நுகர்வோருக்கான தேவைகளுக்கும் அவர்களது மன அழுத்தங்களுக்கும் தீர்வுகளுடன் வருவதை உறுதி செய்கிறது.

Astra Fat Spread, Astra Mayonnaise மற்றும் Astra Cooking Pack ஆகியவை அதன் உற்பத்தி வரிசையில் இடம் பிடிக்கின்றன. சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வினை மையமாகக் கொண்ட ஒரு நிறுவனமாக Upfield Sri Lanka ஆனது புதிய fat spread ஆன Astra Acti இனை அறிமுகப்படுத்தியுள்ளது. Astra Acti ஆனது A, D, B6, B9 மற்றும் B12 ஆகிய நுண்ணூட்டச்சத்துக்களால் செறிவூட்டப்பட்டுள்ளதுடன், நோயெதிர்ப்புச் சக்தியின் இயல்பான செயற்பாட்டையும் ஆதரிக்கும். மேலும் சிறுவர்களின் உடல் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் தேவையான ஒமேகா 3 மற்றும் 6 ஆகியவற்றையும் உள்ளடங்கியுள்ளது. இவை இயற்கையாகவே சூரியகாந்தி மற்றும் கனோலாவிலிருந்து பெறப்படுகின்றன.

தாவர – அடிப்படையிலான ஓர் தயாரிப்பான Astra Acti ஆனது bad trans fats எனும் கெட்ட கொழுப்புகளிலிருந்து விடுபடுகிறது. அத்தோடு செயற்கை நிறமூட்டிகள், சுவையூட்டிகள் உள்ளடக்கப்படாதது. மேலும் இதில் உள்ளார்ந்த கொலஸ்ட்ரோல் எதுவும் இல்லை. மிகமுக்கியமாக இது ஒரு மென்மையான fat spread ஆக விளங்குகிறது. அதனால் இன்றைய பிஸியான வாழ்க்கைக்கு உகந்ததாக இந்த Astra Acti பொருந்துகிறது. நீங்கள் குளிர்சாதனப்பெட்டியிலிருந்து வெளியே எடுத்த உடனேயே இதைப் பயன்படுத்தலாம். எனவே தாய்மாருக்கு வேலைப்பளு நிறைந்த காலை வேளையை சிறப்பாக நிர்வகித்து, பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப உதவுகிறது.

# DSI டயர்ஸ் சிறந்த விற்பனை முகவர்களின் 2021 ஒன்றுகூடல்

DSI Tyres நிறுவனம் 2021 ஆம் ஆண்டில் தமது விற்பனை முகவர்களை ஊக்குவிக்கும் முகமாக நடாத்திய DSI Tyers Top 20 Super Dealers Gathering – 2021எனும் விசேட ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் வெற்றி பெற்றவர்களின் குடும்ப அங்கத்தவர்களோடு அவுங்கல்ல RIU ஹோட்டலில் சகல வசதிகளுடனும் இரண்டு நாட்கள் தங்கியிருந்து உல்லாசமாக பொழுதை கழிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.



2021 ஆம் நிதியாண்டில் ஒட்டுமொத்த விற்பனை இலக்குகளை முழுமையாக பூர்த்திசெய்த சிறந்த விற்பனை முகவர்களுக்கே இந்த சிறப்பு வெகுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இரண்டுநாள் சுற்றுலாவில் சாம்சன் இறப்பர் கைத்தொழில் நிறுவனத்தின் பிராந்தியச் சந்தைப்படுத்தல் முகாமையாளர்களும் கலந்து கொண்டனர். னுளுஜ வுலசநள உற்பத்திகளை வாடிக்கையாளர்களுக்கு மிகத் துரிதமாகவும் இலகுவாகவும் கொண்டு செல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றும் விற்பனை முகவர்களை பாராட்டி கௌரவிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் ஆண்டுதோறும் முன்னெடுக்கப்படுகின்றது.

போட்டியில் வெற்றிபெற்ற விற்பனை முகவர்கள் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் கிடைத்த இந்த கவர்ச்சிகரமான வெகுமதி குறித்து பெரிதும் மகிழ்ச்சியடைவதாக தெரிவித்தனர். இந்த ஆண்டிலும் தமது உத்தேச விற்பனை இலக்குகளை அடைவதற்கு தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டனர். “எமது வெற்றிக்கு பின்னால் இருக்கும் பெரும் சக்தியாக விற்பனை முகவர்களை குறிப்பிடலாம். தற்போதைய நெருக்கடியான சூழலிலும் தமது விற்பனை இலக்குகளைப் பூர்த்திசெய்த விற்பனை முகவர்களை ஊக்குவிக்க வேண்டியது எமது கடமையாகும்.

அடுத்தாண்டில் இத் திட்டத்தை மேலும் பரந்தளவில் பிரமாண்டமாக நடாத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு ஆர்வத்துடன் உழைக்குமாறு சகல விற்பனை முகவர்களிடமும் வேண்டுகின்றோம்.“ எனமுகாமைத்துவப் பணிப்பாளர் காவிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொழில் வரலாற்றைக் கொண்டுள்ள சாம்சன் இறப்பர் கைத்தொழில் நிறுவனம், 80 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு டயர்களை ஏற்றுமதி செய்வதோடு உள்நாட்டில் சைக்கிள் டயர்கள், மோட்டார் சைக்கிள் டயர்கள், முச்சக்கரவண்டி டயர்கள், விவசாய சாதன டயர்களுடன் அவற்றுக்கான டியூப்களையும் விற்பனை செய்து உள்நாட்டு டயர் சந்தையின் பெரும் பங்கினை தம்வசப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ICTA தேசிய டிஜிட்டல் கூட்டமைப்பு உயர் விதப்புரையுடன் நிறைவு

FITIS, SLASSCOM, BCS மற்றும் CSSL ஆகியவற்றுடன் இணைந்து, 2022 ஜனவரி 10 முதல் 13 வரை, ஆரம்பமான ‘தேசிய டிஜிட்டல் கூட்டமைப்பை’ வெற்றிகரமாக நிறைவு செய்ததாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) அறிவித்துள்ளது.




இந்நிகழ்வில் மைக்ரோசாப்ட், Zoom, AWS, Google Cloud, Oracle, and Huawei. ஆகிய 6 குளோபல் டெக்ஜயண்ட்ஸ் இடம்பெற்றது. இந்த நிகழ்வு சமீபத்திய தயாரிப்பு சேவைகளை வழங்குவதற்கும், உலகளாவிய தொழில்நுட்பத் துறையில் சமீபத்திய போக்குகள் பற்றிய நுண்ணறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் ஒரு தளமாக இருந்தது.


இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த ICTA வின் பிரதம டிஜிட்டல் பொருளாதார அதிகாரி அனுர டி அல்விஸ், "தேசத்தில் டிஜிட்டல் மாற்றத்தை உந்தித்தள்ளும் உச்ச அமைப்பாக, தொழில்நுட்பத் துறையில் இலங்கையின் சமீபத்திய முன்னேற்றங்களை வெளிப்படுத்துவதே இவ்வாறான ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்வதன் நோக்கமாகும். ஆறு உலகளாவிய தொழில்நுட்ப ஜாம்பவான்களை ஒரே தளத்தில் கொண்டுவருவது இதுவே முதல்முறையாகும். முதன்முறையாக, இப்போது டிஜிட்டல் பொருளாதாரத்தை அளவிட முடியும், மேலும் இன்றைய நிலவரப்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் டிஜிட்டல் பொருளாதார பங்களிப்பு 4.37% ஆக உள்ளது.

இந்த அமர்வுகள் விவசாயம், சுகாதாரம், கல்வி மற்றும் ஃபின்டெக் ஆகியவற்றில் சமீபத்திய தொழில்நுட்ப போக்குகளை காட்சிப்படுத்தியது. கூடுதலாக, ஃபயர்சைட் அரட்டைகள், டிஜிட்டல் அரசாங்க மாற்றம் குறித்த வழக்கு ஆய்வுகள், சைபர் பாதுகாப்பு, வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் மாற்றம் ஆகியவை விவாதிக்கப்பட்ட சில முக்கிய தலைப்புகளாகும் என்றார்.

கூகுள் முதல் அமர்வை ஜனவரி10 ஆம் திகதி நடத்தியது, அங்கு அவர்கள் கூகுள் கிளவுட்டின் உதவியுடன் விவசாயம், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் புதுமைகளை மையப்படுத்தினர். கூகுள் கிளவுட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு வாய்ப்பளித்த ஐசிடிஏவிற்கு கூகுள் கிளவுட் குழு நன்றி தெரிவித்தது.

கலந்துரையாடல்களில் ஈடுபடுத்துதல், உள்ளூர் சந்தையை நன்கு புரிந்துகொள்வதற்கு அவர்களை அனுமதிக்கிறது, எதிர்காலத்தில் மேலும் கூட்டு ஈடுபாடுகளை எதிர்நோக்குகிறோம். அமேசான் வலை சேவைகள் (AWS) விவசாயம், கல்வி மற்றும் டிஜிட்டல் மாற்றத்தை துரிதப்படுத்துவதில் செயற்கை நுண்ணறிவின் (AI) பங்கு பற்றி விவாதித்தது.

Zoom இரண்டாவது அமர்வை ஜனவரி 11ஆம் திகதி நடத்தியது. டிஜிட்டல் அரசாங்க மாற்றம் என்பது விவாதிக்கப்பட்ட மற்றொரு முக்கிய தலைப்பு, அதைத் தொடர்ந்து 'வாடிக்கையாளர் ஈடுபாட்டை மறுவடிவமைத்தல்' என்ற குழு விவாதம். ஜனவரி 12 ஆம்திகதி, ஆரக்கிள் விவசாயம், சுகாதாரம், ஃபின்டெக் மற்றும் கல்வி ஆகியவற்றில் ஒரேநேரத்தில் நான்கு தயாரிப்பு மற்றும் தொழில் தொடர்பான அமர்வுகளை நடத்தியது. நிகழ்வில் பங்கேற்க அழைப்புவிடுத்த ஏற்பாட்டாளர்களுக்கு Oracle நன்றி தெரிவித்ததுடன், வெற்றிகரமான நிகழ்வை ஒழுங்கமைப்பதில் முன்னணியில் இருந்த ICTA வை வாழ்த்தியது.




# வாரபலன்

13.02.2022 - 19.02.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்தில் ராகுவும் 8ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். ராகுவின் சஞ்சாரத்தில் தன வரவு தாராளமாக வந்து சேரும். அதே நேரம் குடும்ப பிரச்சினை அதிகரிக்கும். கோபத்தால் உறவினர்களை பகைத்துக்கொள்ள நேரிடும். உழைப்பு அதிகம் தேவைப்படும். அஷ்டமத்தில் கேது இருப்பதால் அடிக்கடி ஆரோக்கிய தொல்லை ஏற்படும். பயணங்களில் அடிக்கடி மாற்றம் ஏற்படலாம். சுப விரயங்களை மேற்காள்வதன் மூலம் வீண்விரயங்களில் இருந்து விடுபடலாம்.

## ரிஷபம்

உங்கள் ராசியிலேயே ராகு பகவான் சஞ்சரிக்கின்றார். சப்தம ஸ்தானத்தில் கேது பகவான் இருகிறார். எனவே பயணங்கள் அதிகரிக்கும். பக்கத்தில் உள்ளவர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்கள் வந்துகொண்டே இருக்கும்.கேதுவின் பலத்தால் வாழ்க்கைதுணை வழியே பிரச்சினை அதிகரிக்கும். விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படலாம். விரயங்கள் ஒருபறம் அதிகரிக்கச்செய்யும்.

## மிதுனம்

உங்கள் ராசிக்கு 12 ஆம் இடத்தில் ராகுவும் 6 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிகின்றார்கள்.இடமாற்றம் இனிமை தரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வு பெற்று சுய தொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பார்கள். 6 இல் கேது இருப்பதால் மறைமுக எதிர்ப்புக்கள் இருக்கதான்செய்யும். பணிபுரியும் இடத்தில் சக பணியாளர்களால் சிறு பிரச்சினை ஏற்படலாம். ஒரு கடனை அடைக்க மற்றுமொரு கடன் வாங்கும் சூழ்நிலைக்கு தள்ளப்படலாம். தொழில் தொடங்கும் முயற்சி தாமதமாகலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

## கடகம்

உங்கள் ராசிக்கு 11ஆம் இடத்தில் ராகுவும் 5ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். லாபஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். இருப்பினும் சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் வீண்விரயங்களும் ஏற்படும். இந்த மாதத்தில் மனக் குழப்பம் அதிகரிக்கும். திட்டமிட்டு எதையும் செய்ய முடியாது. நம்பிக்கைக்கு உரிய நண்பர்கள் உங்களை விட்டு விலகலாம். பண விஷயத்தில் பிறருக்கு பொறுப்பு சொல்வதாலும் பிள்ளைகளாலும் சில பிரச்சினைகள் உருவாகும்.

## சிம்மம்

உங்கள் ராசிக்கு 10 ஆம் இடத்தில் ராகுவும் 4ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிகின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் ராகு இருப்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். சுய தொழிலை விரிவு செய்யும் முயற்சிக்கு போதுமான நிதியும் கிடைக்கும். சுக ஸ்தானத்தில் கேது இருப்பதால் ஆரோக்கிய தொல்லை வரலாம். அலைச்சலை குறைத்துக்கொள்ளுங்கள். சகோதர வழியில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னின்று நடாத்துவீர்கள். மனை விற்பனையால் லாபம் உண்டு. பயணங்களில் கவனம் தேவை.

## கன்னி

உங்கள் ராசிக்கு 9ஆம் இடத்தில் ராகுவும் 3ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிகின்றார்கள். எனவே தந்தை வழி உறவில் சிறு விரிசல்கள் ஏற்படலாம். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. 3இல் கேது இருப்பது முன்னேற்றத்தடையை உருவாக்கலாம். வழக்குகளில் எதிரிகளுக்கு சாதகமான பலன் கிடைக்கலாம். சொத்து பிரச்சினைகளும். சொந்தங்களின் பிரச்சினைகளும் மீண்டும் தலை தூக்கும்.

## துலாம்

உங்கள் ராசிக்கு 8ஆம் இடத்தில் ராகுவும் 2ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். எனவே எதிர்பார்த்த சில மாற்றங்கள் ஏற்படலாம். நாகதோஷத்தின் பின்னணியில் இருப்பதால் ஏற்றமும் இறக்கமும் கலந்த வாழ்க்கையே உருவாகும். வரவும் செலவும் சமமாகும். இன்பமும் துன்பமும் கலந்துவரும். எனவே ஒரு சில காரியங்களை திட்டமிட்டு செய்ய இயலாது. 2 இல் கேது இருப்பதால் கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியுமா என்பது சந்தேகம். குடும்பத்தில் பழைய பிரச்சினை மீண்டும் தலை தூக்கும்.

## விருச்சிகம்

உங்கள் ராசிக்கு 8ஆம் இடத்தில் ராகுவும் 2ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிகின்றார்கள். ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் ஆன் மீக நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் பயன் கிடைக்கும். ஆரோக்கியத்தில் சிறு சிறு அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் உடனுக்குடன் சரியாகிவிடும். சுபவிரயங்கள் உண்டு சப்தம ராகுவால் வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல் கிடைக்கும். பொதுவாழ்வில் புதிய பொறுப்புக்களும் பதவியும் வந்து சேரும். ராகு கேது பெயர்சிக்குள் சர்ப்ப சாந்தி பரிகாரங்களை செய்துகொள்வது நல்லது.

## தனுசு

உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தில் ராகுவும் 12ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிகின்றார்கள். எதிர்ப்பு வியாதி கடன் ஆகியவற்றை குறிக்கும் 6ஆம் இடத்தில் ராகு சஞ்சரிப்பதால் மறைமுக எதிர்ப்புக்கள் இருக்கத்தான் செய்யும் இருந்தாலும் அவற்றால் பாதிப்புக்கள் ஏற்படாது. ஏழரை சனியில் பாதச்சனியின் ஆதிக்கம் நடப்பதால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படலாம். கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி ஏற்படும். விரய கேதுவின் ஆதிக்கத்தால் சுப விரயங்கள் ஏற்படும்.

## மகரம்

உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்தில் ராகுவும் 11ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் எதிர்காலத்தை பற்றிய பயம் அதிகரிக்கும். மனக் குழப்பங்கள் ஏற்பட்டு கவலையை உருவாக்கும். யாரையும் நம்பி எதையும் செய்ய முடியவில்லையே என்ற கவலை ஏற்படும். முன்னோர் சொத்துக்களை பிரித்துக்கொள்வதில் தாமதம் ஏற்படும். சகோதர ஒற்றுமை குறையலாம். கேதுவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் ஆரோக்கிய தொல்லைகளும் உண்டு.

## கும்பம்

உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்தில் ராகுவும் 10ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். 10ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பது ஒருவழியில் நன்மைதான். தொழில் வளம் சிறக்கும். இருப்பினும் பங்குதாரர்களால் சில பிரச்சினைகளும் மன அமைதிக் குறைவும் ஏற்படலாம். தொழிலை நேரடியாக கண்காணிப்பது நல்லது. சுக ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் அடிக்கடி ஆரோக்கியத் தொல்லை உண்டாகும். தாய்வழி உறவினர்களால் பிரச்சினை ஏற்படும். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் நீங்கும்.

## மீனம்

உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்தில் ராகுவும் 9ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். சகோதர ஒத்துழைப்பு குறையலாம். வழக்குகளில் திடிர் திருப்பம் ஏற்படும். பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்வதில் தாமதங்கள் ஏற்படலாம். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் வளைந்துகொடுத்து செல்லவேண்டும். வரப்போகும் ராகு கேது பெயர்ச்சிக்காலம் வரை மிகுந்த கவனத்தோடு செயல்படுவது நல்லது. சர்ப்ப சாந்தி பரிகாரங்களை செய்து கொள்வதால் ஓரளவு மன அமைதி கிடைக்கும்.

# கொரோனா தொற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையும்

கொரோனா வைரஸும் அதன் தாக்கமும் உலகில் 2019ம் ஆண்டில் தொடங்கிய போதிலும். இற்றைவரை அது நம்மைவிட்டு அகன்றபாடில்லை. சுகாதாரப் பணியாளர்கள், வைத்திய சாலைகள், அந்தந்த நாட்டினது அரசுகள் என பலதரப்பட்டோர் ஒன்று சேர்ந்து அதற்கு முகம் கொடுத்து வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அதில் மரணத்தை தழுவியவர்கனின் எண்ணிக்கையும் அதிகம்தான். 2020 தொடக்கம் இற்றைவரை சுமார் 6000 பேருக்கு கொரோனோவுக்காக வைத்திய சேவை வழங்கியுள்ளோம்.

ஆயினும் எமது வைத்திய சேவையை தாண்டி கொரோனோ நோயாளர்கள் 306 பேர் மரணத்தை தழுவியுள்ளார்கள் என்பதையும் கவலையோடு கூறவேண்டியுள்ளதென மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் நுண்ணுயிரியல் விசேட வைத்திய நிபுணரும், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நுண்ணுயிரியல் சிரேஸ்ட விரிவுரையாளருமான டாக்டர் (திருமதி) வைதேகி ரஜீவன் தெரிவித்தார்.

அவர் தனது அனுபவங்களை வாரமஞ்சரி வாசகர்களுடன் பகிர்கையில், கொரோனாவினால் நாடுகள் முடக்கப்பட்டிருக்கின்றன. தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.

பாடசாலைகள், கல்வி நடவடிக்கைகள் என பல பிரிவுகள் தங்களின் செயற்பாடுகளை கைவிட்டுவிட்டன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக கர்ப்பிணித் தாய்மார்கள்

அனுபவிக்கும் துன்பம் அதிகமானது. காப்பிணித் தாய்மாரையும், சிசுக்களை பிரசவித்தவர்களையும், வயது முதிந்தோரையும் பராபரிப்பதென்பது இலகுவான விடயமல்ல. அவர்களை கையாள்வதில் பிரத்தியேக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஏதோ ஒரு வகையில் அவைகள் நிறைவேறாமலில்லை. நிறைவேறியுள்ளன என்றே கூறலாம்.

எமது வைத்திய சாலையைப் பொறுத்தவரையில் நாம் வழங்குகின்ற வைத்திய சேவையில் யாரும் குறை கூறவோ குற்றம் காணவோ முடியாது. நாம் வைத்திய சேவை வழங்குவதில் அர்ப்பணிப்போடு பணியாற்றி வருகிறோம் அதனால் வைத்தியசாலைக்கும் பல்வேறு தரத்திலுள்ள வைத்தியசாலை



ஊழியர்களுக்கும் நற்பெயர் இருக்கிறது.

அதனை களங்கப்படுத்திவிடக்கூடாதென் பதில் நாம் அனைவரும் கவனமாக

இருக்கிறோம் என்றார் அவர்

உலக நாடுகளுக்கு கொரோனா ஒரு புதிய விடயம் எமக்கும் அப்படித்தான். 2019, 2020ம் ஆண்டுகளில் உலக நாடுகளில் அது தோன்றினாலும் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு 2021 ஆண்டிலேதான் வந்து சேர்ந்தது. களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த நபரே எமது வைத்திய சாலையின் முதலாவது கோரோனா தொற்று நோயாளியாவர். பல்வேறு பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ள மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கொரோனாவுக்கென ஒரு வைத்திய அலகை நாம் திறக்க வேண்டியிருந்தது. எமது மட்டக்களப்பு வாழ் சமூகத்தினர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த வண்ணம் இருந்தனர். உண்மையில் ஒரு வைத்தியசாலை நோய்களிலிருந்தும், நோயாளிகளிடமிருந்தும் விலகியிருக்கக் கூடாது. ஆகையால், எமது வைத்திய சாலையின் பணிப்பாளர் Dr. கலாரஞ்சனி அந்த எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க தயாராகியிருந்தார். அவரது துணிவு, ஆற்றல், தன்னம்பிக்கை என்பன எம்மைப்போன்றவர்களுக்கு ஒரு விட்டமின் டொனிக்காக இருந்தன. இதற்குரிய செயற்பாடுகளை ஒரு சில வைத்தியர்கள் முன்னின்று எடுத்துச் சென்றார்கள்.


நுண்ணுயிரியல் விசேட வைத்திய நிபுணர் வைதேகி சஜீவன்

வைத்தியர் மதன் அழகன் அதில் குறிப்பிடத்தக்க ஒருவர் முதலாவது நோயாளியை வைத்தியசாலைக்கு கொண்டு வரும்போது அந்த அம்பியூலன்சுக்கு கல்லெறிந்தார்கள். அந்த நோயாளி தன் தலையை தனது இரு கைகளாலும் பொத்திக் கொண்டு வைத்தியசாலைக்குள் ஓடிவந்தமை என் கண்களில் இப்போதும் பசுமையாக நிழலாடுகிறது. கல்லெறிந்தது ஒரு மிலேச்சத்தனமான செயல். அதற்குப் பின்னராகவே, கல்லாறு, மகிழவட்டவான், காத்தான்குடி, வாழைச்சேனை, நாவற்காடு, ஆகிய இடங்களில் கொரோனாவுக்கான தனிமைப்படுத்தல் நிலையங்கள் உருவாகின. அந்தக்காலத்தில் எமது மக்கள் கொரோனாவைப்பற்றி அறிந்து கொண்டதோடு தனிமைப்படுத்தல் அவசியம் என்பதையும் விளங்கிக் கொண்டார்கள். எமது மக்களில் அனேகர் எதையும் சிந்திக்காமல், ஆராயாமல் செயற்படுகிறார்கள். அது எம்மைப் போன்ற வைத்திய சேவையில் ஈடுபடுவோருக்கு சஞ்சலத்தை ஏற்படுத்தி விடுகிறது. அந்த நோயாளி 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் இருந்து. அதன்பின்னர் தேசிய தொற்று நோய் அலகிற்கு (கொழும்பு) அனுப்பிவைக்கப்பட்டார். (National Institute of Infection Disease}. பின்னர், அவர் சுகம் அடைந்து திரும்பியிருந்தார்.

நான் இங்கு சுட்டிக்காட்டுவது, ஒரு வைத்தியர் வெறுமனே, நோயை பரிசோதித்து மருந்து கொடுத்தால், அதனோடு தமது கடமை முடிந்ததாக எண்ணிவிடக் கூடாது. தாம் வேலை செய்யும் புலம், தான் சந்திக்கும், நோயாளிகள், தான் பணியாற்றும் வைத்தியசாலை என்பவை பற்றியும் சிந்தித்து, அதற்கேற்ப பொருத்தமாக செயற்பட வேண்டும். எங்களது வைத்தியசாலையைப் பொறுத்தவரை, இடப்பற்றாக்குறை, ஆளணிப் பற்றாக்குறை, வைத்திய உபகரணங்களுக்கு தட்டுப்பாடு என்பன இருந்தன அந்த நிலையிலேயே நாம் கொரோனா தொற்று, கொரோனா பாதிப்பு தொடர்பான ஒரு அலகை திறந்தோம்.

அனேகமானவர்கள் எங்களது முயற்சியை பரிகசித்தனர். அந்த பரிகசிப்பையும் தாண்டியே பணியாற்றினோம். இன்று அந்த யூனிற் விசாலமாகி முழுவளர்ச்சி கண்டுள்ளது. முயற்சி திருவனையாக்கும் நாம் இயங்கிக் கொண்டிருக்கும்போது 2021 ஏப்ரல் வரை நாங்கள் எடுக்கும் சாம்பிள்களை பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலைக்கே அனுப்பி வந்தோம். அது எங்களுக்கு பயணச் சிரமத்தையும், நேயச் சிரமத்தையும் தந்ததோடு, பல இடைஞ்சல்களையும் உருவாக்கியது.



இரண்டு வாகனங்கள் கொழும்பு, கண்டி என்று நாள்தோறும் ஓடிக் கொண்டிருக்கும். இதனால் இதன் சிரமத்தை புரிந்து கொள்ள முடியும்

அக்காலகட்டத்தில் நான் ஒரு நுண்ணுயிரியல் விசேட வைத்திய நிபுணராக கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டிருக்கிறேன். ஆயினும் எமது வைத்திய பீட மாணவர்கள் மட்டக்களப்பு போதனாவைத்திய சாலையை தங்களது கற்கைகளுக்கு, களமாக பாவிப்பதால் நானும் இங்கே பணிபரிய வேண்டியிருக்கிறது. அதனால்தான் அந்தக் கேள்வியை என்னிடம் கேட்கிறார்.

என்று உணருவதற்கு எனக்கு ஓரிரு செக்கன்கள்கூட எடுக்கவில்லை. இத்தனைக்கும் எமது போதனாவைத்திய சாலையில் இவ்வாறான ஒரு கருவியை வைத்திருப்பதற்கும்,

கையாள்வதற்கும் யாருமில்லை. நான் பதிலிறுப்பதற்கு முன் என் நெஞ்சில் முட்டிய எண்ணங்களெல்லாம் போதனா வைத்திய சாலையும் அதன் எதிர்காலமுமேயாகும். இந்த நிலையில் அன்னை திரேசாவும் அவரது சேவையுமே என் ஞாபகத்திற்கு வந்தது துணிவை வரவழைத்துக்கொண்டு "யேஸ் ஸேர் என்று பதில் கூறினேன்.

அதனைத் தொடர்ந்து, வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் கலா பல சிரமங்களுக்கும், இடைஞ்சல்களுக்கு மத்தியிலும் ஏதோ ஒரு கொரோன அலகை திறக்க உதவினார்.

அதற்கு அப்பால் கிழக்கப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான பல வைத்திய உபகரணங்களை எமக்கு வழங்கினார். இதற்கு மேலாக மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தினர், சிவில் சமூகத்தினர் ஒன்றிணைந்து இன்னுமொரு பி.சி.ஆர். இயந்திரத்தை அவர்களது நிதித் திரட்டல் மூலம் பெற்றுத்தந்தனர். இந்த முயற்சிக்குப் பின்னால் நின்று உதவியவர் எமது மட்டக்களப்பு அரசாங்க அதிபர்கே.கருணாகரன் ஆவார்.

இங்கு ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும் இப்போது நம் நாட்டில் "ஓமிக்ரோன்" வைரஸின் பரவல் தோன்றியள்ளது. இது கொவிட் வைரஸிலிருந்து ஒரு மாறுபட்ட நிலை. மட்டக்களப்பைப் பொறுத்தவரை அது இன்னும் பதிவாகவில்லை. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட சிற்சில "மாதிரிகளை" பரீட்சித்துப்

பார்ப்பதற்கு அனுப்பியுள்ளோம் அதன் முடிவுகள் எமக்கு இற்றைவரை கிட்டவில்லை. முடிவைப்பொறுத்துத்தான் எதையும் உறுதியாகச் சொல்ல முடியும்.

ஓமிக் ரோன் வைரஸைப் பரீட்சித்துப்பார்க்கக் கூடிய ஆய்வு கூட வசதிகள் கொண்ட இடங்கள் ஆறு இடங்களே நம் நாட்டில் இருக்கின்றன. கண்டி, கராப்பிட்டி, ஜயவர்த்தனபுர, பொரளை என்பன இவைகளுட்சில. இங்கையின் பல பாகங்களிலிருந்தும் அனுப்பப்படும் மாதிரிகளை பரிசீலித்து முடிவுகளை தருகின்றன. அங்கு வேலைப் பழு அதிகம். ஆதலால் சில நாட்களுக்கு பொறுமை காக்க வேண்டும்.

சமீபத்தில், வருடஇறுதி நிகழ்வுகளும், கொண்டாட்டங்களும், புதுவருடப் பிறப்பும், பொங்கல் பண்டிகையும், பாடசாலைகள் ஆரம்பமும் என்ற வெவ்வேறு நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. இந்த காலங்களில் சமூக இடைவெளி, முகக் கவசம் அணிதல், கைகழுவுதல் என்பனவற்றை அனேகர் கடைப்பிடித்திருக்காமை அறியப்பட்டது. இதுவே பரவல் அதிகரிப்பதற்கு காரணமாயிற்று.

நாங்கள் தொற்றுக்குள்ளான அனைவரையும் வைத்தியசாலை நோயாளர் விடுதியில் தங்க வைப்பதற்கும், சிகிச்சை அளிப்பதற்கும் அனுமதிப்பதில்லை. சாதாரண நோயாளிகளை அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவிடுவோம்.

மிகமிக ஆபத்தானவர்களையே நோயாளர் விடுதிக்கு அனுமதிப்போம். அப்படிப்பார்த்தால் 2 விகிதமானவர்களே கிடைப்பர். ஆயிரக் கணக்கானோருக்கு தொற்று அதிகரிக்கும் போது நோயாளர் விடுதிக்கு வரும் நோயாளர்களின் தொகையும் கூடுவது சாதாரணமானது.

குறிப்பாக, சிறுநீரக நோயாலும், புற்று நோயாலும், அறுவைச்சிகிச்சைகளுக்கு

உட்படுத்தப்பட்டு, துன்பப்படுவோருக்கு தொற்று ஏற்படுவது அதன் பாதிப்பை

வேகப்படுத்தும். இவர்கள் கட்டாயமாக தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ள வேண்டும்

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையைப் பொறுத்தவரை வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் தொற்று ஏற்பட்டு அவர்கள் கொத்தணியை உருவாக்கியிருப்பதால், வைத்தியசாலை நிர்வாகத்தை செயற்படுத்துவது சிரமமாகத் தெரிகிறது. இது எமக்கு ஒரு பெரும் சவால் இதைச் சமாளிப்பது பெரும்பாடாக இருக்கிறது.

புளியந்தீவு குறூப் நிருபர்
எஸ்.எஸ்.தவபாலன் ...




என். சரவணன்

# கொழும்பு கோட்டையில் பிரதான வாயிலாக விளங்கிய கைமன் வாசல்

போர்த்துகேயர்களிடமிருந்து கொழும்பு நகரம் டச்சுக்காரர்களால் கைப்பற்றப் பட்டபோது, கபோக் கற்களால் செய்யப் பட்ட சுண்ணாம்பு பூசப்பட்ட சுவரால் சூழப்பட்டதாக போர்த்துக் கேயரின் கோட்டை காணப்பட்டதாக ஜோன் கெப்பர் தனது Ancient Ceylon என்ற நூலில் குறிப்பிடுகிறார். நொரிஸ் வீதி (தற்போது ஒல்கொட் வீதி) ஒட்டிய பகுதி இவ்வாறு சுவரால் சூழப்பட்டிருந்தது. கோட்டைக்குள் (கோட்டை) நுழைய விரும் பும் வெளியாட்கள் கோட்டையின் சிறிய வழிகள் மூலமாகத் தான் நுழைந்தாகவேண்டும். கோட்டைக்கு வெளியில் இருந்து அதாவது புறக்கோட்டையிலிருந்து கிழக்கு நுழைவாயில் வழியாக வரும் வாசல்தான் "கைமன் வாசல்" (Kayman's Gate) என்று அழைக்கப்பட்டது. கொழும்பில் கிராண்ட் பாஸ் (Grandpassபெரிய கடவை), லிட்டில் பாஸ் (Little Pass சிறிய கடவை) என்று இரு பிரதேசங்கள் அப்போது இருந் தன. இன்று கிராண்ட்பாஸ் மற்றும் புழக்கத்தில் எஞ்சியிருக்கி

காலத்தில் கொழும்பு ராஜவீதி (Konings/ King's Street) என்று அழைக்கப்பட்ட தற்போதைய புறக்கோட்டையின் பிரதான வீதியின் (Main street) ஆரம்ப முனையில் அந்த கோட்டைக்குள் நுழையும் கைமன் வாசல் இருந்தது. இன்றும் புறக்கோட்டை மெயின் வீதியின் ஆரம்பத்தில் "பழைய நகர சபை" கட்டிடத்துக்கு அருகியில் அந்த "கைமன் வாசலின்" எஞ்சிய அடையாளத்தைக் காணலாம்.

கைமன் வாசலின் அடையாளமாக ஒரே ஒரு தனித்து வமான மணிக் கோபுரம் அது.சுமார் நான்கு மீட்டர் உயரம் கொண்ட இந்த வளைவு கோபுரத்தில் உள்ள மணிக் கோபுரம் சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேல்பழமையானது. அதில் உள்ள மணி நான்கு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வயதைக் கொண்டது. வரலாற்று பதிவுகளின்படி, அந்த மணி ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டேயில் போர்த்துகேயரால் 1554 இல் நிறுவப்பட்ட புனித பிரான்சிஸ் தேவாலயத்துக்கு சொந் தமானது.

நிலங்கள் நிரப்பப்பட்டன, அது மட்டுமன்றி கோட்டையையும் புறக்கோட்டையையும் பிரிக்கும் கோட்டை மதில்கள் அகற் றப்பட்டன. அந்தத் தாழ்நிலப் பகுதிதான் பின்னர் இன்றைய புறக்கோட்டையாக உருவெடுத்தது. தற்போது பழைய மீன் கடை, கருவாட்டுக் கடைகள், மருந்துக் கடைகள் நாட்டு அமைந்துள்ள பகுதியெல்லாம் அப்போதைய செயின்ட் ஜோன்ஸ் கால்வாயின் பகுதிகள் தான். இன்று அப்படிப்பட்ட ஒரு கால்வாய் இருந்ததற்கான அடையாளமே இல்லை. ஆனால் இன்று கருவாட்டுக் கடைகள் அமைந்துள்ள வீதிக் குப் பெயர் செயின்ட் ஜோன்ஸ் வீதி (St Johnstreet) தான்.

டச்சுக்காரர்கள் இந்த வாயிலுக்கு "Kaimaan Poort" (காய்மன் பூரட்) என்று பெயரிட்டனர், அதாவது "முதலை யின் வாயில்". டச்சு மொழியில் "Kaimaan" என்பது முதலை என்று அர்த்தம்.

"கைமன் வாசல்" மணிக்கோபுரம் இரண்டு காரணங்களுக் காக நிறுவப்பட்டது. அதில் ஒன்று ஆட்டுப்பட்டித் தெருவின்

கிலேயர் காலத்தில் இரவு எட்டு மணிக்கு அடிக்கப் படும் மணி என்பது மதுபானக் கடைகளை மூடு வதற்கான எச்சரிக்கையை செய்யும் ஒன்றாகவும் இருந்திருக்கிறது. மீண்டும் 9 மணிக்கு அடிக்கப் டும் மணியின் போது அனைத்து மதுபானக் கடை களும் மூடப்பட்டிருக்க வேண்டும்.

றது. அந்த இரண்டு புறநகர் பிரதேசங்களில் இருந்து வந்து இந்த கோட்டைக்குள் நுழைவதற்கான நுழைவாயிலாகவே "கைமன் வாசல்" வாயில் இருந்தது.

கொழும்பு ஐந்து லாம்பு சந்தியில் பழைய நகரக் கட்டடத் தைத் தாண்டி மெயின் வீதிக்குள் நுழையும் போது எதிரில் இடது பக்க வீதி முனையில் இன்றும் எஞ்சியிருக்கிறது கால னித்துவ ஆட்சியின் அடையாளப் பிரதிநிதியாகவும் தொல்லி யல் பெறுமதி மிக்கதாகவும் இருக்கிற "கைமன் வாசல்".

போர்த்துக்கேயர் காலத்தில் இந்த இடம் "Porta Reinha" ("Queen's Gate") அல்லது இராணியின் வாசல்) என்று அழைக்கப்பட்டது. அதுபோல பிற்காலத்தில் கைமன் வாயில் என அழைக்கப்பட்ட கொத்தளம் Sao Estevao என்று அழைக் கப்பட்டது. (படத்தில் இல.6 என்று குறிக்கப்பட்டிருக்கிறது) இருந்த அகழிக்கு மேல் இழுப்பாலமும் காவலுக்கு காவலா ளிகளும் இங்கே இருந்திருக்கிறார்கள். அகழி ஒல்லாந்தர்

இதைப் பற்றி திமதி கொடமுன்னே என்கிற பாதி ரியார் குறிப்பிடுகிற விளக்கத்தின் பிரகாரம் இந்த மணியோடு தொடர்புடைய தேவாலயம் பிரான் சிஸ்கன் பாதிரியார்களின் வேண்டுகோளுக்கு இணங்க மன்னன் புவனேகபாகு தனது அரண் மனைக்கு அருகாமையில் கட்டிய ஒன்றெனவும்; "வெற்றியின் அன்னைக்கு" அது அர்ப்பணிக்கப் பட்டதாக குறிப்பிடுகிறார்.

ஒல்லாந்தர் ஆட்சியில் கத்தோலிக்க சமயம் தடை செய்யப்பட்டு பல கத்தோலிக்க தேவால யங்கள் அழிக்கப்பட்டன. ஒல்லாந்தர் 1656இல் கொழும்பைக் கைப்பற்றிய பின்னர் சிதைந்தி ருந்த தேவாலயத்திலிருந்து இந்த மணி கொழும் புக்கு கொண்டு வரப்பட்டது. அதன் பின் கோட்டையின் தெற்கு வாசலில் நிறுவப்பட்டது. இந்த நுழைவாயிலில் உள்ள பெரிய வாயில் ஒரு ஆழ மற்ற கால்வாய் மீது ஒரு பாலத் துடன் இணைக்கப்பட்டிருந்தது. இந்தக் கால்வாய் அப்போது செயின்ட்ஜோன்ஸ் கால்வாய் (St John's Canel) என்று அழைக் கப்பட்டது. செயின்ட் கால்வாய் பேரை ஏரி வழியாக காலிமு கத்திடலின் கடலில் கலக்கிறது. இந்தக் கால்வாய் பேரை ஏரியு டன் இணைக்கப்பட்டிருந்ததால் அங்கேசுற்றிலும் முதலைகள் காணப்பட்டன. கோட்டைக்குள் வசித்தவர்களின் குப்பைக் கழி வுகளை எறிகின்ற ஒரு சதுப்புக் கால்வாயாக செயின்ட் ஜோன்ஸ் கால்வாய் இருந்தது. கோட்டை வாழ் வாசிகள் எறிகின்ற குப்பை களை உணவாக்கிக் கொண்டு பல முதலைகள் இங்கே இருந் துள்ளன.


ஆங்கிலேயர் காலத்தில், செயின்ட் ஜோன்ஸ் கால்வாய் மற்றும் அதைச் சுற்றியுள்ள தாழ்



இம்மணிக்கோபுரத்தை இப்போதும் பார்க்கலாம்

கைமன் வாசல் பற்றி ஆங்காங்கு சிதறிய பல தகவல்களை நம்மால் இன்று பெற முடிந்த போதும் திகதி கொடமு னேஎன்கிற பாதிரியார் சிங்களத்தில் கத்தோலிக்க சபையின் வரலாற்றைப் பற்றி எழுதிய நூலில் கைமன் வாசல் பற்றி சில சுவாரசியமான தகவல்க ளைக் குறிப்பிடுகிறார்.


வெண்கலத்தால் தயா ரிக்கப்பட்ட இந்த மணியில் "Ave gratia plena dominus tecum benadicta tu in mulieribus,"(அருள் நிறைந்தவர் வாழ்க!ஆண் டவர் உன்னோடு இருக் கிறார், பெண்களில் நீ பாக்கியமானவள்!) என்று லத்தின் வார்த்தைகளில்



அன்றைய கொழும்புக் கோட்டையின் வரைபடம்

அடுத்த முனையில் இருக்கும் வுல்பெண்டால் தேவாலயத்தில் (Wolvendaal Church) ஞாயிறு ஆராதனை பற்றிய அறிவிப்பை உணர்த்திட இந்த மணி பயன்படுத்தப்பட் டது.நம் காலத்திலேயே ஆட்டுப்பட்டித் தெரு என்கிற பெயர் அழிந்து போனதைக் கண்டி ருக்கிறோம். ஞாயிறு காலையும், மாலையும் ஆராதனைக்கு முன் அரை மணித்தியாலமி ருக்கையில் அந்தச் செய்தியை அறிவிப் பதற்காக அந்த மணி அப்போது பயன்படுத் தப்பட்டிருக்கிறது.தேவாலயத்துக்கும்இந்த மணிக்கோபுரத்துக்கும் இடையில் உள்ள இடைவெளியைப் பற்றி நோக்கும்போது எவ்வாறு இவ்வளவு தூரத்தில் அந்தச் செய் திகள் பரிமாறப்பட்டன என்று சிலர் கருதுவ துண்டு. ஆனால் இவற்றுக்கிடையில் வெறும் 650 மீற்றர் தூரம் தான் உள்ளது. அன்று இப்போது இருப்பது போல கட்டிடங்களோ சன நெரிசலோ இருக்கவில்லை. மரங்கள் அடர்ந்த மேட்டுப்பகுதி அது.அப்படிப் பார்க்கும் போது இந்த மணி ஏற்படுத்திய ஒலி வழிச் செய்தி என்பது கேட்கக் கூடிய ஒன்று தான் என்பதை நம்மால் உணர முடியும்.

பெரும்பாலும் கோட்டைக்கான (நகரம்) இந்த நுழைவாயி லும் வெளியேறும் வாயில்களும் இரவில் மூடப்படும் போது ஊரடங்கு உத்தரவு செய்தியை பரப்புவதற்கும் (Curfew Bell) இந்த மணியை ஒலிக்கச் செய்ததாக அறிய முடிகிறது. ஆங்


மெயின் வீதி அன்று

பொறிக்கப்பட்டிருக்கிறது. இதே காலப் பகுதியைக் கொண்ட மணிகளைப் பார்க்கும் போது அதைத் தயாரித்தவரின் பெயரும் தயாரித்த ஆண்டும் பொதுவாக பொறிக்கப்பட்டிருப் பதைக் காணலாம். ஆனால் இதில் 'கிறிஸ்தவ சமய மேற் கோள்'எனப் பொறிக்கப்பட்டிருப்பது தனித்துவமானது.

(தொடரும்)

# மலையக மக்களின் விடிவுக்காகத் தன்னை அர்ப்பணித்த மலையக காந்தி கே. இராஜலிங்கம்

ராஜலிங்கத்தின் சகோதரியான தவம ணிதேவி தன் 83வது வயதில் ராஜ லிங்கத்தைப்பற்றி எழுதிய கட்டுரை இது. ராஜலிங்கம் மறைந்து 59 ஆண்டுகளுக் குப் பின்னர் அவருக்கு அஞ்சலி செலுத்து முகமாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. இக் கட்டுரையை எமக்கு தந்தவர் எச்.எச். விக்கிர மசிங்க.

மலையக மக்களின் விடிவுக்காக தன்னை அர்ப்பணித்தவரும் இ.தொ.கா.வின் முன்னாள் தலைவருமான (1948 1952) கே. இராஜலிங் கம் எம்.பி. மறைந்து 11.02.2022ஆம் திகதியு டன் 59 ஆண்டுகள் நிறைவுபெறுகின்றன.

1909ம் ஆண்டு டிசம்பர் 3ம் திகதி பிறந்தவர் அமரர் கே. இராஜலிங்கம். அவர் சங்குவாரித் தோட்டப் பெரிய கங்காணியின் பேரன். அந்த சுற்றுவட்டாரத்தில் உள்ள ஏழு தோட்டங்களுக்கு ஆள் கொண்டுவந்த ஸ்ரீராமன் ஹெட் கங்கா ணிதான் இவர். அவரைத் தொடர்ந்து அவரின் சிரேஷ்ட புதல்வரான ஸ்ரீராமன் ஆர். காளிமுத்து, சங்குவாரித் தோட்டம், கிரிமிட்டிய தோட்டம், வம்பு ரகமம் தோட்டங்களுக்கு ஆண்களை வேலைக் கமர்த்தி இறுதியாக சங்குவாரித் தோட்டத்தில் கங்காணியாக கடமையாற்றியவர். காளிமுத்து

குடும்ப சொத்துக்களை விற்ற பணத்தையும் கொண்டு 1932ஆம் ஆண்டு புசல்லாவை சரஸ் வதி மகாவித்தியாலத்தை தொடக்கினார். அப் பொழுது அவருக்கு 23 வயதுதான். அந்த சிறுவ யதிலே மலையக பாட்டாளி மக்களுக்கென ஒரு வித்தியாலயத்தை அவரால் நிறுவ முடிந்தது. அக்காலகட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் இலங் கைக்கான தூதுவர் கே.பி.என். மேனன் இப் பாட சாலையை நிறுவுவதற்கு ராஜலிங்கத்திற்கு உத விகளைச் செய்தார். அதனால் தான் மேனனின் துணைவியைக் கொண்டே அப்பாடசாலை திறப் புவிழாவை நடத்தினார் ராஜலிங்கம். மேனனின் துணைவியின் பெயரான சரஸ்வதி என்ற


அமர்ந்திருப்பவர்களில் இரண்டாவது ராஜலிங்கம், நடுவில் கல்கி கிருஷ்ணமூர்த்தி மற்றும் தொண்டமான்.

ஹெட் கங்காணியின் மூத்த புதல்வராக பிறந் தவர் தான் அமரர் கே. இராஜலிங்கம்.

தமது இறுதிக் காலம் வரை பிரம்மச்சாரி யாக வாழ்ந்தவர் கே. இராஜலிங்கம். குடும்ப வாழ்க்கை தனது பொதுச்சேவைக்கு தடையாக இருந்துவிடுமோ என்ற காரணத்தினால் தான் அமரர் கடைசிவரை பிரமச்சாரியாகவே வாழ்ந்து மறைந்தார்.

1927ம் ஆண்டு மகாத்மா காந்தியடிகள் இலங்கை வந்திருந்தபோது அவரை தரிசிக்கும் வாய்ப்பு ராஜலிங்கத்துக்கு கிடைத்தது. காந் தியடிகளின் வருகையும் சொற்பொழிவும் இரா ஜலிங்கத்தின் சிந்தனையில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தியது. 18 வயதே நிரம்பிய இளம் வய திலேயே அவரின் தொண்டு ஆரம்பமாகியது. தனது விடாமுயற்சியாலும் தனது தந்தையாரின்

பெயரையே தான் நிறுவிய பாடசாலைக்கு சூட் டினார். அன்றைய இந்தியத் தூதுவர் சிவசங்கர் மேனனின் பாட்டியாரே திருமதி சரஸ்வதிமேனன் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்கள் கடந்த வருடம் புசல்லாவை சரஸ் வதி மகாவித்தியாலயத்தில் அமரர் இராஜலிங் கத்தின் 36 ஆவது சிரார்த்ததினம் அனுஷ்டிக்கப் பட்டபோது இந்திய தூதுவர் சிவசங்கர் மேனன் அந்த வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அன்றைய இக் கட்டான காலகட்டத்தில் இந்திய வம்சாவளி மக் களுக்கென 40 பிள்ளைகளுடன் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க இராஜலிங்கம் எந்தளவு மனத்துணிவும் அயராத முயற்சியும் கொண்டி ருக்க வேண்டும் என்று நினைவு கூர்ந்ததுடன் தன்னுடைய பாட்டியாரின் நினைவாக இப்பா

டசாலைக்கு 60ஆயிரம் ரூபாவை வழங்குவதாக அறிவித்தார். தனது பாட்டனாருடனும், பாட்டியாருடனும் இராஜலிங்கத்துக்கு இருந்த சிறந்த தொடர்புகளையும் அவர் நினைவுகூ றத் தவறவில்லை.

அமரர் பெரிசுந்தரம் தொழி லாளர் கமிஷன் அமைப்பதற்கு முன்னரேயே அவரோடு நாட்டின் எல்லாப் பாகங்களுக்கும் சென்று ஆங்காங்கே கூட்டங்களை நடத்தி தோட்டத் தொழிலாளர் பிரச்சினை களை விரிவாக எடுத்துரைத்த வர் தான் அமரர் இராஜலிங்கம். 1939ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு இலங்கை வந்திருந்தபோது பிரிந்து கிடந்த, மலையக மக்களை இலங்கை இந்தியன் காங்கிரஸ் என்ற கொடியின் கீழ் ஒன்றுபடுத்தி அந்த ஸ்தாபனத்தின் தலைவ ராக இராஜலிங்கத்தை நியமித்தார்.

இலங்கையில் நேருஜி நிகழ்த்திய ஆங்கில உரைகளை தமிழில் மொழிபெயர்த்தவர் அமரர் இராஜலிங்கமே. இலங்கை இந்திய காங்கிரஸின் தலைவராகவும் பொதுச் செயலாளராகவும் பதவி வகித்த அமரர், இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காக பெரிசுந்தரத்தோடும் மேத்தாவோடும் இணைந்து அரும்பாடுபட்டார்.

1949ம் ஆண்டு நாவலப்பிட்டி முதலாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்ய பட்டார். இக்காலகட்டத்தில் சைவசமய பரிபாலன சபையின் அங்கத்தவராகவும் பணியாற்றினார். தாம் தயாரித்த பிரபல்லிக்க தொழிலாளர் அடிப் படை உரிமை மகஜரை சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்தில் சமர்ப்பிக்க ஜெனிவா சென்றார். 1949ம் ஆண்டே (I.L.O) சர்வதேச தொழிற் சங்க சம்மேளனம் அன்னாரை ஆசிய விவசாய குழுவின் ஆலோசகராக நியமித்து கௌரவித்தது.

அன்னார் 1948ம் ஆண்டு தொடக்கம் 4 வருட ங்கள் காங்கிரஸின் தலைவராக பணிபுரிந்த காலகட்டம், ஒரு சோதனைமிக்க காலகட்டமாகும். பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு, நாடற்றவர்கள் என்ற அநாதை நிலைக்கு இந்திய வம்சாவளி மக்கள் தள்ளப்பட்டகாலம் இது. இந்த காலத்தில் மனம் தளராது மிகசாதுர்யமாகவும், சாமர்த்தியத்தோ டும் காங்கிரஸை வழிநடத்திச் சென்றார். 1939ம் ஆண்டே அவர் கூறிய தீர்க்கதரிசனத்தின்படி 1952ம் ஆண்டு இப்படியான அரசியல் கெடு பிடிகள் நாட்டில் தலைதூக்கின. அதுமட்டுமன்றி அமரர் அடிக்கடி "மக்களது உரிமைகளை சட்டத் தால் அளக்காமல், மானசீகமான நியாயம், நெறி




வழுவாத சமத்துவத்தோடு நிரந்தரப் பரிகாரம் காண வேண்டும்" என்று வலியுறுத் துவார்.

காங்கிரஸ் ஸ்தாபனம் பிள வுபட்ட போதும் கூட எல்லோ ராலும் மரியாதையோடு கௌரவத்தோடு மதிக்கப்பட் டார். அவரின் தன்னலமற்ற சேவையை கண்ட காலஞ் சென்ற எழுத்தாளர் கல்கி கிருஷ்ணமூர்த்தி 1950ஆம் ஆண்டு தனது சஞ்சிகையின் அட்டைப் படத்தில் அன்னா ரின் படத்தை பிரசுரித்து தனர்க்களின் தொண்டர் என்று பட்டத்தை வழங் கினார்.

அக்காலத்தில் கல்கி தம்மைப் பற்றி எதையாவது எழுதிவிடு வாரோ என்ற அச்சம் பெரிய தலைவர்களுக்கு கூட இருந்தது. ஆனால் அமரரைப் பற்றி ஒளிவு மறைவின்றி எழுதினார். தனது 40ஆவது வயதில் மலையக காந்தி என்ற பட்டத்தை அவர் பெற்றாலும் அதைப் பற்றியோ தனது புகழைப் பற்றியோ சிறிதும் சாதாரண வாழ்க்கை நடத்தி வந்தார் இராஜலிங் கம்.

கொழும்பு இந்திய சங்கத் தலைவரும் சீர்திருத்தவாதிய



கல்கி அட்டைப் படம்

திருமதி தே. நவமணிதேவி

மான பெரியார் சி.எஸ். சிவனடியான் போன் றோருடன் இணைந்து, இந்திய அரசியலமைப்பின் பிதாவான டாக்டர் அம்பேத்கார், தமிழக சட்டசபைத் தலைவர் சிவசண்முகம்,முனுசாமி போன்ற அறி ஞர்களைக் கண்டு இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி மக்களின் நிலைமையை நேரடியாக விளக்கியதோடு நீண்ட மகஜர் ஒன்றையும் சமர்ப் பித்து இந்திய பேரரசை கண்விழிக்கச் செய்தார்.

இதன் பயனாகத்தான் நேருஜி தமது இலங்கை விஜயத்தை உடனடியாக மேற்கொண் டார். 1931ம் ஆண்டு இந்தியர் இலங்கையர்

கஷ்ட நிவாரண சங்கம் என்ற அமைப்பை காலஞ்சென்ற சி.எஸ். சிவனடியான் தலைமை யில் புசல்லாவை வக்கப்பிட்டியில் ஆரம்பித்த போது அதன் செயலாளராக இராஜலிங்கம் பணி யாற்றினார்.

அமரர் கே. இராஜலிங்கத்தின் 3வது நினைவுத் தினக்கூட்டம் கொழும்பு மேட்டுத்தெரு விவேகானந்த சபையில் 1966ஆம் ஆண்டு நடந்தபொழுது அன்றைய செனட்டர் ஏ. இரட் நாயக்க "மலையக மக்களின் பிரச்சினைகளை நன்கு தெரிந்துகொண்டு அவர்களின் விடுத லைக்காக இறுதிவரை ஒரு தியாகியைப் போல வாழ்ந்தவரென்றும் இன,மத வேறுபாடின்றி எல்லோருக்கும் சேவை செய்தவர் என்றும் இராஜலிங்கத்திற்கு புகழ்மாலை சூட்டினார்.

அதேபோல் அன்றைய கூட் டத்தில் மறைந்த தலைவர் எஸ்.தொண்டமான் பேசுகை யில் தலைவர் இராஜலிங்கம் தலைவர் என்ற கர்வமில்லாது இறுதிவரை உழைத்தது மட் டுமல்ல, இலங்கை தொழிலாளர் காங்கிரசை இத்தனை பெரிய ஸ் தாபனமாகவளர்த்துவிட்டபுகழும்ஸ் ரீராஜலிங்கத்தையே சாரும் என்று கூறினார்.

1951ல் இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் காங்கி ரஸாகவும் 1954ல் இலங்கை தொழிலாளர் காங்கிரசாகவும் பின்னர் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸாக பிளவுபட்டது. அமரர் கே. இராஜலிங்கம் இ.தொ.கா.வின் துணைத் தலைவராக இருந்தபோது சிறு சங்கங்களை ஒன்றுசேர்க்க எவ் வளவோ பாடுபட்டார். அவரது முயற்சியால் இரு காங்கிரசுகளும் 1960ம் ஆண்டு ஒன்றி ணைந்து பின்னர் 1962ல் மீண்டும் பிரிந்தன. தன்னலம் பாராது மலையகத் தமிழ் மக்களின் உயர்வுக்காகப் பாடுபடும் தனது இலட்சியங்கள் ஈடேறாமல் போவதைக் கண்ட அவர் தனது இறு திகாலத்தில் சோர்வடைந்திருந்தார்.

மலையகக் காந்தி இராஜலிங்கம் சங்குவாரி தோட்டத்தின் தனது தந்தையின் இல்லத்தில் தந்தையைக் கட்டிப்பிடித்தபடியே 1963ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி அமரரானார். மலையகம் உட்பட இலங்கையின் பலபகுதிக ளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவருக்கு தமது இறுதி அஞ்சலியை செலுத்தி னர்.



# இரசாயன பசளையின்றி நெல் அறுவடை செய்யும் விவசாயிகள்

நாத்தாண்டிய, தப்போவ கமத்தொழில் வலயத்துக்கு உட்பட்ட சகல வயல் நிலங்களும் அப் பகுதிக்கான கமத்தொழில் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் உரிமையாளர்களும் தமது வயல்களை கமத்தொழில் நிலையத்தில் பதிவு செய்துள்ளனர். கடந்த வருடம் எமது நாட்டில் ஏற்பட்ட உரப்பற்றாக்குறை மற்றும் இதர பிரச்சினைகளினால் தப்போவ பிரதேச உழவர்களும் பாதிக்கப்படாமல் இல்லை. அவர்கள் போராட்டங்களில் மட்டும் ஈடுபடவில்லை. அப் பிரதேச உழவர்களில் பெரும்பாலானோர் கால்நடைக் கழிவுகளை தமது வயல் நிலங்களுக்கு பசளையாக பயன்படுத்தி நெற்பயிர் செய்கையை மேற்கொண்டனர். இதனால் ஓரளவு நல்ல விளைச்சலையும் தற்போது பெற்றுக் கொண்டுள்ளனர்.





இவ்வாறான முயற்சிகளை மேற்கொண்ட விவசாயிகளில் ஒருவரான கொட்டராமுல்ல, தர்கா வீதியைச் சேர்ந்த 32 வயதுடைய மொஹமட் அப்லால் இது தொடர்பாக எம்முடன் பேசினார்.

"கடந்த சில வருடங்களாக நான் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றேன். 10 ஏக்கர் பரப்பளவுள்ள வயல் நிலத்திலேயே நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றேன். எனது வயல் நிலம் பஹல கொட்டராமுல்ல பிரதேசத்திலேயே அமைந்துள்ளது. உரப் பற்றாக்குறை, இரசாயன பசளைகள் கிடைக்காமை போன்ற காரணங்களால் எனது வயல் நிலங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நெல் அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எனினும் இயற்கை பசளையான காய்ந்த சருகுகள் மற்றும் மாட்டுச் சாணம் ஆகியவை ஏதோ ஒரு வகையில் எனது வயல் நிலங்களுக்கு கிடைத்தன. இவை போதாது என்பதால் சந்தையிலும் மற்றும் தப்போவ, கமத்தொழில் நிலையத்தின் உரக் களஞ்சியத்திலிருந்தும் யூரியா பசளையை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்தேன். 50 கிலோ கிராம் எடையுள்ள யூரியா பசளை சுமார் 1500/= ரூபாய்க்கே முன்னர் விற்பனை செய்யப்பட்டது. தற்போது இதே எடையுள்ள யூரியா பசளை 13000/= ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் நான் எனது வயல் நிலத்துக்கு யூரியா பசளையை பயன்படுத்தவில்லை.

எமது பிரதேச வயல் நிலங்களுக்கு இயற்கையாகவும் தேவையான கனிய வளங்கள் கிடைக்கின்றன. ஆற்றுப் படுக்கைக்கு அருகாமையில் சேருகின்ற தாவரக் கழிவுகள் எமது பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் எமது பிரதேச வயல் நிலங்களை வந்தடைகின்றன. அவையும் நெல் விதைகளுக்கு உரிய போஷாக்கினை வழங்கி இருக்கலாம். தரமான சம்பா நெல் விதைகளையே இந்த முறை நான் வயல் நிலங்களில் விதைத்தேன். இவை 4 மாதங்களில் பலன் தரக்கூடியவை. ஆனாலும் 10 ஏக்கர் பரப்பளவுள்ள வயல் நிலத்திலிருந்து 2500 கிலோ எடையுள்ள நெல்லே அறுவடையில் கிடைத்தது. அவற்றை ஒரு கிலோ கிராம் 80/= ரூபாய் வீதம் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்தேன். ஆனாலும், கடந்த காலங்களில் 4000 கிலோ எடையுள்ள நெல் அறுவடையை ஒரு போகத்தில் இவ் வயல் நிலங்களிலிருந்து பெற்றுள்ளேன். அவற்றை ஒரு கிலோ கிராம் 60/= ரூபாய் வீதம் இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளேன்.

தற்போது உரப் பற்றாக்குறை காணப்படுவதால் இயற்கை பசளையை பயன்படுத்தி நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். நாம் விவசாயத்தில் ஆர்வமுள்ளவர்கள். என்னிடம் உழவு இயந்திரங்கள் மற்றும் நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான உபகரணங்கள் உள்ளன. எனினும் விவசாயத்தை கைவிடும் நோக்கம் எனக்கு இல்லை. அரசாங்கம் எங்கள் தொழில் முயற்சிக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். எமது வாழ்வாதாரம் இதிலேயே தங்கியுள்ளது. உரிய ஆலோசனைகளுடன் தேவையான பசளைகளையும் எமக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும்.

சுமார் அரை ஏக்கர் நிலப்பரப்பில் நெல் விதைத்து அறுவடை செய்வதற்கு எதிர்ப்பார்த்திருக்கும் 50 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான எம். என். எம். இம்தியாசுடன் அடுத்ததாக பேசினேன். "எனது வாப்பா (அப்பா) செய்து வந்த பரம்பரை வயலிலேயே இம்முறை நெல் விதைத்தேன். எந்த விதமான இரசாயன பசளைகளையும் நான் பயன்படுத்தவில்லை. எனது வயல் நிலமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அரை ஏக்கர் வயல் நிலத்திலிருந்து 250 கிலோ எடையுள்ள நெல்லை கடந்த காலங்களில் ஒவ்வொரு போகத்திலும அறுவடை செய்து வந்திருக்கிறேன்.

தப்போவ கமத்தொழில் நிலையத்தில் எனது வயல் நிலத்தை பதிவும் செய்திருந்த போதிலும் இம்முறை பசளைகள் எதுவும் கிடைக்கவில்லை. எமது பிரதேசத்திலுள்ள வயல் நிலங்களில் எதிர்காலத்தில் நெற்பயிர் செய்கையை மேற்கொள்ள முடியுமா? என்ற கேள்வியும் உள்ளது. இந்த போகத்தில் நெல் அறுவடை பெறுவதிலும் சந்தேகமே உள்ளது.

எந்த விதமான பசளைகளையும் பயன்படுத்த முடியாத காரணத்தால் வயல் நிலங்கள் பாழாகிவிடும் என்ற அச்சமும் உள்ளது" என்கிறார் இம்தியாஸ். இயற்கை பசளையை பயன்படுத்த அவர்கள் தயக்கம் காட்டவில்லை. எனினும் உழவர்களுக்கு தமது அறுவடை சிறப்பாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லையே!. இதனைக் கருத்தில் கொண்டு விவசாய திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு போதுமான பசளைகளை கிடைக்க வழி செய்ய வேண்டும்.

**நீர்கொழும்பு ருஸ்மான்**

படங்கள்
நீர்கொழும்பு தினகரன் நிருபர்

# உலக சாதனை புத்தகத்தில் பெயரை பதித்த சாய்ந்தமருது பர்ஷான்;

## 12 நிமிடத்தில் நிகழ்த்தி சாதனை !

புலனுறுப்புகளால் மெய் சிலிர்க்கும் சாகசம் புரிந்து சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் அம்பாரை மாவட்டம் சாய்ந்தமருதை சேர்ந்த எம். எஸ். எம். பர்சான் இடம்பிடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளார்.



ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்ததாக உலகின் 26 நாடுகளில் வியாபித்திருக்கும் சர்வதேச சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் முன்னிலையில் எம்.எஸ்.எம். பர்சானினால் புரியப்பட்ட சாதனைகள் எம்.எஸ்.காரியப்பர் மண்டபத்தில் கடந்த 06ஆம் திகதி பிற்பகல் இடம்பெற்றது .








கண், காது, மூக்கு, வாய் ஆகிய புலனுறுப்புகளால் அபார சாதனையை மேற்கொண்ட எம். எஸ். எம். பர்சான் , பல்லினால் 5.7 கிலோ கிறாம் பாரத்தினை சங்கிலிகளின் உதவியுடன் உயர்த்துதல், குளிர்பானத்தை மூக்குத்துவாரத்தினூடாக அருந்துதல், மூக்கு துவாரத்தினூடாக வயரை செலுத்தி வாயினூடாக எடுத்து மின் குமிழை எரியச் செய்தல், பல்லினால் தேங்காய் உரித்தல் போன்ற செயற்பாடுகளை 12 நிமிடத்தில் மேற்கொண்டு உலக சாதனையை நிலைநாட்டி பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியதுடன் தனது பெயரை சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

சர்வதேச சோழன் உலக சாதனை இலங்கை பிரதிநிதிகளால் இவருக்கான சர்வதேச சோழன் உலக சாதனை புத்தக சான்றிதழ், பதக்கம் என்பன வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார் .

20 நிமிடங்களுக்குள் இச் சாதனை மேற்கொள்ளப்படவுள்ள இருந்த நிலையில் 12 நிமிடங்களில் இச் சாதனை இடம்பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இச் சாதனை மூலம் நாட்டுக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் அம்பாரை மாவட்டத்திற்கும், கல்முனை பிராந்தியத்துக்கு சாய்ந்தமருது பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இந்நிகழ்வில் சிங்கள, தமிழ், இஸ்லாமிய கிறிஸ்தவ மத போதகர்கள்,சர்வதேச சோழன் சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளான எம்.தனராஜன், ரீ.இன்பராஜா, எஸ்.நிலக்ஸன், கல்முனை மாநகர முதல்வர் ஏ. எம். ரக்கீப், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம் .ரம்சின் பக்கீர், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர், எஸ்.புவேனேந்திரன், கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை அதிபர் எம். ஐ. ஜாபிர், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.கே. சனூஸ், சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோத்தர்கள், கிழக்கு மாகாண கராட்டி சம்மேளன தலைவர் முஹம்மட் இக்பால், மருதம் கலைக் கூடல் மன்றத்தின் தலைவர் அஸ்வான் சக்காப் மௌளானா, முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும், யூத் அலியன்ஸ் ஸ்ரீலங்கா இளைஞர் அமைப்பின் (Youth Alliance Sri Lanka) அமைப்பின் ஸ்தாபக தலைவருமான இஷட். எம் ஸாஜீத், ஊடகவியாளர்கள்,பொது மக்கள் என பலரும் இதன்போது கலந்து கொண்டனர்.

**எம்.என்.எம்.அப்ராஸ்**

# கடல்சார் பிளாஸ்ரிக் மாசுக்களை அகற்றுவதில் பங்களித்தல்



ஹேமாஸ் ட்ரான்ஸ்போர்டேஷன் பிரைவட் லிமிடெட் மற்றும் எவர் கிறீன் மெரீன் (ஹொங் கொங்) லிமிடெட் ஆகியவற்றுக்கிடையிலான இணை நிறுவனமான எவர் கிறீன் சிப்பிங் ஏஜென்ஸி லங்கா (பிரைவட்) லிமிடெட், இலங்கை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையுடன் கைகோர்த்து இலங்கையின் கடல்பரப்பில் காணப்படும் மாசுகள் தொடர்பில் கவனம் செலுத்த முன்வந்துள்ளது.

காலி, சமனல கால்வாய் பகுதியில் மிதக்கும் கழிவுகளை கையகப்படுத்தும் கடல் வடிகட்டி ('Ocean Strainer') ஒன்றை எவர்கிறீன் லங்கா நிறுவியுள்ளதுடன், நாட்டின் ஏனைய பகுதிகளில் ஐந்து "கரையோர பராமரிப்பாளர்" செயற்திட்டங்களையும் முன்னெடுக்கின்றது. இதில் பரனம்பல பீச் மற்றும் லுன பொகுன பீச் போன்றன அடங்கியுள்ளன. இந்தப் பங்காண்மை ஹேமாஸ் நிறுவனத்தின் சூழல்சார் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவானதாக உள்ளதுடன், இலங்கைக்கு உரித்தான உயிரினங்களை மூன்று அம்ச செயற்திட்டத்தினூடாக பாதுகாப்பதாக இந்த நிகழ்ச்சி நிரல் அமைந்துள்ளது. பொறுப்பு வாய்ந்த முறையில் பிளாஸ்ரிக் பாவனை மற்றும் கழிவகற்றல், எமது சூழல் கட்டமைப்பை பாதுகாத்தல் மற்றும் இயற்கை வளங்களை பேணுதல் போன்றன இந்த அம்சங்களில் அடங்கியுள்ளன.

இந்தப் பங்காண்மை தொடர்பில் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையுடன் கைகோர்த்து எமது கடல்சார் சூழல் கட்டமைப்பை பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து பாதுகாப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பில் பெருமை கொள்கின்றோம். குழுமத்தின் சூழல்சார் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் பாவனையை குறைப்பதில் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை பொறுப்பு வாய்ந்த வகையில் கழிவகற்றுவதை உறுதி செய்வதில் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம். எமது நாட்டில் பிளாஸ்ரிக் கழிவுகளை குறைக்கும் முயற்சிகளின் முதல் படிமுறையாக இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது. நாடு முழுவதிலும் சூழலில் வெளியிடப்பட்டிருக்கும் பிளாஸ்ரிக் கழிவுகளை தொடர்ச்சியாக சேகரிக்கும் பணிகளை முன்னெடுக்க உதவுவதுடன், எமது பிளாஸ்ரிக் பிரசன்னத்தைக் குறைக்கும் பணிகளையும் முன்னெடுப்போம்." என்றார்.

கரையோர பராமரிப்பு நிகழ்ச்சியினூடாக, சமூகத்தாரை ஈடுபடுத்தி கரையோரப் பகுதியை தூய்மையாக பேணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், அந்தப் பணிகளில் ஈடுபடுவோருக்கு வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வழிமுறைகளை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்துக்கு வலுவூட்டும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றது. கடலிலிருந்து சுமார் ஐந்து டொன்கள் எடையுடைய பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றுவதற்கு இந்தத் திட்டம் உதவியாக அமைந்திருக்கும் என்பதுடன், இலங்கையின் ஆபத்துக்குள்ளாகியுள்ள மற்றும் அழிவடைந்து செல்லும் கடல்சார் சூழல் கட்டமைப்பை பாதுகாப்பதற்கு உதவுவதாகவும் அமைந்திருக்கும்.

ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் நடமாடல் பிரிவின் பணிப்பாளர் முஷின் கிசிலான் கருத்துத் தெரிவிக்கையில், "அடர்ந்த உயிரியல் பரம்பல் மற்றும் கடல்சார் சூழல் கட்டமைப்பைக் கொண்ட நாடாக இலங்கை திகழ்கின்றது. துரதிர்ஷ்டவசமாக, பிளாஸ்ரிக் கழிவுகள் காரணமாக இது ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. சகல சமூகத்திலும் ஆரோக்கியமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க அர்ப்பணித்துள்ள பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில், எமது கடல்சார் சூழல் கட்டமைப்பை பாதுகாப்பதை உறுதி செய்வதில் பங்களிப்பு வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்திருந்தோம். தூய்மையான மற்றும் ஆரோக்கியமான கடல்கள், சமநிலையான சூழல்கட்டமைப்பை மற்றும் நீர் வளத்தைப் பேணுவதில் முக்கிய பங்காற்றுவதுடன், காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதிலும் பங்களிப்பு வழங்குகின்றது. இந்த நடவடிக்கைகளினூடாக, கடலில் பிரவேசிக்கும் பிளாஸ்ரிக் கழிவுகளை குறைப்பதற்கு நாம் எதிர்பார்ப்பதுடன், இலங்கையின் கடல்சார் சூழல் கட்டமைப்பை பாதுகாக்க எண்ணியுள்ளோம்." என்றார். இலங்கையில் தினசரி 900 மெட்ரிக் டொன் பிளாஸ்ரிக் கழிவுகள் உருவாக்கப்படும் நிலையில், கடல் வடிகட்டி ('Ocean Strainer') மிதக்கும் கழிவு வடிகட்டியினூடாக, கடலில் பிளாஸ்ரிக் கழிவுகள் சென்றடையும் முன்னர் அவற்றை சேகரித்து அகற்ற உதவும். இந்தத் திட்டத்தை MAS ஹோல்டிங்ஸ் வடிவமைத்திருந்ததுடன், முதலாவது வடிகட்டி, 2020 ஆகஸ்ட் மாதம் தெஹிவளை கால்வாயில் நிறுவப்பட்டது. நிறுவப்பட்ட முதல் வருடத்தில், இந்த மிதக்கும் வடிகட்டியினூடாக சுமார் 67,000 கிலோகிராம் பிளாஸ்ரிக் கழிவுகளை கடலில் கலக்கவிடாமல் தவிர்த்துக் கொள்ள முடிந்தது. திறந்த புத்தாக்கம் மற்றும் பிரச்சனைகளை தீர்ப்பதில் கைகோர்ப்பு என்பதில் நம்பிக்கை கொண்டுள்ள MAS, 2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆர்வமுள்ள தரப்பினருக்கு கடல் வடிகட்டி ('Ocean Strainer') தொழில்நுட்பத்தை வழங்க தயாராக இருப்பதாக அறிவித்திருந்தது.

1948 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஹேமாஸ், குடும்பங்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு உதவுவதை நோக்காகக் கொண்டிருந்தது. இந்த பிரதான நம்பிக்கை எமது 70 வருடங்களுக்கு மேலான செயற்பாடுகளில் தொடர்ந்தும் பின்பற்றப்படுகின்றது. இன்று, நுகர்வோர் வர்த்தக நாமங்கள், சுகாதாரபராமரிப்பு மற்றும் இதர சேவைகளினூடாக ஆரோக்கியமான வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு நாம் ஆதரவளிக்கின்றோம். இலங்கையின் சமூகபொருளாதார செயற்பாடுகளில் இணைந்துள்ள ஹேமாஸ், பிராந்தியத்தில் பங்களாதேஷ், மேற்கு வங்கம் மற்றும் மியன்மார் ஆகிய பிராந்தியங்களுக்கு வியாபித்துள்ளது. நாம் தொடர்ந்தும் பரந்த மற்றும் ஆர்வமுள்ள அணியினரில் முதலீடுகளை மேற்கொண்டு, அர்த்தமுள்ள சேவைகளை வழங்குவதுடன், நம்பிக்கை வாய்ந்த பங்காண்மைகளை ஊக்குவிப்போம். அவற்றினூடாக, எமது சகல பங்காளர்களுக்கும் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தும் உள்ளடக்கமான உலகை உருவாக்க பங்களிப்பு வழங்குவோம்.

**லில்லி**

# நீர்த் தாரை...

இருளின் பிடியிலிருந்து பகல் கொஞ்சம், கொஞ்சமாக நழுவத் தொடங்கியது. தவளைகளின் சப்தங்கள் ஓயத் தொடங்கின. நிசப்தம் விரவிக் காணப்பட்டது. வாகனக் கண்ணாடியில் புகை போல் காணப்பட்டது பனியின் மிச்சம். இரவு முழுவதும் தாழ்ப்பாளில் சிக்கிக் கொண்ட கதவுகளை விடுவித்து ஃபஜ்ர் நேரத் தொழுகைக்கு வெளியேறினார் ஹபீப்.

தெரு முழுவதும் இருள் சூழ்ந்திருந்தது.. இரவு முழுவதும் மாடுகள் கடந்த செய்தியைச் சாணம் சொன்னது. பள்ளிக்குள் சென்று தொழுகையில் ஈடுபட்டார். பள்ளிவாசலுக்கு எதிரில் தேநீர்க்கடை வைத்திருக்கும் கணேசன் கடையைத் திறந்து சாமிப் படத்திற்கு மாலை போட்டு வணங்கிவிட்டு அடுப்பில் நெருப்பு வைத்தார். பாலை ஊற்றி நன்கு சூடேற்றினார். தொழுகை முடித்தவுடன் இங்கு ஒரு கூட்டம் கூடுமென்பதால் அதற்கான தயாரிப்பில் இறங்கினார். இரவு முழுவதும் விழித்து இருந்ததால் கண் மூடியது கடைக்கு முன்பிருந்த தெரு விளக்கு.

தொழுகை முடிந்து ஒவ்வொருவராக வெளியேறினார்கள். வழக்கம் போல் கணேசன் தேநீர்க்கடையின் முன்பு வைக்கப்பட்ட கட்டையால் செய்யப்பட்ட பெஞ்சைத் தனது துண்டால் துடைத்து அமர்ந்தார் ஹபீப்.

"கணேஷா எப்படி இருக்கே?"..."ம்ம் ஆண்டவன் புண்ணியத்தில் நல்லா இருக்கேன் பாய்" என்றவாறு நுரை பொங்க தேநீர் கொடுத்தான். அருகில் இருந்த நாளிதழைப் படித்தவாரு தேநீரை மெல்லப் பருகினார் . கூட்டம் அதிகமானது. குடித்த தேநீர் கிளாசுடன், சில்லறையைக் கணசேனிடம் கொடுத்தார். சூரியன் தன் கண்ணைக் கொஞ்சம், கொஞ்சமாகத் திறக்க தொடங்கியதால் .... வெளிச்சம் வெளிவரத் தொடங்கியது.

இதற்கிடையில், இவரின் நண்பரும் இணைந்து கொள்ள நடக்கத் தொடங்கினார்கள். காலைத் தென்றலின் சொல்லுக்கேற்ப ஹபீபின் தாடி முடிகள் அசைந்துக் கொடுத்தன. பால் வேன் ஒன்று சப்தமாக ஒலி எழுப்பிக் கொண்டு வேகமாகச் செல்ல முயற்சிக்க, அதற்கு இருவரும் வழி கொடுத்து ஒதுங்கி நின்றனர்.

வழக்கமாக அமரும் இடத்தில் இருவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க நண்பரின் வாட்சப் குழுமத்திற்கு துபையில் வேலை ஒன்று காலியாக இருக்கிறது என்ற குறுச் செய்தி வந்து விழுந்தது. அதுவே அன்றைய அவர்களின் பேசும் தலைப்பாக மாறிப்போனது.

தான் துபையில் 30 வருடம் பணி செய்தாகவும், அதில் சம்பாதித்த பணம் வீட்டுச் செலவுக்குப் போக, வங்கியில் கொஞ்சம் சேமிப்பு இருக்கிறது. அதுபோக, ஓய்வுபெறும் வயது வரும் போது அவரின் நிறுவனம் கொடுத்த சர்வீஸ் தொகையில் ஒரு இடம் வாங்கி விவசாயம் செய்வதாகவும் இதுதான் வெளிநாட்டின் முப்பது வருடச் சேமிப்பு என்றும் ஹபீப் நினைவுக்களை கூறிக் கொண்டிருந்தார். இடையில் ஹபீபின் மனைவி அலைப்பேசியில் அழைக்க. பேச்சை நிருத்தி விட்டு, மனைவியோடு பேசலானார்.

"வரும் போது பால், பிஸ்கட் வாங்கி வரக் கூறினாள்".

"ம்ம்.. சரி வருகிறேன்" என்று கூறி அமர்வை ரத்து செய்துவிட்டு கடைக்குச் சென்று மனைவி கூறியதை வாங்கிக் கொண்டு சென்றார்.

வீட்டிற்குள் நுழையும் போது, ஹபீபின் மகன் மக்தப் செல்ல தயாராக நின்றான். வாங்கி வந்த பொருளை மனைவியிடம் கொடுத்துவிட்டு. சுவரில் அடிக்கப்பட்ட ஆணியில் சட்டையைத் தொங்கவிட்டார்.

ஹபீபின் மகள் தேநீர் எடுத்துக் கொண்டு கொடுக்க பாதியில் விட்ட செய்திகளைச் சோஃபாவில் கிடந்த நாளிதழில் படிக்கத் தொடங்கினார்.

தூரத்தில் ஒரு பூனை ஒன்று இரையைத் வேட்டையாட நீண்ட நேரம் காத்துக் கொண்டிருந்த அந்தக் காட்சி யதார்த்தமாக இவர் கண்ணில் பட, நாழிதழை மேசையில் பரப்பி விட்டு பூனையின் பக்கம் அவர் கவனத்தைச் செலுத்தினார். வேட்டையாடப் பூனை எடுக்கும் வியூகத்தை உற்று நோக்கினார் ஹபீப். நான்கு கால்களையும் மெதுவாக எடுத்து வைத்து இரையின் பக்கம் சென்று கவ்விப் பிடித்தது. சிக்கிய இரை கன நேரத்தில் பறந்து சென்றது. இறகுகள் மட்டுமே மிதமாக அதன் வாயில் ஓட்டிக் கொண்டிருந்தன.

நீண்ட நேரம் முயன்று வாயில் ஒட்டிய இறகுகளுடன் பூனை செல்வதைக் கவனித்துக் கொண்டிருந்தார். "அத்தா பசியார ரெடியாகிடுச்சி. சாப்பிட அம்மா கூப்பிடுராங்கன்னு" ஹபீபின் மகள் அஸ்மா அழைத்தாள்.

"ம்ம்.. வரேன்" என்று எழுந்து சென்றார். சாப்பிட்டு முடித்து எழுந்து அருகிலிருந்த கட்டையால் செய்யப்பட்ட சாய்வு நாற்காலியில் அமர்ந்தார்.

அலைப்பேசி கதறியது, மனைவியை எடுத்துப் பேசச் சொன்னார். இருபது நிமிடம் உரையாடலுக்குப் பிறகு... "ஆசிபா மச்சித்தான் பேசினாங்க " . ''என்னவாம்"? "அவங்களுக்கு தெரிஞ்சவங்க நம்ம அஸ்மாவை பொண்ணு கேட்கறாங்கலாம்". "பையன் என்ன செய்றாராம்? கட வச்சி இருக்கிறாராம்"

மகள் திருமணம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது சற்று அமைதியானார். அமைதிக்குக் காரணம் தெரித்துக் கொண்டு. "பணத்திற்கு பார்க்க வேண்டாம். நம்ம பொண்ணு வயசில் உள்ள புள்ளைகளுக்கெல்லாம் கல்யாணம் ஆகிடுச்சி. அதான் என்று நிறுத்தினாள்".

"சரி பையனைப் பற்றி முழுசா விசாரிச்சிட்டு, அஸ்மா கிட்டயும் கேளு. அப்புறம் ஒகே சொல்லாம்" ன்னு எழுந்து சென்றார். மாப்பிள்ளையின் தரவுகள் சேகரிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டன.

அஸ்மாவுக்கு மாப்பிள்ளைப் பிடித்துப் போனதை அவள் நாணம் படம் பிடித்துக் காட்டியது.

இரு வீட்டாரின் மன ஒற்றுமைக்குப் பிறகு நிச்சயதார்த்த நாள் குறிக்கப்பட்டு, நன்றாக நடந்தேறியது.

"முடிந்த வரை வங்கியில் இருக்கும் சேமிப்பை மட்டுமே வைத்து திருமணத்தை நடத்தணும். என்று கூறினார். "இல்லைங்க நம்ம சம்பந்தம் பண்ண போற இடம் பெரிய இடம் அதனாலே."...... என்று இழுத்தாள். அப்படின்னா ? நம்ம பொண்ணு திருமணத்தை எந்த கொற இல்லாம நடத்தணும்".

"சிக்கனமா நடப்படுறே திருமணம் தான் சிறந்தது! நமக்குப் பையன் ஒருத்தன் இருக்கான். அவன் படிப்புக்குப் பணம் தேவைப்படும் அந்த நேரத்தில் நம்ம வயலை விக்கலாம்"ன்னு. கோபமாகப் பேசினார்...

"அக்கம், பக்கம் நம்மள பத்தி தப்பா பேசுவாங்க. நாம் என்னா ரெண்டு, மூனு பொண்ணா வச்சியிருக்கோம்? அந்த வயலை விக்க வழிய பாருங்க" என்று கூறி வீட்டு வேலையில் கவனம் செலுத்தினாள்.

எளிமையாக நடைபெற வேண்டிய திருமணம், வங்கி சேமிப்பு மற்றும் வயலை பகரமாக எடுத்துக் கொண்டு ஆடம்பரமாக நடைபெற்றது.

" ஆடம்பரமான திருமணத்தை விடக் கல்விக்குச் செலவு செய்வது சிறந்தது" என்று எழுதப்பட்ட வாகனத்தில் மாமியார் வீட்டிற்கு மகள் செல்லும் போது கண்கள் ஈரமானது.

ஆடம்பரமற்ற திருமணத்திலும், தரமான கல்வியிலும் இச்சமூகத்தின் வெளிச்சம் இருக்கிறது. இதனை இச்சமூகம் எப்போது புரிந்துகொள்ளுமோ? அப்போதுத்தான்! முன்னேற்றக் காற்றைச் சுவாசிக்கும் என்று மனதுக்குள் பேசிக் கொண்டிருந்தார். விருந்துகளுக்கு செலவு செய்யும் செல்வங்களைக் கல்விக்குச் செலவு செய்யும் முறைகளை நம் சமுகம் எப்போதும் கற்கப் போகிறது ? என்று மனதுக்குள் புலம்பித் தீர்த்தார்.

பல மணிநேரம் முயற்சித்து வேட்டையாடி மிஞ்சிய இறகுகளுடன் சென்ற பூனை, அவருக்கு முன்னால் மற்றொரு இரையை வேட்டையாடிக் கொண்டிருந்தது.

சரியான கட்டமைப்பு கொண்ட இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றாமல், ஊர் பேச்சில் அகப்படக் கூடாதென்பதற்காக, கடல் நீரை உறிஞ்சும் மேகம் போல் ஆடம்பரமாக செய்த திருமணம் வெளிநாட்டின் 30 வருட உழைப்பை உறிஞ்சி விட்டது. அதன் விளைவால் மறுபடியும் வேலைக்குச் சேர்ந்தார் ஹபீப்.



யாசிர் அரபாத் ஹசனி ...
லால்பேட்டை,
Lptyasir@gmail.com

## பாரம்பரியம் நிகழ்ச்சியில் இசைக்கோ நூர்தீன் நினைவுகள்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் பிரபல பாடகர், இசையமைப்பாளர் மர்ஹூம் இசைக்கோர் நூர்தீன் நினைவுகள் பதிவாகின்றன. இவர், இலங்கை வானொலி முஸ்லிம் சேவையிலும், தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் நூற்றுக் கணக்கான, பாடல்களை, குறிப்பாக இஸ்லாமிய கீதங்கள் பாடி இசையுலகின் அனைத்து ரசிகர்கள், மத்தியிலும் புகழினைத் தேடிக்கொண்ட ஒருவராக திகழ்ந்தார். தனக்கு ஆரம்ப நாட்களில் களம் தந்து இசையுலகில் அடையாளப்படுத்திய, இலங்கை வானொலி முஸ்லிம் சேவையை, நன்றியுணர்வோடு அடிக்கடி இவர் பாராட்டி மகிழ்வதுண்டு. பாடகர், பாடலாசிரியர் இசைக்கோ நூர்தீன் அவர்களின் நினைவுகளை, மூத்த ஊடகவியலாளர், கவிஞர் கலைவாதி கலீல், மூத்த பாடலாசிரியர், பாடகர் கலாபூஷணம முஹம்மத் அலி ஆகியோர் நேயர்களோடு பரிமாறிக்கொள்கிறார்கள்.நிகழ்ச்சியினை முஸ்லிம் சேவைப்பணிப்பாளர்,எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்க, எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்கிறார்.



## பத்திரிகை ஜாம்பவான் 'எஸ்.டி.எஸ்' க்கு ஒரு தபால் தலை!!

பத்திரிகை ஜாம்பவான் என்று அழைக்கப்படும் அமரர் எஸ்.டி. சிவநாயகத்தின் ஜனன தின நூற்றாண்டாகும். 02.07.1921 அன்று திருகோணமலையில் பிறந்து வளர்ந்து, கல்வியைத் தொடர்ந்து, கந்தளாய் கூட்டுறவு திணைக்களத்தில் பொறுப்புள்ள அதிகாரியாக, தொழில் துறையில் காலடியெடுத்துவைத்தார். பள்ளிப்பருவத்தில் கையெழுத்துப் பத்திரிகையில் அதிக ஈடுபாடு. அதனால் அந்தத்துறையில் முன்னேறவேண்டும் என்ற குறிக்கோள். பத்திரிகை மேதை 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியுடன் தொடர்புகொண்டு தனது எழுத்துத்துறையை வளர்த்துக் கொண்டார். எஸ்.டி.எஸ் என்ற மூன்றெழுத்தின் குருநாதர் அந்த மூன்றெழுத்து கல்கி தான். 1946ம் ஆண்டு 'ஐக்கிய தீபம்' என்ற பத்திரிகையை முதல் முதலில் ஆரம்பித்தார். 1947 ஆண்டளவில், மட்டக்களப்பில் 'உதயன்' என்ற பத்திரிகையையும் நடாத்தி வந்தார். பத்திரிகைத் துறை ஆர்வம் காரணமாக, இலங்கைத் தேசியப் பத்திரிகையான 'தினகரன்' பத்திரிகையில் காலடியெடுத்து வைத்தார். இவரது எழுத்துக்கள், கருத்துக்கள் தினகரன் பத்திரிகை மூலம் பேசப்பட்டது. அவரது எழுத்துத்தில் அரசியல் கண்ணோட்டத்தை அறிந்துகொண்ட தமிழரசு கட்சியின் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது கட்சியில் இணைத்துக்கொண்டு, 'சுதந்திரன்' என்ற கட்சிப் பத்திரிகைக்கு ஆசிரியராக்கினார். அந்தப்பத்திரிகையில் அவர் எழுதிய ஆணித்தரமான அரசியல் கட்டுரைகளுக்காகவும், 'குயுத்தியார்' என்ற புனைப் பெயரில் வாசகர்களின் வினாக்களுக்கு வியக்க வைக்கும் விதமாக விடையளித்த விவேகத்துக்காகவும் சுதந்திரன் வார இதழ் விற்பனையில் சாதனை படைத்தது.

மற்றோரு தேசியப் பத்திரிகையான 'வீரகேசரிப்' பத்திரிகைக்குள் உள்வாங்கப்பட்டார். அந்தப் பத்திரிகையின் எழுத்து நடையையும், தோற்றத்தையும் ஆசிரியல் தலையங்கங்களை தனது பாணியில் மாற்றியமைத்தார்.



இலங்கை வாழ் பல இலக்கிய எழுத்தாளர்களையும், படைப்பாளிகளையும், கவிஞர்களையும், பத்தி எழுத்தாளர்களையும், சிறுகதை நாவல் எழுத்துத்துறை விற்பன்னர்களையும் அறிமுகப்படுத்தியவர் தான் ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம். அவரிடம் பணிபுரிந்த பலர் இலங்கை மட்டுமல்ல உலகமெங்குமுள்ள சகல தமிழ் ஊடகத்துறைகளிலும் ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள். எம்.டி.குணசேணா என்ற பெரும்பான்மையினத்தவர்களின் பத்திரிகை ஸ்தாபனத்திலிருந்து வெளிவந்த அனைத்து சகோதரப் பத்திரிகையை விட, விற்பனையில் இவரது படைப்புக்களான 'தினபதி சிந்தாமணி' பத்திரிகைகள் உயர்ந்திருந்தது. 'சிந்தாமணி' பத்திரிகையின் விற்பனை வியக்கவைத்தது. அதன் காரணமாக, முதலும் இறுதியுமாக, ஒரு தமிழனாக அந்த ஸ்தாபனத்தில் நிர்வாகப் பணிப்பாளராக பதவியுயர்த்தப்பட்டார். 'சூடாமணி' 'தமிழின்பம்' என்ற பத்திரிகையின் ஆசிரியரும், தலைவர் சௌம்மியமூர்த்தி தொண்டமானின் வாழ்க்கை வரலாற்றை படைத்த சாதனையாளரும் இவர்தான்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் ஆசியும், அவரிடமிருந்து மோதிரம் ஒன்றையும் பரிசாகப் பெற்று, கொழும்பிலுள்ள ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைவராகத் தொடர்ந்து 25 வருடங்கள் பணிபுரிந்தார். இன்று அந்த ஸ்தாபனம் கொழும்பில் பெயரேடுத்து தலைதூக்கியிருப்பதற்கு இவரே காரணகர்த்தா!! இவரது ஜனனதின நூற்றாண்டை முன்னிட்டு, இலங்கை அரசாங்கம், இவரை கௌரவித்து பெப்ரவரி 16ம் திகதி, மாலை 4 மணிக்கு, கொழும்பு இல113 புதுச் செட்டித்தெருவிலுள்ள 'சாயி நிலையத்தில்', ஒரு தபால் தலை ஒன்றை வெளியிடவிருக்கிறது. இலங்கை சரித்திரத்தில் தமிழ் தேசியப் பத்திரிகையாளர் ஒருவருக்கு கிடைக்கும் தேசிய மகுடம் இதுவாகும்.

சிவ இராஜஜோதி ...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | ■ | 04 | 05 | 06 |
| 07 | | | ■ | 08 | | | |
| 09 | | | ■ | 10 | | | ■ |
| | ■ | ■ | 11 | | ■ | 12 | 13 |
| ■ | 14 | 15 | | ■ | 16 | | |
| 17 | | | | ■ | | ■ | |
| 18 | | ■ | ■ | 19 | | 20 | ■ |
| 21 | | ■ | 22 | | | | |

திரு/திருமதி.செல்வி ..............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................................
..............................................
..............................................

.............................. ..............................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 10**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :10

**இடமிருந்து வலம்**

(01) விலங்குகளுக்கான உணவை இப்படிச் சொல்வர்.
(04) இதுவும் ஒரு தகவல் பரிமாற்ற சேவை. இப்போது நடைமுறையில் இல்லை.
(07) வகை.
(08) உண்மையை அறிவதற்கான சோதனை.
(09) நகரம். (குழம்பியுள்ளது)
(10) வருடத்தில் இது பன்னிரண்டு. (குழம்பியுள்ளது)
(11) தமிழ் மாதங்களில் ஒன்று.
(12) இருபது வருடங்களுக்கு முன் வெளிவந்த தமிழ்த்திரைப்படம்.
(14) இது ஒரு பயிர்வகை. (குழம்பியுள்ளது)
(16) முன்னைய காலத்தில் நடைமுறையிலிருந்த நில உடமைப் பட்டியல்.
(17) காதணியை இப்படியும் சொல்வர்.
(18) இது நிலத்தில் வளரும். (திரும்பியுள்ளது)
(19) இதுவும் ஒருவகை புல்லினம்.
(21) பயம்.
(22) பெற்றோர், பிள்ளைகள் இணைந்த வாழ்க்கை அமைப்பு.

**மேலிருந்து கீழ்**

(01) வழக்கத்தைவிட அதிக அக்கறையும் வேகமும் உள்ள நிலை.
(02) துன்புறுத்தல்.
(03) வயல். (குழம்பியுள்ளது)
(04) சோறு. (குழம்பியுள்ளது)
(05) ஒரு காரியத்தை சாதிக்க கையாளும் சாமர்த்தியமான வழிமுறை. (குழம்பியுள்ளது)
(06) மனிதர்களையும் விலங்குகளையும் பிரித்துக் காட்டும் பகுப்பு.
(08) ஆகாயக் கப்பலின் ஓட்டுநர்.
(11) அவா.
(13) பெருங்காற்று குழம்பி வீசுகிறது.
(14) சந்திரனுக்கு இப்படியும் ஒரு பெயர்.
(15) இதுவும் ஒரு விலங்கினம். (தலைகீழ்)
(16) மங்கள வைபவங்களில் மட்டுமல்ல, அமங்கள நிகழ்வுகளிலும் இதனைக் காணலாம்.
(17) இந்திய சஞ்சிகை இது. இதன் ஆசிரியர் பெயருடன் சஞ்சிகையின் பெயரும் ஒன்றிணைந்து காணப்படுகிறது.
(19) தேசம்.
(20) உள்ளுறுப்புகளில் ஒன்று. (கீழிருந்து மேல்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 09

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பக்குவம் 05. துவி 07. கைகேயி
08. கார் 09. மையல் 10. விடயம்.
12. கயல் 13. கராம்பு 15. வளி
17. சாவி 18. தாழ்ப்பம் 21. தையல்
23. புகை 24. பாணம் 25. கடமை

**மேலிருந்து கீழ்**

01. பசுமை. 02. குயில் 03. வகை
04. கேடயம் 05. துயர் 06. விகாரம்
11. வில்வம் 12. புகழ் 13. கவிதை
14. சாராயம் 16. களிப்பு 19. தாரா
20. பகைமை 22. பால்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 08

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**ஆர். ஜயந்திமாலா,**
இல. 17,
பண்டாரநாயக்க பெதச,
புசல்லாவ.

**இரண்டாம் பரிசு**
**நா. டிலோஜினி,**
209, மார்க்கண்டு வீதி,
பாண்டிருப்பு 01,
கல்முனை.

**மூன்றாம் பரிசு**
**கனகசபை நாகேந்திரன்,**
இல. 11/3/1,
நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை, கொழும்பு 06.

### பாராட்டு பெறுவோர்

1. **யுஸ்ரியா அஹமட்,**
236/1, குமாரதுங்க மாவத்தை,
மாத்தறை.

2. **ப. மகேந்திரதாசன்,**
'வசந்தம்',
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

3. **திருமதி எச். சல்பியா,**
இல. 30/2, கம்மெத வீதி,
சரிக்காமுல்ல, பானந்துறை.

4. **இ. ஞானச்சந்திரன்,**
இல. 40, முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

5. **முஹம்மது அப்துல்லாஹ்,**
இல. 173/7/0,
மிஹிந்து மாவத்தை,
தெஹிவளை.

6. **கஸ்தூரி களியபெருமாள்,**
இல. 2/27A, வெலிக்கந்தை,
கண்டி.

7. **ஏ.எஸ்.எம். அஸ்மி,**
இல. 215, கராகொட,
எட்டியந்தோட்டை.

8. **திருமதி எஸ். பாக்கியநாதன்,**
இல. 100/1,
உடையார் வீதி,
காரைதீவு 02.

✦✦✦




## கசப்பு–1

நீண்ட நெடுநாட்களாக "VIDEO GAMES" எனப்படுகிற இணையக் கேளிக்கை விளையாட்டுகள் பற்றிய ஒரு கசப்பு, ஒரு நெருடல் என் மூத்த பேனைக்குண்டு!

என்றாலும், இதை வழங்கப் போனால் மூத்த ஆளுக்கு இதன் இனிப்புப் பிடிக்காதே என இளசுகள் இளக்காரமாக எள்ளி நகைப் பார்களே என 'கள்ள மௌனம்' சாதித்து வந்தேன்.



இப்போது மௌனம் கலைய ஒரு மூத்தத் தமிழ் நாளேடே உதவி!

இது, சீர்மிகு சிங்கப்பூரின் நாளேடு. தினமும் 'தமிழ்முரசு' கோட்டுகிறது அங்கே! நமது 89 அகவை மூத்த 'தினகர'னாரின் அன்புத் தம்பியார் 87! முழுக்க முழுக்க தமிழ் மூச்சுவிட்டு வாழ்ந்த கோ. சாரங்கபாணி என்ற பெரியார் நிறுவிய ஏடு.


தமிழ் முரசு

February 7, 2022

சிறுவர்களை பாதிக்கும் இணையக் கேளிக்கை விளையாட்டுகள்

இணையக் கேளிக்கை விளையாட்டுகளுக்கு அடிமையாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அண்மைய ஆண்டுகளில் அதிகரித்திருப்பதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தொற்றுச் சூழலில் இந்தப் போக்கு மோசமடைந்திருப்பதாகவும் அமைச்சு கூறியது. அத்தகைய விளையாட்டுகளுக்கு அடிமையாகி ஆலோசனை தேவைப்படும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் 60% வரை உயர்ந்திருக்கக்கூடும் என்று ஆலோசகர்கள் கூறினர்.

சென்ற ஆண்டு உதவி நாடி நாளுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட அழைப்புகள் வந்ததாக இளையர்களுக்கு ஆலோசனை சேவை வழங்கும் ஓர் அமைப்பு சொன்னது.

கொவிட்-19 சூழலுக்குமுன், இந்த எண்ணிக்கை 500ஆக இருந்தது. தொற்றுச் சூழலால் சிறுவர்கள் வீட்டிலேயே இருக்கின்றனர். அதனால், இணைய விளையாட்டுகளில் அதிக நேரம் செலவிடுகின்றனர்.

களைப்பைப் போக்கவும் உற்சாகம் அடையவும் இதைப் பயன்படுத்துகின்றனர் என்று மனநல ஆலோசகர் ஒருவர் குறிப்பிட்டார்.

விளையாட்டுகளில் மிகுதியாக நேரம் செலவிடும்போது, அவர்களுடைய படிப்பு, அன்றாடப் பணிகள், குடும்ப உறவுகள் போன்றவை பாதிக்கப்படுகின்றன.

இந்தக் கவலைக்குரிய போக்கை களைய பெற்றோர்கள் முன்கூட்டியே நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று ஆலோசகர்கள் கூறுகின்றனர்.

அவருக்கு 'தமிழவேள்' அதியுயர் பட்டம் சூட்டி இன்றும் போற்றிப் புகழும் சிங்கப்பூர் வாழ் தமிழ் பேசும் மக்கள் காலைத் தேநீருடன் 'தமிழ் முரசு' வின் 'தூயதமிழ்' செய்திகளையும் சுவைக்கத் தவறுவதில்லை!

இந்த முதுமை இதழ் கடந்த 07.02.2022ல் இளையோர் பற்றிய சிந்தனையில் மூழ்கி, அவர்கள் முழுமூச்சாக ஈடுபாடு காட்டும் இணையக் கேளிக்கை பற்றிய ஒரு கருத்துச் செய்திக்குறிப்பை வழங்கியுள்ளது.

அதன் தீவிர வாசகரும், என் பேனையின் அபிமானியுமாகிய தொழில் அதிபர் 99அ. முஹம்மது பிலால், நம் இலங்கை இளையோர் பற்றிச் சிந்தித்து அனுப்பியுள்ள கசப்பு!

## கசப்பு–2

அலைகடலுக்கு அப்பால் வாழும் இந்தியத் தாயின் தவப் புதல்வர்களான தமிழ்நாட்டவர் நாளும் பொழுதும் 'ஆங்கில மேனியாக்களாக (அதாவது மோகிகள்) அலைக்கழிவது ஒரு பெரிய கசப்பான உண்மை!

இப்பொழுது ஒன்றை வழங்குகிறேன், விழுங்குங்கள்.

"திற" என்றொரு அழகான தமிழ். அவர்கள் அதைச் சொல்லவே மாட்டார்கள்.

"OPEN பண்ணு" என்பார்கள்!

"நட" என்று நடந்து காட்ட மாட்டார்கள்!

"WALK பண்ணு" என்றே கட்டளை இடுவார்கள்.

எங்கே இருந்து இந்த "பண்ணு" வந்தது? பனீஸ் பன் (பான்) சாப்பிடுவது போல் சப்பித் தொலைக்கிறார்களே, ஆங்கிலத்தோடு...?

Open பண்ணு திற
Cross பண்ணு கட
Walk பண்ணு நட
Start பண்ணு ஆரம்பி
Call பண்ணு அழை
Close பண்ணு மூடு
Lift பண்ணு தூக்கு
Meet பண்ணு சந்தி
Drive பண்ணு செலுத்து
Prees பண்ணு அழுத்து
Up lock பண்ணு பதிவேற்று
Stop பண்ணு நிறுத்து

கண்ராவியே... கண்ராவியே...

எளியே இனிய தமிழ் இருக்க "பண்ணு தமிழ்" தேவையா?

## இனிப்பு 2

ஒரு வடபுலத்துக்கலை இலக்கிய ஆர்வலர். வருடம் தப்பாமல் விருது வழங்கல் வைப்பவங்களை செய்து கொண்டிருப்பவர். ஓரிரு ஆண்டுகளுக்கு முன் தமிழக சினிமா வட்டத்திற்குள்ளேயே வளைய வந்து கயிறு திரிக்காமல் 'கயிறு' என்றே படம் எடுத்தவர். இப்பொழுது முழு மூச்சாக மன்னார் அடம்பனில் குடும்பப் பாரம்பரியச் சொத்தாக இருந்ததும் இயங்காதிருப்பதுமாப ஒரு பட அரங்கைப் புதுப்பிக்கிறவர். வருகிற சித்திரையில் மீள் திறப்புச் செய்து படம் காட்டப்போகிற ஒரு முனைப்பாளர்.

இவர் 'சங்கவி' பிலிம்ஸ் துரைராசா சுரேஷ்!

நேற்று 12ல், 'தினகரன்', வாரமஞ்சரி வண்ண வானவில் அனுசரணையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு அரங்கில் நிகழ்த்திய ஒரு கலைத் தொண்டு காலம் காலத்திற்குப் பேசப்படக் கூடிய ஒன்றாகிப் போனது.

இந்த துரைராசா சுரேஷ் இரண்டாம் கொரோனா ஊடாக முன்பே வலைத்தளத்தில் கலை இலக்கிய சமூக ஆர்வலர்கள், சேவையாளர்களிடம் விவரங்கள் கோரியவர், 300 400 பேர் என தகவல்கள் பெற்று திக்கு முக்காடு!

எவ்வாறாயினும் நூற்றுக்கு மேற்பட்டோரை வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலுமென தேர்வு செய்து வரவழைத்து கௌரவங்களை வழங்கி விட்டார் வழங்கி!

நிகழ்வு விவரங்களை நிழற்படங்களுடன் அடுத்தடுத்த நாட்களில் தினகரனும், சக வெளியீடுகளும் வழங்கும். இங்கே, வைபவத்தில் வழங்கப்பட்ட இன்னொரு தித்திப்பான இனிப்பை மட்டும் தர விருப்பம்.


ஊடக அனுசரணை

தினகரன் வாரமஞ்சரி வானவில்

சங்கவி விருது வழங்கும் விழாவில் இலங்கைத் தமிழ் திரைப்பட வரலாறு நூல் வெளியீடு

அது ஒரு நூல் வெளியீடு, விருது விழாவுடன் வெளியீட்டு நிகழ்வையும் இணைத்து ஒரு நல்ல கலை, இலக்கியப்பாலமாக அமைந்து போனது!

இலங்கைத் தமிழ் சினிமாத்துறை கண்ட கதைகளை ஒரு விவரணமாகத் தொகுத்து ஆய்வு நூலாக கலை இலக்கியத் துறையினர் குழுமியிருந்த பிரபல மாநாட்டு அரங்கில் ஒரு சிறப்பு நிகழ்வாக்கி வெளியீடு காண, வைத்தது ஒரு புதுமை, ஒரு புரட்சி!

அந்தக் கட்டுரைகளை ஆர்வத்துடன் தொடராகப் பிரசுரித்தது நமது 'வாரமஞ்சரி'யே ஆம்! வாரமஞ்சரி!

அதுவே நூல் வடிவமாகி, "இலங்கையில் தயாரிக்கப்பட்ட தேசிய தமி' சினிமாவின் வரலாறு" என்றதொரு நீண்ட தலைப்புடன் பட்டொளி வீசிப்பளிச்சிட்டது.

நமது தேசிய தமிழ் சினிமாவில் தனக்கென தனியிடம் சம்பாதித்துள்ள கலாபூஷணம் பேராதனை ஏ.ஏ. ஜூனைதீன் என்ற முதுசத்தின அப்பழுக்கற்ற ஆவணமே அந்நூல்.

முதல் நூலைப் பெற ஒரு மூத்த எழுத்தாளருக்குச் சந்தர்ப்பம் வழங்கியதும் புதுமையாக புரட்சியாக அமைந்தது. அவர் ஒரு காலத்தில் 'தினகரன்' சினிமா எழுத்தாளராகவும் குப்பை கொட்டியவர்!

இப்படி வர்ணிக்க அவருக்கு மட்டுமே உரிமை உண்டு.

வேறு யார், இந்த மூத்த பேனையின் உரிமையாளரே! முக்கியமான நூலொன்றை தனது வாழ்நாளில் முதல் பிரதியாகப் பெறக் காத்திருந்தது கனியானது!

அனைத்தும் அவன் ஒருவன் எண்ணப்படியும் திட்டப்படியும்!

மேலும் ஒரு முக்கிய தகவல்!

முதல் பிரதியைத் தொடர்ந்து சிறப்புப் பிரதியை அதிவிருப்பத்துடன் ஆனந்தமாகப் பெற்றுக் கொண்டவர் அப்துல் லத்தீஃப் என்ற கவிஞர், வானொலி முஸ்லிம், நிகழ்ச்சிக் கலைஞர்! பாராட்டுகள்




# 15 கிடைத்து விட்டதுடா புதிய ஒரு சாட்சி நடக்காதுடா இனி கொலை காரனின் ஆட்சி

"எப்போது சேர் வருவீங்க?" என்று கோபால் கேட்டதும்,

அருகில் நிறை பொலிஸ் கான்ஸ்டபிளின் பக்கம் திரும்பிய இன்ஸ்பெக்டர் இன்பராஜ்,

"ம்... இப்ரஹிம்" என்றார்

"சொல்லுங்க சேர்"

"நாளைக் காலையில் அந்த பாதாளத்திற்குப் போவதற்கு ஏழெட்டு பேர் கொண்ட குழுவொன்றை அமைத்துக் கொள்ள முடியுமா?"

"முடியும் சேர்... போவதற்கு நீங்களும் வருவீங்களா சேர்?"

"கண்டிப்பாக நானும் வருவேன் இன்ஸ்பெக்டர் ராகவனுக்கு நாளைக்கு ஒரு வேலை கொடுத்திருக்கிறேன். அதை மறு வைத்துக் கொள்ளாது சொல்லிவிட்டு அவரையும் எங்களுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். எங்கள்மூன்று பேருடன் சார்ஜன்ட் வசந்தையும் சேர்த்துக் கொண்டு இன்னும் மூன்று கான்ஸ்டபிள்களையும் இந்த வேலைக்கு தயார்படுத்திக் கொள்ளுங்கள்!"

"ஆகட்டும் சேர்!"

"ம் கோபால்... நாளை காலை ஏழுமணிக்கெல்லாம் நாங்கள் இங்கே வருவோம். நீங்கள் செய்ய வேண்டியது எங்களுடன் இந்த பயணம் போவதற்கு நன்றாக பாதை தெரிந்த இரண்டு வாலிபப் பசங்களை ஏற்பாடு செய்து தரவேண்டும்! என்ன கோபால் இதை செய்ய உங்களால் முடியுமடா?"

"சரி சேர்... எனது மகனையும் அவனுடைய நண்பன் ஒருவனையும் காலையில் நான் அனுப்பி வைக்கிறேன்!"

"இது பொலிஸ் வேலை ஏமாற்றக் கூடாது!"

"இல்லை சேர்... நானும் காலையில் அவர்கள் இருவரோடு இங்கே வாறேன்...! கேக்குறேன்னு தப்பா ஏதும் நினைக்கக் கூடாது.

இப்படி ஒரு ஆபத்தான பயணத்துக்கு நீங்கள் எல்லாம் ஏன் சேர் போகனும்!"

"இப்படி ஒரு கேள்வியை நீங்க கேப்பீங்கள்னு எனக்குத் தெரியும் கோபால்... ம்... இரண்டு வாரங்களுக்கு முன்பு இந்த பாதாளத்தில் இருந்து ஒரு காதல் ஜோடி பாய்ந்து தற்கொலை செய்து கொண்டது உங்களுக்குத் தெரியுமா கோபால்...?"

"ஐயோ அது எப்படி சேர் தெரியாமல் இருக்கும்... அந்த இரண்டு மையங்களையும், கொண்டு வந்து இங்கே வைத்த பிறகு நானும் வந்து பார்த்தேன் சேர்!"

"ஓ... அப்படியா... அதைப் பற்றிய விபரங்கள் ஏதாவது உங்களுக்குத் தெரியுமா கோபால்?"

"அவர்கள் இருவரும் ஒன்றாகவே பாய்ந்துதான் தற்கொலை செய்து கொண்டார்கள் என்றுதான் பேசிக் கொண்டார்கள். இருவருமே பல்கலைக்கழகத்தில் படிப்பவர்களாம். அநியாயமான சாவு சேர் இருவரது வீட்டாரின் எதிர்ப்பினால் தான் இப்படி தற்கொலை செய்து கொண்டார்களாம்.

"ஆரம்பத்தில் பொலிஸாரும் அப்படித்தான் நினைத்தார்கள். ஆனால் அது தற்கொலை இல்ல கோபால் கொலை... அவர்கள் இருவரையும் யாரோ பாதாளத்திற்குள் தள்ளி விட்டிருக்கிறார்கள்.!"

"ஏ... என்ன...! தள்ளி விட்டிருக்கிறாங்களா... ஆ அப்படியும் இருக்கலாம் சேர்... நீங்கள் சொன்ன அந்த திகதியில் அதிகாலையில் யாரோ நாலு பேர் இந்த மணல் மீது ஏறுவதை கண்ணன் பார்த்திருக்கிறான் சேர்!

கோபால் இப்படிச் சொன்னதும்,

படாரென்று திரும்பி, அவன் அருகில் ஓடிவந்தார் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

"என்ன... என்ன சொல்றீங்க கோபால்... இது எங்களுக்கு முக்கியமான ஒரு தகவல் அல்லவா அந்த கண்ணனன் உடனே இங்கே அழைத்து வர முடியுமா!"

"அய்யோ சேர் நான் எப்படி சார் இப்போது அவனை அழைத்து வரமுடியும். போன வெள்ளிக்கிழமை திடீரென்று நெஞ்சு வலி வந்து அவள் செத்துட்டான சேர்!"

கோபால்,

இப்படிச் சொன்னதும்,

இன்ஸ்பெக்டர் இன்பராஜின் முகம் வாடி விட்டது.

புதிய சாட்சி யொன்று கிடைத்துவிட்டதே என்ற ஒரு மகிழ்ச்சி மலர்ந்தாலும்,

பிறந்த வீட்டிலேயே அது இறந்து விட்டது.

ஆனாலும்,

கண்ணனைப் பற்றி மேலும் தனது விசாரணையை ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

"எங்களுக்கு இருந்த முக்கியமான சாட்சி இந்த கண்ணன் என்ற இளைஞன்தான். இப்போது அதுவும் இல்லாமல் போய் விட்டது.. சரி புதிய சாட்சிகள் ஏதாவது கிடைக்கிறதா என்று பார்ப்போம்!"

"அப்படீன்னா என்ன சேர்?"

எதுவும் புரியாமல் கேட்டான் கோபால்.

"அந்த கண்ணன் வேறு என்னவெல்லாம் பார்த்தானாம்?"

"நான்கு பேர் காரில் இருந்து, இறங்கி மலை மேல் ஏறிச் செல்வதைத்தான் அவன் பார்த்திருக்கிறான்!"

"காரைப்பற்றிய தகவல்கள் ஏதாவது சொன்னான?"

"அழகான ஒரு கார் என்று மட்டும்தான் சொன்னான்"

"அந்த நான்கு பேரில் எத்தனை ஆண்கள் எத்தனை பெண்கள் இருந்தார்கள் என்று சொன்னானா?"

"இரண்டு ஆண்கள் இரண்டு பெண்கள் வந்திருக்கிறார்கள்!"

"எத்தனை மணிக்கு திரும்பிப் போனார்களாம்?"

"அது பற்றி எதுவும் தெரியும் சேர்!"

"இதைப்பற்றி உங்களிடம் வேறு ஏதாவது கண்ணன் சொல்லவில்லையா?"

"இல்ல சேர் வேறு ஒன்றும் சொல்லவில்லை!"

"இந்த நாலு பேரைப் பற்றியும்... காரைப் பற்றியோ அவர்கள் எத்தனை மணிக்குப் போனார்கள் என்பதைப் பற்றியோ தெரிந்தக்ஷேறு யாராவது இருக்கிறாங்களா?"

"இல்ல சேர்! அதுபற்றி எனக்கு எதுவும் சொல்லத் தெரியாது!"

"சரி கோபால் அப்போ நீங்கபோய் கூட்டிக் கொண்டு வருவதாகச் சொன்ன அந்த இரண்டு பேரையும் கூட்டிக் கொண்டு காலையில் சரியாக ஏழு மணிக்கு இந்த இடத்திற்கு வந்து விடுங்கள்."

"ஆகட்டும் சேர்!"

கோபால் போய் விட்டான். அவனிடமிருந்து கிடைத்த தகவல் சிறியதாக இருந்தாலும்,

மிகவும் முக்கியமான ஒரு தகவல் அது!

இதைப் பற்றி இன்ஸ்பெக்டர் இன்பராஜ் சிந்தித்துக் கொண்டிருந்தபோது,

பொலிஸ்கான்ஸ்டபிள் இப்ராஹின் அவர் எதிரில் வந்து நின்றார் தகவல் எதுவும் கிடைக்கவில்லை ஆனாலும் கல்லில் செதுக்கியது போல்' என்று சொல்லுவார்கள் அல்லவா அந்த மாதிரி ஒரு சாட்சி கிடைத்திருக்கிறது!"

"அது என்ன சாட்சி இப்ராஹிம்/"

"சேர் அந்த கல்லுக்கு அருகில் இருக்கும் ஒரு பாறையில் தீபன் தீபாவின் காதல் கதை 2012 ஜூன் மாதம் 12ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு முடிவடைகிறது என்று எழுதப்பட்டிருக்கிறது சேர்!"

"என்ன...!" என்று வியப்புடன் கேட்டபடியே எழுந்து நின்ற இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

"எங்கே... வாங்க பார்ப்போம்!" என்று சொல்லிய படியே இப்ராஹிமையும் அழைத்துக் கொண்டு,

அவர் பின்னால் நடந்தார். அங்க எழுதப்பட்ட அந்த வாசதகைப் பார்த்தார்..

இப்ராஹிம் சொன்னது உண்மை தான்!


"எதனால் சேர் இந்த வாசகத்தை எழுதி இருக்கிறார்கள்?" ஐயத்துடன் கேட்டான் இப்ராஹிம்.

சிகப்பு தீந்தையால் எழுதியது தெரிகிறது!" என்று சொல்லிவிட்டு,

சிந்தனையில் மூழ்கினார் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

**(இளமை வளரும்)**



# படித்ததும் பகர்வதும் 83



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### தூய்மை காதலர்களுக்கு நல்வாழ்த்துக்கள்!

ஒவ்வொரு வருடமும் 'பெப்ரவரி 14ம் திகதி' என்றால் அது காதலர்களின் கனவு தினமாக கொண்டாடப்படுகிறது. இத்தினம் யாரால், எதற்கு, எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பவற்றை ஆராய்வதை விட இன்றைய நவீன உலகில் இளம் வயதினர் முதல் வயது முதிர்ந்தோர் வரை பெரும்பாலானவர்கள் உலகமெங்கும் இக் காதலர்தினத்தை பல்வேறு வழிகளில் கொண்டாடுவதை காண முடிகிறது.



ஒரு நாள் கொண்டாட்டமாக இருந்த இக் 'காதலர் தினம்', தற்காலத்தில் பெப்ரவரி 7 ஆம் திகதி ஆரம்பித்து 7 நாட்களுக்கு காதலர் வாரமாக கொண்டாடப்படுகிறது. இது முறையே ரோஜாக்கள் தினம், காதலை சொல்லும் தினம், சொக்லேட் தினம், டெடி தினம், வாக்குறுதியளிக்கும் தினம், முத்த தினம், அணைத்தல் தினம், காதலர் தினம்என வெவ்வேறாக நிர்ணயித்து பெப்ரவரி 7 முதல் பெப்ரவரி 14வரை வரிசையாக விதவிதமாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

உண்மையில் காதலர் தினம், காதலர் வாரம் என்பன வியாபார நோக்கோடு வர்த்தக சமூகத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற கவர்ச்சிகரமான வியாபார உத்தியாகவே கருதப்படுகிறது. இப்பருவகாலத்துக்கென வெவ்வேறு வடிவங்களில் தங்க ஆபரணங்கள், சொக்லேட் வகைகள், வாழ்த்து அட்டைகள், ஆடை வகைகள், பரிசுப் பொருட்கள் என கவர்ச்சிகரமாக தயாரிக்கப்பட்டு, விசேடமாக விளம்பரம் செய்து விற்பனை செய்யப்படுகின்றன.

நட்சத்திர ஹோட்டல்கள், பல்வேறு விதமான சலுகைக்கட்டண பொதிகளை வழங்கியும், கவர்ச்சிகரமான போட்டிகளை நடாத்தியும், தொலைகாட்சி, வானொலி உட்பட வெகுஜன ஊடகங்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தும் தமது வர்த்தகங்களை விருத்தி செய்து கொள்கின்றனர். இன்றைய பெரும்பாலான இளைஞர்கள் இவற்றில் மயங்கிதமது காலத்தையும், பணத்தையும் செலவழித்து, போலித்தனமான சந்தோசத்தில் ஏமாறுகின்றனர் என்பதை மறுக்க முடியாது.

சிலர் இத்தினத்தைக் கொண்டாடுகிறோம் என்ற எண்ணத்தில் வரம்பு மீறி ஒழுக்க விழுமியங்களை மறந்து சீரழிகின்றனர். இதுவே இத்தினத்தின் வேதனைக்குரிய பக்கமாக இருக்கிறது. இவற்றிலிருந்து விடுபட்டு சுயசிந்தனையோடு சரியான முறையான ஒழுக்கமான முறையில் தங்கள் அன்பை பகிர்ந்து கொள்வதே சாலச்சிறந்ததாகும்.

இக்காதலர் தினத்தில் உண்மையான, பண்பான, தூய்மையான காதலர்களுக்கு நல்வாழ்த்துக்கள்!.

## நெஞ்சுக்கு நீதி

அன்பும் அறமும் சேர்ந்தது காதல்
பண்பும் பரிவும் இணைந்தது காதல்
துன்பம் துயரம் துரத்திடும் காதல்
தூய்மை அன்பே உண்மைக் காதல்

## நூலகத்துக்கு ஒரு நூல்

சர்வதேச புகழ் பெற்ற எழுத்தாளர் நா.பார்த்தசாரதி. தீரன், அரவிந்தன், மணிவண்ணன், பொன்முடி, வளவன், கடலழகன், இளம்பூரணன், செங்குளம் வீரசிங்கக் கவிராயர் எனும் பல புனைப்பெயர்களிலும் எழுதியவர். 'தீபம்' என்ற இலக்கிய இதழை நடத்தி வந்ததால்' தீபம்' நா.பார்த்தசாரதி என்றும் அழைக்கப்படுபவர்.



தொன்னூற்றி மூன்று நூல்களை எழுதியுள்ள இவருடைய புகழ்பெற்ற நெடுங்கதைகளான குறிஞ்சி மலர், பொன்விலங்கு என்பன தொலைக்காட்சித் தொடர்களாகவும் வந்துள்ளன. சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ள இவரது பிரபலமான நாவல்தான் "ராணி மங்கம்மாள்" .

இந்நூலை எழுதியதற்கான காரணங்களை நா.பார்த்தசாரதி இப்படி குறிப்பிட்டுள்ளார்.

"ராணி மங்கம்மாளின் கதை தென்னாட்டு வாழ்க்கையோடு இரண்டறக் கலந்திருப்பது, சுவையானது. மங்கம்மாள் சாலை, மங்கம்மாள் சத்திரம், மங்கம்மாள் தானதருமம் என்று மக்கள் அன்றாடம் பேசி மகிழும் சிறப்புடன் கதாபாத்திரமாக அவள் விளங்குகிறாள். அந்த மங்கம்மாவை நாயகியாக வைத்து ஒரு நாவல் எழுத எண்ணி வரலாற்று நூல்கள்களையும், கர்ணபரம்பரைக் கதைகளையும், செய்திகளையும் ஆராய்ந்ததன் விளைவே இந்தப் புத்தகம். மங்கம்மாளை மட்டுமே முக்கியக் கதாபாத்திரமாக ஏற்காமல் நாயக்கர் வரலாற்றை விவரிக்கப் புகுந்திருந்தால் இந்நாவல் ஒரு வேளை இதை விடவும் பெரிதாக அமைந்திருக்கக்கூடும்.

ஆனால் என் நோக்கத்தை நான் முன்பே வரையறுத்துக் கொண்டு விட்டதால் கதைப்போக்கிற்கும் இதை உருவாக்கிய எனக்கும் வேலை கச்சிதமாக அமைந்துவிட்டது.

இன்று பெரிதாகப்பேசப்படும் மதங்கள் சம்மந்தமான சமரச மனப்பான்மையைத் திருமலை நாயக்கர் தொடங்கி மங்கம்மாள் வரையிலான நாயக்கவம் சத்தினர் இயல்பாகக் கடைப் பிடித்திருக்கிறார்கள். எந்த மதுரைச் சீமையில் சமணரைக்கழுவேற்றுகிற அளவு மத உணர்வு தீவிரமாக இருந்ததோ அதே மதுரைச்சீமையில் இப்படியும் சமரசம் நிலவச் செய்திருக்கிறார்கள் நாயக்கவம் சத்தினர். கிழவன் சேதுபதி போன்ற தீவிர உணர்வாளர்களும் அதே காலகட்டத்தில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதையும் மறப்பதற்கில்லை. நாயக்கர்கள் காலத்து மதுரை, இராமநாதபுரம், திரிசிரபுரம் பிரதேசங்களின் நிலையையும் இந்நாவலின் மூலம் காணமுடிகிறது."

ஒவ்வொரு நூலகத்திலும் கட்டாயமாக இருக்கவேண்டிய ஒரு சிறந்த நாவல் இது என்று சிபாரிசு செய்யலாம்.

## செந்தமிழ் அது தேன் தமிழ்

**உலகின் செம்மொழியாம் எம் தாய் மொழியின் வளம் ஈடு இணையற்றது. தமிழ் மொழிக்கு வளம் சேர்ப்பனவற்றில் சில இங்கே.**

**"எட்டுத்தொகை" சங்க நூல்கள்**

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. அகநானூறு
5. புறநானூறு
6. பதிற்றுப்பத்து
7. பரிபாடல்
8. கலித்தொகை

**'பத்துப்பாட்டு" சங்க நூல்கள்**

1. திருமுருகாற்றுப்படை
2. சிறுபாணாற்றுப்படை
3. பெரும்பாணாற்றுப்படை
4. பொருநராற்றுப்படை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக்காஞ்சி
7. நெடுநல்வாடை
8. குறிஞ்சிப் பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம்

**"ஐம்பெருங்காப்பியங்கள்"**

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சீவக சிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

## சிந்தனை செய் மனமே

### விருந்தோம்பலுக்கும் தகுதியானவர்கள்

ஒரு நல்ல மனிதர் தன் நண்பர்களுக்கும், அயலவர்களுக்கும் விருந்து படைக்க விரும்பினார். ஒரு பெரிய ஆட்டைஅறுத்து நெருப்பினில் வதக்கி, விருந்து தயார் செய்து விட்டு தன் மகளிடம், "மகளே, நம்முடன் சாப்பிட என் நண்பர்களையும் அண்டை வீட்டார்களையும் அழைத்துவா. எல்லோரும் ஒன்றாக சாப்பிடுவோம்" என்றார்.



தெருவுக்கு வந்து அவருடைய மகள் வித்தியாசமாக சிந்தித்து, வேறு வகையில் கூவஆரம்பித்தாள். "எங்கள் வீடு தீப்பிடித்து எரிகிறது. தயவுசெய்து ஓடி வாருங்கள். தீயை அணைக்க எங்களுக்கு உதவுங்கள்".

சில நிமிடங்களுக்குப் பிறகு, ஒரு சில மக்கள் வெளியே ஓடி வந்தனர், ஏனைய பலரும் உதவிக்கான கூக்குரலைக் கேட்டும், கேட்காதது போல் செயல்பட்டனர்.

ஓடிவந்தவர்களை அந்த மனிதர் அன்போடு வரவேற்றார். விருந்து வழங்கினார். அவர்கள் நள்ளிரவு வரை நன்றாக சாப்பிட்டு கொண்டாட்டமாக, சந்தோசமாக இருந்தனர்.

அதேவேளை இவர்கள் யாரென்றே தெரியாமல் திகைத்த அவர், தன் மகளிடம்,

"வந்துள்ளமக்களை எனக்கு தெரியாதே, இதுவரை அவர்களை நான் பார்த்ததேயில்லை, வழமையாக பழகும் என்னுடைய நண்பர்கள், அயலவர்கள் உறவினர்கள் எங்கே? அவர்களை விருந்துக்கு அழைக்கவில்லையா?" என்றுகேட்டார்.

அதற்கு மகள்," இவர்கள் என் அவலக் குரல் கேட்டு, உதவி செய்ய தங்கள் வீடுகளில் இருந்து வெளியே வந்தவர்கள். நம் வீட்டில் விருந்துண்ண வரவில்லை. எங்கள் வீடு எரிவதாக நினைத்து தீயை அணைப்பதற்கே வந்தார்கள். இவர்கள்தான் நம்முடைய தாராள மனப்பான்மைக்கும், விருந்தோம்பலுக்கும், விருந்துக்கும் தகுதியானவர்கள் அப்பா. போலிப் புன்னகையோடு வலம் வருபவர்களல்ல." என்று அமைதியாக பதில் சொன்னாள். ஆபத்தில் உதவுபவர்களே உண்மையான அன்பர்களும் நண்பர்களும் ஆவார்கள்.

## பேசும் படம்



தாயின் மடி! தலை வைத்திருந்தாலே வருமேசக்தி!!

## பொன் மொழி அது பொய்யா மொழி

- ஒருவனது நாவு சீர் பெறாத வரை, அவனுடைய இதயம் சீர் பெறாது. ~நபிகள் நாயகம்
- நாக்கிற்கு எலும்புகள் கிடையாது, ஆனால் அது பலரது எலும்புகளைநொறுக்குகிறது. ~ ஹெட்டி~
- இன்பத்தின் இரகசியம், நீ விரும்புவதைசெய்வதல்ல, நீ செய்வதை விரும்புவதுதான். ~ஜேம்ஸ்எம். பெர்ரி~
- மனதில் பொங்கும் கோபத்தை அடக்கப்பயின்றுவிட்டால், மற்ற நற்குணங்கள் எல்லாம் தாமாக வந்து சேரும். ~டோல்ஸ்டாய்~
- பெறத்தக்கபேறுகளில் எல்லாம் மேலான பேறு ஒழுக்கத்தைப் பெற்று இருப்பதுதான். ~ரூஸோ~
- நீதியானது அரக்கனைக்கூட தவறாக தண்டித்துவிடக் கூடாது. ~எடிஸன்~
- எந்தப்பழக்கமும் முதலில் சிலந்தி வலை போன்று இருக்கும். அதுவே நாளடைவில் இரும்புச் சங்கிலிபோலஉறுதியானதாகமாறிவிடும். ~எட்வர்ட்ஸ்~
- ரோஜாச்செடியில் முள் இருக்கிறதென்றுமுறையிடாதே! முட்செடியில் மலர் உள்ளதென்றுமகிழ்வாயாக. ~ஆவ்பரிஜேம்ஸ்~

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# சட்டத்துறையில் பொன்விழா கண்ட சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஸீ.எம். ஹம்ஸா

(பேருவளை விசேட நிருபர்)

சீனன் கோட்டையின் சிரேஷ்ட சட்டத்தரணி முஹம்மத் கரீம் முஹம்மத் ஹம்ஸா சட்டத்துறையில் ஐந்து தசாப்தங்களை பூர்த்தி செய்துள்ளார்.

இவரது சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு களுத்துறை சட்டத்தரணிகள் சங்க ஏற்பாட்டில் களுத்துறை நீதிமன்ற கட்டட வளாகத்தில் அண்மையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இவ்விழாவில் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.டி. சிட்ரசிறி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். மேலும் களுத்துறை மற்றும் பாணந்துறை நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள், களுத்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உட்பட உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்வில் அவரது சேவையை பாராட்டி நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சட்டத்தரணி எம்.ஸீ.எம். ஹம்ஸா தனது ஆரம்பக்கல்வியை ஆங்கில மொழியில் களுத்துறை 'Holy Family Convent' இலும் பின்னர் 5ஆம் ஆண்டு வரை சீனன்கோட்டை ஜூனியர் பாடசாலையிலும் கற்றார். 06ஆம் வகுப்பு முதல் உயர்தரம் வரை கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் கற்று, 1965ஆம் ஆண்டு கொழும்பு சட்டக்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

அவர் அங்கு சட்டக்கல்லூரியில் 'L.L.B' பரீட்சையில் சிறப்பு சித்திபெற்று 1970ஆம் ஆண்டு அன்றைய பிரதம நீதியரசர் எச்.என்.ஏ. பெர்னாண்டோ மற்றும் ஏ.சீ.ஏ. அலஸ் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து சட்டத்தரணியானார். அதன் பின் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சிறிது காலம் சட்டத்தரணியாக பணிபுரிந்த இவர், களுத்துறை மாவட்ட




நீதிமன்றத்திற்கு மாற்றலாகி இன்று வரை (பொன்விழா கொண்டாடும் வரை) அதே நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பணியாற்றி வருகின்றமை விசேட அம்சமாகும். அதேபோல் தான் ஒரு சட்டத்தரணியாக பணியாற்றிக்கொண்டே கொழும்பு பல்கலைக்கழகத்தில் 'சர்வதேச வியாபார சட்டத்தில்' டிப்ளோமாவையும் (1988) பூர்த்தி செய்தார்.

தொடர்ந்தும் 50 வருட காலமாக களுத்துறை நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சிறப்பாக பணி செய்து வரும் இவர், மூவின மக்களினதும் மதிப்பினை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சட்டத்துறையில் பொன்விழாவைக் கொண்டாடும் எம். ஸி.எம். ஹம்ஸா அண்மையில் சட்டத் துறையில் 50 வருடவிழாவைக் கொண்டாடிய தர்கா நகரை பிறப்பிடமாகவும் சீனன்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முஹம்மத் ஹம்ஸாவின் மைத்துனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சீனன்கோட்டை ஜாமிய்யத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட நிர்வாக சபைத் தலைவரும் சீனன்கோட்டை பள்ளிச்சங்கத்தின் உப தலைவருமான சட்டத்தரணி எம். ஸி.எம். ஹம்ஸா, சீனன்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற மர்ஹூம்களான வை.எல்.எம். கரீம், மழீஹா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார்.



## கைரிய்யாவில் கற்றவர்கள்... தைரியமாய் நிற்பவர்கள்...!

தலைநகரில் நம் பெண்கள்
தலைநிமிர்ந்து நிற்பதற்கும்
கலை பலதுங் கசடறவே...
கருத்தூன்றிக் கற்பதற்கும்
நிலைபுகழில் நூற்றாண்டைத்
தாண்டிய நற் கல்லூரி... "கைரிய்யா!"
விலைமதிப்பே யில்லா நம்
விளை நிலமே வாழிய நீ !

நல்லதிபர் நஸீராவின்
நேர்த்தி, நெறி வழிக்காட்டல்
சொல், பணிப்புக் கொத்துழைக்கும்
தேர்ச்சி நிறை "ஆசிரியை
கள்.!" சேர்ந்தே நம் முஸ்லிம்
கண்மணிகள் "மும்மொழிகள்"
கற்றுயரப் பாடுபடும்...
கலையகமே வாழிய நீ !

'முதல் தரத்தில்' பிள்ளைகளை
முன்னேற்றும் முனைப்புடனே
"முதல் தரத்தில்" பிள்ளைகளை
மும்முரமாய்ச் சேர்க்கின்றார்! - எங்கள்
முதல் மகள் பாத்திமா
ஹனா இர்ஷாத் - தங்கமகள்
இதில் இன்று முதல் பாதம்...!
"இல்ம்" தளமே வாழிய நீ !

கைரிய்யாவில் கற்றவர்கள்
தைரியமாய் நிற்பவர்கள்! - உன்
மை வழியில் முன்னேறி
மாண்புகளைப் பெற்றவர்கள்!
மருத்துவத்தில், பொறிலியலில்...
பெரும் புகழைத் தொட்டவர்கள்
அர்ப்பணிப்பாய் அறிவூட்டும்...
அறிவகமே வாழிய நீ !

காழ்ப்புணர்ச்சி கணைகள் உனைக்
கவிழ்த்துவிடப் போவதில்லை...!
கேள் தாயே! இங்கு பலர் - உனையன்றி
வேறு ஸ்கூல் போவதில்லை!
மேலுமிதன் முன்னேற்ற
மேன்மைக்காய் ஒத்துழைப்போம்!
நாலுதலை முறை கண்ட
நல்லவளே வாழிய நீ !

முன்னால் ""கைரிய்யா""
முன்னேற அர்ப்பணிப்பாய்...
முன்னாள் உழைத்தவர்கள்...
முன்னாள் அதிபர்கள்...
ஆசிரியப் பெருந்தகைகள்...
கைரிய்யா வளர்ச்சிக்காய்
கைநிறையத் தந்தவர்கள்...
'நான்காம் நபராகா' - அந்த
நல்லவர்கள் சுவனத்தில்
நல்லபடி வாழ்வதற்கு
நாளெல்லாம் பிரார்த்திப்போம்!

ஜே. ஏ. எம். இர்ஷாத்
ஹுஸைன் ஆசிரியர்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 13 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2022 பெப்ரவரி 13 ஞாயிற்றுக்கிழமை




சமையல் கலை நிபுணர்
திருமதி ஷாமளா நிரஞ்சன்

# நாம் பார்ப்பதெல்லாம் "எடிட்" செய்யப்பட்ட காட்சிகள்

ஒரு நாளைக்கு 40 நிமிடம் நாம் முற்றாக கண் பார்வையை இழந்திருப்பது தெரியுமா? உங்களது கண்கள் நகரும்போது மூளை உங்களது பார்வையை தடுத்துவிடும். அதனை தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் கண்ணாடிக்கு முன் நின்று கண்களை நகர்த்திப் பாருங்கள். அது ஒரே இடத்தில் இருப்பது போலத் தான் தெரியும். இதனையே Saccadic masking என்று அழைப்பார்கள். இந்த செயற்பாடு இல்லாவிட்டால் கெமராவையே பிடிக்கத் தெரியாத ஒருவன் எடுத்த திரைப்படம் போல, காட்சிகள் எல்லாம் அசைந்துகொண்டு இருக்கும். எனவே, நாம் பார்க்கும் அனைத்து காட்சிகளுமே கச்சிதமாக எடிட் செய்யப்பட்டவை.



## தாழ்வான சாக்கடல்



உலகில் உயரமான இடம் எது என்று கேட்டால் எவரெஸ்ட் சிகரம் என்று விரல் சூப்பும் குழந்தையும் சொல்லிவிடும். ஆனால் உலகின் தாழ்வான இடம் பற்றி பெரியதாக யாரும் பொது அறிவு கேள்வி கேட்பதில்லை. மேற்குக் கரை, இஸ்ரேல் மற்றும் ஜோர்தான் எல்லையில் அமைந்திருக்கும் சாக்கடலுக்கே அந்த பெருமை சேர வேண்டும். முழுவதும் நிலத்தால் சூழப்பட்ட இந்த கடல், சாதாரண கடல் மட்டத்தில் இருந்து 423 மீற்றர் கீழே இருக்கிறது. பூமியின் மேல் ஓடுகளின் விரிசலால் இந்த இடம் இன்னும் தாழ்ந்து கொண்டு போகிறதாம்

பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்

## நாகரிகத்தையே அழித்த மர்ம நோய்

மத்திய மெக்சிகோவில் வாழ்ந்த அஸ்டெக் மக்கள் மிகப்பெரிய நாகரிகத்திற்கு சொந்தக்காரர்கள். ஆனால் 1500களின் நடுப்பகுதியில் ஏற்பட்ட மர்ம நோய் ஒன்று அந்த இனத்தினரையும், அவர்களின் பேரரசையும் ஒட்டுமொத்தத்தில் அவர்களது வரலாற்றையும் அழித்துவிட்டது. ஐரோப்பாவின் பெரியம்மை போன்ற நோயே அவர்களின் அழிவுக்குக் காரணம் என்று பரலான கூற்று ஒன்று இருக்கிறது. இந்த மர்ம நோய் அந்த மக்களில் 80 வீதமானவர்களை அழித்துவிட்டதாக வரலாறு சொல்கிறது.

காய்ச்சல், தலைவலி, கறுப்பு நிறத்தில் சிறுநீர், கறுப்பு நிறமாகும் நாக்கு மற்றும் சில சம்பவங்களில் கண், பூக்கு மற்றும் வாயினால் இரத்தம் கொட்டுதல் போன்ற அறிகுறிகள் இந்த நோய் பாதித்தவர்களிடம் இருந்து வெளிப்பட்டது. இதனால் வெறும் ஐந்து ஆண்டுகளுக்குள் சுமார் 15 மில்லியன் அஸ்டெக் மக்கள் இறந்தார்கள்.



## மரணப் படுக்கையிலும் சிரிப்புக்காட்டியவர்



அமெரிக்காவின் பிரபல நகைச்சுவை நடிகர் மற்றும் பேச்சாளர் ரொமட்னி டங்கர்பீல்ட் மூளையில் சத்திர சிகிச்சை ஒன்றுக்காக 2004 ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல் மருத்துவ மையத்தில் அனுமதிக்கப்பட்டார். அப்போது எவ்வளவு காலம் மருத்துவமனையில் இருப்பீர்கள் என்று அவரிடம் நலன் விரும்பிகள் கேட்டார்கள். அப்போது கூட அவர் கூறிய பதிலைக் கேட்டு எல்லோருக்கும் சிரிப்புத் தான் வந்தது. 'எல்லாம் நன்றாக நடந்தால், ஒரு வராத்தில் வந்துவிடுவே. அப்படி இல்லாவிட்டால் ஒன்றரை மணித்தியாலம் போதுமானது' என்றார்.

2004 ஒக்டோபர் 5 ஆம் திகதி ஆறு வாரங்கள் கழித்து அவர் தனது 82 ஆவது வயதில் மரணித்தார்.

## அமெரிக்க ஜனாதிபதிகளை பிடித்த சாபம்

அமெரிக்க ஜனாதிபதிகளின் மரணம் பற்றி ஒரு கணக்கு இருக்கிறது. அது அமெரிக்காவில் பிரபலமானது. 1840 ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்காவில் இதுவரை பதவியில் இருந்த ஜனாதிபதிகளில் பலர் பதவியில் இருக்கும்போதே இறந்திருக்கிறார்ர்கள் என்பது தெரிந்த கதை.



ஆனால் இதை வைத்து கணக்குப் போட்டு பார்த்தபோது, ஒரு ஒற்றுமை இருக்கிறது என்று கண்டார்கள். இதனை 'டிபெகானோ சாபம்' என்று பொதுவாக அழைக்கிறார்கள். அதாவது இறுதி இலக்கம் பூஜ்யமாகவும் 20 ஆல் வகுபடக்கூடிய இலக்கத்தைக் கொண்டதுமான ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்பவர் பதவிக் காலத்தில் உயிரிழந்துவிடுவார்கள் என்பது தான் அந்த சாபம்.

வில்லியம் ஹென்ரி ஹரிசன் (1840), அப்ராஹாம் லிங்கன் (1860), ஜேம்ஸ் ஏ கரிபீல்ட் (1880), வில்லியம் மக்கின்லி (1900), வொரன் ஜி ஹார்டின் (1920), பிராங்லின் டி ரூஸ்வெல்ட் (1940) மற்றும் ஜோன் எப் கென்னடி (1960) ஆகிய ஜனாதிபதிகள் இவ்வாறு பதவிக் காலத்திலேயே உயிரிழந்திருக்கிறார்ர்கள்.

என்றாலும் ரொனால்ட் ரீகன் (1980) மற்றும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷிடம் (2000) இந்த சாபம் பழிக்கவில்லை. என்றாலும் இந்த இருவதும் படுகொலை சதியில் இருந்து உயிர் தப்பி இருக்கிறார்ர்கள்.

இந்த வரிசையில் அடுத்து தற்போது பதவியில் உள்ள ஜனாதிபதி ஜோ பைடன் இருக்கிறார். அவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது 2020 ஆம் ஆண்டு.

# எழுத்தாளர் சுஜாதாவின் இனிய நினைவுகள்

**சுஜாதா தமிழகத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் மிகவும் முக்கியமானவராவார். இவரது இயற்பெயர் ரங்கராஜன். தனது தனிப்பட்ட கற்பனை மற்றும் மொழிநடையால் அவர் பல வாசகர்களை கவர்ந்துள்ளார்.**



எழுத்தாளர்களில் நமக்கு யாரைத் தெரியவில்லை என்றாலும், நிச்சயம் சுஜாதாவை தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. தன்னுடைய எளிமையான எழுத்துக்களால் பலரைக் கவர்ந்தவர். இது மட்டுமல்ல, இவருடைய எழுத்துக்கள் மிகவும் எளிமையானது, கடினமான வார்த்தைகளை, வாக்கிய அமைப்புகளை பிரயோகிக்காமல் எளிமையாக கையாண்டிருப்பார்.

சுஜாதா, சென்னையில் திருவல்லிக்கேணியில் உள்ள தெப்பக் குளத்தின் தெற்குத் தெரு வீதியில் சீனிவாச ராகவன், கண்ணம்மா தம்பதியினருக்கு 1935 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். தந்தை சீனிவாச ராகவன் மின்சாரத்துறை அதிகாரி. அம்மா கண்ணம்மா, ஒரு பணக்காரக் குடும்பத்தில் இருந்து வந்தவர். ரங்கராஜனின் அண்ணன் கிருஷ்ணமாச்சாரி ஒரு வைத்தியர், தம்பி ராஜகோபாலன் தொலைத்தொடர்பு இன்ஜினியர். தங்கையின் பெயர் விஜி. ஸ்ரீரங்கம் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்த சுஜாதா, திருச்சி புனித ஜோசப் கல்லூரியில் பி.எஸ்.ஸி படிப்பை முடித்தார். அதன் பின்னர் சென்னை வந்த சுஜாதா, சென்னை தொழில்நுட்பக் கல்லூரியில் மின்னணுவியல் கற்றார். திருச்சி புனித ஜோசப் கல்லூரியில் முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், சுஜாதா ஆகியோர் ஒரே வகுப்பில் படித்தார்கள்.

அதன் பின்னர் மத்திய அரசுப் பணியில் சேர்ந்தார், டெல்லியில் முதலில் பணியாற்றினார். 14 ஆண்டு அரசுப் பணியில் இருந்த சுஜாதா பின்னர் பெங்களூர் பாரத் இலக்ட்ரோனிக்ஸ் நிறுவனத்தில் இணைந்தார். அங்கு ரேடார்கள் குறித்த ஆய்வுப் பிரிவிலும் மேலும் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றினார். பின்னர் பொது மேலதிகாரியாக உயர்ந்தார். மின்னணு வாக்குப் பதிவுப் பொறியை உருவாக்க முக்கிய காரணமாக இவர் இருந்தார். இதை உருவாக்கிய பாரத் இலக்ட்ரோனிக்ஸ் நிறுவனத்தில் முக்கிய உறுப்பினராக இருந்தார் சுஜாதா. இப்பொறியை உருவாக்கியதற்காக சுஜாதாவுக்கு "வாஸ்விக் விருது" வழங்கப்பட்டது. பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் சென்னைக்குத் திரும்பினார்.

பெங்களூரிலிருந்து சென்னைக்குத் திரும்பியதும் அறிவியலை ஊடகம் மூலமாக மக்களுக்கு எளிமையான மொழிநடையில் கொண்டு சேர்ப்பதை தனது இலக்காக கொண்டு செயற்பட்டார்.

சுஜாதாவின் முதல் கதை 1953 ஆம் ஆண்டு சிவாஜி என்ற பத்திரிகையில் வெளிவந்தது. சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், அறிவியல் நூல்கள், கவிதைகள், கட்டுரைகள், திரைப்பட கதைவசனங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் என பல துறைகளில் தன் முத்திரையினைப் பதித்தவர் சுஜாதா.

இவருடைய "இடது ஓரத்தில்" என்ற சிறுகதை 1962 ஆம் ஆண்டு குமுதம் இதழில் ரங்கராஜன் என்ற பெயரில் வெளிவந்தது. குமுதம் இதழில் வேறொரு எழுத்தாளரான ரா. கி. ரங்கராஜனின் பெயரும் இவர் பெயரும் வாசகர்களுக்கு குழப்பமாக இருந்ததால் ரங்கராஜன் தன் அன்பு மனைவி பெயரான "சுஜாதா" வைத் தன் புனைப்பெயராக வைத்துக் கொண்டார்.

சுஜாதா இலக்கியம், நாட்டார் வழக்காறு, தமிழ்ச் செவ்விலக்கியம், துப்பறியும் கதை, அறிவியல் கதை, சிறுகதை, புதினம், குறும் புதினம், நாடகம், திரைப்படம், கணிப்பொறியியல், இசை என்று பல பாணிகளிலும் வகைகளிலும் எழுதியுள்ளார். புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், தொகை நூல்கள் என இருநூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். ஒரு கவிதைத் தொகுப்பும் படைத்துள்ளார். சுஜாதாவின் எழுத்துப் பணியைப் பாராட்டி அவருக்கு தமிழக அரசின் கலைமாமணி விருதும் வழங்கப்பட்டுள்ளது. அறிவியலை ஊடகம் மூலமாக மக்களிடம் கொண்டு சென்றதற்காக அவரைப் பாராட்டி தேசிய அறிவியல் தொழில்நுட்பக் கழகம் அவருக்கு 1993 ஆம் ஆண்டு விருது வழங்கிக் கௌரவித்தது.

சுஜாதா திரைப்பட வசனம் எழுதிய திரைப்படங்கள் எந்திரன், சிவாஜி, அந்நியன், இந்தியன், முதல்வன், போய்ஸ், ரோஜா, ஜீன்ஸ், ஆய்த எழுத்து, உயிரே, வரலாறு, கன்னத்தில் முத்தமிட்டால், செல்லமே, விசில் என்பனவாகும்.

ரங்கராஜன், சுஜாதா தம்பதியினரின் இரு புதல்வர்கள் கேசவா பிரசாத், ரங்கா பிரசாத் ஆகியோர் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.

இறுதிக் காலத்தில் உடல் நிலை மோசமானதால் சென்னை அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சுஜாதா சிகிச்சை பலனின்றி 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி தனது 72 ஆம் வயதில் காலமானார். சுஜாதாவின் இறுதிச் சடங்குகள் சென்னை பெசன்ட் நகர் மயானத்தில் நடைபெற்றன.



**பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**



*Fathima Hanifa & Fathima Haya (Twins)*
**நாங்கல்ல, மங்கெதர, துல்ஹிரிய**

# மஜ்லிஸ்

முல்லை முஸ்ரிபா



Design by S.Nazeem

## சனூஸ் முஹம்மத் பெரோஸ் செய்தி வாசிப்பின் செழுமைக் குரல்



இனிமைக்குரல் ஓய்ந்து விட்டது. இலங்கை ஒலிபரப்பு ஊடக வரலாற்றில் ஓர் ஆளுமை அடையாளம் சனூஸ் முஹம்மத் பெரோஸ்.

ஒலிபரப்பு, சமூக, அரசியல் செயற்பாட்டாளரான சனூஸ் எண்பதுகளில் மீசை துடிக்கும் இளம் வயதில் வானொலிக்குள் கால் வைத்துப் பின் ஆழக்காலூன்றி நிமிர்ந்து விருட்ஷமானவர்.

ஒலிபரப்புத்துறையின் உற்கூறுகளில் தன்திறமைகளைச் செலுத்தி செழுமை கண்டவர். அழகு பூத்த இனிய குரலால் நேயர்களை வசீகரித்தவர் சகோதரர் சனூஸ் முஹம்மத் பெரோஸ். தென் இலங்கையிலிருந்து தமிழை உச்சரிப்பின் உச்சத்துக்குக் கொண்டு வந்ததனூடாக வியப்போடு பார்க்கப்பட்டவர். இன்தமிழின் சொந்தக்காரர். ஒலிபரப்பின் சகல பாணிகளிலும் தன் அழகு குரலைப்பாய்ச்சியவர். செய்தி வாசிப்பு, நிகழ்ச்சி முன்வைப்பு, தமிழ்ச்சேவை, முஸ்லிம் சேவை, தொடர் கலையக அறிவிப்பு, வர்த்தக சேவை,தென்றல் கலையக அறிவிப்பு, கவிதை, சிறுகதை, இசையும் கதையும் வாசிப்பு, நாடக ஒலி நடிப்பு, கள அறிவிப்பு, விளம்பர நடிப்பு, விளம்பர அறிவிப்பு என அறிவிப்பின் சகல நுணுக்கங்களையும் தன்னகத்தே கொண்டு மிளிர்ந்தவர்.

உச்சரிப்பு, ஏற்ற இறக்கம், செய்திப்பிரதி குழுமையாக்கம் என உணர்வு பூர்வ வாசிப்பின் ஒரு கால வெளிப்பாடு அவர். ஒரு சுயம்புத் தோற்றமாகி நின்று வானொலியின் இடைவெளிகளை நிரப்பம் செய்தவர் சனூஸ் முஹம்மத் பெரோஸ். அவரது ஒலிபரப்பு சார்ந்த கூர்ந்த பார்வையும் ஒலிபரப்புக்குறித்த தேடலும், ஆங்கில ஞானமும் அவரது ஆளுமைப்பரப்பை உறுதிப்படுத்திற்று.

அரச வானொலி விருதினை செய்தி வாசிப்புக்காக இரு தடவைகள் பெற்றுக்கொண்டமை ஞாபகிக்கத்தக்கது. சுப்ரா கிரேட் அறிவிப்பாளரான சனூஸ் தமிழ்ச்சேவைக்கட்டுப்பாட்டாளராக, முஸ்லிம் சேவைப் பொறுப்பாளராக, வானொலிப்பயிற்சிப்பிரிவு பொறுப்பாளராக, விரிவுரையாளராக உயர்ந்து நின்றவர்.

தமிழ் உச்சரிப்புக்கலை குறித்து அதீத தேடலும் ஞானமும் கொண்டவர். கட்டுரை எழுத்தை எழுத்தூடகத்தில் பதித்தவர்.

சனூஸ் முஹம்மத் பெரோஸ் நேயமிக்க ஊடக மானுடர். அவரது ஒலிபரப்புத்துறை ஆளுமையை இளம் ஊடக உலகம் கைக்கொள்ளுமென நம்பலாம்.

## சிறகு நுனியில் விரிதிரை

சிறகுநுனி நுண்மையான கலை இலக்கிய திரை சார் செயற்பாட்டுத் தொடர் கொண்டது.

அதன் மூன்றாவது சர்வதேச திரைப்பட விழா டிசம்பரில்'மழைக்குள் திரியாமல் திரைக்குள் வாருங்கள்''அழைப்பில் நிகழ்வுற்றது. திரை மொழியின் நவீன பாய்ச்சல் தமிழிலும் கனதியுறும் பின்புலத்தில் இத்தகைய திரைவிழாக்கள் கவனம் பெறுவன.

இதனால் திரைமொழி குறித்தான கதையாடல்களும், கருத்தேற்றங்களும் மிகுந்து நிற்கும். இத்தகைய காலத்தில் திரையில் முன்னம் முன்னிறுத்திய சினேமா கட்டுமானங்களை தகர்த்தி நவீன காத்திரமான சினேமாக்கள் வந்து சேர்ந்து விட்டன. ஆயினும் சினேமா நுகர்வுக் கலாசாரம் புதுமையுற்ற அல்லது காத்துரமுற்ற அளவு போதாதென்பது குறித்த அவதானிப்பும் முக்கியமானது.

சிறகுநுனி கலை, இலக்கிய, திரையாடல் செயற்பாட்டுத்தளத்தில் தொடரலாம் போக்கினைக் கொண்டுள்ளது.

தொலைக்காட்சித் திரைப்படம் அல்லது குறுந்திரைப்படம் என்ற எண்ணக்கருவை முன்னிறுத்தும் சிறகுநுனி செயற்பாட்டாளர் ஆத்மா ஜாபிர் மிகுந்த அவதானிப்புக்குரியவர். மூன்றாவது சர்வதேச திரைவிழாவில் 'அப்பா' உள்ளிட்ட திரை மொழிக்காட்சிகளை திரை வாசகர் வாசிக்க முடிந்தது.

ஜாபிர் எழுதி இயக்கிய ஆவணப்படமாகப்பேசப்படும் 'நொச்சி முனை தர்ஹா சகவாழ்வின் கடைசிக்கோட்டை''2021 ஒக்டோபரில் வெளிவந்தது. தமிழ் முஸ்லிம் சகவாழ்வின் உயிர்த்துடிப்பை வரலாற்றுத் தடத்தின் நிகழ்வுகள் 10டே திரை மொழியாக்கியுள்ளார் ஆத்மா. கிழக்கின் தமிழோடு வாழ்ந்த இரு சமூகங்களிடையேயான சமூக, கலாசார, பண்பாட்டு, அரசியல், நோக்கின் வெட்டு முகம் இந்தக்கடைசிக்கோட்டை. சகவாழ்வை அவாவுறும் மக்கள் கூட்டத்தின் படைப்பு. காட்சி, இலத்திரனியல் விவரண இதழாளரான ஆத்மா சமூக மாற்றத்துக்கான சினேமாவை சிறகு நுனியில் திரை வெளியாக்கி வருகிறார். வாழ்த்துக்கள்.

## கவிதை எல்லை கடந்த உயிர்ப்பு நிலை

மண்ணுக்கும் விண்ணுக்குமிடையில் உலாவித் திரியும் காற்றுப் போலவுமானது கவிதை. இயற்கை ஒரு கவிதை. ஐம்பூதமும் கவிதை. வாழ்வொரு கவிதை.ஈரம் சுரக்கும் இதயத்தில் கசியும் உன்னதம் தான் கவிதை. கவிதை எல்லை கடந்த உயிர்ப்பு நிலை. பிரபஞ்சத்தின் சாறு பிழிவு.மனக்கண் முன் விரியும் காட்சிக்கும் கருத்துக்கும் உணர்வும் உருவுமளித்து மொழியால் கட்டமையும் ஒரு கட்டுறு செயற்பாடுதான் கவிதைச்செயல்வாதம். அன்றாடங்களில் சேகரமானவற்றை கவிஞன் அசைபோடும் சமயத்தில் கவிதைச்செயல் நிகழ்கிறது.

இவ்வண்ணம் கவிதைச்செயல் புரிபவர்கள் பல்லாயிரம் பல்லாயிரம் பேர்.'விட்மன் என்பது மிகச்சிறந்த உயர்ந்த பெயர்''என மகாகவி தாகூர் புகழ்ந்துரைக்கும் பெயர்க்காரர் வால்ட் விட்மன் மண்ணுக்கும் விண்ணுக்கும் எல்லை காண்பளவும் நேசத்தை விரித்து வைத்தவர்.

'ஆத்மா தனது பாதையைத் தானே வகுத்துக் கொள்ளும்'' என்பார் விட்மன். வால்ட் விட்மனின் பாதை விசாலமானது, மனிதர்களுக்கானது சமூக நீதிக்கான, மறுக்கப்பட்ட மக்களின் குரலலானது. கவிதை எனும் ஒளியாலானது. அமெரிக்காவின் ஒப்புயர்வற்ற கவி 1819 இல் ஹண்டிங்டன் கிராமத்தில் பிறந்தவர். வறுமையில் துவண்டவர். சிறுவர் தொழிலாளியானவர். இரவிலே ஓர் ஒப்பற்ற கவிஞன் உருவாகிவிட்டான் எனுமளவு 'புல்லின் இதழ்கள்'' 1855இல் தந்தவர். லாங்க்பெலோவின் கருத்தாழத்தையும், எமர்சனைப்போல மனிதத் தொடர்பு குறித்த பார்வையையுமுடையவர்.

விட்மன் தன் கவிதைகளைக் தன்னில் இருந்து தொடங்கி தன்னிலே முடிக்கிறார். நலங்கிள்ளி மொழிபெயர்த்த 'வால்ட் விட்மன் கவிதைகள்'' பனுவலில் கடைசிக் கவிதை 'கடைசிப்பிரார்த்தனை''.

கடைசியாக மிகமிக மென்மையாக
வலிமை வாய்ந்த கோட்டை போன்ற
பூட்டப்பட்ட பூட்டுகளின் பிடிப்பிலிருந்து
நன்கு மூடப்பட்ட கதவுகளின் பாதுகாப்பிலிருந்து
நான் விடுதலை பெற்று மேலே மேலே
எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

ஓசையின்றி நேராக, நான் ஊர்ந்து செல்வேன்.
மெல்லிய குரலோசையோடு
கனிவென்னும் சாவியால் பூட்டுக்களைத் திறந்து,
ஓ! என் ஆன்மாவே! கதவுகளைத் திறந்து விடு
மென்மையாக மனவெழுச்சிச் சிறிதுமில்லாமல்!
ஓ! அழிவெய்தும் தசையே!
உன் பிடிப்பு வலிவானதே!
ஓ! என் அன்பே!
உன் பிடிப்பு வலிவு மிக்கது!

## புகைப்படம், சட்டகத்துக்குள்ளிருந்து வெளிப்பரவும் உணர்வு

புகைப்படம் நமது வாழ்வின் வழித்தடம். புகைப்படம் வழியாகவே வாழ்வைத் திரும்பிப் பார்க்கிறோம். அது வரலாற்றெழுத்துப்போன்ற வடிவம். புகைப்படம் ஒரு கலை ஒரு காட்சி அது ஒரு வலிமை அழகு சக்தி. வாழ்வியலிலிருந்து பிரிக்க முடியாத நிழல்.

புகைப்படத் தொழிநுட்பம் தொடங்கிய காலம் முதலாக அது உலகின் காட்சிப்படமாக அமைகிறது.1826இல் ஜோஸப் நைஸ்போர் நீப்ஸ் புகைப்படத்தைத் தொடங்கினார். அதற்கு முன்பே புகைப்படக் கருவிக்கு வித்திட்டவர். 1985இல் ஈராக் பஸ்ராவில் தோன்றிய அல்ஹஸன் என்பார். நீண்ட வரலாற்றின் தொடக்கம் இவர்.

1839இல் லூயிஸ் டிகுரே பாரிஸில் போல்வர்டு கோவில் மற்றும் அருகிலுள்ள தெரு என்பவற்றைத் தன் கமெரா கண்ணில் அடக்கினார். இதுதான் உலகின் முதலாவது தனிநபர் புகைப்படம்.

அங்ஙனம் தொடங்கிய கமெரா அடைக்கப்பட்ட அறை எனும் பொருளுடையது. கிரேக்க மொழியில் Photo என்பது Light Graphein Draw. Photo Graphy என்றால் ஒளியோவியம்.

உண்மையில் கமெரா தூரிகை போன்றது. புகைப்படக்காரனின் கண்கள் அதனூடே வரையும் காட்சிகள் அற்புதமானவை, உயிர்ப்புமிக்கவை, உன்னதமானவை. அதனால்தான் ஒளிப்படங்கள் கொண்டாடப்படுகின்றன. அவை உணர்வை வெளியிடுபவை. அடக்கு முறையை, வறுமையை, போரை, விடுதலையை, சுதந்திரத்தை, சமாதானத்தையெல்லாம் பேசுபவை. புகைப்படங்களை முன்னிறுத்திய இத்தகைய போராட்டங்கள் உலகில் அதிகமுள்ளன.

ஒளிப்படங்களின் குரல்கள் உறுதியானவை. எழுத்துக்கு அப்பாலான அல்லது மௌனத்துக்கு அப்பாலான குரல்கள் அவை.

இன்று ஒளிப்படத்தொழிநுட்பம் வளர்வடைந்த சூழலில் ஒளிப்படங்கள் வளர்ச்சி கண்டன.ஒளிப்படக்காரர்களின் கண்கள் ஒளிபுகா இடங்களிலும் புகுந்து தரிசிக்கும் உயிர்த்துடிப்பானவை. உணர்வுத்துடிப்பான படங்களைக் காட்சிப்படுத்துகின்றன அவை. இதுமானிட வாழ்வியலின் வெட்டுமுகக் காட்சியகம்தான்.

உலகம் முழுவதும் வளர்ந்து நிற்கும் புகைப்பட நிறுவகங்கள், தனியாள் முன்னெடுப்புகள் கொண்டாடும் புகைப்படக் கண்காட்சிகள் பேசும்படியானவை. ஒளிப்பட ரசிகரின் அழகியல் உணர்வை, சிந்தனைப் புலத்தை, தேடலார்வத்தை,கற்பனை வளத்தை, யதார்த்த நிலையை என்றெல்லாம் தூண்டிவிடும் கருவி இந்தப் புகைப்படம் என்கிற ஒளிப்படம்தான். புகைப்படச்சட்டகத்துக்குள் அது காட்சியை அடக்கியிருந்தாலும் அது வெளிப்பரப்பும் உணர்வுக்கிளர்ச்சி அலாதியானது கவனிப்புக்குரியது. அண்மையில் அக்கரைப்பற்றிலும் மலையகத்திலும் நிகழ்பெற்ற புகைப்படக்கண்காட்சிகளும் இதன் தொடர்ச்சிகளாகும்.

சட்டகத்திற்கு வெளியே ஒளிப்படம் கிளர்த்தும் உணர்வும் தேடலும் கற்பனையும்கூட மிகுந்த அவதானத்திற்குரியனவாகும். இன்னும் ஒளிப்படம் பிரகாசிக்கட்டும்.

## ஔவன் கவிதை

### சொல் அல்லது கனல்

ஒரு மீக்கணம்
சிதறிற்றுச்சொல் சொல்லிலிருந்து சொல்
அனல் கொதிக்கும் காலம்
சாந்தத்தின் உருவமையப் பெரு முயல்வு

விடிகாலைச்சொல்லெடுத்து மெல்லமைதி பூத்திடும் பேரவா
முடிவதில்லை முடிவதேயில்லை
சூர்யன் போலொரு ஒளிச்சொல் காண
சூர்யனைத்தேடும் நீள்நடை அலைவில்
பெரும்பொழுது கரைந்திற்று

கரையும் பொழுது தோறும் இருள் கருமிருள்
கரையும் பொழுது தோறும் குரல் அழுகுரல்

கருமிருளில் கலந்ததொரு அழுகுரலையெடுத்து வீசிற்றுப்
பொழுது வீசுந்திசை தோறும் இசையடங்கா விசை

கதிர்பட்டுச்சிலிர்க்குமொரு நிலம்
கதிர் பட்டுத்துளிர்க்குமொரு வேர்
கதிர் பட்டுச் சிவக்குமொரு முகம்
தேடலில் நழுவிற்றொரு மீச்சொல்

வழி நெடுகச் சிதறுண்ட சொல்லின் கனலில்
உயிர்க்கிறது எழுதவொண்ணா மீக்கவிதை



காதலன் : அன்பே, நம்ம கல்யாணத்த எங்க குடும்பத்துல ஏத்துகிட மாட்டேங்குறாங்க..
காதலி : நம்ம கல்யாணத்தை தடுத்து நிறுத்த அவங்க யாரு ?
காதலன் : என்னோட மனைவியும், மாமியாரும்..........



பஸ்சுல கலெக்டரே ஏறினாலும், முதல் சீட் டிரைவருக்குத் தான்.



Wife: என்னங்க செத்துட்டா சொர்க்கத்துல husband & wife தனியா தான் இருக்கனுமா?
Husband: அதனால தாண்டி அது சொர்க்கம்...!



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



ஊருக்கே கேக்குற மாதிரி சத்தமா கொறட்டை விட்டாலும், .......... உன் குறட்டையை நீ கேட்க முடியாது.



ஒரு எறும்பு நினைச்சா ஆயிரம் யானையை கடிக்கும், ஆனா ஆயிரம் யானைகள் நினச்சாலும் ஒரு எறும்பையும் கடிக்க முடியாது.



என்னதான் ஒரு பொண்ணு போட்டோவுல தேவதை போல இருந்தாலும், அவ நெகட்டிவ்ல பூதம் போலத்தான் இருப்பாள்!!!!



என்னதான் கராத்தேயில் பிளாக் பெல்ட் வாங்கினாலும், சொறி நாய் துரத்தினால் ஓடித்தான் ஆகனும்.



வேர்கடலை வேர்ல இருந்து வரும், அதே மாதிரி கொண்டைக்கடலை கொண்டையிலிருந்து வருமா?



அதிகமா மேக்கப் போடுற பெண்ணும், ரொம்ப நாளா டீ கடையில இருக்கிற பணிசும் நல்லா இருந்ததா சரித்திரமே இல்லை.....

**கல்யாண சமையல் சாதம்**
**காய்கறிகளும் பிரமாதம்**
**அந்த கௌரவப் பிரசாதம்**
**இதுவே எனக்குப் போதும் ...**

# சமையல் கலையில் அசத்தி வரும் Shamala Niranjan

**தஞ்சை டி.என்.ராமையா தாஸ் இயற்றிய இப்பாடலை, திருச்சி லோகநாதன் பாட S.V.ரெங்கா ராவ் நடித்துள்ளார். 1957ஆம் ஆண்டு திரைக்கு வந்த "மாயா பஜார்" என்ற படத்தில் இடம்பெற்ற பாடல் இது. இன்றும் கூட இந்தப் பாடலை கேட்கும் போதெல்லாம் வாய் ஊறும். மனம் ஆனந்தமடையும். பாடலுக்கே இவ்வளவு வலிமை இருந்தால், இந்த சமையல் கலையில் ஈடுபட்டால் எவ்வளவு ஆனந்தம் ஏற்படும். சமையல் கலையில பெண்கள் சாமார்த்தியசாலிகளாக இருந்தாலும் அவர்களுக்கு சரி நிகராக ஆண்களும் இன்று அக்கலையில் களைகட்டி வருகிறார்கள்.**

பொதுவாகவே சமையலைப் பொறுத்தவரை நிறைய ரகசியங்கள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. விதம் விதமாக நாம் சமையல் செய்தாலும், நாம் விரும்பி சமைக்க நினைக்கும் சிலருடைய கை பக்குவம் நமக்கு வருவதே இல்லை. அம்மாவின் கைப்பக்குவம் அந்தத் தாயின் பிள்ளைகளுக்குக் கூட வருவதில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அவர்கள் செய்வதை அருகில் நின்று பார்த்தால் கூட அதே போல் நாமும் செய்தால் ருசி வருவதில்லை. அதற்கு என்ன காரணம் தெரியுமா? கைப்பக்குவம் என்பது சிறுசிறு ரகசியங்களை உள்ளடக்கியது ஆகும்.

சமையல் என்பது ஒரு கலை. அதில் கற்றுக் கொள்ள வேண்டிய நிறைய விஷயங்கள் உள்ளன. எல்வாம் சிறு சிறு விஷயங்கள் தான். எதையெல்லாம் போட வேண்டும் என்பது தெரிந்து விட்டால் மட்டும் நீங்கள் சுவையாக சுப்பராக சமைத்து விட முடியாது. அதை எப்படி போட வேண்டும் என்பதில் தான் சூட்சுமமே இருக்கிறது. அது போல் சிறு சிறு விஷயங்கள் செய்வதில் சில பொருட்களை சேர்த்தால் அதன் ருசியும், பயனும் அபாரமாகிவிடும்.

அவ்வாறு சமையல் கலையில் அசத்தி வரும், மற்றவர்களும் அக்கலையில் அசத்துவதற்கு ஏற்ற வகையில், தான் கற்றுக் கொண்ட அக்கலையை கற்றுக் கொடுத்து வரும் ஒரு பெண்மணி தான் Shamala Niranjan சமையல் கலை ரகசியங்களையும் நுணுக்கங்களையும் அறிந்து கொள்ள

அவரை அண்மையில் அணுகிய போது கிடைத்தத் தகவல்களை இங்கு பகிர்ந்து கொள்கிறோம்.



நீங்கள் எங்கு பிறந்தீர்கள்? எங்கு வளர்ந்தீங்கள்? எங்கு கல்வி கற்றீங்கள்? இப்பொழுது எங்கு இருக்கிறீங்கள்? என்ன செய்றீங்கள்? நீங்கள் திருமணம் முடித்து விட்டீங்களா? எத்தனை பிள்ளைகள்? இவ்வாறு உங்களைப் பற்றிக் கூறுங்களேன்.

நான் பிறந்தது கண்டி. வளர்ந்தது நாவலப்பிட்டியில்.

பரி. அந்திரேய மகளிர் மஹா வித்தியாலயம் மற்றும் கண்டி மகளிர் பாடசாலையில் நான் கல்வி கற்றேன்.

இப்போது கொழும்பில் ஒரு இல்லத்தரசியாகவும்

ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகவும் இருக்கிறேன்.

உங்களது கணவர் என்ன தொழில் செய்கிறார்?

வியாபாரம் செய்கிறார். நான், என் கணவரின் வியாபார விடயங்களில் அவருக்கு உறுதுணையாகவும் இருந்து வருகிறேன்.

சமையல் துறைப் பற்றி கூறுங்களேன்.

சமையல் துறை எனது அடையாளம். மிகவும் சிறு வயதிலேயே தந்தையை இழந்த நானும் எனது சகோதரியும் எங்கள் தாயாரினால் அன்பாகவும், கண்டிப்பாகவும் வாழ்க்கையின் மேடு பள்ளங்கள் என்னவென்பதை அறிந்து தைரியமான, தன்னம்பிக்கையுள்ள பெண்களாக வளர்க்கப்பட்டோம். இதனால் வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆசை எப்போதும் எனக்கு இருந்ததுண்டு.

சமையல் என்பது ஒரு கலை. எனக்கு இதில் ஆர்வம் அதிகம். வெவ்வேறு சமையல் முறைகளைத் தேடி படிப்பது, செய்து பார்ப்பது இப்படியான கேள்வி ஞானம் மட்டுமே இருந்தது. காலப்போக்கில் எனது நண்பர்கள், எனது சமையல் துறையில் இருக்கும் திறமையைப் பாராட்டி ஊக்குவித்தார்கள்.

எனவே அடுத்த கட்டமாக *Cake Diploma* மற்றும் *Pastry and Bakery* இன்னும் பல்வேறு சமையல் முறைகளை வகுப்புகளுக்குச் சென்று கற்றுக் கொண்டேன்.

இதைவிட சமையல் கலையை வளர்க்க, சமையல் கலையில் சாதிக்க வேறு ஏதாவது செய்றீங்களா?

*"Shamala's kitchen"* என்று அடையாளப்படுத்தி முகப்புத்தகத்திலும் *"You Tube"* தளத்திலும் எனது சமையல் வீடியோக்களை பதிவேற்றம் செய்து வருகிறேன். அத்தோடு எண்பது மாணவர்களுக்கு கற்பித்து உள்ளேன். தொடர்ந்து கற்பித்து வருகின்றேன்.

சமையல் கலை தொடர்பாக தொலைகாட்சியில் சாதித்தது உண்டா? சாதிக்க நினைத்தது உண்டா?

சக்தி தொலைகாட்சியில் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட "சவால் சமையல்" நிகழ்ச்சிக்கு நான் தேர்வாகி









“

**2003ம் ஆண்டு ஹொங்கொங்கில் நடைபெற்ற** Indian food festival **இல்** "fasters finger of the show" **என்ற பட்டத்தை பெற்று உள்ளேன்.**

”

*இறுதி கட்டம் வரை சென்று மூன்று புள்ளிகள் வித்தியாசத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டேன். இந்த நிகழ்ச்சி எனக்கு ஒரு பெரிய அடையாளத்தைத் தந்தது.*

*தொலைகாட்சிகளில் இதைவிட வேறு வகையில் சாதித்தது உண்டா?*

*தற்போது பல தொலைக்காட்சிகளில் சமையல் நிகழ்ச்சிகளை செய்து வருகிறேன். 2003ம் ஆண்டு ஹொங்கொங்கில் நடைபெற்ற Indian food festival இல் "fasters finger of the show" என்ற பட்டத்தை பெற்று உள்ளேன்.*

*2021 இல் சக்தி சவால் சமையல் நிகழ்ச்சியில் 1 st runner up இடத்தை தட்டிச் சென்றேன். இந்த நிகழ்ச்சி எனக்கு ஒரு பெரிய அடையாளத்தை பெற்றுத்தந்தது.*

*இத் துறையில் பல சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன்*

*சமையல் துறைக்கு, நான் நேர்மையாக இருந்து இன்னும் புதுமையான விடயங்கள் பண்ண வேண்டுமென இன்னும் நான் கற்றுக் கொள்கின்றேன்*

*நாட்டியம், இசை, நாடகம் இவைகளுக்கு கலைமாமணி என்ற அங்கீகாரம் கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள்.*



*ஆனால் சமையலும் ஒரு கலை தான் சமையல் கலைஞர்களுக்கு அங்கீகாரமும் ஒரு பாராட்டும் கிடைக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள். எமது தமிழ் சமுதாயத்தில் நிறைய திறமையான சமையல் கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முன்வந்து முன்னேற வேண்டும். அவர்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது எனது ஆசை.*

*கற்பதற்கு வயது ஒரு தடையல்ல.*

*சமையல் கலையை மனதால் விரும்பி ஆசையாக செய்யும் போது அதில் கிடைக்கும் உளதிருப்தி வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. குறிப்பாக வீட்டில் உள்ளோரும், விருந்தினர்களும் பரிமாறப்படும் உணவினை பாராட்டும் போது கிடைக்கும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.*

*தொழிலுக்கு செல்லும் பெண்களை மனதார பாராட்டுகிறேன். தொழிலுக்கும் சென்று வீட்டுவேலையையும் பார்ப்பது பெரிய சவால். அந்த வகையில் எனக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனது குடும்பத்துக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். முடிந்தவரை ஆரோக்கியமான உணவுகளை வீட்டிலேயே தயாரித்து பரிமாற வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.*


*இக்கலையில்ஆர்வம் உள்ள பெண்கள் ஆடம்பர ஹோட்டல்களைப் போன்று உணவு தயாரித்து பரிமாறிம் போது ஆத்ம திருப்தி கிடைப்பதோடு பொருளாதாரம் மீதப்படும்.*

*சமையல் துறை தவிர நடிப்புத்துறை, இசைத்துறை,, ஆக்கத்திறன் கைவேலைகள் என்பவற்றில் அதீத ஆர்வம் உண்டு.*

*சமையல் துறையில் புதுப்புது முயற்சிகளை எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கிறேன்.*

*அதற்கு என் குடும்பத்தாரும் நண்பர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எப்போதும் எனக்கு உள்ளது.*





**கே. ஈஸ்வரலிங்கம்**

# “பாதுகாப்பான சகோதரிகள்”



பெண் ஊடகவியலாளர்களுக்கு டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பான “பாதுகாப்பான சகோதரிகள்“ என்ற பயிற்சிநெறியை வழங்கிய இன்டர்நியுஸ் அமைப்பு, அந்த துறைசார்ந்த திட்டங்களை முன்னெடுப்பதற்கான வாய்ப்பை வழங்கியது. அதனடிப்படையில் கருத்தரங்குகள், விழிப்புணர்வு நிகழ்வுகள், ஆய்வுகள் என பல விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவற்றினை பாராட்டும் வகையில், அண்மையில் இந்த ஊடகவியலாளர்கள் கொழும்பிற்கு வரவழைக்கப்பட்டு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவற்றில் டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பான செயலமர்விற்காக நிரஞ்சனி லோறன்ட்டிற்கு தங்கப்பதக்கம் கிடைத்தது. டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பாக, கலாவர்ஷ்னி கனகரட்ணம் மற்றும் சாரா பத்திரண ஆகியோர் மேற்கொண்ட ஆய்விற்கு வெள்ளிப்பதக்கம் வழங்கப்பட்டது. டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பான மற்றுமொரு செயலமர்வை நடத்தியமைக்காக, பாத்திமா நுஹாவிற்கு வெண்கலப் பதக்கம் வழங்கப்பட்டது. மேலும், இவர்களை பயிற்றுவிப்பாளர்களாக அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றும் வகையிலான பயிற்சியும் வழங்கப்பட்டது.












# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்



ஆர்.எம். புஹாரி.
கல்முனை.

**கேள்வி: நடிகர் சியான் விக்ரமும் அவரது மகனும் சேர்ந்து ஒரு படத்தில் நடிக்கிறார்களாமே. அது பற்றி ஏதாவது சொல்ல முடியுமா..?**

**பதில்:** நடிகர் சீயான் விக்ரம் நடிப்பில் தயாராகி இருக்கும் 60 ஆவது திரைப்படம் 'மகான்'. இந்தப் படத்தின் டீசல் வெளியாகி 4 மில்லியன் பார்வையாளர்களால் பார்வையிடப்பட்டு சாதனை படைத்து வருகிறது. இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ், சீயான் விக்ரம் மற்றும் அவரது மகனும், நடிகருமான துருவ் ஆகிய இருவரையும் வைத்து காந்தி மகான், மது கொள்கை, ரவுடியிசம் போன்ற விடயத்தை மையப்படுத்தி, சினிமாவுக்கே உரிய கொமர்ஷல் அம்சங்களுடன் வழங்கி இருப்பதாக தெரிய வருகிறது. படமாளிகையில் வெளியானால் சர்ச்சைகளும், எதிர்ப்புகளும் உருவாகும் என்பதற்காக புத்திசாலி தனத்துடன் இந்தப்படத்தை டிஜிட்டல் தளத்தில் வெளியிட்டிருப்பதாக திரையுலகினர் தெரிவிக்கிறார்கள்.

எம்.மாகிரட்.
எலபடகம.

**கேள்வி: எனது அபிமான நடிகை ஜோதிகா இப்போது ஏதாவது படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறாரா?**

**பதில்:** 'கண்ட நாள் முதல்'படத்தை இயக்கியவர் இயக்குநர் பிரியா. நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவரது. இயக்கத்தில் உருவாகும் பெயரிடப்படாத புதிய கதையின் நாயகியாக நடிக்க நடிகை ஜோதிகா ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்தப் படத்தை ஜோதிகா மற்றும் சூர்யாவின் சொந்த பட நிறுவனமான 2டி என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் தயாரிக்கிறது.

ஜோதிகா நடிப்பில் வெளியான 'பொன்மகள் வந்தாள்' மற்றும் 'உடன் பிறப்பே' ஆகிய இரண்டு திரைப்படங்களும் டிஜிட்டல் தளத்தில் வெளியாகின. ஆனால் பிரியா இயக்கத்தில் தயாராகும் புதிய படம் பட மாளிகைகளில் வெளியாகும் வகையில் உருவாக இருக்கிறது என தகவல் வெளியாகி இருக்கிறது.



ஆர்.எஸ்.சிவா.
திருகோணமலை.

**கேள்வி: அஜித்குமாரின் அடுத்த படத்தில் அவருடன் சேர்ந்து மலையாள சூப்பர் ஸ்டார் மோகன்லால் மற்றும் தெலுங்கு முன்னணி நடிகரான நாகார்ஜுனா நடிக்கிறார்களாமே.. உண்மையா..?**

**பதில்:** அஜித் நடிப்பில் தயாராகி வரும் 'வலிமை' திரைப்படம் எதிர்வரும் 24ஆம் திகதியன்று தமிழில் மட்டும் அல்லாமல் தெலுங்கு,ஹிந்தி,கன்னடம் ஆகிய மொழிகளிலும் வெளியாகிறது. இந் நிலையில் அஜித் நடிப்பில் தயாராகும் புதிய படத்தில் அவருடன் மோகன்லால் மற்றும் நாகர்ஜுனா இருவரில் ஒருவர் இணைந்து நடிக்க விருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. இருவரிடமும் பேச்சு வார்த்தை நடைபெற்று வருவதாகவும், இருவருமே நடிக்கக் கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கிறது.

இது அஜித் குமாரின் 61ஆவது படம். இந்தப் படத்தை இயக்குநர் வினோத் இயக்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



எம்.எம். இக்பால்.
மல்வான.



**கேள்வி: 'பாகுபலி' படத்தின் பிரமாண்டமான வெற்றிக்குப்பிறகு, இயக்குநர் எஸ்.எஸ்.ராஜமௌலி இயக்கத்தில் வெளிவரவிருக்கும் படம் எது?**

**பதில்:** படத்தின் பெயர் 'ஆர்.ஆர்.ஆர்' பெரும் எதிர் பார்ப்பதில் இருக்கும் இத்திரைப்படம் கடந்த 7ஆம் திகதி அன்று வெளியாகும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் கொரோனா பரவல் காரணமாக வெளியீடு தள்ளி வைக்கப்பட்டது. தற்போது கொரோனா பரவல் குறைந்திருப்பதன் காரணமாக எதிர் வரும் 25ஆம் திகதியன்று இத்திரைப்படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம் என அனைத்து இந்திய மொழிகளிலும் வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. இதே தினத்தில் சிவகார்த்திகேயன் நடித்த 'டான்' படமும் வெளியாகிறது என்பதும் தான் குறிப்பிடத்தக்கது.

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# கன்னித்தன்மை குறித்த கேள்விக்கு யாஷிவின் பதில்



கன்னித்தன்மை குறித்த இன்ஸ்டாகிராம் ரசிகரின் கேள்விக்கு யாஷிகா அதிரடி பதிலடி கொடுத்துள்ளார் யாஷிகா.

தமிழில் 'கவலை வேண்டாம்' என்ற படத்தின் மூலம் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானவர் யாஷிகா ஆனந்த். கவுதம் கார்த்திக் நடிப்பில் 'இருட்டு அறையில் முரட்டு குத்து' படத்தில் தனது கவர்ச்சி நடிப்பின் மூலம் இளைஞர்கள் மத்தியில் பிரபலம் ஆனார். பின்னர் தனியார் தொலைக்காட்சி நடத்திய பிக்பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்று கவனம் ஈர்த்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன் யாஷிகா ஒரு பயங்கர விபத்தில் சிக்கி நடக்க முடியாமல் படுத்த படுக்கை ஆனார். ஆஸ்பத்திரியில் பல மாத சிகிச்சைக்கு பின்னர் தற்போது பழைய நிலைமைக்கு வந்துகொண்டிருக்கிறார். சமீபத்தில் கூட ஒரு டி.வி. நிகழ்ச்சியில் தோன்றி தான் நலமாக இருப்பதாகவும், வேகமாக மீண்டு வருவேன் என்றும் தெரிவித்திருந்தார்.

அதேவேளை சமூக வலைதளங்களில் யாஷிகா ரசிகர்களுடன் கலந்துரையாடி வந்தார். குறிப்பாக இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அடிக்கடி ரசிகர்களின் கேள்விகளுக்கு பதில் அளிப்பதை வழக்கமாக கொண்டிருந்தார். அப்போது ஒரு ரசிகர், 'நீங்கள் கன்னித்தன்மையுடன் உள்ளீர்களா?' என எடக்குமடக்கான கேள்வி கேட்டார். இதற்கு சற்றும் தாமதிக்காமல், 'இல்லை, நான் யாஷிகா' என பதிலடி கொடுத்துள்ளார் யாஷிகா. யாஷிகாவின் இந்த துணிச்சல் பேச்சுக்கு ரசிகர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# ரஜினிகாந்த் தூக்கி வைத்திருப்பது யாரை?

சமீபகாலமாக திரை நட்சத்திரங்கள் சிறு வயது புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

அந்த வகையில் சுப்பர் ஸ்டார் நடிகர் ரஜினிகாந்த் தூக்கி வைத்திருக்கும் பிரபலத்தின் புகைப்படம் ஒன்று இணையத்தில் வெளியாகியுள்ளது.

ரஜினியுடன் தனது சிறு வயதில் புகைப்படம் எடுத்துக்கொண்ட இவர், அனைவருக்கும் பிடித்த பின்னணி பாடகி ஆவர். ஆம், அனுராதா ஸ்ரீராம் தான், ரஜினியுடன் இந்த புகைப்படத்தில் இருப்பது.

தனது சிறு வயதில் நடிகர் ரஜினியை சந்தித்தபோது, அனுராதா ஸ்ரீராம் அவர்கள் இந்த புகைப்படத்தை எடுத்துக்கொண்டுள்ளார்.

தமிழ் சினிமாவில் பல சூப்பர்ஹிட் பாடல்களை பாடியுள்ள இவர், தற்போது சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் நடுவராக பணிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.







# தந்தையின் கனவை நிறைவேற்றிய சாக்ஷி அகர்வால்

தந்தையின் கனவை நிறைவேற்றும் வகையில் நடிகை சாக்ஷி அகர்வால் சொகுசு கார் வாங்கியுள்ளார்.

ரஜினியின் காலா, அஜித்தின் விஸ்வாசம் உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்து பிரபலமானவர் நடிகை சாக்ஷி அகர்வால். சமீபத்தில் சாக்ஷி அகர்வால் நடிப்பில், சிண்ட்ரெல்லா, அரண்மனை 3 உள்ளிட்ட திரைப்படங்கள் படங்கள் வெளியானது.

சமீபத்தில் நடிகை சாக்ஷி அகர்வால் சொகுசு கார் ஒன்றை வாங்கி உள்ளார். இதுகுறித்து சாக்ஷி அகர்வால் கூறும் போது, சொகுசு கார் வாங்க வேண்டும் என்பது எனது தந்தையின் 45 வருட கனவாக இருந்தது. அவரது கனவை நிறைவேற்றும் விதமாகவே மெர்சிடிஸ் பென்ஸ் இ வகுப்பு காரினை வாங்கியுள்ளேன். இது என்னுடைய வாழ்க்கையின் மகிழ்ச்சியான தருணம்' என்று கூறினார்.

மேலும் ஒரு நடிகையாக, இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொருவரும் அவர்களின் சொந்த கனவுகளை நம்புவதற்கு தன்னுடைய இந்த வெற்றி உதவும் எனவும், தன்னால் இதைச் செய்ய முடிந்தால் நிச்சயம் ஒவ்வொருவராலும் இது முடியும் என்றும் சாக்ஷி அகர்வால் கூறியுள்ளார்.

சாக்ஷி தற்போது ஆதிக் ரவிச்சந்திரனின் பகீரா, சமுத்திரக்கனியுடன் நான் கடவுள் இல்லை, தி நைட் உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்துக் கொண்டுள்ளார்.



# தன் உதவியாளரை நீச்சல் குளத்தில் தள்ளிய நடிகை

தன் உதவியாளரை நீச்சல் குளத்தில் தள்ளி விட்ட தனுஷ் பட நடிகை சாரா அலிகானை விமர்சித்து கருத்துகள் பதிவிட்டு ஆதங்கப்படுகிறார்கள் ரசிகர்கள்.

இந்தித் திரையுலகில் முன்னணி நடிகைகளில் ஒருவர், சாரா அலிகான். கடைசியாக 'அத்ராங்கி ரே' எனும் இந்தி படத்தில் தனுஷ் ஜோடியாக நடித்திருந்தார். இந்தப் படம் நேரடியாக ஓ.டி. டி.யில் வெளியானது.

சமூக வலைத்தளங்களில் பிசியாக இருக்கும் நடிகை சாரா அலிகான், சமீபத்தில் ஒரு வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். அந்த வீடியோவில், நீச்சல் குளம் அருகே சாரா அலிகான் தனது பெண் உதவியாளருடன் புகைப்படம் எடுத்து கொண்டிருக்கிறார்.

அப்போது திடீரென அந்த உதவியாளரை நீச்சல் குளத்தில் அவர் தள்ளிவிடுகிறார். எதிர்பாராத இந்த சம்பவத்தால் அந்த உதவியாளர் மிரண்டு போகிறார்.

அதனைத்தொடர்ந்து சிரித்தபடியே அந்த உதவியாளரை கேலி செய்தபடி சாரா அலிகான் நீரில் நீந்தி விளையாடுகிறார். இது விளையாட்டுத்தனமான வீடியோ தான் என்றாலும் ரசிகர்கள் கடும் கண்டனக்குரல் விடுத்து வருகிறார்கள். 'இப்படி செய்யலாமா?', 'என்ன கொடூரமான செயல் இது' என்றும் விளாசுகிறார்கள். எல்லாவற்றையும்விட அந்த வீடியோவில் பிகினி உடையில் கவர்ச்சி காட்டும் சாரா அலிகானையும் விமர்சித்து கருத்துகள் பதிவிட்டு ஆதங்கபடுகிறார்கள்.

# அம்மா வேடத்தில் நடிப்பதை பெருமையாக கருதும் அமலா



அம்மா வேடத்தில் நடிப்பதை பெருமையாக கருதுகிறேன் என்று நடிகை அமலா கூறினார்.

பிரபல தெலுங்கு நடிகர் நாகார்ஜுனாவை காதல் திருமணம் செய்தவர் நடிகை அமலா. இவர் திருமணத்துக்கு பின் நடிக்கவில்லை. நீண்ட பல வருடங்களுக்கு பிறகு அவர் 'கணம்' என்ற படத்தில் அம்மா வேடத்தில் நடித்திருக்கிறார். படத்தில் அம்மா பாசத்தை சித்தரிக்கும் வகையில் ஒரு பாடல் இடம்பெறுகிறது.

இதுபற்றி நடிகை அமலா கூறியதாவது:

''அம்மா பாடலுக்கு கிடைத்த வரவேற்பால் பெரும் மகிழ்ச்சியில் இருக்கிறேன். மகனுக்கும், அம்மாவுக்கும் இடையிலான அன்பு என்றும் அழியாது என்பதை சொல்வதற்காகவே அம்மா பாடல் உருவாக்கப்பட்டது.

இசையமைப்பாளர் ஜேக்ஸ் பிஜாயும், பாடகர் சித் ஸ்ரீராமும் உண்மையிலேயே ஒரு மாயாஜாலத்தை செய்துள்ளனர். முதன் முறையாக அந்த பாடலை கேட்டபோது இதமாக, மென்மையாக இருந்தது. டைரக்டர் ஸ்ரீகார்த்திக் உள்பட தொழில்நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் என ஒட்டுமொத்த படக்குழுவையும் என்னால் உணர முடிந்தது.

படப்பிடிப்பின்போது அந்த பாடலை துண்டு துண்டாக தான் கேட்டோம். தற்போது பாடல் வெளியான பிறகு அதை முழுமையாக கேட்க முடிந்தது. அம்மா வேடத்தில் நடித்ததை நான் பெருமையாக கருதுகிறேன். இந்த பாடல் அனைவரையும் சென்று அடையும் என்று நம்புகிறேன். நான் நிஜ வாழ்க்கையிலும் ஒரு தாய் தான். அந்த நிலையை நான் பொக்கிஷமாக கருதுகிறேன். இந்த படத்தில் நடித்து முடிக்கும் வரை அனைவருக்கும் அம்மாவாகவே இருந்தேன். அதை மிகவும் மதிப்புமிக்க விஷயம் என்று கருதுகிறேன். அதை நான் என்றுமே மறக்க மாட்டேன்.''

இவ்வாறு அவர் கூறினார்.



பெண் எழுத்தாளர் 26

**தனியார் நிறுவனமொன்றில் தமிழ் எழுத்தாளராக பணிபுரிந்து "ரேடியோ பழசு" எனும் இசைக்குழுவினை ஆரம்பித்து அதில் பாடகியாக இருக்கும் நிரோஜினி ரொபர்ட்.**

# மாத்தளை நிரோஜினி ரொபர்ட்

யாழ்ப்பாணத்தில் பிறந்து மாத்தளையில் வளர்ந்து கண்டியில் கல்வி கற்று தற்போது கொழும்பில் தொழில் புரிகிறார். இவர் ஒரு பெண் பிள்ளையின் தாயுமாவார்.

சிறு வயதிலிருந்து வாசிப்பதில் ஆர்வம் கொண்ட இவர், தனது முதலாவது கவிதையை பத்து வயதில் எழுதியுள்ளார். பாடசாலையில் கற்கும் போது அதிகமான சான்றிதழ்களும் விருதுகளும் பெற்றுள்ளார்.

2022 ஜனவரி 17ம் திகதி "காட்டுக்குயில்" எனும் இவரது முதல் கவிதைத் தொகுப்பு கொழும்பு தமிழ் சங்கத்தில் வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகம் இந்தியாவில் வாசிகசாலை பதிப்பகத்தால் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவருடைய நண்பர்கள், நலன்விரும்பிகள், குடும்பத்தினர் அந்தக் கவிதைகளை ஒரு புத்தகமாக மாற்றுவதற்கு ஊக்குவித்ததுடன் உறுதுணையாக இருந்தார்கள்.

"கவிதைகள் ஆன்மாவில் இருந்து வரவேண்டும். அப்படி வரும் கவிதைகளால் மட்டுமே உயிர்ப்போடு பலரை சென்றடைய முடியும்" என கவிதை பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார் .

> **"கவிதைகள் ஆன்மாவில் இருந்து வரவேண்டும். அப்படி வரும் கவிதைகளால் மட்டுமே உயிர்ப்போடு பலரை சென்றடைய முடியும்" என கவிதை பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார் .**

"கவிதைகள் பலவாறாக எழுதப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் எளிய நடையில் வாசிக்கும் எவருக்கும் சென்றடையும் வகையில் எழுதும் கவிதைகள், அவை எழுதப்பட்ட அதற்கான நோக்கத்தை நிறைவேற்றுகின்றன.

வெறுமனே வார்த்தைகளைக் கோர்த்து அதன் அழகியலை மட்டுமே நோக்காமல் சொல்ல வரும் விஷயத்தை தெளிவாகவும் எளிமையாகவும் சுவாரசியமாகவும் சொல்வது அவசியம் எனக் கூறுகிறார்.



இவரிடம் எழுத்துத் துறையில் எதிர் நோக்கிய சவால்கள் பற்றி வினவிய போது இவ்வாறு பதிலளித்தார்.

பெண் எனும் போது நாம் எழுதக்கூடிய, எழுதக் கூடாத தலைப்புகள் என இந்த சமூகம் கட்டமைத்து இருக்கிறது. காதலை பேசலாம், காமத்தை பேசக்கூடாது. உறவுகளின் அழகியலை பேசலாம், அதற்குள் இருக்கும் அத்துமீறல்களை பேசக்கூடாது. சில நேரங்களில் எழுதும் கவிதைகளை வைத்து சொந்த வாழ்க்கையைப் பற்றி அவதூறு சொல்லும் மனிதர்களையும் நான் கடந்து இருக்கிறேன்.

ஒரு கட்டத்தில் பெண் சமூகம் என்னைப் பற்றி என்ன சொல்கிறது என்பதைப் பற்றிய கவலை இல்லாமல் போயிற்று. எவருக்கும் எந்த பாதிப்பும் இல்லாமல் நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய ஆரம்பித்தபின் இந்தத் தடைகள் என் கண்ணுக்கு புலப்படவில்லை எனக் கூறுகிறார்.

கவிதை எழுதுவதால் என்ன பயன் கிடைக்கின்றது? இது பலராலும் இன்று கேட்கப்படும் கேள்வியாய் உள்ளது. கவிதை எழுதுவதால் கவிதையாக வாழ முடிகிறது. இன்ப துன்பம் மகிழ்ச்சி எல்லாவற்றையும் ஒரு அழகியற் கலை வடிவமாக மாற்ற முடிகிறது. அனேகம் பேரைச் சென்றடைய முடிகிறது. என்னையும் இன்னும் அநேகரையும் ஆற்றுப்படுத்த முடிகிறது. இயற்கையோடு வாழ்வது ஆறுதலையும் எழுதும் ஆர்வத்தையும் தூண்டும் என அவர் கூரினார்.

**மஜினா உமறு லெவ்வை**
**மாவடிப்பள்ளி**







## அம்மாக்களின் ஆதங்கம்


========================

அன்பைத்தேடித் தேடித்தானே
எங்கள் நெஞ்சம் ஏங்குது...
அன்பில்லாத பிள்ளைகளாலே
எங்கள் அடிவயிறு எரியுது ...
நொந்து நொந்து நூலாய் போனோமே
வெந்து வெந்து தணலாய் ஆனோமே
முடியல்ல...முடியல்ல...எம்மால் முடியல்ல..
முடிவென்ன..முடிவென்ன அதுவும் தெரியல்ல...

தாய்ப் பால் கொடுத்து வளர்த்தெடுத்த
தாயைப் பார்க்க மனசில்லை ...
தாரம்,ஒன்று வந்தபின்பு
தாயின் தரம் பெரிசில்லை...
எங்க வயிற்றில் கிடந்த புள்ளதான் அட
எந்தப்புள்ள நல்லபுள்ளதான்
தெரியல்ல...தெரியல்ல ...ஒன்றும் தெரியல்ல...
புரியல்ல..புரியல்ல..ஏதும் புரியல்ல....

வளர்த்த கிடா முட்டிமுட்டி
மனசு ஒடிஞ்சு போச்சுதே
பாசம் வைச்ச பசுவும் குத்தி
நெஞ்சில் காயம் ஆச்சுதே
இன்னும் என்ன இந்த வாழ்க்கையே ...நாங்க
மண்ணுக்குள்ள போகவேணுமே
முடியல்ல முடியல்ல எம்மால் முடியல்ல...
முடிவென்ன முடிவென்ன அதுவும் தெரியல்ல..

**கோவிலூர் செல்வராஜன்**



# எங்களாலும் தரமான படைப்புகளை வெளியிட முடியும் என நிரூபித்துக் காட்ட வேண்டும்

## சனாதனன்

**யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவர் சனாதனன். Computer Net working படித்து தொழிநுட்ப பிரிவில் வேலை செய்தாலும் சிறுவயதிலிருந்தே சினிமாத் துறையில் சாதிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டவர்.**

2014 ஆம் ஆண்டிலிருந்து குறுந்திரைப்படங்களைத் தயாரித்து வருகின்றார். தற்போதுவரை சுமார் 17 குறுந்திரைப் படங்களைத் தயாரித்து sana creations என்ற youtube செனலில் பதிவேற்றியும் உள்ளார். தற்போது வசந்தம் தொலைக்காட்சியில் தலைவாசல் என்ற நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் அருந்ததி எனும் நிறுவனத்தின் தொழிநுட்ப ஆசிரியராகவும் பணிபுரிந்து வருகின்றார். பகுதி நேர மிருதங்க ஆசிரியராகவும் கடமையாற்றும் அவரை தினகரன் வாரமஞ்சரிக்காக நேர்கண்டோம்......

### சினிமாத் துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

நான் சிறு வயதில் இருந்தே நன்றாகப் படிக்கும் மாணவன் ஆனால் எந்த நேரமும் தொலைக்காட்சிக்கு முன்னால் தான் இருப்பேன். 2001 ஆம் ஆண்டு மலேசியா வாசுதேவனும் மகாநதி சோபனாவும் கொழும்பில் ஒரு நிகழ்ச்சி செய்தனர். அப்போது எனக்கு 10 வயது. அந்த நிகழ்ச்சியில் அக்காலத்தில் வெளியான படங்களின் நகைச்சுவைகளை தொகுத்து செய்தேன். பலரின் பாராட்டும் கிடைத்தது. அப்போது என்னுள் இருந்த சினிமா ஆசை மேலும் வளர தொடங்கியது. அப்போதிலிருந்தே நானும் சினிமா முயற்சியிலும் ஈடுபட ஆரம்பித்து விட்டேன்.

### இலங்கையில் குறுந்திரைப்படம் வெளியிடுவதில் எவ்வாறானா சிக்கல்களை எதிர்நோக்கி உள்ளீர்கள்?

இலங்கை தமிழ் ரசிகர்களைப் பொறுத்த வரையில் தென்னிந்திய நடிகர்கள் இயக்குனர்களுக்கு தான் முதலிடம் வழங்குவார்கள். ஆகையால் இலங்கை சினிமாத் துறையில்



நம்மை தக்க வைத்து எமது படைப்புகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பது ரொம்பவே கடினமான விடயம் தான்.

எவ்வளவு தான் தரமான படைப்புகளைக் கொடுத்தாலும் கூட சாதாரண பொது மக்கள் எமது படைப்புக்களைப் பார்ப்பது அரிதான விடயம் தான். இந்திய சினிமா உலக வாழ் அனைத்து தமிழர்களிடமும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தான் சொல்ல வேண்டும். தென்னிந்திய



சினிமாத் துறையுடன் போட்டியிட முடியா விட்டாலும் கூட எங்களால் சிறந்த படைப்புகளையும் தரமான படைப்புக்களையும் சினிமாத் துறையில் வெளியிட முடியும் என நிரூபித்து காட்ட முடியும்.

இத் துறையை என்னோடு ஆரம்பித்த பலர் அதில் புகழ் பெற்றவர்கள் கூட சில காரணங்களால் இத்துறையை விட்டு விலகி விட்டார்கள். நான் நீண்ட காலம் இத் துறையில் நிலைத்திருப்பதற்குக் காரணம் என்னுடைய விடாமுயற்சி என்று தான் கூற வேண்டும்.

### நீங்கள் எவ்வாறான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றீர்கள்?

முதலில் நடிப்புத் துறைக்கு என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் வெவ்வேறு புது முகங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற காரணத்தால் இலங்கையில் நடிப்புத்துறையிலோ அல்லது விளம்பரத்திலோ தொடர்ந்து பயணிக்க முடியாது. நாம் தொடர்ந்து ஒரு இடத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பது பெரிய சவாலான விடயமே. ஆகவே நான் நடிப்புக்கு



முக்கியத்துவம் கொடுப்பேன்.

தொடர்ந்து விளம்பரங்கள் தான். சமீபத்தில் ஒரு நிறுவனத்திற்கு ஊதுபத்தி விளம்பரம் செய்துக் கொடுத்தேன். அது நிறைய பாராட்டுக்களை பெற்றுத் தந்துள்ளது.

அடுத்து ஆசிரியர் பணிதான். தொழிநுட்ப ஆசிரியராகவும் மிருதங்க ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றேன். ஊடகத்துறையைத் தாண்டி அது புதுவித அனுபவத்தை தருகின்றது.

அதை தொடர்ந்து எனக்கு சிறுகதை எழுதுவதிலும் ஆர்வம் இருந்தது. 'தேவதையின் காதலன்' எனும் நூலையும் வெளியிட்டுள்ளேன்.

### எவ்வாறான குறும்படங்களை வெளியிடுவதில் அதிக ஆர்வம் செலுத்துகிறீர்கள்?

நான் பெரும்பாலும் சமூக விழிப்புணர்வு தொடர்பான படங்களைத் தான் எடுத்துள்ளேன். முதல் 5 படங்கள் அவ்வாறானவை தான். எனது குறுந்திரைப் படத்தின் மூலம் ஏதாவது ஒரு கருத்தையாவது சமூகத்திற்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை அடிப்படையாக வைத்தே



எனது படைப்புக்களை தயாரித்து வருகின்றேன்.


### எமது நாட்டில் வளர்ந்து வரும் சினிமா துறையில் சாதிக்க துடிக்கும் இளைஞர்களுக்கு கூற விரும்புவது?

ஒரு 10 வருடங்களுக்கு முன் ஆரம்பக் காலங்களில் இலங்கையில் ஒரு குறும்படம் எடுப்பதற்கான தளங்கள் கூட இருக்கவில்லை. தற்போது நிறைய பேரின் விடா முயற்சியினால் ஒரு தளம் கிடைத்துள்ளது. ஆனால் தற்போது ஒரு விதையாக தான் நாங்கள் இருக்கின்றோம். விதையை விருட்சமாக மாற்றுவது எதிர்கால இளைஞர்கள் கையில் தான் உள்ளது. இன்னும் சில வருடங்களில் இலங்கை சினிமாவில் பல வெற்றிகள் குவியும் அதேநேரத்தில் சிறந்த படைப்புக்களை வழங்க இளைஞர்கள் தயாராக வேண்டும்.




யதுஷா ரவித்தியாகராஜா


## கீழேயுள்ள உருவங்களின் சரியான எண்ணிக்கையை வட்டமிடுங்கள்




## வழிகாட்டுங்கள்




## கூட்டுங்கள்



## நிறம் தீட்டுங்கள்



## 7 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## உங்களுக்கு தெரியுமா



உலகத்திலே மிகவும் வேகமாக வளரக்கூடிய மரம் யூக்கலிப்டஸ் (Eucalyptus) தான். இது 90க்கும் மேற்பட்ட நாடுகளில் வளர்க்கப்படுகிறது. காடுகளில் 8 சதவீதம் இம்மரமே உள்ளது. பிரேசில் நாட்டில் மட்டுமே 3.5 மில்லியன் ஏக்கரில் யூக்கலிப்டஸ் மரம் இருக்கிறது.

# முஸ்லிம்களின் வாழ்வியலுக்கும் இஸ்லாமிய இசைக்கலை வளர்ச்சிக்கும் பங்களிக்கும் பாவாக்கள்

நான் ரொம்ப பிஸி...

**அநுராதபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டு தற்போது 99ஆம் கட்டை, மீராநகரை வசிப்பிடமாகக் கொண்ட கே. ஜலீல் பாவாவை நான் ரொம்ப பிஸி பகுதிக்காக சந்தித்தபோது பல்வேறு தகவல்களை பரிமாறிக் கொண்டார்.**

அவர் பாவாக்கள் பரம்பரையில் ஏழாவது பரம்பரை எனவும் அக்காலத்தில் கிண்ணியா மண்ணில் வாழ்ந்த கறுத்தபாவா, வெள்ளைபாவா, போன்ற பாவாக்களையும் இந்தியா பரம்பரை என்ற தகவல் உட்பட மேலும் பல விடயங்களை அறியக்கிடைத்தன.

இலங்கை முஸ்லிம்களது ஆரம்ப கால வாழ்க்கை வரலாற்றோடு மிகத் தொடர்பு பட்டவர்களாக பாவாக்கள் காணப்படுவதை பல்வேறு ஆதாரங்கள் முன் வைத்து உறுதிப்படுத்தலாம்.

ஆரம்ப காலங்களில் அதான் சொல்லுவதற்கு இப்போது உள்ள மின்சார வசதிகள், ஒலிபெருக்கிகள் அன்றில்லாமல் இருந்தது. அதனால் பாவாக்கள் தொழுகைக்குரிய நேரம் வந்ததும் வீடு வீடாகவும் வீதிக்கு வீதியாகவும் சென்று 'றபான் அடித்து ஒலி எழுப்பி' தொழுகைக்காக அழைப்பு விடுவார்கள். இதனூடாக நேரத்திற்கு தொழக்கூடிய சூழல் உருவாகியது.

இந்த நடை முறை மேலும் முஸ்லிம்கள் வாழும் சகல கிராமங்களிலும் அப்பிரதேச பாவாக்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

முஸ்லிம்களின் ரமழான் மாத காலங்களில் நோன்பு இருப்பதற்கான நேரத்தில் றபான் அடித்து ஒலி எழுப்பிச் செல்வார்கள் இதனால் முஸ்லிம்கள் நோன்பு பிடிப்பதற்கு வழி ஏற்படுத்தி கொடுப்பார்கள்.







இவ்வாறான செயற்பாட்டினூடாக இஸ்லாமிய வாழ்வியலுக்கும் பாவாக்கள் பங்களிப்புச் செய்வதை காணக்கூடியதாக உள்ளது.

இயற்கையாக அழகான குரல் வளத்துடன் 'றபான் இசைத்து' பாடுகின்ற ஆற்றல் உள்ள இந்தபாவாக்களில் இருந்துதான் இஸ்லாமிய "இசைக் கலை" தோற்றம் பெற்றிருக்கலாம். இசை கருவிகளில் தோள் வாத்திய கருவிகளில் ஒன்றாக றபானும் காணப்படுகிறது இசைமுரசு நாகூர் ஈ.எம். ஹனிபா அவர்கள் உலகப்புகழ் பெற காரணமாக அவருடைய வளர்ச்சிக்கு மூலாதாரமாகவும் இருந்தது றபான் இசை என்பதை மறைக்க முடியாது.

முஸ்லிம்கள் பாவாக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை நிலைப்படுத்த றபான் அடித்தல், மேடை நிகழ்வுகளில் பாடுதல், நோன்பு காலங்களில் மக்களை எழுப்புதல் இஸ்லாமிய கலாசார விழாக்களில் பாடுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் அன்பளிப்புகளை பெற்று வாழ்க்கையை நடாத்திச் செல்கிறார்கள்.

### பாவாக்களில் இன்னொரு பிரிவினர்தான் பக்கீர்கள்

பக்கீர்கள் என்றால் "மறைவாகி மீள எழும்புதல்" என்ற கருத்துக்கள் அவர்களிடையே காணப்படுகிறது. அதாவது தனிமையில் தியானம் மேற் கொள்ளல். பக்கீர் என்ற அரபிச் சொல்லின் பொருளானது பரம ஏழை அல்லது ஏழைகள் என்பதையே சுட்டி நிற்கிறது.

இவர்களது ஆடைகளாக வெள்ளாடை (ஜுப்பா) அணிதல், தலைப்பாகை, அணிதல், கண்டாமணி அணிதல், ஜோலியா அணிதல், சால்வை அணிதல், சொர்மா கண்களுக்கு இடல் போன்றவற்றை அணிகலன்களாக கொண்டிருப்பார்கள்.

பக்கீர்கள் ஆன்மீக வழியில் ஈடுபாடு கொண்டவர்கள். இவர்களால் பக்கீர் வைத் எனப்படும் பாடல்கள் பாடப் படுகின்றன. இஸ்லாமிய கலாசார சரித்திரங்களை, வரலாறுகளை பாடல்களாக வெளிப்படுத்துவதே "பக்கீர் வைத் " எனப்படுகிறது.

முக்காலத்தில் பக்கிர் பைத் பின்வரும் அடிப்படையில் பாடப்பட்டு வந்தன

**அல்லாஹ்வை புகழுதல்**
**ரஸூல்லாவின் சரித்திரம்**
**பாத்திமா நாயகி சரித்திரம்**
**அலிரலி அவர்களின் சரித்திரம்**
**ஸாபாக்களின் சரித்திரம்**
**போன்றவர்களது சரித்திரங்களை பாடலாக பாடப்பட்டவையே பக்கீர் வைத்தாக கருதப்பட்டது.**

அதை தொடர்ந்து முகைதீன் அப்துல் காதர் மற்றும் அவ்லியாக்கள் என்பவர்களின் சரித்திரங்களை பக்கீர் வைத்தாக பக்கீர்கள் பாடி வந்தார்கள். ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் மரணித்த வீடுகளில் மையத்து புலம்பல் என்ற பாடலை பக்கீர் வைத்தாக பாடி வந்தார்கள். அதன் பின்னரான காலத்தில் முஸ்லிம்களின் கலாசார விழாக்கள், பாடசாலை நிகழ்ச்சிகள், முஸ்லிம்களின் திருமண வீடுகள், பெருநாள் விழாக்கள், மேலும் அவர்களின் பாரம்பரிய நிகழ்வுகளிலும் பக்கீர் வைத்துகள் பாடப்பட்டு வந்தது.

இவ்வாறு முஸ்லிம்களுக்கு அன்று தொடக்கம் இன்று வரை பாவாக்களின் பணி சிறப்பாக இடம் பெற்று வருகிறது. பாவாக்கள் றபான் இசைத்து பாடும் போது சின்னஞ்சிறுவர்கள் அவர்களை சூழ்ந்துகொண்டு பாடும் பாடலை மெய் மறந்து இரசிக்கின்ற காட்சி அலாதியானது. ஆன்மீக சுதியோடு அறக்கருத்துக்களை அவர்களது பாடல்களில் மேலோங்கி நிற்பதை என்றும் காணக்கூடியதாக உள்ளது.

**கவிச்சுடர் ஏ எம் கஸ்புள்ளா**

தொடர்புகளுக்கு:
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com

# குளிப்பதற்கு முன் எண்ணெய் மசாஜ் செய்வதனால் ஏற்படும் நன்மைகள்

**'மாசோ' எனப்படும் உள்ளங்கையை கொண்டு உடலில் மெதுவாக தேய்த்து மசாஜ் செய்யும் வழிமுறையை கிரேக்கர்கள் பின்பற்றினார்கள்.**

உடலின் மிகப்பெரிய உறுப்புகளுள் முக்கியமானதாக சருமம் அமைந்திருக்கிறது. பல்வேறு வெளிப்புற காரணிகளால் சருமம் பாதிப்புக்குள்ளாகிறது. சூரிய ஒளி, முதுமை, புகைப்பிடித்தல், குளிர்ந்த காலநிலை, கடுமையான சோப்புகளின் பயன்பாடு, மருத்துவ நிலைமை போன்ற எண்ணற்ற காரணங்களால் சருமம் ஈரப்பதத்தை இழக்கலாம். எனவே, சருமத்தை ஆரோக்கியமாகவும், பளபளப்பாகவும் வைத்திருக்க தொடர்ந்து ஊட்டமளித்து, ஈரப்பதத்தை தக்கவைத்துக்கொள்வது அவசியமானது.

தீபாவளி அன்று எண்ணெய் தடவி மசாஜ் செய்து குளிப்பது பாரம்பரிய வழக்கமாக பின்பற்றப்படுகிறது. வாரந்தோறும் இந்த வழக்கத்தை தொடர்பவர்களும் இருக்கிறார்கள். சருமத்தை மென்மையாக வைத்திருக்கும் இயற்கையான மாய்ஸ்சுரைசராக எண்ணெய்கள் அமைந்திருக்கின்றன. பழங்காலத்தில் இருந்தே பெண்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பில் எண்ணெய்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

குளிப்பதற்கு முன்பு உடலில் எண்ணெய் தடவி மசாஜ் செய்வது, பல தோல் பிரச்சினைகளை சமாளிக்க உதவும். எண்ணெய்யை லேசாக சூடுபடுத்தி சருமத்தில் தேய்க்கும்போது அதில் உள்ள ஊட்டச்சத்துக்கள் சருமத்திற்கு ஏராளமான நன்மைகளை வழங்கும். குளிப்பதற்கு முன் எண்ணெய் தடவுவதால் கிடைக்கும் அத்தகைய நன்மைகள் குறித்து பார்ப்போம்.

## ஈரப்பதத்தை தக்க வைக்கும்

எண்ணெய் தேய்ப்பது சருமத்திற்கு புத்துயிர் ஊட்ட உதவும். குறிப்பாக குளிர்காலத்தில் கடுகு, வால்நட் போன்ற இயற்கை எண்ணெய்களை சருமத்தில் தடவுவது, தோல் அடுக்குகளில் ஈரப்பதம் இழப்புக்குள்ளாவதை தடுக்க உதவும்.

வறண்ட சருமம், தோல் அரிப்பு போன்ற பிரச்சினைகளை எதிர்த்து போராடவும் உதவும். எண்ணெய்யில் உள்ளடங்கி இருக்கும் லினோலிக் அமிலம் போன்ற அத்தியாவசிய கொழுப்பு அமிலங்கள் மென்மையான உணர்திறன் கொண்ட சருமத்திற்கு சிறந்ததாகும். அவை சருமத்தை மிருதுவாகவும், மென்மையாகவும் உணரவைக்கும்.

## மன அழுத்தத்தை குறைக்க உதவும்

மசாஜ் செய்வதன் மூலம் ஆக்ஸிடாஸின் என்ற ஹார்மோனை வெளியிட முடியும் என்பது ஆய்வில் கண்டறிந்துள்ளது. இது உடலையும், மனதையும் தளர்வடைய வைக்கும். மன அழுத்த ஹார்மோனான கார்டிசோலை நிர்வகிக்கவும் உதவும். மனம் புத்துணர்ச்சி பெறவும் துணைபுரியும்.



சருமத்தை பாதுகாப்பதற்கு எண்ணெய்கள் நீண்டகாலமாக உலகெங்கிலும் பயன்பாட்டில் இருக்கின்றன. அவை இயற்கையாகவே சருமத்தை ஆரோக்கியமாகவும், பிரகாசமாகவும் வைத்திருக்கும் தன்மை கொண்டவை என்பதால் தவறாமல் பயன்படுத்தி வருவது நல்லது.

## உடல் வலியை குறைக்கும்

எண்ணெய்களை கொண்டு மசாஜ் செய்வது கீல்வாதம் உள்ளிட்ட உடல் வலியைப் போக்க உதவும் என்பது ஆய்வு மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. சூடான எண்ணெய்யை கொண்டு மசாஜ் செய்வது ரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும், தசைகளை தளர்வடைய செய்யவும் உதவும்.

விளையாட்டுகளின் போது ஏற்படும் காயங்கள் ஆறுவதற்கு மசாஜும் சிறந்த சிகிச்சையாக அமையும். 'மாசோ' எனப்படும் உள்ளங்கையை கொண்டு உடலில் மெதுவாக தேய்த்து மசாஜ் செய்யும் வழிமுறையை கிரேக்கர்கள் பின்பற்றினார்கள். தசைகள் சோர்வு அடைவதை குறைக்கவும், காயங்களை தடுக்க ஏதுவாக நெகிழ்வுதன்மையை மேம்படுத்தவும், விளையாட்டு வீரர்களிடம் வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கவும் இந்த நடைமுறை பயன்படுத்தப்பட்டது.



## வயதான தோற்ற அறிகுறிகளை குறைக்கும்

எண்ணெய்யானது சருமத்தில் உள்ள ஈரப்பதத்தை தக்கவைப்பதோடு சுருக்கங்கள் தோன்றுவதையும் தடுக்க உதவும். அதன் மூலம் வயதான தோற்ற அறிகுறிகள் வெளிப்படுவது தள்ளிப்போகும். மசாஜ் செய்வது, சரும செல்களின் வளர்ச்சியை மேம்படுத்தும். தோல் நெகிழ்ச்சித்தன்மை அடைய வழிவகை செய்யும். இதன் விளைவாக இளமைத் தோற்றத்தை தக்கவைத்துக்கொள்ள ஏதுவாகும்.

## புற்றுநோயை தடுக்க உதவும்

சூரியனில் இருந்து வெளிப்படும் புற ஊதா கதிர்கள் சருமத்தை சேதப்படுத்தி, தோல் புற்றுநோய்க்கான வாய்ப்புகளை அதிகரிக்கக்கூடும் என்பதால் அதற்கு எதிராக சருமத்தை பாதுகாப்பது முக்கியம். தேங்காய் எண்ணெய் சருமத்திற்கு பயனுள்ள சரும மொய்ஸ்சுரைசர் மட்டுமல்ல, தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களில் 20 சதவீதத்தை தடுக்கும் இயற்கையான சன்ஸ்கிரீனாக கருதப்படுகிறது.

## நச்சுத்தன்மையை நீக்கும்

அன்றாட வாழ்வியல் செயல்முறைகளில் ஒரு அங்கமாக மசாஜ் பயிற்சியை ஆயுர்வேதம் பரிந்துரைக்கிறது. ஆயுர்வேதத்தில் சூடான எண்ணெய்யை மசாஜ் செய்ய பயன்படுத்துவது அபியங்கம் எனப்படுகிறது. இது உடலில் சேர்ந்துள்ள நச்சுக்களை அகற்ற உதவும் என்று மசாஜ் பயிற்சியாளர்கள் நம்புகிறார்கள், மேலும் இது மனதையும், உடலையும் தளர்வுபடுத்தக்கூடியது. புத்துயிர் பெறவும் வித்திடும்.



# இசையால் ரசிகர்களை வசப்படுத்திய இசைக்குயில் லதா மங்கேஷ்கர்

**லதா மங்கேஷ்கர் 1929 செப்டெம்பர் 28 இல் பிறந்தார். லதா இந்தியாவின் மிகப்புகழ் பெற்ற ஜனரஞ்சக பாடகியும், மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்தவர்.**

இந்தியாவின் இசைக்குயில் எனப் போற்றப்படுபவர் லதா. இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருது பெற்ற இரண்டு பாடகர்களில் இவர் ஒருவராவார். மற்றவர் தமிழகத்தைச் சேர்ந்த எம். எஸ். சுப்புலட்சுமி. உலகப் புகழ்பெற்ற செவாலியர் விருதும், புகழ் வாய்ந்த லண்டன் இசை (ஐ.ஐ.எஃப்,ஏ) விருதும் லதா மங்கேஷ்கரின் கரங்களை அலங்கரித்தன. இவரது கலையுலக வாழ்க்கை 80 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்திருந்தது. நான்கு வயதில் பாடுவதற்கு ஆரம்பித்த இவர், 36 மொழிகளில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி உலக சாதனை ஆற்றியுள்ளார். ஹேமாய் மங்கேஷ்கர் என்பது இவரது முழுப்பெயர் இவர் இந்தூரில் பிறந்தார். (இன்றைய மத்தியப் பிரதேசம்).

6 பெப்ரவரி 2022 அன்று தனது அகவை 92இல் மும்பை பிரீச் காண்டி மருத்துவமனையில் கொரோனோ தொற்று காரணமாக இயற்கை எய்தினார். லதா இந்தியாவின் நைட்டிங்கேல் எனப்போற்றப்பட்டவர்.

### லதா மங்கேஷ்கர் பெற்ற விருதுகளும், சிறப்புகளும் : தேசிய திரைப்பட விருதுகள்


பத்மபூஷண் விருது, பீட்டி நா பிடாய் ரெய்னா (படம் பரிஜாய்) என்ற பாடலுக்கான தேசிய விருது, உலக அளவில் அதிகமான பாடல்களை பாடியதற்கான கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தமை, ரூதே ரூதே பியா(படம் கோரா காகஸ்) பாடலுக்கான தேசிய விருது, யாரா சீலி சீலி(படம் லேகின்) என்ற பாடலுக்கான தேசிய விருது, ராஜிவ் காந்தி விருது, பத்மவிபூஷண் விருது, என். டி.ஆர்.மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருது, நூர்ஜஹான் விருது, மராட்டிய ரத்னா விருது வங்காள திரைப்பட ஊடகர்களின் விருது, பிலிம்பேர் விருதுகள், பிலிம்பேர் சிறப்பு விருதுகள், பிலிம்பேர் வாழ்நாள் சாதனையாளர் விருது தாதா சாஹேப் பால்கே விருது, லதா மங்கேஷ்கர் மாநிலங்களவை உறுப்பினர் பதவியில் 22 நவம்பர் 1999 முதல் 21 நவம்பர் 2005 வரை இருந்தார்.

ஆரம்பத்தில் லதா சில திரைப்படங்களிலும் நடித்துள்ளார். லதா மங்கேஷ்கர் திருமணம் செய்யாமலே வாழ்ந்தவர் ஆவார். பாடகி ஆஷா போஸ்லேயின் சகோதரி ஆவார்.

முதன் முதலாக 1942 இல் கிதி ஹசால் என்ற மராத்திப் பாடலைப் பாடினார். 1948 இல் இவர் பாடிய மஜ்பூர் என்ற திரைப்படம் இவருக்கு திருப்புமுனையை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து வந்த படங்களான பர்சாத், அந்தாஸ், துலாரி, மஹால் போன்ற படங்கள் இவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தன. இவரது பாடல்கள் அந்தக் காலத்தில் தொடங்கி இன்றுவரை தனித்துவமான கவர்ச்சியோடு பலரையும் கவர்ந்து கொண்டிருக்கின்றன.

1942 ஆம் ஆண்டு சினிமா துறையில் பாடத்தொடங்கிய அவர், முதன் முதலாக “கிதி ஹசால்” என்ற மராத்தி பாடலைப் பாடினார். அதே ஆண்டில் அவருடைய தந்தையும் இறந்து விடவே, குடும்பம் கடுமையான நிதி நெருக்கடிக்கு உள்ளானது. அந்த நேரத்தில் இசையமைப்பாளர் குலாம் ஹைதர் என்பவர் “மஜ்பூர்” என்ற திரைப்படத்தில் பாட வாய்ப்பு அளித்தார். இது அவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது எனலாம். இதனை தொடர்ந்து வந்த ‘மஹால்’, ‘அந்தாஸ்’, ‘பர்சாத்’, ‘துலாரி’ போன்ற படங்கள் இவருக்கு பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தன.

1942 முதல் சினிமா துறையில் பாடத்தொடங்கிய அவர், அனில் பிஸ்வாஸ், ஷங்கர் ஜெய்கிஷன், நவ்ஷத், எஸ்.டி. பர்மன், சி. ராம்சந்த்ரா, ஹேமந்த் குமார், சலீம் சவ்திரி, கய்யாம், ரவி, சஜ்ஜத் ஹூசைன், ரோஷன், கல்யாண்ஜி, ஆனந்த்ஜி, வசந்த் தேசாய், சுதிர் பாட்கே, ஹன்ஸ்ராஜ் பெல், மதன் மோகன், மற்றும் உஷா கன்னா, ராகுல் தேவ் பர்மன், ராஜேஷ் ரோஷன், அனு மாலிக், ஆனந்த் மிலிந்த், ஷிவ் ஹரி, ராம் லட்சுமண், ஏ.ஆர் ரகுமான், இளையராஜா என கிட்டத்தட்ட எல்லா இசையமைப்பளர்களுடன் இணைந்து பாடியுள்ளார். 1958 ஆம் ஆண்டு சலீம் சவுத்ரி இசையமைத்து வெளிவந்த “மதுமதி” என்ற திரைப்படத்தில், இவர் பாடிய “ஆஜா ரெ பரதேசி” என்ற பாடல், இவருக்கு முதல் ஃபிலிம்பேர் விருதினை பெற்றுத்தந்தது. பிறகு, 1961 ல் ஹேமந்த் குமார் இசையமைத்த “பீஸ் சால் பாத்” திரைப்படத்தில் “கஹின் தீப் ஜலே கஹின் தில்” என்ற பாடல் இவருக்கு இரண்டாவது ஃபிலிம்பேர் விருதினை பெற்றுத்தந்தது. 1973 ஆம் ஆண்டு, ஆர்.டி பர்மன் இசையமைத்து வெளிவந்த “பரிஜாய்” என்ற திரைப்படதில் இவர் பாடிய “பீதி நா பிடாய்"




என்ற பாடல் சிறந்த பின்னனி பாடகிக்கான முதல் “தேசிய விருதை” பெற்றுத்தந்தது. 1969 ஆம் ஆண்டு “பத்ம பூஷன் விருது” வழங்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு பீட்டி நா பிடாய் ரெய்னா (பரிஜாய்) என்ற பாடலுக்காக தேசிய விருது வழங்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு உலகளவில் அதிக பாடல்களை பாடியதற்காக “கின்னஸ் புத்தகத்தில்” இடம் பிடித்தார். 1975 ஆம் ஆண்டு ரூதே ரூதே பியா (கோரா காகஸ்) என்ற பாடலுக்காக தேசிய விருது வழங்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு “தாதா சாஹேப் பால்கே விருது” வழங்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு யாரா சீலி சீலி (லேகின்) என்ற பாடலுக்காக தேசிய விருது வழங்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு பிலிம்பேர் வாழ்நாள் சாதனையாளர் விருது. 1996 ஆம் ஆண்டு ஸ்டார் ஸ்க்ரீன் வாழ்நாள் சாதனையாளர் விருது. 1997 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி விருது. 1999 ஆம் ஆண்டு “பத்ம விபூஷன் விருது” வழங்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு என்.டி.ஆர் விருது மற்றும் வாழ்நாள் சாதனையாளருக்கான ஜீ



சினிமா விருது. 2000 ஆம் ஆண்டு லண்டனிலுள்ள ஐ.ஐ.எப்.ஏ மூலம் வாழ்நாள் சாதனையாளர் விருது. 2001 ஆம் ஆண்டு ஹீரோ ஹோண்ட மற்றும் ஸ்டார்டஸ்ட் இதழ் மூலமாக சிறந்த பின்னனி பாடகிக்கான மில்லேனியம் விருது வழங்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டு “நூர்ஜஹான் விருது” வழங்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டு “மகாராஷ்டிரா ரத்னா விருது” வழங்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டு “பாரத் ரத்னா விருது” வழங்கப்பட்டது. ஆஜா ரெ பர்தேசி (மதுமதி 1958), கஹி தீப் ஜலே கஹி தில் (பீஸ் சால் பாத் 1962), தும்ஹீ மேரே மந்திர் தும்ஹீ மெரி (க்ஹண்ட 1965), ஆப் முஜிகே அசே லக்னே லகே (ஜீனே கி ராஹ் 1969), தீதி தேரா தீவார் தீவானா (ஹம் ஆப்கே ஹே ஹைன் கோன் 1994) போன்ற பாடலுக்காக ஃபிலிம்பேர் விருது வழங்கப்பட்டது. லதா மங்கேஷ்கர் அவர்கள், பெங்கால் திரைப்பட பத்திரிக்கையாளர் கழக விருதுகள் என மேலும் பல விருதுகளை பெற்று, இன்றளவும் புகழ் பெற்ற பாடகியாக விளங்கி வருகிறார்.லதா சில தமிழ் பாடல்களும் பாடியுள்ளார்.

"வாடல்",ஜஹாஞ்ச்கார் காஞ்சன்","லேகின்" போன்ற ஹிந்தி படங்கள் லதா மங்கேஷ்கரின் சொந்த தயாரிப்பாகும்.

இவர் பாடிய சில தமிழ் பாடல்கள்:1952 இல் ஹிந்தியில் வெளியான "ஆண்"படம் தமிழ் மொழிமாற்று (டப்பிங்)கில் இழந்தேன் அன்பே உன்னை", 1955இல் திலீப்குமார் நடித்த "உரன் கடோலா"தமிழில் "வானரதமாக டப்பிங் செய்யப்பட்டு வெளியானது, அதில் இடம்பெற்ற "இழந்தேன் கண்ணாளன்", ஆனந்த் படத்தில் "ஆராரோ ஆரரரோ", எங்கிருந்தோ அழைக்கும் (என் ஜீவன் பாடுது), வளையோசை கலகலவென, நகரு நகரு (சத்யா 1988) போன்றன.

### இவர் பாடிய சில பிரபல ஹிந்தி பாடல்கள் இடம்பெற்ற படங்கள்:

‘சஜா’ (1951), ‘பைஜு பவ்ரா’ (1952), ‘ஆக் ஆஹ்’ (1953), ‘ஸ்ரீ 420’ (1955), ‘தேவதாஸ்’ (1955), ‘கதவு எண் 44’ (1955), ‘சோரி சோரி’ (1956), ‘முகல் ஆஸம்’ (1960), ‘கோஹினூர்’ (1960), ‘சோடே நவாப்’ (1961), ‘பரஸ்மணி’ (1963), ‘பூத் பங்களா’ (1965), ‘பட்னி பட்னி’ (1966), ‘அபிலாஷா’ (1969), ‘ கேரவன்’ (1971), ‘காதி பதங்’ (1971), ‘ அமர் பிரேம்’ (1972), ‘ஆன்ந்தி’ (1975), ‘சாந்தினி’ (1989), ‘லம்ஹே’ (1991), ‘தர்’ (1993), ‘யேஹ் தில்லகி’ (1994), ‘தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே’ (1995), ‘ஹை தலாக் தில்’ (1997), ‘மொகபத்தீன்’ (2000), ‘முஜ்சே ரோஸ்ட்டி கரோகே’ (2002), ‘சாரா’ (2004), ‘தில் சே’ (1998), ‘ஒன் 2 க 4 ‘ (2001), ‘புகார்’ (2000), ‘ஜுபைதா’ (2001), ‘ரங் தே பசந்தி (2006), ‘லகான்’ (2001), ‘அனார்கலி’, ‘அல்பேலா’, ‘ஆஷா’, ‘அடாலட்’, ‘ரயில் மேடை’, ‘சாச்சா ஜிந்தாபாத்’ போன்ற திரைப்படங்களில் இவர் பாடிய பாடல்கள் பலரையும் கவர்ந்தது எனலாம்.

லதா மங்கேஷ்கரின் பூதவுடல் 06.02.2022 அன்று இந்திய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பல அரசியல் தலைவர்களின் இரங்கலுடன்,மும்பை சிவாஜி பூங்காவில் 21 குண்டுகள் முழங்க அரச மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிநேரில் இறுதி அஞ்சலியை செலுத்தினார் . மங்கேஷ்கரின் மறைவையொட்டி இரண்டு நாட்களுக்கு இந்தியா முழுவதும் தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்க விட்டு துக்கம் அனுஷ்டிக்க இந்திய மத்திய அரசு ஆணை பிறப்பித்தது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பாசமலராக விளங்கியவர் லதா மங்கேஷ்கர்.

மரணத்திலும் சிவாஜி பெயர் கொண்ட சிவாஜி பூங்காவில் தகனம் செய்யப்பட்டதும் ஓர் அற்புதமே... !

உலகின் கவனத்தை அதிகமாக ஈர்த்த பாடகி கானக்குயில் லதா மங்கேஷ்கரின் மறைவு இசையுலகிற்கு ஈடிணையற்ற பேரிழப்பாகும். லதா மங்கேஷ்கர் மறைந்தாலும் அவர் இசைத்த கானங்கள் என்றும் சாகா வரம் பெற்றவைகளாக பல யுகங்கள் கடந்தும் பேசும்.



ஆக்கம்:எஸ். கணேசன்
ஆச்சாரி சதீஷ் கம்பளை














# தென்கிழக்குப் பல்கலைக்கழக பட்டதாரிகள் சங்கத்தின் (மூதூர்) உத்தியோகபூர்வ T-Shirt அறிமுக நிகழ்வு

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.